# சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு

## (1960-2000)

முனைவர் பட்டப்பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும்

ஆய்வேடு


ஆய்வாளர்

**நா. சத்தியா**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

நெறியாளர்

**முனைவர் நா. இரவீந்திரநாத் தாகூர்**

உதவிப் பேராசிரியர் (ஓய்வு)

தமிழ்த்துறை

**மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)**

சென்னை - 600 005


**பிப்ரவரி - 2021**

**நா. சத்தியா**

முனைவர்பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை

மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)

சென்னை - 600 005.

# ஆய்வாளர் உறுதிமொழி

**‘சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு (1960 – 2000)’** எனும் தலைப்பிலான இவ்வாய்வேடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப்பேற்றிற்காக நிகழ்த்தப்பட்டதாகும். இவ்வாய்வேடு, இதற்குமுன் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கோ ஆய்வரங்கத்திற்கோ அளிக்கப்பெறவில்லை என்றும் என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம்: சென்னை ஆய்வாளர்

நாள்:

**(நா. சத்தியா)**

**முனைவர் நா. இரவீந்திரநாத் தாகூர்**
உதவிப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை - 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

**‘சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு (1960 - 2000)’** எனும் தலைப்பிலான இவ்வாய்வேடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப்பேற்றிற்காக **நா. சத்தியா** அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இவ்வாய்வேடு, இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கோ ஆய்வரங்கிற்கோ அளிக்கப்படவில்லை எனவும் அவரின் சொந்த முயற்சியால் உருவானது எனவும் சான்றளிக்கிறேன்.

இடம்: சென்னை — நெறியாளர்

நாள்:

**(நா. இரவீந்திரநாத் தாகூர்)**

# நன்றியுரை

முனைவர் பட்ட ஆய்வுசெய்ய வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத் மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களுக்கும், மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறையில் முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்த வாய்ப்பளித்த மேனாள் துறைத்தலைவர் பேராசிரியர் ப.மகாலிங்கம் அவர்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஃப். பாக்கியமேரி அம்மா அவர்களுக்கும் என் நன்றி.

சங்க புறஇலக்கியம் குறித்தான முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்த இசைவு தெரிவித்து, சீரிய முறையில் வழிகாட்டி, இதுகாறும் ஆய்வினை நன்முறையில் கொண்டுவர என்னை நெறிப்படுத்திய எனது ஆய்வு நெறியாளரும் பழகுவதற்கு இனிமையான தோழமை குணம் கொண்டவருமான பேராசிரியர் நா. இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறையில் பேராசிரியராயிருந்த காலம் தொடங்கி, கல்லூரி முதல்வராய் பணி உயர்வுபெற்றும் இன்று வரை மாணவர்களின் நலனில் அன்பும் அக்கறையும் கொண்ட எம் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் கோ. கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஆய்வுத் தொடர்பாக பல்வேறு தருணங்களில் ஆய்வேடு சிறப்புற அமைய கருத்துக்களை நல்கியும், ஆய்வுத் தொடர்பான பல நூல்களையும், கொடுத்துதவிய எம் துறை பேராசிரியர்களான முனைவர் ஷேக்மீரான், முனைவர் தாமரைக்கண்ணன், முனைவர் சேகர், முனைவர் மோகன்தாஸ், முனைவர் குமார் அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்க உதவியும், ஆய்வு செம்மையுறப் பல கருத்துக்களை நல்கியும் பல நூல்களை வழங்கியும் முதுகலை காலம் தொட்டு வகுப்பெடுத்து சீரிய முறையில் வழிகாட்டிய சென்னைப் பல்கலைக்கழக தமிழிலக்கியத்துறை துறைத்தலைவர் பேராசிரியர் கோ.பழனி அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

எப்போதும் இன்முகத்துடன் என் ஆய்வு குறித்தும் என்நலன் குறித்தும் அக்கறையோடு விசாரிக்கும் எனது ஆய்வியல் நிறைஞர் பட்ட நெறியாளரும், சென்னைப் பல்கலைக்கழக மொழித்துறையின் தலைவர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களுக்கும், எப்போதும் மலர்ந்த முகத்துடன் என் நலனில் அக்கறை கொண்ட அன்பிற்கினிய சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறை இணைப்பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேட்டினைச் சிறந்த முறையில் தட்டச்சு செய்து உதவிய நண்பர் முனைவர் சே. திருநாவுக்கரசு அவர்களுக்கும், அட்டை வடிவமைப்பு செய்து கொடுத்த விஜய் ஜெராக்ஸ் குமார் அவர்களுக்கும் என் நன்றி.

இவ்வாய்வேடு தொடர்பான தரவுகளைப் பெற துணையாக இருந்த ரோஜா முத்தையா நூலகம், சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாக நூலகம், கன்னிமாரா நூலகம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், மறைமலையடிகள் நூலகம், மற்றும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அன்னைத் தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய நூலகத்திற்கும், நூலகப் பொறுப்பாளர்களுக்கும் என் நன்றிகள்.

என் நலனையே தன் நலனாகக் கொண்டு வாழும் அன்பிற்கினிய அம்மா பாக்கியம் அவர்களுக்கும், பாசத்திற்குரிய என் அப்பா தெய்வத்திரு அ. நாராயணசாமி அவர்களுக்கும், சிறு வயது முதல் இன்று வரை என் மீது அதீத அன்பும் அக்கறையும் கொண்டு என் முன்னேற்றப் பாதைக்கு ஏணிப் படியாய் விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிரிவு அதிகாரியாய் (Section Officer) பணிபுரியும் என் அன்பிற்கினிய அண்ணன் நா. தமிழ்வாணன் அவர்களுக்கும், எனது வளர்ச்சியைத் தன் வளர்ச்சியாக பாவித்து நான் சோர்ந்து விடாமல் ஊக்கமளித்த என் இனிய உடன்பிறப்புகளான நா. விநாயகம். நா.கண்ணப்பன் மற்றும் அன்பின் மறுஉருவம் கொண்ட அண்ணன் நா. கார்த்திக் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி எப்போதும் என்மீது அன்பும் செலுத்தும் அண்ணணன்கள் க.மதியழகன், க.காளிதாஸ், ம.மாயக்கண்ணன் அவர்களுக்கும், அன்பும் ஆசையும் கொண்டு எல்லாச் சூழலிலும் என் நலனில் அக்கரைக் கொள்ளும் அன்பு உறவுகள் த.நஸிரீன் சுல்தானா அவர்களுக்கும், அண்ணன்கள் சு. குபேர், த. முத்துகுமார், தம்பி ர. சதிஷ்குமார் மற்றும் சு. பாரத்குமார் தங்கை க. ரேவதி, கி. சரண்யா அவர்களுக்கும் மற்றுமுள்ள என் சகோதர, சகோதரிகள், என் குடும்பத்தார்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் பக்கபலமாய் என்னுடன் இருந்து என் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்ட என் அன்புத் தோழிகள் ர. சக்தி பிரியா, சு. சரோஜினி, ம. பிரபாவதி, கு. தேம்பாவணி, பி. மாலதி, இரா. இராஜகுமாரி, ப. தீபா மற்றும் பிற தோழியர்களுக்கும், அய்வுத் தொடர்பாக எனக்கு பல வகைகளில் உதவி செய்த தோழமைகள் முரளி, சே. சீனிவாசன், விநாயகம், ஏழுமலை, மனோகர், மாரிமுத்து, நாராயணன், ஜெகந்நாதன், பாக்கியராஜன், அம்பிகா, மீனா உள்ளிட்ட அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகிழ்ச்சியோடு நான் எப்போதும் அள்ளி அணைக்கும் என் அன்பு செல்வங்கள் தீக்க்ஷா, தருண்சாய், ஷாலா, பிரின்ஸி, பிரைசன் மற்றும் டோஃபி அவர்களுக்கும் என் அன்பு என்றும் உரியது.

**(நா. சத்தியா)**

## குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| சிறுபாண். | - | சிறபாணாற்றுப்படை |
| பதிற். | - | பதிற்றுப்பத்து |
| புறம். | - | புறநானூறு |
| பெறும். | - | பெறும்பாணாற்றுப்படை |
| பொருந. | - | பொருநறாற்றுப்படை |
| மலை. | - | மலைபடுகடாம் |
| மதுரை. | - | மதுரைக்காஞ்சி |
| ம.ப. | - | மறுப்பதிப்பு |
| மு.ப. | - | முதற்பதிப்பு |
| பட்டினப். | - | பட்டினப்பாலை |
| பதிற்றுப். | - | பதிற்றுப்பத்து |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 01 |
| ஒன்று | புறத்திணைக் கோட்பாட்டு ஆய்வுகள் | 10 |
| இரண்டு | தனிநூல் ஆய்வுகள் | 66 |
| மூன்று | தமிழர் வாழ்வியல் மற்றும் பண்புசார் ஆய்வுகள் | 101 |
| நான்கு | சங்க கால வரலாற்று ஆய்வுகள் | 150 |
| | முடிவுரை | 204 |
| | துணைநூற் பட்டியல் | 212 |

# முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் பெரிதும் செல்வாக்குடன் விளங்கி வரும் சங்க இலக்கியத்தைப் போலவே சங்க இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியும், இந்நூற்றாண்டில் செல்வாக்கு மிக்க ஆராய்ச்சியாக உள்ளது. ஒன்றன் செல்வாக்கு தொடர்ந்து நிலவுகின்றது என்று என்னும்போதே அதைப் பற்றிய வரலாறும் உருவாகிவிடுகிறது. அதிலும் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் செழித்தோங்கிய சங்க புற இலக்கிய ஆராய்ச்சிக்கும் ஒரு வளர்ச்சி வரலாறு உண்டு என்பது இயல்பான ஒன்று. இந்நிலையில் சங்க புறஇலக்கிய ஆராய்ச்சி வரலாற்றை அறிவதும், அவற்றை ஆவணப்படுத்துவதும், ஆராய்வதும் இன்றியமையாததாக உள்ளது. மேலும் சங்க புறஇலக்கியங்களின் ஒட்டுமொத்த ஆய்வு வரலாற்றை அறியவும், இவ்வாய்வின் போக்குகளை இனங்காணவும், சங்க இலக்கியம் குறித்தான எதிர்கால ஆய்வுகளைத் திட்டமிட இவ்வாய்வு உதவும், அவ்வகையில் ‘சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு’ எனும் இவ்வாய்வு தமிழ் ஆய்வுலகிற்கும், எதிர்கால ஆய்வாளர்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனடிப்படையிலேயே இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது.

அவ்வகையில் சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாற்றை ஆராய்வதற்கு முன் சங்க இலக்கிய நூல்களின் பதிப்புகள் குறித்தும், தொடக்க காலத்தில் ஆய்வு உருவாக்கம் எவ்வாறு இருந்தது என்பது குறித்தும் அறிய வேண்டியது மிகவும் அவசியமானது. எனவே சங்க இலக்கியங்கள் குறித்து இதுகாறும் நிகழ்ந்துள்ள ஆய்விற்கு அடிப்படைக் களனாக அமைவது சங்க இலக்கியப் பதிப்புகளே. பதிப்புகள் என்ற ஒன்று இல்லையென்றால் ஆய்வுகள் நிகழ்வதற்கான சூழலும் ஏற்பட்டிருக்காது.

ஆங்கிலேயர் வருகையால் அச்சு ஊடகம் என்ற ஒன்று வருகிறது. இவ்அச்சு ஊடகம் 18-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலும் 19-ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் வந்த பிறகு ஓலைச்சுவடிகளில் இருந்தனவெல்லாம் அச்சில் பதிப்புகள் வருகிறது. சங்க இலக்கியப் பதிப்பு என்பது எந்தவொரு சமயத்தையும் சாராமல் தழிழகத்தில் ஒரு பெரும் வரலாறாக இருந்தது. எனவே அந்த வகையில்தான் பதிப்புச் சூழலில் வாசிக்க மறுக்கப்பட்ட நூல்களில்

ஒன்றாக இருந்த பஞ்சம நூல்கள் அச்சு ஊடக வருகையினால் அது பரவலாக்கப்படுகின்றது. மேலும் இது தமிழ்நாட்டின் வரலாற்றினையே மாற்றியமைக்கிறது. ஏனென்றால் அது எந்தவொரு சமயத்தையும் சாராமல் பொதுத்தன்மையை பெற்றிருந்தது.

தமிழாய்வு இன்று பலநிலைகளிலும் வளர்ச்சி பெற்றுத் தொடங்குவதற்கு அடிப்படையாய் அமைவது பதிப்புப் பணியாகும். நூல்களின் அச்சு வரலாற்றில் முதன் முதலில் நமக்கு கிடைத்த முதல் தமிழ் நூல் தம்பிரான் வணக்கம் (1557) என்னும் சமய வினாவிடை நூலாகும். தொடக்க காலத்தில் கிறித்துவ சமய நூல்களையே வெளியிட்டனர். தமிழகத்தில் 1712-இல் தரங்கபாடியில் முதன் முதலில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டு பல சமய நூல்களையும் அகராதியையும் வெளியிட்டது. 1810-ஆம் ஆண்டிற்குப்பின் தமிழில் புதிய பதிப்பு முயற்சிகள் தொடங்குகின்றன. அவ்வகையில் 1812-ஆம் ஆண்டில் ‘திருக்குறள் மூல பாடமும்’ ‘நாலடியார் மூல பாடமும்’ வெளியிடப்பெற்றன. இந்நூல்களே தமிழில் அச்சுருவம் பெற்ற முதல் இலக்கிய நூல்களாகும்.

சங்க இலக்கியங்களுள் முதன் முதலாகத் திருமுருகாற்றுப்படையை (1851) வெளியிட்டவர் ஆறுமுக நாவலர். இவரைத் தொடர்ந்து சங்க இலக்கிய நூல்களுள் பெரும்பாலனவற்றைப் பதிப்பித்துப் பெரும்புகழ் கொண்ட உ.வே.சா. அவர்கள் பத்துப்பாட்டு முழுவதையும் 1889-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து புறநானூறு (1894), பதிற்றுப்பத்து (1904) முதலிய நூல்களையும் பதிப்பித்தார். இந்நிலையில் உ.வே.சா. வின் பதிப்புகள் இல்லையென்றால், சங்க இலக்கியம் குறித்தான ஆய்வுகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் இல்லாமலே போயிருக்கும். அவ்வகையில் புற இலக்கிய ஆய்வுக்கு முக்கியமானவர்களில் முதன்மையானவர் உ.வே.சா. தான். அவருடைய பதிப்புகள் இல்லையென்றால் நம் தமிழ்ச் சமூகத்திற்கு புற இலக்கியம் குறித்தான ஆய்வுகள் என்ற ஒன்று இல்லை. இதனைத் தொடர்ந்து பதிப்புகளைச் சார்ந்த ஆய்வுகள் தோன்றியது. தொடக்க கால ஆய்வுகள் எப்படி இருந்தது என்று பார்க்கும்போது இலக்கியங்களை பரப்ப வேண்டும் என்ற முயற்சியில் உரைகளாகவும், சொற்பொழிவுகளாகவும், ஒரு அறிமுக நோக்கில் தான் முதலில் வருகிறது. பின்னர் கருத்து விளக்க நூல்களாகவும், இவற்றிற்கு பிறகு தான் ஆழமான ஒரு ஆய்வுகளாகவும், பிற்காலத்தில் 1950-க்குப்

பின்னர்தான் வருகிறது. அந்த வகையில் சங்க இலக்கியத்தில் முதன்மையான ஒரு நூலாக புற இலக்கிய நூல்கள் காணப்படுகிறன. சங்க இலக்கியத்தில் புறப்பொருளை மட்டும் கூறும் புற இலக்கியங்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி போன்றனவாகும். பத்துப்பாட்டு நூல்கள் குறித்து தொடக்க கால முதல் இன்று வரை ஆய்வுகளே அதிகமாக வரவில்லை. தொகை நூல்களில் புற நூலான பதிற்றுப்பத்தைக் காட்டிலும் புறநானூறு குறித்தான ஆய்வுகளே மிகுதியாக வந்துள்ளது. எனினும் ஒட்டு மொத்தமான சங்க புற இலக்கிய ஆய்வுகளையும், அதனுடைய ஆய்வுப் போக்குகளையும் அறிந்து கொள்ளுகிற வகையில் இதுவரையில் ஆய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அந்தவகையில் தனி நூல்கள் சார்ந்து திறனாய்வு அடிப்படையில் ஆய்வுகள் வந்ததே தவிர, ஒட்டுமொத்த சங்க புற இலக்கியங்கள் குறித்தான ஆய்வுப் போக்குகளையும், சொல்கிற வகையில் எந்தவொரு ஆய்வும் முன்னெடுக்கப்படவில்லை.

உ.வே.சாவின் பத்துப்பாட்டு, புறநானூறு ஆகிய இந்நூல் வெளியீடுகளுக்குப் பிறகே, சங்க நூல்களில் அறிஞர்களின் பார்வை கவனம் பெற்றது. இதன் பின்னர் தான் பல உரைகளும், கட்டுரைகளும் விளக்க நூல்களும் எழுந்தன. சங்க இலக்கியப் பகுதிகள் பல்கலைக்கழகப் பாடமாக்கப்பெற்றன. தமிழில் முதுகலை படிப்புத் தொடங்கப் பெற்ற பிறகு சங்க இலக்கியங்கள் உரையுடன் படித்தற்குரியவை ஆயின. 1943-இல் திருமதி ஞானாம்பாள் சங்க இலக்கியத்தில் முதல் எம்.லிட். பட்ட ஆய்வேட்டையும், 1947-இல் திரு.மு. வரதராசனார் முதல் பி.எச்.டி. பட்ட ஆய்வேட்டையும் (The treatment of nature in sangam literature) அளித்தனர். இவர்களின் ஆய்விற்குப் பிறகு தான் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் சங்க இலக்கிய ஆய்வு நடைபெற்றது. ஆயினும் 1960-க்குப் பின்னரே சங்க இலக்கியம் பற்றி மிகுதியான தலைப்புகளில் ஆராயத் தொடங்கினர். இந்நிலையில் புறப்பொருள் ஆய்வுகள், திணை ஆய்வுகள், துறை ஆய்வுகள், தனி நூலாய்வுகள், புலவரைப் பற்றிய ஆய்வுகள், வாழ்வியல், வரலாற்றுச் செய்திகள், உவமைகள், அணிகள்,

காலம், யாப்பு, பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பீடு, இலக்கியக் கூறுகள், பதிப்புகள், உரைகள் எனப் பல பொருண்மை குறித்துச் சங்க புறஇலக்கிய ஆய்வு தொடர்ந்து இதுகாறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வு பெருமளவில் நடந்துள்ள போதிலும் அந்த ஆய்வுக்கு காலந்தோறும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பொருள்கள், அவற்றை இலக்கண, இலக்கியப் புலவர்கள், உரையாசிரியர்கள், ஆய்வறிஞர்கள் போன்றோர் ஆராய்ந்ததன் நோக்கம், அவர்களுடைய ஆய்வு முறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளும் வகையில் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வு வரலாறு இதுகாறும் எழுதப்படவில்லை. அந்த வகையில் சங்க புறஇலக்கியங்களின் ஒட்டுமொத்த வரலாற்றையும், எடுத்தியம்பும் நோக்கோடு 'சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு' என்னும் இவ்வாய்வு மேற்கொள்ளப் படுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

'சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு (1960-2000)' என்பது இவ்வாய்வின் தலைப்பாகும். சங்க புற நூல்களை குறித்து 1960 தொடங்கி 2000 வரை வெளிவந்துள்ள ஆய்வு நூல்களையும், முனைவர் பட்ட ஆய்வேடுகளையும் மையமிட்டு இவ்வாய்வு அமைகிறது.

## ஆய்வு முன் முயற்சிகள்

சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாற்றை உருவாக்குவதற்கு பயன்படும் வகையில் இவ்வாய்வின் முன்னோடி ஆய்வுகளாக சில நிகழ்ந்துள்ளன. அவ்வகையில் பண்டைக் காலத்திலும், இடைக் காலத்திலும் நிகழ்ந்த தமிழ் ஆராய்ச்சியின் பொருள், ஆய்வுமுறை, நோக்கம் ஆகியன குறித்து தமிழ் ஆராய்ச்சி பற்றி, 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' (1959) எனும் தலைப்பில் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் என்பவரால் இந்நூல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

புறநானூற்றின் பதிப்பு, திணைத்துறை, பாடியோர் காலம் ஆகியவற்றின் அடிப்படையில் 'புறநானூற்று ஆய்வு வரலாறு' எனும் ஆய்வு 1983-ஆம் ஆண்டு வே. சந்திரா என்பவராலும், பதிற்றுப்பத்தின் பதிப்பு, கால ஆய்வு, இலக்கண

இலக்கிய ஆய்வு இவற்றை தெளிவுப்படுத்தும் பொருட்டு ‘பதிற்றுப்பத்து ஆய்வு வரலாறு’ எனும் ஆய்வும் 1986-ஆம் ஆண்டு மா. தியாகராசன் என்பவராலும் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மூன்று ஆய்வு முறைகளில் இருந்து இவ்வாய்வு பல விதத்தில் மாறுபடுகிறது. மேற்சுட்டிய ஆய்வுகளின் பதிப்பு, காலம், இலக்கண இலக்கியங்களின் வரலாற்றினை முதன்மையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்ஆய்வு சங்கப் புற இலக்கியங்கள் அனைத்தையும் மையமிட்டு 1960 தொடங்கி 2000 வரை வெளிவந்துள்ள ஆய்வு நூல்களையும் முனைவர்பட்ட ஆய்வேடுகளையும் பொருண்மை சார்ந்து வகை தொகைப்படுத்தி, ஒரு முழுமையான புறஇலக்கிய ஆய்வு வரலாற்றினை கட்டமைக்கும் பாங்கோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

சங்க புறநூல்கள் குறித்து பல்வேறு நோக்கங்களோடு 1960 தொடங்கி 2000 வரை வெளியான ஆய்வு நூல்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வேடுகளை பொருண்மை சார்ந்து தொகுத்து, முறைப்படுத்தி அவற்றின் ஆய்வுப் போக்குகளை வரலாற்று அடிப்படையில் இனங்கொண்டு உரைப்பதோடு, பொருண்மை சார்ந்து ஆய்வுகளின் வரலாற்றை ஆவணப்படுத்துவதும், அவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதும் இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

## ஆய்வு கருதுகோள்

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகள் அவற்றின் பதிப்புக் காலந்தொட்டே வளர்ச்சி பெற்று வந்துள்ளன. தொடக்க காலத்தில் பாராட்டு முறையில், அழகியல் திறனாய்வாக இருந்தவை. காலப்போக்கில் சமுதாயவியல் ஆய்வாக வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த பொதுப் போக்கால் புறநூல்கள் குறித்த ஆய்வுகளும், உள்ளடக்க ரீதியான சமுதாயவியல் ஆய்வுகளாக வளர்ந்து தமிழ்ச் சமுதாயத்தை இனங்காணுவதற்கு உதவும் ஆய்வுகளாக மலர்ச்சி பெற்றுள்ளன. இப்புறநூல்கள் குறிப்பிட்ட காலகட்ட சமுதாயப் பண்பாட்டை, பொருளாதாரத்தை, வரலாற்றை முன் வைக்கும் இயல்புடையது. இவற்றைப் பற்றிய காலந்தோறுமான ஆய்வு வளர்ச்சிப் போக்கை கண்டறிய

வேண்டுமென்பதைக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு எல்லை**

சங்க இலக்கியத்தின் புறஇலக்கிய நூல்கள் குறித்து 1960 முதல் 2000 வரை வெளியான ஆய்வு நூல்களையும், முனைவர் பட்ட ஆய்வேடுகளையும் இவ்வாய்வின் எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக ஆய்வாளர் தேடித் திரிந்து சேகரித்து, அவருடைய பார்வைக்கெட்டிய ஆய்வு நூல்கள் மற்றும் முனைவர்பட்ட ஆய்வேடுகளை மட்டுமே முதன்மைப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு அணுகுமுறை**

சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாற்றினை மிக நுட்பமான முறையில் அறிந்து கொள்ளும் நோக்கோடு இவ்வாய்வு அமைவதால் வரலாற்றியல் அணுகுமுறையையும், நூல்களைப் பகுத்து வகை தொகைப்படுத்தி விவரித்து கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையையும் இவ்வாய்வில் பயன்படுத்தப் படுகிறது. தேவை ஏற்படின் விவரண முறையையும் இங்கு கையாளப் பட்டுள்ளது.

**ஆய்வுத் தரவுகள்**

ஆய்வுத் தலைப்பிற்கு பயன்படும் வகையிலும், தலைப்புடன் தொடர்புடைய பல செய்திகளை அறிந்துகொள்வதற்கு ஏற்ற வகையிலும் சங்க புறநூல்கள் குறித்து 1960 தொடங்கி 2000 வரை வெளிவந்துள்ள ஆய்வு நூல்களை மட்டுமே முதன்மைத் தரவுகளாகவும், முனைவர்பட்ட ஆய்வேடுகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் இவ்வாய்விற்குத் துணைமைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பயன்**

சங்க புறநூல்கள் குறித்து வெளிவந்த ஆய்வு நூல்களும், ஆய்வேடுகளும், சங்க புறஇலக்கிய ஆய்வின் முன் மரபுகளை இனங்காணுவதற்கு பெரிதும் பயன்படுவதோடு, எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும் அமைபவை. இத்தகைய ஆய்வுகளின் வழித் தடத்தில் தான் எதிர்கால ஆய்வுகள் வளம்

பெறும், மேலும் 1960 - 2000 வரை உள்ள சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாற்றை நுட்பமாக விளங்கிக் கொள்ளவும் இவ்வாய்வேடு பயன்படும்.

## ஆய்வேட்டின் அமைப்பு

சங்க புறஇலக்கிய நூல்கள் குறித்து, 1960 முதல் 2000 வரை வெளிவந்துள்ள ஆய்வு நூல்களையும் முனைவர்பட்ட ஆய்வேடுகளையும் அடிப்படையாகக் கொண்டு பொருண்மை சார்ந்து பகுத்து, தொகுத்து, முறைப்படுத்தி புறஇலக்கிய ஆய்வு வரலாற்றினை கட்டமைக்கும் நோக்கோடு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக பின்வரும் நான்கு இயல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இயல் ஒன்று – புறத்திணைக் கோட்பாட்டு ஆய்வுகள்

இயல் இரண்டு – தனிநூல் ஆய்வுகள்

இயல் மூன்று – தமிழர் வாழ்வியல் மற்றும் பண்புசார் ஆய்வுகள்

இயல் நான்கு – சங்க கால வரலாற்று ஆய்வுகள்

## இயல் ஒன்று : புறத்திணைக் கோட்பாட்டு ஆய்வுகள்

இவ்வியல் புறத்திணை மற்றும் புறத்துறை பற்றிய ஆய்வுகளாக வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள் மற்றும் ஆய்வேடுகளின் திணையின் அமைப்பு, திணை மரபு, திணைப் பொருத்தம், திணைக்குரிய இலக்கணம், திணையின் வழி வகுத்துக் கூறியுள்ள தொல்காப்பியரின் கருத்துகள், இம்முறையே துறைப் பற்றிய கருத்துகளாகத் துறைப் பெயர்ப் பொருத்தம், உளவியல் சிந்தனைகள், சமுதாயம், மகளிர் பாடுபொருள், பரிசிலர் வாழ்க்கை முதலிய பொருண்மைகளை ஆராய்வதோடு, இவை தவிர்த்து வேறு எவ்வெவ் கோணங்களில் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளது என்பதையும் எடுத்தியம்பும் நோக்கோடு இவ்வியல் அமைகிறது.

## இயல் இரண்டு : தனிநூல் ஆய்வுகள்

சங்க இலக்கியங்களுள் புறஇலக்கியங்களாக கருதக் கூடிய புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி

இவ்வெட்டும் புறஇலக்கிய நூல்களாகும். தனி நூல்களாகிய இவ்வெட்டு நூல்களை மையமிட்டு நிகழ்ந்துள்ள ஆய்வு நூல்கள் தொடக்கத்தில் பெரும்பாலும் அறிமுகங்களாகவும், செய்தித் தொகுப்புகளாகவும், சொற்பொழிவுகளாகவும், கருத்து விளக்கங்கள் கொண்டவையாகத் தான் வெளிவரலாயின. பின்னர்தான் தனித்தனி இலக்கியங்களைப் பாடுபொருளாகக் கொண்டு பல்வேறு பொருண்மையில் ஆய்வுகள் வெளிவரத் தொடங்கியது. இத்தனி இலக்கிய நூலாய்வுகளின் போக்குகளை தொகுத்து வகைப்படுத்தி, பொருண்மை சார்ந்து எவ்வெவ் கோணங்களில் ஆராயப்பட்டுள்ளது என்பதை இவ்வியல் கவனப்படுத்துகிறது.

## இயல் மூன்று : தமிழர் வாழ்வியல் மற்றும் பண்புசார் ஆய்வுகள்

சங்க காலத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல், உணவு, உடை, உறையுள் பற்றிய செய்திகள், ஆடவர், பெண்டிர் நிலை, சாதி, தொழிற்பிரிவுகள், கலை, கல்வி, வீரம், கொடை, புகழ், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் கால முதலான பொருண்மைகளை உள்ளடக்கிய ஆய்வுகள் வந்துள்ள போதிலும், அவ்வாய்வுப் போக்கினை ஆராய்ந்து திருப்பங்களையும், மாறுதல்களையும் கண்டறிந்து மதிப்பீடு செய்யும் வகையில் இவ்வியல் அமைகிறது.

## இயல் நான்கு : சங்ககால வரலாற்று ஆய்வுகள்

வரலாற்றியலோடு தொடர்புடையனவாய் சங்க புறஇலக்கிய நூல்களில் இடம் பெற்ற மன்னர்கள், வள்ளல்கள், குறுநில மன்னர்கள், புலவர்கள், போர் நடந்த ஊர்கள், போருக்கான காரணங்கள், பாடல் தோன்றிய காலங்கள் போன்ற பொருண்மைகளை அடிப்படையாக வைத்து வெளி வந்துள்ள நூல்கள், மற்றும் ஆய்வேடுகளின் ஆய்வுப் போக்கினையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வியல் அமைகிறது.

## முடிவுரை

ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ள நான்கு இயல்களிலிருந்து பெறப்பட்ட முடிவுகளனைத்தும் இதில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும்,

புறஇலக்கியம் குறித்து வெளிவரவேண்டிய ஆய்வுகள், இங்கு மேலாய்வுக் களங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்குப் பயன்படுத்திய முதன்மைத் தரவுகளும், துணைமைத் தரவுகளும் துணைநூற்பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

# இயல் - 1

# புறத்திணைக் கோட்பாட்டு ஆய்வுகள்

சங்கப் புலவர்கள் எழுதிய பாடல்கள் அகம், புறம் என்னும் இருபெரும் பிரிவுக்குள் அடங்கும். அகம், புறம் என்னும் சொற்கள் முறையே உள்ளே, வெளியே என்று பொருள்படுவனவாகும். உள்ளத்தின் உள்ளே தோன்றும் காதல் உணர்ச்சியையும், அதன் தொடர்பானவற்றையும் பாடுவன அகப்பாடல்கள் ஆகும். காதல் அல்லாத பிற வெளி உலக நிகழ்ச்சியினை போர், வீரம், கொடை, புகழ், மன்னர், வேந்தர், குறுநில மன்னர், புலவர், புரவலர் இவை குறித்து பாடுவன புறப்பாடல்கள் ஆகும். அகப் பாடல்கள் குறிஞ்சி (புணர்தல்), முல்லை (பிரிவைப் பொறுத்திருத்தல்), மருதம் (ஊடல்), நெய்தல் (பிரிவைத் தாங்காமல் ஏங்குதல்), பாலை (பிரிதல்), பெருந்திணை (காதல் கைம்மீறுதல்), கைக்கிளை (ஒருதலைக்காதல்) என்ற ஏழு திணைகளாக வகுத்துக் கூறப்படும். அவ்வாறே தொல்காப்பிய புறத்திணையியல், புறத்திணைகள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழு திணைகளாக வகுத்துக் கூறப்படும்.

பன்னிரு படலமும் அதனைத் தழுவிய புறப்பொருள் வெண்பா மாலையும் தொல்காப்பியரினின்றும் வேறுபட்டுத் திணைப் பகுப்பை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிரண்டாகக் கூறுகின்றன. வீரசோழியமோ 12 திணைகளில் கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டையும் தவிர்த்து திணைகள் பத்தே எனப் பகுத்துள்ளது. தொல்காப்பியத்தை ஒப்பிட்டுத் திணை வகுத்த இலக்கண விளக்கம் திணைகள் ஏழே என்று சுட்டினும் ஒழிபியலில் பன்னிரு படலமும் கூறிய 1. பொதுவியல், 2. கைக்கிளை, 3. பெருந்திணை என்ற திணைகளையும், அடக்கிக் கூறுகின்றது. இவ்வாறு புறத்திணைப் பாகுபாடுகள் பலபட மொழியப்படுகிறது.

சங்க இலக்கிய மொத்தப் பாடல்களான 2381-இல் அகத்திணைக்குரியன 1862 பாடல்களும், புறத்திணைக்குரியன 519 பாடல்களையும் உடையது. புறநூல்களில் ஒன்றான புறநானூற்றின் இறுதி 144 பாடல்களைப் புறத்திணைப் பாடல்கள் என்றும் அழைக்கலாம் (257 – 400). புறநானூற்றில் உள்ள நானூறு

பாடல்களும் புறத்திணைப் பாடல்களே என்றாலும் முதல் 256 பாடல்களில், மூவேந்தரைப் பாடும் பாடல்கள் முதலிலும், வள்ளல் பாடல்கள் அவற்றை அடுத்தும், படைத்தலைவர், குறுநிலத் தலைவர் பாடல்கள் அவற்றிற்கு பின்பும், அறிவுரைப் பாடல்கள், துன்பியல் பாடல்கள் இறுதியாகவும் வைக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் 1-256 பாடப்படும் தலைவர்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. 256-400 பாடல்களில் புறத்திணைகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அதனால்தான்போலும், இப்பாடல்கள் பலவற்றின் அடிக்குறிப்பில் அமைந்த தலைவனின் பெயர் சிதைக்கப்பட்டிருக்கிறது.

மேலும், பாடாண் திணை அமைந்த பாடல்களே மிகுதியாக உள்ளன. அகத்திணையில் 139 பாட்டுக்களும், 77 பாட்டுக்கள் வாகைத் திணையிலும், பொதுவியல் திணையில் 67 பாட்டுக்களும் உள்ளன. ஒவ்வொரு பாட்டுள்ள துறைகள் 21 உள்ளன. மொத்தம் 65 துறைகள் உள்ளன. சில பாட்டுக்கள் ஒவ்வொன்றும் இரு வேறு துறைகளைக் கொண்டதாகச் சுட்டப்பட்டுள்ளன.

இயன்மொழித்துறையில் 58 பாட்டுக்களும், கையறுநிலைத் துறையில் 41 பாட்டுக்களும், அரச வாகைத் துறையில் 36 பாட்டுக்களும் பாடப்பெற்றுள்ளன. புறப்பாடல்களுக்குப் பொருத்தமாகத் திணை, துறைகள் வகுக்கப் பெற்றுள்ளன. 12 திணைகளாலும் 65 துறைகளாலும், புறப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 19 பாட்டுக்களுக்குத் திணையும், 13 பாட்டுக்களுக்குத் துறையும் ஒரே பாடலுக்கு மட்டும் திணையும் துறையும் குறிக்கப்படவில்லை.

தொல்காப்பியத்தில் கூறப்பட்ட புறத்திணைகட்கும், புறநானூற்றுத் திணை அமைப்புக்குமிடையே வேறுபாடு காணப்படுவதை மார், சிவத்தம்பி, இராசம் இராமமூர்த்தி முதலியோர் பலர் அவதானித்துள்ளனர். தொல்காப்பியம் வெட்சி, வஞ்சி, வாகை, தும்பை, உழிஞை, பாடாண், காஞ்சி ஆகிய ஏழினையும் புறத்திணைகளாகக் குறிப்பிட வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, நொச்சி, கரந்தை, பாடாண், காஞ்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பதினோரு திணைகளில் புறநானூற்றுப் பாடல்கள் வகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

புறத்தில் கூறப்பட்ட நொச்சி, கரந்தைத் திணைகள் தொல்காப்பியத்தில் முறையே உழிஞை, வெட்சித் திணைகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. ஆனால் உழிஞைத் திணை புறநானூற்றில் வகுக்கப்படவில்லை என இராசம் இராமமூர்த்தி எனும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

உண்மையை நோக்கின் சங்க நூல்களில் உள்ள எல்லாப் பாடல்களுக்கும் தொல்காப்பியர் கூறிய அடிப்படையில் திணை வகுப்பது சிரமமான பணியாகும். திணைப்பகுப்பு தொல்காப்பியர் குறிப்பிட்டபடி முதல், கரு, உரிப்பொருளை அடிப்படையாக வைத்தே பகுக்கப்பட்டது.

புறுநானூற்றில் திணை மறைந்து போன பாடல்கள் 244, 267, 268, 282, 289, 323, 324, 325, 355, 361 என்பனவாகும். துறை மறைந்து போன பாடல்கள் 244, 267, 268, 282, 285, 323, 325, 355, 359, 361 என்பனவாம். புறநானூற்றில் 64 துறைகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றுள் 22 துறைகள் புறப்பொருள் வெண்பாமாலையில் காணப்படவில்லை.

இவ்வகையில் பார்க்கும் போது இதுகாறும் திணைக்கோட்பாடு பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களில் பிரச்சனைகள், சிக்கல்கள் உண்டென்பது தெளிவாகிறது. மேலும் தொல்காப்பியத்திற் குறிப்பிடப்படாத மரபுகள் சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றமையும் ஆராய்ச்சியாளரால் கண்டறியப் பட்டுள்ளது.

ஜே. ஆர். மார் (1985), க. கைலாசபதி (1968), கா. சிவத்தம்பி (1981), இராசம் இராமமூர்த்தி (1977), மா. செண்பகம் (1977), பெ. மாதையன் (1987-1988) ஆகியோர் தாம் கண்டறிந்த செய்திகளைப் பற்றி எழுதியுள்ளனர்.

ஜே. ஆர். மார் தனது ‘The Eight Anthologies’ என்ற நூலில் கைக்கிளை பெருந்திணை ஆகிய ஒழுக்கங்கள் தொல்காப்பியத்துள் அகத்திணை இயலுள் கூறப்படுவதையும், புறநானூற்றில் அது புறத்திணைக்குள் அடக்கப்பட்டிருத் தலையும் எடுத்துக்காட்டியுள்ளார். புறநானூற்றின் திணை துறைக் குறிப்புகள் தொல்காப்பியத்தை விடவும், புறப்பொருள் வெண்பாமாலையுடனேயே ஒத்துப் போவதாயுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இப்புறத்திணைகள் ஏழினுள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் போன்ற திணைகள் குறித்து சில நூல்களும் சில ஆய்வேடுகளும் வெளிவந்துள்ளன. அவ்வகையில் புறத்திணைகள் குறித்து முதன் முதலில் ஆய்வினை மேற்கொண்டவர் டாக்டர் மு.வரதசாசனார் அவர்கள். இவருடைய 'புலவர் கண்ணீர்' என்னும் நூலே புறத்திணையைக் குறித்து வெளியான ஆய்வு நூல்களில் முதல் ஆய்வு நூல். இவரைத் தொடர்ந்து, நா. செயராமனின் 'சங்க இலக்கியத்தில் பாடாண்திணை'களும் என்ற நூலும் அ. சீநிவாசனின் 'புறத்திணை' என்னும் தலைப்பிலான நூலும், பொ. சுந்தரமகாலிங்கம் அவர்களின் 'புறத்திணை விருந்து' என்ற நூலும், நா. செயராமனின் 'தமிழில் திணைத் துறைக் கோட்பாடுகள்', ஆ. இராமகிருட்டிணனின் 'புறத்திணை வளர்ச்சி' என்னும் முனைவர் பட்ட ஆய்வேடு வெளியான ஆய்வு நூல்களுள் மிக முக்கியமான ஆய்வுகளாக பல்வேறு ஆய்வாளர்களால் சிறப்பிக்கப்பட்டும், போற்றப்பட்டும் வருகிறது.

மேற்குறிப்பிட்ட ஆய்வறிஞர்களின் ஆய்வு நூல்கள் புறத்திணைகளை முழுவதையும் மையமாகக் கொண்டிருக்க, தனித்தனி திணைகள் குறித்தும் சிலர் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். அவ்வகையில் பாடாண் திணையைக் குறித்து நா. செயராமன் அவர்களின் 'சங்க இலக்கியத்தில் பாடாண் திணை' என்னும் நூலும் வாகைத்திணைக் குறித்து கு. வெ. பாலசுப்பிரமணியனின் 'சங்க இலக்கியத்தில் வாகைத்திணை' என்னும் நூலும், முனைவர் கோ. சிவகுருநாதனின் 'வாகைத்திணை' என்னும் நூலும், எஸ். பாலகிருஷ்ணனின் 'சங்க இலக்கியத்தில் வாகைத்திணை' எனும் முனைவர் பட்ட ஆய்வேடும் எனத் தனிதனித் திணைகள் குறித்ததான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை நூலாகவும் ஆய்வேடாகவும் வெளியிட்டுள்ளார்கள். மேலும், புறபாடல்களின் திணைத்துறைக் குறித்தும் முனைவர் பட்ட ஆய்வுகள் சில நிகழ்ந்துள்ளன. சோதிபாய் தேவதாஸ் அவர்களின் 'சங்க புறப்பாடல்களின் திணைத் துறையமைப்பு' இல. குளோரியா சுந்தரமதி அவர்களின் 'சங்க இலக்கிய திணைத்துறைப் பாடல்களில் எழும் சிக்கல்கள்', ஆ. சுசிலா என்பவரின் புறநானூற்றில் திணை துறை ஓர் ஆராய்ச்சி, இ. மொ. இராசேந்திரன் அவர்களின் 'தமிழ் இலக்கியத்தில் கையறுநிலைப்

பாடல்கள்' போன்ற புறத்திணை, துறை குறித்த ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. மேலும் திணைத்துறை குறித்து செய்திகள் பகுதிநிலையிலும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சான்றாகத் 'தமிழில் திணைத்துறைக் கோட்பாடுகள்' என்னும் ஆய்வினை அவ்வகையில் உள்ளடக்கலாம். இவ்வாறு வெளிவந்துள்ள ஆய்வு நூல்களின் நோக்கினையும் போக்கினையும் ஆராய்ந்து, அவர்களின் ஆய்வுப் போக்குகளை கண்டுணர்ந்து அதனை வெளிப்படுத்தும் நோக்கோடு இவ்வியல் அமைந்துள்ளது.

பாடாண் திணை (panegyric) என்பது ஒருவரைப் புகழ்ந்து பாடும் திணையாகும். தமிழ் இலக்கணங்களிலும் சங்க இலக்கியத்திலும் பாடாண்திணையும் அதன் பல்வேறு துறைகளும் எங்ஙனம் விளக்க முறுகின்றன என்பதை ஆய்ந்து வெளியிடும் நோக்கோடு, இந்நூலாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முனைவர் நா. செயராமன் அவர்களால் மதுரைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட பேற்றிற்காக அளிக்கப்பெற்ற "சங்க இலக்கியத்தில் பாடாண்திணை" என்னும் ஆய்வேடு 1975-இல் நூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

பாடாண்திணை, இலக்கணத்துள் பாடாண், சங்க இலக்கியத்துள் பாடாண், பிற மொழிகளில் பாடாண், பாடாண் துறைகள், அகத்திணைப் பாடாண், போர்த்திணைப் பாடாண், தேவ பாடாண், பாடானும் வீரநிலைக்காலமும் என்னும் தலைப்புகளைக் கொண்டு இந்நூலாசிரியர் ஆராய்ந்துள்ளார்.

திணை என்பது ஓர் ஒழுக்கம் பற்றிய பல நிகழ்வுகள் துறைகள் அடங்கிய தொகுதி. இவ்வேழு திணைக்கும் அகம், புறம் என்ற இரு பகுதிகளும் உண்டு. எனவே அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு ஆயின. அக்காலத்துப் பாவலர் பாவகப்படுத்த செய்திகள் (Content) இப்பதினான்கு திணைகளுள் அடக்கி, அடக்கிய அவர்தம் பாடல்களைத் திணைப்பாடல் என வழங்கும் வழக்குத் தோன்றியது.

திணைப்பாடல் பாடும் வழக்கு மறைய நூல்வடிவில் காப்பியம் யாக்கும் நிலையும், பதிகப் பாடலை யாக்கும் நிலையும், பின்னர்ச் சிற்றிலக்கிய மாலை யாக்கும் நிலையும் தோன்றி வளர்ந்தபோதும் திணையை மறவாது, அதைப் பாவகைப்படுத்தும் உணர்வு பாவலர்க்கு இருந்தது. பதினான்கு திணை களையும் அன்றிச் சிற்சில திணைகளையே அவ்வாறு தொடர்ந்தனர். அவற்றுள் பாடாண்திணையும் ஒன்று. பிறபுறத் திணைகளின் சாயல் அளவே, பிற்கால இலக்கியத்தில் காணப்பட்ட, பாடாண் திணையோ வளர்ச்சியடைந்து காணப்பட்டது. சங்க காலத்தில் பாட்டளவே அமைந்த பாடாண், பிற்காலத்தில் நூலளவு கொள்ளும் வளர்ச்சி பெற்றுப் பற்பல சிற்றிலக்கியங்களுக்குப் பாடுபொருள் ஆகியது. இவைகளை சுட்டிக்காட்டி சங்க இலக்கியத்தில் பாடாண்திணை ஆளப்படும் முறையை முழுமையாக ஆராய்கின்றது இந்நூல்.

புகழ்ந்து பாடும் பாடல்களே பாடாண் ஆகும். இங்கு பாடப்படுவோர் வள்ளல், மன்னர், கடவுள் ஆகியோராவர் மேல்நாட்டார் கூறும் Panegyric என்பதைப் பாடாண் எனலாம். பாடு + ஆண் எனப்பிரித்து பெருமையை ஆளும் தன்மை என்றும் பொருள் கொள்ளுவதோடு பாடாண் என்பதிலுள்ள பாடு என்னும் சொல்லை வினைச்சொல்லாகக் கொண்டு பொருள் கூறுவதைவிடப் பெயராகக் கொண்டு பொருள் கூறுவதும், முறைமை, செவ்வி, பெருமை, ஒலி, ஒழுக்கம் எனப்பொருள் படைத்த பெயர்ச்சொல்லாகக் கொள்வது பொருத்தமென்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். ஆண் என்பதற்கு ஆடவர் எனப்பொருள் கொள்வதைவிட ஆளுமை எனப் பொருள் கொள்ளலே பொருத்தமாகும். மேலும், சோமசுந்தர பாரதியார், வெள்ளைவாரணர், நச்சினார்க்கினியர், இராகவையங்கார், டாக்டர் துரையரங்கனார், இலக்குவனார், புலவர் குழந்தை, க. கைலாசபதி போன்றோரின் கருத்துக்கள் இவ்வாறு பொருள் கொள்வதற்குத் துணை செய்கின்றன.

மேலும் "பாடாண் என்பது பிற போர்த்திணைகளைப் போலப் பாடுதற்குரிய நிகழ்ச்சிகளைக் கூறுவதாக மட்டும் இல்லை. அதுபாடல் தோன்றும் அடிப்படையை விளக்குவதோடு பாடாண் என்பது தனி இலக்கிய வகையாகக் கொள்ளத்தகுமேயன்றிப் பாடுதற்குரிய பொருளைக் கூறுவதாகக் கொள்ளல் இயலாது. அட்சன் கூறும் பாடல்வகை பலவற்றில் தன்னுணர்ச்சிப் பாடலாகிய Lyric எனும் வகையில் பாடாண் பாடல்களை அடக்கிக் கூறலாம்.

யாழோடு பாடப்பட்ட இசைப்பாடலே இவற்றிற்குத் தொடக்கம் என்னும் கருத்தைத் தொல்காப்பியத்திற்கு முன்பு தமிழில் இருந்த பாணர் பாடும் மரபோடு (Bardic tradition) இணைத்துப் பார்ப்பது பொருத்தமாய் உள்ளது. அவற்றிலும் சிறப்பாக Ode எனப்படும் போற்றிப் பாடல் வகையும் முன்னிலை மொழியாகப் பாடப்படும் பாடாண் பாடல்களை அடக்கிக் கூறலாம்" (1975:36) என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

பா அல்லது பாட்டு, பாடல், செய்யுள் ஆகியவற்றின் வேறுபாடுகளைக் கருதாத வகைகளில் பொதுமைப்படுத்திப் பார்க்கும் நிலையில் இக்கூற்று அமைகிறது. புறநானூற்றுப் பாடல்களுக்கும் யாழிசைக்கும் தொடர்பில்லை. அவை இசை தழுவிய செய்யுள் வகையின பரிபாடல் போன்றோ பிற்காலக் கீர்த்தனைகள் போன்றோ அவற்றை கருதற்கில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுவது ஏற்கத்தக்கது.

பாடாணுக்கும் கைக்கிளைக்கும் ஒற்றுமைக் கூறுகளாகப் பத்துக் கூறப்படும். போர்த்திணை அடிப்படையிலும், அகத்திணை அடிப்படையிலும், பாடாண் தோன்றும். பாடாண் இசைப்பாடலாகப் பாடப்படுவதோடு, அகப்பாடல் முறையிலும் கடவுளைப் பாடுதலும், மக்களைப் பாடுதலும் உண்டு, பாட்டுடைத் தலைவனைத் குழந்தையாகக் கொண்டு பாடுவதும் உண்டு. தலைவன் பிறந்த ஊரும், உருவச் சிறப்பும் புகழப்படுவதுண்டு, பாடாண் பாடலுள் தலைவன் பெயர் கூறப்படும். தலைவனது கொடியைப் புகழும்போது, அவன் பகையரணை அழித்ததைக் கூறும்போதும், வென்று வள்ளிக் கூத்தாடும் போதும், கடவுளைக் உவமைக் கூறிப் பாராட்டுவதும், கடவுள் வாழ்த்தை இணைத்துக் தலைவனைப் புகழ்வதும் உண்டு. அதுவே கொடிநிலை, கந்தழி, வள்ளி எனும் நூற்பாவுள் கூறப்படும் மன்னனைப் புகழும் முறையில் கொற்றவள்ளை சிறப்பிடம் பெற்றிருப்பதையும் ஆசிரியர் சுட்டிச் சென்றிருக்கிறார்.

பாடாண் திணைக்குரியவாகப் சங்கப் புறநூல்களில் ஒன்றான புறநானூற்றில் 142 பாடல்கள் உள்ளன. அதோடு மட்டுமல்லாமல் 82 பாடல்கள் மட்டுமே பாடாணாகக் கொள்ளுதற்கு உரிய முறையில் அமைந்துள்ளது. பதிற்றுப்பத்து முழுமையும் பாடாண் எனக் கருதுவதோடு, பாடாண் துறைகளில் இயன்மொழி குறிக்கத்தக்கது. இத்துறை சார்ந்தனவாகப் புறநானூற்றில் 58

பாடல்கள் உள்ளன. புறநானூற்றில் அதிகப் பாடல்கள் இத்துறையில்தான் பாடப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த இடம் பெறுவது அரசவாகைத்துறையாகும் இத்துறைக்குரியனவாக 36 பாடல்கள் உள்ளன. அவ்வகையில்,

> மன்னனது வீரம் வெற்றி முதலியவற்றைப்பாடுவது அரசவாகை என்றும் அவற்றோடு மன்னனது பிற இயல்புகளையும் பாடுவது இயல்மொழி என்றும் இலக்கணம் கூறும். எனவே, பிற துறைகளைவிட இத்துறைகளில் பாடப்படும் பொருளும் சூழலும் பரந்திருக்கக் காணலாம். எந்தப் பாடலையும் மிக எளிதில் ஏற்றுக்கொள்ளும் துறையாக இயல்மொழி இருப்பதற்குக் காரணமும் அதுவே யாகும். புறநானூற்றில் உள்ள இயல்மொழிப் பாடல்களைப் பொதுவாக நோக்குமிடத்து ஈகை, வீரம், ஆட்சி சிறப்பு முதலிய இயல்புகள் பெரிதும் பாடப்படுகின்றன. மரபின் இயல்பு அகவாழ்க்கை, ஆட்சிச் சிறப்பு, நட்பு, முறைமை, புலவரை மதித்தல் முதலிய பிற இயல்புகள் ஆங்காங்கே குறிக்கப்படுகின்றன" (மேலது: 97)

என்று இந்நூலாசிரியர் எடுத்துரைக்கின்றார். இயன்மொழியே பாடாணின் முழுநோக்கையும் காட்டும் துறையாக அமைந்துள்ளதோடு, இவ்இயன்மொழி வாழ்த்தே பிற்காலத்தில் மெய்கீர்த்தியாய் உருப்பெற்றது என்பதையும் இந்நூலினால் உய்துணர முடிகிறது. இயன்மொழித்துறைப் பாடல்களில் 26 ஈகை பற்றி மட்டும் பேசுகின்றன. கொடை, கொடைப்பொருள், அளவு, கொடைபெறுவோர், குறித்ததான செய்திகளை ஆசிரியர் ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளார். மேலும், இவ்விடத்தே புலவர், புரவலர் தொடர்பு, சமுதாயப் பிண்ணனி குறித்தும் ஆராய்ந்திருத்தல் வேண்டும், வாழ்த்தியல், பூவைநிலை, பரிசில் தொடர்பான துறைகள், ஆற்றுப்படை போன்ற துறையிலமைந்த பாடல்கள் குறித்து ஆராயும் நோக்கோடு இந்நூலாசிரியர், "திருமுருகாற்றுப்படை, பிற பாடலிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக் கின்றது. பாடல் தலைவனாக மன்னனுக்குப் பதில் கடவுள் பாடப்படுகின்றார். செல்லும் பரிசிலன் நிலை, பெற்ற பெருவளம் ஆகியவை பற்றிக் கூறப்படவில்லை. தலைவன் பெருமையே பாடல் முழுவதிலும் நிறைந்துக் காணப்படுகிறது. பெயரிலும் வேறுபாடுள்ளமை முன்னர்ச் சுட்டப்பட்டது. அரசியலும் வரலாறும் சிறப்பிடம் பெறாது சமயமும் புராணமுமே சிறப்பிடம் பெற்றன. ஆற்றுப்படை

வரலாற்றில் திருமுருகாற்றுப்படை ஒரு திருப்புமுனையாக உளதெனலாம்" (மேலது: 205) என இந்நூலின்கண் ஆசிரியர் எடுத்தியம்புகிறார்.

இச்செய்தி ஓர் இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாமேயன்றி வேறுபாடுகளைக் கண்டு, அவற்றுக்குரிய காரணங்களைக் கிளந்து கூறும் ஆராய்ச்சியாகாது. நெடுநல்வாடை பாடியவரே திருமுருகாற்றுப்படையையும் பாடியுள்ளார். சங்க மரபு இங்கு மாறுவதற்குரிய காரணம் யாதென ஆராய்தல் வேண்டும். பெறலரும் பரிசில் குறித்துப் புலவர் நோக்கு படர்தற்குரிய வரலாற்றுச்சூழல் யாதென எண்ணலும் வேண்டும் என்ற நூலாசிரியரின் கருத்து கவனிக்கத்தக்கது.

மக்களை மட்டுமின்றி கடவுளையும் பாடலாம் எனும் தொல்காப்பியர் கூற்றைப் பின்பற்றிக் கடவுளைத் தலைவராகக் கொண்ட பாடல்கள் சிறிது விளக்கப்படுவதே தேவபாடாண் ஆகுமென்றும், பிறப்பு வகையாலன்றிச் சிறப்பு வகையால் முனிவர், பார்ப்பார், ஆநிரை மழை, முடியுடை வேந்தர், உலகு எனும் ஆறும் அமரர் சாதிப்பால அவற்றை வாழ்த்துவது உண்டு மறுமைப் பயன் பெறுவதன்றி இம்மைப் பயனைப் பெறும் வேட்கையோடு அவை வாழ்த்தப்படும். இவ்வாறு நச்சினார்க்கினியர் அமரராகக் கருதப்படும் அறுபொருளை வாழ்த்துவதும், மறுமையின்றி இம்மைபயன் வேண்டுவதும் தேவபாடாணுக்குரிய செய்திகளாக குறிப்பிடுகிறார்.

உலக வழக்கிலுள்ள தாலாட்டுப் பாடலே இலக்கியப் பெற்றியடைந்து கண்படைநிலை என்னும் துறையாகியது சங்கப் பாடலுள் அது பெருவழக்குப் பெறாவிட்டாலும் பக்திக் காலத்தில் அது வளர்ச்சி பெற்றது. பிள்ளைத் தமிழில் உள்ள தாலாட்டுப் பருவம் இதன் வளர்ச்சியேயாகும். மேலும், வேள்வி நிலையும், விளக்குநிலையும் சங்கப்பாடலுள் இடம்பெறவில்லை. தலைவனைக் காக்கும்படி இறைவனை வேண்டும் புறநிலை வாழ்த்து சங்கப் பாடலுள் காணப்படவில்லை. புறநிலை வாழ்த்து, இயன்மொழி வாழ்த்தினுள்ளேயே பின்னர் அடக்கப்பட்டது. பிள்ளைத் தமிழின் காப்புப் பருவம் புறநிலை வாழ்த்தின் வளர்சியே ஆகும். கைக்கிளையில் தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவது உண்டு. இதுவே உலா, கோவை முதலிய சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையாகும். பாரதியார் காலம் வரை

இவ்வமைப்புத் தொடர்ந்து வந்துள்ளது என்று ஆசிரியரால் விவரித்து எடுத்துரைக்கப்படுகின்றது.

ஆநிரையை மீட்டு வரும்போது காட்டிடைக் காயா மலரைக் நிமித்தம் காரணமாகப் புகழ்ந்து பாடும்நிலை, படிப்படியே திருமாலோடு உவமையாக்கிக் காயாவைப் புகழ்வதாகவும், மன்னனால் வழிபடப்படும் திருமாலோடு உவமை கூறிக் காயாவைப் புகழ்வதாகவும், திருமாலை மன்னனோடு உவமை கூறிப் புகழ்வதாகவும் பல்வேறு பெரிய மாற்றங்களைப் பெற்றுள்ளது. பின்னர் மன்னனையே திருமாலாக உருவகித்துப் பாடும் நிலை இதிலிருந்து தோன்றி வளர்ந்துள்ளது.

நிலையாமை என்ற கருத்துத் தோன்றிய போதும் இவ்வுலக வாழ்வை வெறுத்துக் கூறும் கருத்துப் பரவவில்லை. மாறாக, இறக்குமுன் இன்பமாக வாழ்வோம், பிறர்க்கு ஈந்து வாழ்வோம் என்ற கருத்துக்களே நிலவியிருந்தன. என்பதனை,

> "மன்னனுக்கு அரசியல் அறிவுறை கூறும் துறைகளாகச் செவியறிவுறூஉவும், வாயுரை வாழ்த்தும் அமைந்து நாளடைவில் ஒன்றாயின, இறப்புக் காரணமாக எழுந்தவை பெருங்காஞ்சி என்றும், நிலையாமை யடிப்படையில் அறம் பொருளின்பம் உணர்த்துவது முதுமொழிக்காஞ்சி என்றும் வழங்கின நிலையாமையிலிருந்து கிளைத்த நல்வினை, தீவினை, துறவுநிலை முதலிய மெய்ப்பொருள்களைப் பேசுவது பொருள் மொழிக் காஞ்சியாக உருவாகியது. இறப்பைப் பற்றியோ, நிலையாமை பற்றியோ, வினைபயன் பிறவி முதலியவை பற்றியோ, குறிக்காமல் வெறுமனே உலகியல் உறுதிப்பொருளை உரைக்கும் பாடல்களுக்குத் தனியே துறை கூற இயலாது. பொருள் மொழிக்காஞ்சியிலேயே வகுத்துள்ளமை குறிக்கத்தக்கது" (மேலது: 240, 241)

என்று ஆசிரியர் ஆராய்ந்து கூறும் கருத்துக்கள் இங்கு பாராட்டத்தக்கதாகும். அறக்கருத்துகள் சமண, பௌத்த, பிராமணர் வருகையால் ஏற்பட்டது எனல் பொருந்தாது என ஆசிரியர், கைலாசபதியின் கருத்தை வன்மையாய் மறுத்துக்கூறும் விளக்கம் வலுவுடையதாக உள்ளது. ஏனெனில் சமணர்,

பௌத்தர் செல்வாக்கால் ஏற்பட்ட அறக்கருத்துக்கள் இவ்வுலக வாழ்வினை வெறுப்பதை அடிப்படையாகக் கொண்டவை. ஆயின் தமிழர் தம் கருத்துக்கள் இவ்வுலக வாழ்வை வெறுத்து ஏற்பட்டவை அல்ல.

தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட படிப்படியான மாற்றமே அறக்கருத்துக்கள் ஏற்படக் காரணம். சமணர், பௌத்தர் வருகைக்குப்பின் ஏற்பட்ட உலக வாழ்வை வெறுக்கும் நோக்கு சங்க காலத்தில் காணப்படவில்லை என்று ஆராய்ந்து கூறும் ஆசிரியரின் கருத்து போற்றத்தக்கது.

மன்னனது பிறந்தநாள் விழாவில் அவனைப் போற்றும் பிறந்தநாள் பெருமங்கலம் என்னும் துறை சங்கப் பாடலுள் காணப்படவில்லை பின்னர் வந்த காப்பியங்களில் இவ்விழா பெரிதும் போற்றப்படுகிறது. அவ்வாறே முடிசூட்டு விழா பற்றிய மண்ணுமங்கலத்துறையும், சங்ககாலத்தில் இல்லாது பிற்காலத்தில் காணப்படுகிறது.

எயிலழித்து நீராடும் மண்ணுமங்கலத்துறை தொல்காப்பியரால் பாடாணுக்குரியதெனக் கூறப்பட்டாலும், அவர் காலத்துக்குப்பிறகு அது போற்றப்படவில்லை. நிமித்தத்தின் அடிப்படையில் தோன்றிய ஓம்படைக் கிளவி சங்கப் பாடலுள் காணப்படவில்லை.

உலகியல் நிகழ்ச்சிகளே பாடாண் துறைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாய் இருந்தாலும், தனித் துறையாக இருந்தவை பின்னர்த் தனி இலக்கிய வகையாக வளர்ந்து அடுத்துக் காப்பியத்தின் கூறுகளாகவும், சிற்றிலக்கியங்களாகவும் வளர்ந்தன என்பதையும் இந்நூலாராய்ச்சியின் மூலம் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

புறப்பொருளில் உள்ள திணைகள் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் அருகியே உள்ளது. டாக்டர் மு. வரதராசனார் இலக்கிய மரபில் பாடற்பொருளின் வளர்ச்சி பற்றி விளக்குகிறார். அவர் கையறுநிலைத் துறையைப் ‘புலவர் கண்ணீர்’ எனும் நூலாக எழுதியுள்ளார். மேலும் அவர் எழுதிய ‘திருப்பள்ளி எழுச்சி’ எனும் கட்டுரையும், ‘பிறந்த நாள் பெரு மங்கலம்’ எனும் தலைப்பில் டாக்டர் பாலசுப்பிரமணியம் எழுதிய கட்டுரையும் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு நூலில் உள்ளது. இந்திய பல்கலைக்கழகத்து நான்காவது கருத்தரங்கின் ஆய்வுரைக் கோவையில் பொதுவியல் திணை

விளக்கப்படுகிறது. பேராசிரியர் லெப.கரு. இராமநாதன் செட்டியாரும், டாக்டர் இராசமாணிக்கனாரும் ஆற்றுப்படைக் கூறுகளை ஆராய்ந்துள்ளனர். இவ்வாறே புறப்பொருள் துறைகளை ஆராயும் போக்கு வளர்ந்து வரக் காணலாம் என்று இந்நூலாசிரியர் இங்கு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

புறநானூற்றுக்கும், பதிற்றுப்பத்துக்கும் துறை வகுத்தோர் இருவேறு கருத்துக்களைக் கொண்டிருக்க, போர்த் திணைகளின் அடிப்படையிலும் பாடாண் பாடல் எழும் என்னும் தொல்காப்பியர் கருத்திணை நுண்ணிதின் உணர்ந்து பதிற்றுப்பத்து பாடல் முழுவதையும் பாடாண்திணை என வகுத்தனர். புறநானூற்றுக்குத் துறை வகுத்தோரிடம் இந்நுண்மையைக்காண இயலவில்லை பதிற்றுப்பத்து சேர மன்னர் பதின்மரைப், புலவர் பதின்மர் புகழ்ந்து பாடுவதால் திணை வகுப்பதில் சிக்கலேற்படவில்லை. ஆனால் புறநானூற்றுப்பாடல்கள் பல்வேறு சூழலில், பல்வேறு காரணங்களுக்காகப் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. எனவே, சில பாடல்களுக்குப் பாடப்பட்ட சூழலை நோக்கியும், சில பாடல்களுக்குப் பாடப்பட்ட நோக்கத்தை ஒட்டியும், சில பாடல்களுக்கு பாடல்களில் உள்ள குறிப்பைக் கொண்டும் துறை வகுத்துள்ளனர்.

அவ்வாறு கூறப்பட்டுள்ள திணை துறைகளுள் பாடாண் துறைக்குரிய பாடல்களாக 142 பாடல்கள் உள்ளன. அவை, இயல்மொழி 58, வாழ்த்தியல் 12, வாழ்த்து 1, பூவை நிலை 4 , வாள்மங்கலம் 1 , குடை மங்கலம் 1, உடனிலை 1, செவியறிவுறூஉ 8, பரிசில் 1, பரிசில்கடாநிலை 17, பரிசில் துறை 17 , பரிசில் விடை 6, கடைநிலை 11, கடைநிலை விடை 1, பாணாற்றுப்படை 7, புலவராற்றுப்படை 3, விறலியாற்றுப்படை 4 என மொத்தம் 153 பாடல்கள் மிக்கு வந்துள்ளது. இவற்றுள் ஒரே பாடல் இரு துறைகளுக்குரியதாக கூறப்பட்டுள்ளதால் மொத்த எண்ணிக்கை வேறுபடுகிறது. அந்த வகையில் கூறப்பட்டுள்ள பாடல்கள் பதின் மூன்றாகும்.

பதிற்றுப்பத்தில் காணப்படும் துறைகளாவன இயல்மொழி வாழ்த்து 5, பரிசில் துறைப்பாடாண் பாட்டு 2, நாடு வாழ்த்து 1, காட்சி வாழ்த்து 6, பாணாற்றுப்படை 1, விறலியாற்றுப்படை 6, உழிஞையரவம் 1, குரவைநிலை 1, தும்பையரவம் 2, பெருஞ்சோற்று நிலை 1, முல்லை 1, வஞ்சித்துறைப் பாடாண்

பாட்டு 10, வாகை 2, வாகைத்துறைப் பாடாண் பாட்டு 1, செந்துறைப் பாடாண் பாட்டு 37, மொத்தம் 80 பாடல்கள் உள்ளன. புறநானூற்றுள் பாடாண் திணைக்குரியதாகக் குறிக்கப்படாத பால்களிலும் பாடாண் துறைகளுக்குரிய அமைப்பும் குறிப்புகளும் காணப்படுகின்றன. ஆயினும், பின்வரும் பகுதியுள் முன்னோர் வகுத்த துறையடிப்படையிலேயே பாடல்கள் விளக்கப்படுகின்றன. பிற பாடல்களில் உள்ள அமைப்புக்கள் ஆங்காங்கே குறிக்கப்படுகின்றன என்று ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

பிறமொழியில் பாடாண் எனும் பகுதியில் ஒப்பியல் நோக்கில் பாடாண் திணை விளக்கப்பட்டுள்ளது. ஈப்ரு, சூலுசு, நார்வே, வெல்சு, மெசபட்டோமியா, எகிப்து, கிரேக்கம், இலத்தீன், அராபிக், செர்மனி, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், அஸ்ஸாம், தெலுங்கு போன்ற இந்திய மொழிகளிலும் உள்ள பாடாண் பாடற்செய்திகள் இந்நூலில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளதை இந்நூலாசிரியர் விரிவான முறையில் எடுத்துரைத்துள்ளார்.

சங்க காலத்தை வீரநிலைக்காலம் என்று கருதுவாரின் கூற்றை மறுத்து வீரநிலைக் காலத்திற்குப் பிற்பட்டது சங்க காலமென இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார். வீரர்கள் சிறப்புற்றிருந்த காலமே வீரநிலைக்காலம் என்பார் சி.எம்.பௌரா. அந்த வகையில் இதனை விளக்கும் பொருட்டு, “மக்களுள் வீரர்களுக்குத் தலைமைச் சிறப்புக் கொடுத்து அவர்களைப் போற்றும் காலமே ‘வீரர்நிலைக்காலம்’ என்பது அறிஞர் கருத்து” (மேலது : 310) இக்கருத்தினையே திரு. சி.எம். பௌரா மற்றும் சாட்விக் போன்ற மேல்நாட்டு அறிஞர்களும், கைலாசபதி அவர்களும் கூறுகின்றனர். இவ்வறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே வீரநிலைக் காலப் பண்புகளை ஆசிரியர் மிகச் சிறப்பாகவும், விரிவான முறையிலும் ஆராய்ந்தள்ளார்.

கொடையைப் பாராட்டல், போர்க்கள அழிவை அவல உணர்வோடும் பாடுதல், போரற்ற நிலையைப் போற்றுதல், சங்கப் பாடல்கள் முன்னிலைக் கூற்றாக அமைதல், பாடல்களில் கதை மரபின்மை, உயர்நெறிகளை அறிவுறுத்தல், நிகழ்ச்சி வருணணையின்மை போன்றவை வீரநிலைக் காலத்திற்குரிய பண்புகளின் மாறுபட்டவை என்றும் சங்க இலக்கியத்திலும் இவை காணப்படுகின்றன என்று கூறும் ஆசிரியரின் கருத்து நோக்கத்தக்கது.

சங்கப் பாடல்கள் தண்ணுணர்ச்சிப் பாக்களென்றும், வீரநிலைக் காலத்தில் நெடும்பாடல்களும், காப்பியங்களுமே தோன்றுதல் மரபெனவும் ஆசிரியர் கூறுகின்றார். சங்கப் பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாக்களென்றும், வீரநிலைக் காலத்தில் நெடும்பாடல்களும், காப்பியங்களுமே தோன்றுதல் மரபெனவும் ஆசிரியர் கூறுவது எண்ணத்தக்கதாகும். அல்லியரசாணி மாலை, புலந்திரன் களவு போன்றவையே வாய்மொழிப் பாடல்களாகக் கருதத்தக்கன என்று தெ.பொ.மீ. கூறுவதை, இந்நூலாசிரியர் இங்கு எடுத்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புறத்திணைகளுள் வெட்சி, கரந்தை, வஞ்சி, நொச்சி, தும்பை போன்றவை போர் பற்றிய திணைகளாகும். காஞ்சி போர் பற்றியதேனும், போரில் ஏற்பட்ட அழிவையும் அதன் அடிப்படையிலேயே வாழ்க்கை நிலையாமையையும் பாடும். வாகை போர்க்கள வெற்றியை மட்டுமன்றிப் பிற துறையில் மேம்பட்ட நிலையையும் பாடும். பாடாண்திணை கொடையைப் புகழ்வதாகும்.

சங்கப் புறப்பாடல்களுள் பதிற்றுப்பத்து பாடாண் திணைக்குரியதாகும். எஞ்சிய புறநானூற்றுப் பாடலுள் திணையை விளக்கும் வகையில் வெட்சி - 5, கரந்தை 12, வஞ்சி 13, நொச்சி 6, தும்பை 24 என்பன போர்த்திணைக்குரிய பாடல்களாகும். காஞ்சி 31, இவை நிலையாமையையும் வீரத்தையுத்தையும் கலந்து பாடுவன. வாகை 80 இவை வீரம் உள்ளிட்ட பிற செய்திகளையும் பாடுவன. எஞ்சிய 227 பாடல்கள் கொடை பற்றியும் பிறவற்றைப் பற்றியும் பாடுகின்றன. இவற்றை நோக்கும்போது போர்ச்செய்திகள் முதலிடம் பெறாத நிலை புலனாகும்.

புறநானூற்றில் வீரத்தை மட்டும் பாடுவன 61, ஈகைக்குறிப்போடு வீரத்தைப் பாடுவன 9, ஈகையை மட்டும் பாடுவன 73, வீரக்குறிப்போடு ஈகையைப் பாடுவன 12, ஈகையையும் வீரத்தையும் இணைத்துப் பாடுவன 24, பிற பண்புகளைப் பாடுவன 15, கையறுநிலையில் வீரத்தைப் பாடுவன 6, கையறுநிலையில் கொடையைப் பாடுவன 7, கையறுநிலையில் வீரத்தையும் கொடையையும் பாடுவன 4, பதிற்றுப்பத்தில் வீரத்தை மட்டும் பாடுவன 13,

கொற்றவள்ளையைப் பாடுவன 9, ஈகையை மட்டும் பாடுவன 2, வீரத்தையும் ஈகையையும் பாடுவன 21, வீரக்குறிப்புடன் ஈகையை பாடுவன 5, ஈகைக்குறிப்புடன் வீரத்தைப் பாடுவன 1, பலபண்புகளையும் பாடுவன 16, போர்த்திணையில் பாடும்போது போர்க்கள நிகழ்ச்சியை வருணிப்பதோடு, தலைவன் ஆற்றிய போர்த்தாக்குதலைப் பாடுவன போன்றவை குறைவாகவே உள்ளன. மாறாகப் போர்களத்துச் செய்திகளை வீர உணர்வோடு விளக்குவதை விடச் சற்றே அவல உணர்வு கலந்து பாடப்பட்டுள்ளது என்று பல்வேறு நிலைகளில் ஆசிரியர் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

## புறத்திணை விருந்து

பொ. சுந்தர மகாலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற 'புறத்திணை விருந்து' என்னும் கட்டுரைத் தொகுப்பு 1977-இல் நூலாக்கம் பெற்று வெளியிடப்பெற்றது. இந்நூலில் எழுவாய், புறத்திணைப் பாகுபாடுகள், பாகுபாட்டின் அடிப்படை, திணைப்பகுப்பு ஏழா? பண்ணிரண்டா, புறமும் போரும், வீரக்காலம் போர்த்திணைகள், போரும் அறமும், புறமும் மகளிரும், போரும் பூவையரும், புறக்காதலில் பெண்டிர், புறத்துறை வளர்ச்சி, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், பெருந்திணைப் படலத்துறைகள், துறைக் குறியீடுகள், இறுவாய், புறப்பொருள் வீழ்ச்சி, இன்றையநிலை என்னும் தலைப்புகளை உள்ளடக்க மாகக் கொண்டு இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

புறத்திணைப் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் 1. வெட்சி, 2. வஞ்சி, 3. உழிஞை, 4 தும்பை, 5. வாகை, 6. காஞ்சி, 7 பாடாண் என ஏழாகக் கூறுகின்றார். பன்னிரு படலமும் அதனைத் தழுவிய வெண்பாமாலையும் தொல்காப்பியரினின்றும் வேறுபட்டுத் திணைப் பகுப்பை 1. வெட்சி, 2. கரந்தை, 3. வஞ்சி, 4.காஞ்சி, 5. நொச்சி, 6. உழிஞை, 7. தும்பை, 8. வாகை, 9. பாடாண், 10. பொதுவியல், 11. கைக்கிளை 12. பெருந்திணை எனப் பன்னிரண்டாகக் கூறுகின்றன. வீரசோழியமோ 12 திணைகளில், 1. கைக்கிளை, 2. பெருந்திணை என்ற இரண்டையும் தவிர்த்து திணைகள் பத்தே

எனப் பகுத்துள்ளது. தொல்காப்பியத்தை ஒப்பிட்டுத் திணை வகுத்த இலக்கண விளக்கம் திணைகள் ஏழே என்று சுட்டினும் ஒழிபியலுள் பன்னிருபடலம் கூறிய 1. பொதுவியல், 2. கைக்கிளை, 3. பெருந்திணை, என்ற திணைகளையும் அடக்கிக் கூறுகின்றது. இவ்வாறு புறத்திணைப் பாகுபாடுகள் பலவாறு மொழியப்பெறுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

புறத்திணைப் பகுப்பிற்கு அடிப்படை வீரமே என்று சில அறிஞர்களும், வெண்பாமாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் பொதுவியல் திணையில் வீரக் குறிப்புத் துறைகள் வகுத்துள்ளார். அவ்வகையில் புறத்திணையின் அடிச்சுவடாகப் வீரம் பொலிவதால், அவ்வீரமே புறத்திணைக்கு அடிப்படை எனலாமா? என யூகிக்கின்றனர். புறத்திணை புறம், புறப்புறம், அகப்புறம் என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. இவற்றுள் புறம், புறப்புறம் என்ற இருபிரிவுகளை வெண்பாமாலையார் சுட்டுகின்றார். அகப்புறம் என்ற பிரிவை அறிஞர் உ.வே.சா. குறிப்பிடுகின்றார். இங்ஙனமாகப் புறத்திணை வீரத்தின் தொடர்பற்ற அகப்புறம் பிரிவையும் கொண்டமையால் புறத்திணைப் பாகுபாட்டிற்கு வீரம் அடிப்படையன்று என்று ஆசிரியர் புலப்படுத்துகிறார். அகத்திணைப் பாகுபாடே புறத்திணைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாயிற்று என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினயரும் கருதுகின்றனர். மேலும் தொல்காப்பியரும் ஏழு அகத்திணைகள் ஏழு புறத்திணைகள் எனப் பகுத்து விளக்கியுள்ளார்.

இவ்வாறாகப் புறத்திணைகட்கு அகத்திணைகளைத் தொல்காப்பியர் இயைபு படுத்திக் கூறுவதால் அகத்திணைப் பகுப்பு, புறத்திணைப் பகுப்பிற்கு அடிப்படை எனலாமா? என்ற ஒரு கேள்வி எழும்புகிறது? அவ்வகையில் முதல், கரு, உரி என்ற மூன்றில் விளக்கம் பெறும் அகத்திணைபோல் புறத்திணை அமையவில்லை. அம்மூன்றும் ஒரேவழி ஒப்புமையையே புறத்திணையில் கொண்டுள்ளன என்றும், பன்னிரு படலமும் வெண்பாமாலையும் புறத்திணைகளை அகத்திணைகளின் அடிப்படையில் பிரித்து விளக்கம் தரவில்லை. எனவே அகத்திணைப் பகுப்போ புறத்திணைப் பாகுபாட்டின் அடிப்படை என்பது பொருந்தாது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் புறத்திணை பாகுபாட்டிற்குப் பூவணிதல் அடிப்படையாயிற்று என்று

திரு. வெள்ளைவாரணர் கருதுகின்றார். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகை என்ற போர்த்திணைகளில் அவ்வப் பூக்களை வீரர்கள் சூடுவதாக வெண்பாமாலை விளக்குகின்றது. ஆனால் தொல்காப்பியர் பூவடிப்படையில் புறத்திணை பார்க்கப்படவில்லை என்று மேற்கூறிய கருத்துக்களை மருத்துறைக்கிறார். அதனை விளக்கும் வகையில் பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற திணைகள் பூச்சூடலின் அடிப்படையில் மலர்ந்தவை அல்ல. மேலும் செருக்களம் சென்றோர் இப்போர்ப் பூக்களுடன் பிற பூக்களையும் அணிந்து சென்றதை 'வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇ' (புறம்:100) என்று இலக்கியம் எடுத்தியம்புகிறது. எனவே புறத்திணைப் பாகுபாடு பூவடிப்படையில் மலர்ந்ததன்று எனப் பல்வேறான கருத்துக்களை தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டி தெளிவுப் படுத்துகிறார். பின்பு வேறெதனடிப்படையில்தான் புறத்திணைப்பாகுபாடு அமைந்துள்ளது என எண்ணினால் குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே இக்குழப்பத்தை நீக்கும் பொருட்டு ஆசிரியர் கூற முற்படும் வகையில்,

"புறத்திணைப் பாகுபாட்டிற்கு அடிப்படை வீரமன்று, அகத்திணைப் பாகுபாடும் அன்று, பூச்சூடலும் அன்று, திணையாவது உரிப்பொருள் பற்றியது என்ற வண்ணம் வெவ்வேறுபட்ட ஒழுக்கங்களே பாகுபாட்டிற்கு அடிப்படை ஆயின. தொல்காப்பியர் எழுவகை உரிப் பொருட்கள் கண்டார். எனவே மாடு பொருளாகவும் நாடு காரணமாகவும் கோட்டை கருதியும், வீரம் எண்ணியும் விளைகின்ற போர்த்திணைகட்கு நிரலே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை எனப் பெயர் கொண்டார். வாழ்க்கையில் வெற்றி பெறுதலையும், நிலையாமையை வென்று பாங்கருஞ் சிறப்பினைத் தழுவுதலையும், ஏற்றம் பெற்றாரைப் பாராட்டுதலையும் முறையே வாகை, காஞ்சி, பாடாண் என்று பகுத்துப் பெயர் கொடுத்தார். ஆனால் பன்னிரண்டு திணைகள் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற முத்திணைகட்டு மட்டும் உரிப்பொருள் சுட்டவில்லை. எனவே இலக்கண விளக்கம், இம்மூன்று திணைகளை உரிப்பொருள் பெறாமைக்காக ஒழிபியலில் அடக்கி மொழிகின்றது. மேலும் கரந்தை, காஞ்சி, நொச்சி, என்ற மறுதலைத் திணைகளின் மலர்ச்சிக்கும், நிரலே நிரைமீட்பு. படைத்தடுப்பு, மதிற்காவல்

எனவே உரிப்பொருளே புறத்திணைப் பாகுபாட்டிற்கு உரிய காரணமாயிற்று" (1977:24,25) என்று புறத்திணைப் பாகுபாட்டினை தெளிவான முறையில் எடுத்துரைத்து விளக்கமளித்துள்ளார் இந்நூலாசிரியர்.

திணைப்பகுப்பு ஏழா? அல்லது பன்னிரண்டா? என்ற கருத்து முரண்பாடு பல்வேறு காலமாக நிகழ்ந்து வருகிறது. அவ்வகையில் பல்வேறு ஆய்வறிஞர் களும், ஆய்வாளர்களும் ஆராய்ந்துள்ளனர், அதனை விளக்க முற்படும் வகையில் திணைப் பகுப்பு ஏழே என்கிறது தொல்காப்பியம் தொன்னெறி, பன்னிரெண்டே என்கிறது பன்னிருபடலப் பகுப்பு. மேலும், தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், நாவலர் பாரதியார், போன்றோர் தொல்காப்பியம் கூறும் ஏழென்ற பகுப்பே சரி, பன்னிரு படல நெறி தவறு என்று குற்றம் சாட்டுகின்றனர்.

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் புறம் பன்னிரண்டு, என்றால் அகமும் பன்னிரண்டே அகத்திணை ஏழாயிருக்கும் போது, புறத்திணை பன்னிரண்டு எனல் பொருந்தாது என்றும் கைக்கிளையும் பெருந்திணையும் புறம் என்றால் அகத்திணைகள் ஏழு என்று என்னாது ஐந்து எனல் வேண்டும், ஆகையால் அவ்விரு திணைகளையும் புறத்திணைகளுடன் சேர்த்தது குற்றம் என்றும் அடுக்குகின்றார். இலக்கண விளக்கத்தாரும் தொல்காப்பிய நெறியையே பின்பற்றினார். ஆனால், திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் புறத்திணை பன்னிரண்டு என்றது பொருத்தமே என ஆய்ந்து பன்னிருபடல நெறியை வரவேற்கின்றார். இளம்பூரணர் சாட்டிய குற்றங்களை மறுத்துரைக்கின்றார். புறத்திணைகள் பன்னிரண்டாக வழங்கியதே பழைய மரபு என்றும் சுட்டுகின்றார். மேலும், பன்னிரு படல நூற்கொள்கையினையே தொல்காப்பியர் ஏழாகத் தொகுத்துக் கூறினார் என்பது நன்கு தெளிவாகின்றது என்பதை சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

தொல்காப்பியரின் ஏழென்ற கருத்தை இளம்பூரணர், நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர் இம்மூவரும் சரியென்று ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இக்கருத்தை வெண்பாமாலையும், வீரசோழியமும் ஒப்புக்கொள்ளாமல் மறுத்துரைக்கின்றது. ஆனால் பன்னிரு படல நெறியை மட்டும் ஏற்றுக்

கொண்டுள்ளதை இந்நூலின் ஆசிரியர் ஆராய்ந்து எடுத்துரைத்ததன் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வேழ் திணைகளுள் மாடு காரணமாக எழும் வெட்சிப்போர் இன்றில்லை கோட்டை குறித்தெழும் உழிஞையும் இன்றில்லை. இவை போர் முறைகள் பற்றிய திணைகளாதலின் காலத்தால் வீழ்ந்தன. ஆனால் வஞ்சிப்போரும், தும்பைப் போரும் காரணப் போர்கள். நாடு காரணமாக விழையும் வெம்போர் வஞ்சி, வளமை, பொருளாக வாய்த்த போர் தும்பை, எனவே அடிப்படைக் காரணங்களைக் கொண்ட வஞ்சி, தும்பைத் திணைகள் இன்றும் பொறுந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. ஏனைய வாகை, காஞ்சி, பாடாண் என்ற திணைகள் பொதுமைத் திணைகளாதலின் அவை இன்றும் இயைந்து வருவன என்று நூலாசிரியர் சுட்டிச்செல்லும் பாங்கு எதார்த்த நோக்கோடு அமைந்துள்ளது.

### சங்கப் பாடல்களின் திணை, துறை அமைப்பு

சங்க இலக்கியப் புறநூல்களில் ஒன்றான புறநானூற்றைத் திணையியல் நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தி பல்வேறு செய்திகளை வெளிக்கொண்டுவர முனைந்த ஆய்வேடுகளில் முதலாவது ‘சங்கப் புறப்பாடல்களின் திணை – துறை அமைப்பு’ என்ற முனைவர் பட்ட ஆய்வேடே ஆகும். சோதிபாய் தேவதாஸ் அவர்களால் 1984-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு, முனைவர் பட்டப்பேற்றிக்காக அளிக்கப் பெற்றது. இவ்வாய்வேடு, முன்னுரை, முடிவுரையை தவிர்த்து எட்டு தலைப்புகளில் அவ்வத்திணைப் பாடல்களின் வெளியீட்டு அடிப்படையிலான பொருட்கூறுகள் குறித்த அட்டவணைகளும், அப்பாடல்களை உரையாசிரியர்கள் நோக்குகின்ற தன்மையைக் காட்டும் அட்டவணைகளும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்கு ஏற்றவாறு ஆய்வேட்டின் இயல்களில் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வேட்டின் மூலம் அறியமுடிகிறது.

“தலைக்கூறு அமையப்பாடுதல், கருத்து முடித்தபின் கூறுதல், இருபொருட்கூறுகளில் பாடுதல், சொல்லவந்த செய்திக்கும் அதை வெளியிட எழும் உணர்ச்சிக்கும் ஒவ்வொரு பாடலின் வெளியீட்டுப் பொருட்கூறுகளின் எண்ணிக்கை வேறுபட்டு அமைகின்றது. முக்கூறுடன் அமைத்தல்

பன்னிருதிணைக் கோட்பாட்டிற்கான சாரங்களை சங்ககாலப் புலவர்கள் தொல்காப்பியத்துள் பெரிதும் தழுவிச் சென்றிருக்கும்போது திணை – துறை வகுத்தோர் ஏன் அவர்தம் பாடல்களுக்குப் பன்னிரு திணைக்கோட்பாட்டைக் கொண்டு திணை துறை வகுக்க வேண்டும் என்ற எண்ணம் பலரிடம் எழுவது இயல்பாக உள்ளது. பன்னிரு திணைக் கோட்பாடு மோலோங்கியிருந்த காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு. எல்லாவற்றையும் ஒருங்கு நோக்கும்போது சங்கப் புறப்பாடல்கள் திணை பெரிதும் தொல்காப்பியத்தை ஒட்டிச் சென்றும், புறப்பாடல்களைப் பயில்வோருக்கு மலைப்பு ஏற்படாமல் இருப்பதற்காகவும், எளிதில் அவற்றை நினைவில் வைத்துக் கொள்வதற்காகவும், புறப்பாடல் வரலாறு சுட்டப்பட வேண்டும் என்பதற்காகவும், பாடுபொருளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வெளிப்படுவதற்காக திணை துறை வகுத்தோர் பன்னிரு திணைக் கோட்பாட்டை ஏற்றுள்ளனர்". (1984:365,366) என்று கூறுகிறார் ஆய்வாளர்.

திணை, துறையில் சங்கப் புறப்பாடல்கள் தொல்காப்பியத்தைத் தழுவிச் சென்றபோதிலும் பன்னிரு திணைக் கோட்பாடு திணை துறையில் பின்பற்றப்பட்டுள்ளதற்கு ஆசிரியர் தம் நிலையில் நின்று மேற்கூறிய காரணத்தை முன்வைத்துள்ளார் என்பதை இவ்வாய்வேட்டின் மூலம் அறிய முடிகிறது.

## சங்க இலக்கியத்தில் புறப்பொருள்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களால் சென்னைப் பல்கலைக்கழக முனைவர்ப் பட்டப் பேற்றிற்காக அளிக்கப் பெற்ற ‘சங்க இலக்கியத்தில் புறப்பொருள்’ என்னும் ஆய்வேடு 1986-இல் நூலாக்கம் பெற்றது.

புறத்திணைத் தோற்றமும் வளர்ச்சியும், புறத்திணைப் போரியல், புறத்திணை அரசியல், புறத்திணைச் சமயவியல், புறத்திணை வாழ்வியல், புறப்பொருள் நூலியல், புறத்திணைப் புலவரியல் என்னும் ஏழு தலைப்புகளைக் உள்ளடக்கி இந்நூலை விரிவான முறையில் ஆராய்ந்துள்ளார் ஆசிரியர்.

வெட்சித்திணையின் முதற்கூறு பழைய இனக்குழு மக்களின் வாழ்வியல் நெறியைக் கூறுதல், இனக்குழு மக்களின் பூசலும் ஊர் கொலையும், பெருவேந்தரால் தம் போர்த்திணைச் செயல்களுள் தழுவிக் கொள்ளப்

பட்டுள்ளதை ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். அந்த வகையில், "அரசுகள் தோன்றுவதற்கு முன் இனக்குழு மக்கள் ஓர் ஊரிற் சேர்ந்து வாழ்ந்த காலத்து அவர்கள் மற்ற இனக்குழுவோடு கொண்ட மாறுபாட்டையும் பூசலையும் விளக்குவனவாக அமைந்தன, வெட்சித் திணையின் முதல் பதினான்கு துறைகள் ஆயன் கைக்கோலே செங்கோலாகக் கருதத்தகும் அரச மரபுகள் தோன்றியபின், அரசுரிமை, படை, நாட்டெல்லை ஆகியன உருவாகவே இரு வேந்தர்களுக்கிடையில் போரும் தோன்றியது. இந்திலையிலேயே மறக்குணம் மிக்க முனையகத்தினர் வேந்தனின் போர்ச் செயலுக்குத் துணையாயினர் எனக் கருதுதலே அமைவுடையதாகும். போரைத் தூண்டுதற்குரிய களவுப்பொருளாக இருந்த ஆனிரை பிற்காலத்தில் தனிமனிதனின், மனிதக் கூட்டங்களின் களவுப் பொருளாகவும் மாறிய நிலையிலேயே வேந்தன் ஏவலின்றியும் ஆனிரைக் களவு நிகழ்ந்திருக்கிறது.

**வென்ற வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்**
**சென்றிகன் முனைஆதந் தன்று**

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறும் வெட்சித் திணைக் கருத்து எண்ணத்தக்கதாகும்." (1986:43) என்று இந்நூலாசிரியர் இங்கு குறிப்பிடுவது நோக்கத்தக்கது. வைதீக நெறியும், வருணப் பாகுபாடும் தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் புகுந்துவிட்டன. சிற்றூர்களின் வாழ்க்கைப் போக்கை அவை ஊடுருவாவிடினும், வேந்தரையும் நூலோரையும் பெருநகர் வாழ்க்கையினரையும் கவர்ந்தன என்பதற்கு வாகைத்திணை நூற்பாவை சான்று காட்டி விளக்கி சென்றுள்ளார் ஆசிரியர். மேலும்,

தொல்காப்பியர் காலத்தில், அரசியல் துறையும், சமயத்துறையும், மிகுதியான வளர்ச்சிகளைப் பெறவில்லை, மன்னனையே இன்றியமையாக் கூறாகப் பெற்ற அரசியலில் ஆட்சியியல் நெறிகள் தொடக்க நிலையிலே இருந்திருக்கின்றன. சமயக் கொள்கைகளும், மெய்யுணர்வுக் கோட்பாடுகளும் வளர்ந்த நிலையைத் தொல்காப்பியம் குறிக்கவில்லை. ஆனால் சங்க இலக்கியங்கள் இவ்வளர்ச்சியினை காட்டுகின்றன. எனும் நூலாசிரியரின் கருத்து இங்கு போற்றத்தக்கது. மேலும்,

தொல்காப்பியம், பன்னிருபடலம் இவ்விரண்டையும் ஒப்பிட்டு பேசுகிறார் ஆசிரியர். அந்த வகையில், “தொல்காப்பியப் புறத்திணையியல், ஏழு புறத்திணைகளைக் கூறுகின்றது. ஏழு அகத்திணைகளுக்குப் புறமாக ஏழு புறத்திணைகள் அமையும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள், பன்னிரு படலம் என்னும் நூல் தொல்காப்பியத்திற்கு முற்பட்டதாகக் கருதற்குரியது என்றும் பன்னிரு படலம் கூறும் பன்னிரு புறத்திணைகளைத் தொல்காப்பியர் ஏழாகத் தொகுத்துப் புறத்திணையியலில் கூறியுள்ளார் என்றும் கருத இடமுண்டு என்கிறார். சிலப்பதிகார வஞ்சிக்காண்டப் போர் நிகழ்ச்சிகள் பன்னிருபடல அடிப்படையிலேயே விளக்கப்படுகின்றன என்றும், திருக்குறளிலும் பன்னிருபடல இலக்கணமே பின்பற்றப்பட்டுள்ள தென்றும், கூறும் அவ்வாசிரியர், பன்னிருபடலமே தொல்காப்பியரால் புறத்திணையியலாகத் தொகுக்கப்பட்டமைக்குப் ‘புலந்தொகுத்தோனே’ என்னும் தொல்காப்பியப் பாயிரத் தொடரும் சான்று கூறுவதாக உரைக்கின்றார். அருணாச்சலம் பிள்ளையவர்களின் கருத்து ஈண்டு ஆய்வதற்குரியது. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் தொல்காப்பிய உரைகளும், நச்சினார்க்கினியரின் மதுரைக்காஞ்சி உரையும், சிவஞான முனிவரின் தொல்காப்பியப் பாயிர விருத்தியும், இறையனார் களவியல் உரையும், யாப்பருங்கல விருத்தியுரையும், புறப்பொருள் வெண்பாமாலையும், மாறனலங்கார உரையும், இலக்கண விளக்கவுரையும், பன்னிரு படலம் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த பன்னிரு படலத்தைப் பழிப்பின்றுணர்ந்தவர் என்று புறப்பொருள் வெண்பாமாலையின் சிறப்பு பாயிரச் செய்யுள் கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரு படலத்தின் வழிநூல் என்று உரையாசிரியர் சிலரால் கூறப்படுகின்றது. பன்னிருப் படலத்தின் முதற்படலம் எனக் கருதப்படும் வெட்சிப் படலத்தின் ஆசிரியர் தொல்காப்பியரே எனப் பேராசிரியரும், சிவஞான முனிவரும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் கூறுகின்றனர். என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர் சிவஞான முனிவரின், அகம், புறம் எனப்

பகுத்தவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி, “அகம், அகம்புறம், புறம், புறப்புறம் என நான்காகப் பகுத்தலும், வெட்சித்திணை, உழிஞைத் திணைகளின் மறுதலை வினையை வீற்று வினையாதலும், வேற்றுப்பூ சூடுதலும் ஆகிய வேறுபாடு பற்றி வேறு திணையாக வைத்தெண்ணுதலும், இன்னோரன்னவை பிறவுமாம். இவை இங்ஙனம் வேறுபடினும் புணர்ச்சி முடிபும், சொல் முடிபும், பொருள் முடிபும், வேறுபடாமையின், மரபுநிலை திரியாவாயின. இவ்வுண்மை உணராதார் பன்னிரு படலம் முதலிய நூல்களை வழீஇய என்றிகழ்ந்து, பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியனார் கூறியதன்று எனவும் தொல்லாசிரியர் வழக்கொடு முரணித்தமக்கு வேண்டியவாறே கூறுப” (1986:34,35) என்று கூறுவதைத் ‘தமிழ் நூல் தொகுப்புக்கலை’ என்னும் நூலில் புலவர் சுந்தர சண்முகனார் எடுத்துக்காட்டி ஆராய்ந்துள்ளார். என்ற கருத்தைக் கூறி இந்நூலாசிரியர் தம் கருத்திற்கு வலு சேர்த்திருக்கிறார்.

சங்க காலத்தில் நிகழ்ந்த போர்க்குரிய காரணங்களை ஆராய்ந்ததோடு, ஆண்மகன் என்றாலே வீரமும் போர்பண்பும் இயற்கைத் தகுதிகளாக உடையவன் என்ற அக்காலச் சமூக எண்ணத்தையும் அதோடு மண்ணாசையினும் புகழ் விருப்பமே பல போர்களுக்கு அடிப்படை என்பதையும் ஆசிரியர் இந்நூல்வழி எடுத்தியம்புகிறார்.

தொல்காப்பியர் குறித்துள்ள சில துறைகள் வெண்பாமாலையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஒரு துறை பல துறைகளாகப் பகுத்துரைக்கப்படுகின்றன. சில துறைகள் வெண்பாமாலையில் வேறுபொருள் குறிக்கின்றன என்பதை விளக்கும் பொருட்டு, “என்பத்து நான்கு துறைகள் வெண்பா மாலையில் புதியனவாகக் கூறப்படுகின்றன. தொல்காப்பியம் கூறியுள்ள துறைகளுள் பதினேழு வெண்பாமாலையில் சொல்லப்படவில்லை. உழிஞைத்திணைக்குரிய எட்டும், வாகைத்திணைக்குரிய எட்டும், இப்பதினேழில் அடங்கும் ஆகவே மதிற்போர்கள் குறைந்தும், வெற்றி வீறுகளைக் கொண்டாடும் முறைகள் மாறியும் இருக்க வேண்டுமென்பதை இதனால் உய்த்துணரலாம். உழிஞைத் துறைகளில் வெண்பாமாலையார் திருமால், சிவன், முருகன், ஆகியோர் போர்ச்செயல்களுக்கும் துறை வகுக்கக் காண்கிறோம். ஆகவே போர்

நிலைகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன வன்றியும், போரைப்பாடும் முறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது விளங்கும். சமயவுணர்வின் பெருக்கமே இத்துறைகள் தோன்றக் காரணமெனலாம். வாகைத்திணையில் அமைந்த கட்டில் நீத்த பால், காம நீத்த பால் ஆகிய அறத்துறைகள் வெண்பாமாலையில் இடம்பெறவில்லை என்பதைக் காண்கையில் அரசநெறிகளிலும் பற்பல மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளமை அறியப்படும் அறத்துறைகள் அவ்வளவு போற்றப்படாமை நோக்க, வேண்டாமை அன்ன விழுச் செல்வமும், பிறர்க்கு ஈந்து சிறக்கும் வள்ளன்மையும், அரசுகட்டிற் செல்வத்தையே புறந்தள்ளிப் போகும் துறவு வீரமும், போர்க்குரிய வீரப் பண்பு போலப் போற்றப்படவில்லை என்பது புலனாகும். இவ்வனைய பண்புகளைப் பிற்காலத்தார் தியாகம் என வழங்கியுள்ளனர். இவற்றை வீரத்தின்பாற்படுத்தி அவர்கள் எண்ணவில்லை என அறியலாம். மனைவியன்றிப் பிற மாதரின் கூந்தலில் தன்னுடைய தார்புரண்ட கொடுநெறி தன்பால் நிகழ்ந்ததாகட்டும் என வஞ்சினம் உரைக்கும் ஒருமைக் கணவர்கள் அரசர்களாக இருந்த காலத்தில் காம நீத்த பால் என்ற துறை தோன்றப் பேரிடம் உண்டு. பன்மனைவியர் மணம் அரச வழக்காகி விட்டபின் இத்தகு அறத்துறைகள் இடம் பெறாமற் போனதில் வியப்பில்லை (மேலது:62,63) என்று இந்நூலாசிரியர் துறை குறித்து விரிவாக ஆராய்ந்து சென்றுள்ளதை இங்கு குறிப்பிடத்தக்கது.

புறநானூற்றில் மகன் மறுத்தல், மகட்பாற்காஞ்சி ஆகிய துறைக்குரிய பாடல்கள் உண்மையில் பெண்காரணமாக எழுந்த போர் குறிப்பன அல்ல என்றும், அவை சீறூர்த் தலைவரின் வீரமும் குடிச்சிறப்பும், மான மாண்பும் புகழ்வதற்குப் புலவர்கள் மேற்கொண்ட புனைவு நெறியாற் பிறந்தவை என்றும் போருலகத்திலிருந்து அறிவுலகத்திற்கும் அறவுலகத்திற்கும் தலைமையும் பெருமையும் மாறிவரும் சூழலைச் சங்க இலக்கியங்கள் காட்டுவதை இந்நூலாசிரியர் எடுத்துரைக்கும் போக்கு சிறப்பிற்குரியது.

மறம், வீரம் என்ற சொற்கள் புலனடங்கிய ஞானியரின் மேம்பாட்டைக் குறிப்பதற்கும் பயன்படுகின்றமையையும், நாற்படைகள் பெருவேந்தரின் செல்வக் குறியீடாக இருந்தன. இவ்வகைச் செல்வச் செருக்கைப் புலவர் கடிந்து பாடியுள்ளனர். படைப்பொருளாக விளங்கிய யானை பெருமிதங் காரணமாகக் கொடைப்பொருளாகவும் ஆகியுள்ளதை ஆசிரியர் கூறுகிறார்.

சங்க இலக்கியத்தில் பாடாண் திணை என்னும் நூலில், தொல்காப்பியர்க்கு முற்பட்டது வீரநிலைக்காலமென்றும், சங்க இலக்கியங்கள் பாடாண் கால இலக்கியங்கள் என்றும் கூறுவர். வீரநிலைக் காலமென்பது நாகரிகமற்ற முரட்டுத்தன்மை மிகுந்த காலமாகும். என்ற சாட்விக்கின் கூற்றை நன்கு எண்ணல் வேண்டும். மாற்றார் நாட்டை எரியூட்டுதல், வயல்வெளிகளைத் தீ மடுத்தல், மகளிர் கூந்தலறுத்தல் முதலிய ஈரமற்ற இன்னாச் செயல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படினும் இவற்றையே முழுதும் போற்றினர் எனக் கூறுதல் பொருந்தாது. அருளும் அன்பு மிக்க கொடை நிகழ்ச்சிகள், புலவர் இடித்துரை கேட்டுப் போர் தவிர்க்கும் பெருந்தகவு, உயரிய அறப் பண்புகளைப் போற்றி ஒழுகிய வாழ்க்கை முறை ஆகியனவும் பாடல்களில் உரைக்கப்பெறும். சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையும் தன்மை நவிற்சியுடையவை. குறிப்பாகப் புறப்பொருள் பாடல்களெல்லாம் வரலாற்று அடிப்படையின.

"வீரநிலைக்காலம் வரலாறு தழுவிய இலக்கியங்களைப் படைப்பதில்லை. சங்க இலக்கியங்களில் வாய்மொழி இலக்கியக் கூறுகள் உண்டேயன்றி முழுவதும் வாய்மொழி இலக்கியங்களாக அவை கருதப்படற்கில்லை. ஆகவே தமிழகத்தின் வீரநிலைக்காலம் தொல்காப்பியர்க்கு முற்பட நிலவியது என்பதே சரியான கருத்தாகும். வீரநிலைக்கால முரட்டுத் தன்மையினை, போர் வெறியினையும் தற்பலிச் செயலுணர்வையும் சமய உணர்வு இளக்கியிருக்கிறது என்பதைச் சங்கப் பாடல்கள் தெளிவுறுத்துக்கின்றன. சமயகோட்பாடுகளும், அற உணர்ச்சிகளும் அன்பு, அருளாகிய பண்பு நலன்களும், வீர நிலைக்காலப் பண்பை மாற்றிச் சங்ககாலப் பண்பாடாக உருவாக்கியிருக்கின்றன. எனினும் வீரநிலைக்காலப் பண்பின் சாயல்கள் சங்க இலக்கியங்களில் இல்லாமலில்லை. அப்பண்பின் நிழல்களே, மாற்றான் நாட்டை எரிமடுக்கவும், இடையராது போர் மேற்செல்லவும் தூண்டுகின்ற பாடல்களில் காணப்படுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்கள் தமக்கு மிக முற்பட்ட வீரநிலைக்காலத்திற்கும், தமக்குப் பிற்பட்ட சமய காலத்திற்கும் இடைப்பட அமைந்த தனித்தன்மைகள் உடையன என்பது தெளிவாகும்" (மேலது: 105, 106, 107) என்று கூறும் இந்நூலாசிரியரின்

கருத்து மிகுந்த கவனத்திற்குரியதாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் அமைந்துள்ளது.

தொல்காப்பியப் புறத்திணையியலும், மரபியலும் அரசனைக் குறித்தும் போர் முறைகள் குறித்தும் விளக்குகின்றன. சங்க இலக்கியங்களில் புறநானூறும், பதிற்றுப்பத்தும் ஆட்சியியல், கோட்பாடுகள் குறித்துப் பல செய்திகளை வழங்குகின்றன. எனினும் சங்க காலத்தது எனச் சுட்டுமாறு தனித்த ஓர் அரசியல் நூல் இல்லை. சங்க கால மன்னர்களின் வரலாற்றை வரிசை முறையாக அறிவதற்கு வாய்ப்பில்லாத நிலையில் புறநானூறும் பதிற்றுப்பத்தும் வழங்கும் செய்திகளும், அகப்பாடல்களில் உவமமாகப் பெறப்படும் செய்திகளும், பத்துப்பாட்டு வழங்கும் குறிப்புகளுமே அக்கால அரசியல் நிலையை அறிய உதவுகின்றன.

சங்க தொகை நூல்களில் புறநானூற்றில் செவியறிவுறூஉ, பொருண் மொழிக்காஞ்சி ஆகிய துறைகளின் வாயிலாக அரிய அரசியல் கோட்பாடுகள் உரைக்கப்படுகின்றன. எனினும் திருக்குறளின் பொருட்பாலே தமிழில் முதன்முதல் காணக்கிடைக்கும் தலைசிறந்த அரசியல் பொருள் நூற்பகுதியாக உள்ளது. தன் காலத்துக்கு முன்னுள்ள அரசியல் கருத்துக்களையும், பிறநாட்டு அரசியல் தத்துவங்களையும் வள்ளுவர் அறிந்திருப்பினும் தமிழ்நாட்டு அரசுகளுக்கு, தமிழகச் சமுதாயத்திற்கும் அடிப்படையான தமிழ் நாகரிக கோட்பாடுகளின் மீது ஓர் அரசியல் தத்துவ மாளிகையை உருவாக்கியுள்ளார் என்பதை இந்நூலாசிரியர் எடுத்துறைக்கும் போக்கு குறிப்பிடத்தக்கது.

சங்கத் தொகை நூல்களோடு, திருக்குறளும் பண்டைக்காலத் தமிழக அரசியல் நிலையைக் காட்டுகின்றன. அர்த்த சாத்திரம் காட்டும் அரசியல் நிலை தமிழகத்திற்குறியதன்று என்பதையும், சாதி, குலம் கடந்த காதற் களவு நெறி பண்டைத் தமிழிலக்கியங்களிற் பரவலாகப் பேசப்படினம், மன்னர் குலத்தவர் எளிய குடிப்பெண்ணைத் தம் பெருங்கோப் பெண்டாகக் கொண்டனர் என்பதற்கு சான்றில்லை என்பதையும் அக்காலத்திலேயே தமிழ் வேந்தர்க்கு இருடி கோத்திர மூலம் கற்பிக்கும் வடவாரிய நெறி புகுந்து விட்டதையும் எடுத்துரைக்க தவறவில்லை.

ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் ஆகிய இரண்டு அரசியல் குழுக் களும் தமிழகத்திற்கே உரியன. இக்குழுக்களை விடப் புலமைச் சான்றோர் வேந்தருக்கு உறுதியுரைக்கும் உரிமை படைத்தவராக விளங்கினர் என்றும், இவற்றால் அரியணை உரிமையில் கொலையும் குருதிப்போரும் தவிர்க்கப் பட்டன என்றும், பண்டைத் தமிழகத்தில் வருண அடிப்படையில் நீதி வழங்கப்படவில்லை அறத்தின் அடிப்படையிலேயே அக்கால அரச நீதி இயன்றுள்ளதையும், சங்க இலக்கியங்களில் புலவர்களின் வறுமை பலவாறாக வருணிக்கப்படுகிறது. அவ்வறுமையைத் துடைப்பது வேந்தரின் கடமையாகும் என்பதையும் இந்நூலாசிரியர் சுட்டிச்செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமயம், மதம், என்னும் சொற்கள் சங்க இலக்கியத்தில் வழங்கப் படவில்லை. எனினும் இச்சொற்களால் குறிக்கப்பெறும் உணர்வுகளும். வாழ்வு நெறிகளும் அக்காலத்தில் இல்லாமலில்லை. மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயம் இருந்து வருகிறதென்றும், சமய உணர்வு என்பது பல்வேறு வகையில் உலகெங்கும் எக்காலத்தும் காணப்படுவதொன்று எனினும் கடவுள் நம்பிக்கையே சமயத்திற்கு அடிப்படை என்று கூறுவதற்கில்லை என்பது கடவுள் என்ற கருத்துக்கு இடந்தராத பௌத்த நெறியையும் சமயம் எனக் குறிப்பதிலிருந்து அறியப்படுகிறது.

மரபு வழிப்பட்ட நம்பிக்கைகள், வாழ்க்கைச் சடங்குகள், பிறப்பு, இறப்பு, பற்றிய எண்ணங்கள், நல்லன தீயன என்னும் பாகுபாடு, வாழ்விற் பற்று, பற்றுவிடுதல் ஆகிய உணர்வுகள் என்று கூறப்பெறும் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைகிறது சமயம், மதம் என்னும் சொல்லை ‘கொள்கை’ என்ற பொருளில் தமிழ் நூலார் ஆளுகின்றனர். Religion என்ற ஆங்கிலச் சொல்லைத் தோற்றுவித்த இத்தாலிய வேர்ச் சொல்லுக்குக் (Religare) கட்டுதல்,கூடுதல், மீளவும் எண்ணுதல் ஆகிய பொருள்கள் தரப்படுகின்றன. அந்த வகையில் “மனித வாழ்வு குறித்த ஆழமான சிந்தனைகளும் கோட்பாடுகளுமே சமயமென்றும், மதமென்றும் வழங்கப்பட்டன என்பதறியப் படும். இந்து சமயம், பௌத்த சமயம், சமணசமயம், ஆசிவக சமயம், ஷிண்டோ சமயம், ஈபுரு சமயம், கன்பூசிய சமயம், இசுலாமிய சமயம், கிறித்துவ சமயம், சீக்கிய சமயம் எனப் பல சமயங்கள் உலகின் பல பகுதிகளிலும் தோன்றி வளர்ந்திருக்கின்றன. வெவ்வேறு மொழிகளில் இலக்கியங்கள் வளர்வதற்கும்,

தத்துவ ஞானம் செழிப்பதற்கும் இம்மதங்கள் உதவியிருக்கின்றன. இச்சமயங் களில் சில தோன்று முன்னரே சங்க இலக்கியங்களும், தொல்காப்பியமும் தோன்றிவிட்டன" (மேலது:152) இந்நூலாசிரியர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

புறப்பொருள் திணைகளில், ஏழிலும் சமயத் தொடர்பான கருத்துகள் உண்டு. விரிச்சி, கொற்றவை நிலை, வெறியாட்டு, பூவைநிலை, காட்சி கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல், பெருந்சோற்று நிலை, மண்ணுங்கலம், ஒருவரும் அழியாத தொகைநிலை, வாகையின் பல துறைகள், காஞ்சியின் பல துறைகள், தேவ பாடாண், கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகியன சமயஞ்சார்ந்த கருத்துக்கள் உடையன. இவற்றில் கூறப்படும் சமயக் கருத்துக்கள் எச்சமயத்திற்குரியன என்பதும், சங்க இலக்கியங்கள் காட்டும் சமயம் எதுவென்பதும் ஆராய்ந்து காண்பதற்கு இந்திய நாட்டின் பண்டையச் சமயங்களைப் பற்றி அறிஞர் கூறுவனவற்றிலிருந்து அறிதல் வேண்டும்.

வீரநிலைக் காலத்தில் நிலவிய கொற்றவை என்ற தாய்த் தெய்வ வழிபாடு நாகரிகக் கூறுகள் மிகுந்த காலத்தில் முருகனாகிய சேய்த் தெய்வ வழிபாடாக மாரியுள்ளமையினை, "வழிவழியாக வரும் மறக்குடியினரிடம் இவ்வழிபாடு நிலவியிருக்க வேண்டும். மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் கிடைக்கும் பெண் தெய்வம் வடிவங்களோடு இக்கொற்றவை வழிபாடு தொடர்புடையதாகல் வேண்டும். கொற்றவையினை வீரநிலைக் காலக் கடவுள் எனக் கொண்டால், வீரநிலைக் காலத்திற்குப் பின் நாகரிக கூறுகள் மிகுதியான காலத்தில் முருக வழிபாடு தோன்றியதோடு, வழிவழித் தாம் வணங்கிய கொற்றவையின் மகனாக இம்முருகனைக் குறித்திருத்தல் வேண்டும்" (மேலது: 168) என்று கூறுகிறார் ஆசிரியர்.

உபநிடதங்களின் பல கருத்துக்கள் வேதங்களின் கருத்துகளோடு முரணு கின்றன. இராமாயண மகாபாரதத்தின் பழைய மூலப் பகுதிகள் பண்டைத் தமிழக எண்ணக் கருநிலைகளைக் காட்டுகின்றன. ஆகவே உபநிடதங்களும், இராமாயண மகாபாரதமும் திராவிடரின் சிந்தனைப் பிறவிகள் என இவ்வாய்வு முடிவு செய்கிறது. இக்கருத்தே அறிஞர் பலருக்கும் இருந்தது. ஆனால் தமிழகத்தின் சிற்றூர்களிலும், நாட்டுப்புற பகுதிகளிலும் வாழ்ந்து மடிந்து

பெயரறியாது போன வீரர்களையும் அவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளையும் வடமொழி இராமாயண, பாரத நூல்கள் தம் பாத்திர உருவாக்கத்திற்கும், கதைப் போக்கிற்கும் உரியனவாகத் தழுவித் கொண்டிருக்கின்றன என்று இந்நூலே முதன் முதலில் கூறியுள்ளது என்று கருத்தை இந்நூலாய்வின் மூலம் ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளதை அறிய முடிகிறது.

வேதங்கள் சிறுதெய்வங்களாகக் குறித்த சிவன், திருமால் போன்ற தெய்வங்களுக்குப் பெருந்தெய்வ நிலை வழங்கியது தமிழ் இலக்கியமே. ஊழ், மறுமை, வினை ஆகியன குறித்த ஆழ்ந்த சிந்தனை பண்டைத் தமிழர்க்கிருந்தது என்பதையும், இந்தியச் சமயம் ஒவ்வொன்றின் அடிப்படைக் கொள்கை உருவாக்கத்திலும், மெய்பொருளியல் துறை வளர்ச்சியிலும் தமிழர்களின் சமயத் துறைக் கோட்பாடுகள் என்பதையும் எடுத்துக்காட்டுவதோடு, எச்சமயமும் தோன்றாத காலத்தில் மரத்தையோ கல்லையோ நட்டு வழிபடும் பண்டைத் தமிழ் வழக்கமே, இறந்தவர்க்குக் கல்லெடுப்பாகவும், பிற்கால லிங்க வடிவாகவும் மாறியிருக்கின்றமையையும், இவ்வகை வழிபாட்டையும் அதன்பின்னர் உருவான சைவசமயம் தனக்குரியதாக ஆக்கிக் கொண்டு விட்டது என்பதையும் இந்நூலாசிரியனின் கருத்து புலப்படுத்துகிறது.

சங்க காலத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல், உணவு, உடை, உறையுள் பற்றிய செய்திகள்,ஆடவர் பெண்டிர் நிலை, சாதி, தொழிற் பிரிவுகள், கலை, கல்வி, அறிவியல், பொருளியல், உளவியல், சமூக நிறை குறைகள் பற்றிப் பல்வேறு செய்திகளைத் தொகுத்துக் கூறுவதோடு, சங்ககால வாழ்வின் ஒளிமிக்க பகுதிகளையே காட்டும் மரபு நிலையிலிருந்து மாறுபட்டுச் சங்க கால வாழ்வின் இருட் பகுதிகளையும் எடுத்தியம்புவதோடு, உயந்தோர் தாழ்ந்தோர் இழிசினர் என்ற பாகுபாடு இருந்தமையினையும், உயிரின் இயல்பாகிய காதல் கூட எளியோர்க்கும், செல்வர்க்கும் வேறு வேறு வகையாய் நூலில் விதிக்கப்பட்டமையினையும் இந்நூல் தயங்காமல் எடுத்துரைக்கின்றது. மேலும் 'ஏவல் மரபு' என்ற ஒன்றிருந்ததனையும், கலையும் கல்வியும் அறிவாற்றலும் பெறுகி நின்ற அக்கால நிலையை சங்கப் பனுவல்கள் கொண்டு காட்டும், அறிவியல் சார்ந்த எண்ணங்களும் அக்காலத்தில் நிலவியமையை ஆசிரியர் இந்நூலாய்வில் குறிப்பிட்டுச் செல்கிறார்.

தொல்காப்பியரின் இலக்கிய கொள்கைக்கும், சங்கத்தொகை நூல்களின் இலக்கியக் கொள்கைக்கும் வேறுபாடுகள் உள்ளமையையும், புறப்பனுவல் களில் உள்ளுறை மிக அருகி வருதலையும், தொல்காப்பியர் காலத்தே உவமையொன்றே அணியாக விளங்கியிருக்கச் சங்கத் தொகை நூல்களில் பிற அணிகளும் இடம்பெற்றுள்ளன. வடமொழியில் அணிக்கோட்பாடு சிறப்புற அமைந்துள்ளது போலப் பழந்தமிழ் இலக்கியத்தில் அமையவில்லை. மேலும் கிரேக்கம், சீனம், பாபிலோனியம், யூதம், சமஸ்கிருதம், ஆகிய மொழிகளில் உள்ள புறத்திணைப் பனுவல்களைத் தமிழ்ப் பனுவல்களோடு ஒப்பிடப் பட்டிருக்கிறது. ஆங்கிலக் கலைக்களஞ்சியங்களும், அறிஞர் பௌரா, அப்பாதுரை ஆகியோரின் நூல்களுமே இவ்வொப்பியலுக்கு துணையானவை என இந்நூலாசிரியர் கூறுகிறார்.

புறப்பாடல்கள் பாடிய தமிழ்ப் புலவர் முப்பதின்மரின் பாத்திறனையும், இவருள் ஒரே பாடல் பாடிய கணியன் பூங்குன்றனாரும், 38 புறப்பனுவல் களைப் பாடிய கபிலரும் உள்ளனர். புரோகிதரையோ தவநெறிக்கண் ஆற்றுப்படுத்தும் அளவில் தமிழ் வேந்தரின் ஒழுக்கமும் தெய்வ உணர்வும் வடமொழி அறிவும் பெற்றிருந்தனர். போர்முழக்கம் கூறும் புறப்பொருள் திணைவமைதி வடமொழி வேத நூல்களில் இல்லை. இவ்விருச் செய்திகளின் மூலம் தமிழ் வேந்தர்களின் தகவும், தமிழ்ப் புறத்திணைச் சிறப்பும் எடுத்துரைக்கப்படுவதோடு, சங்க இலக்கியங்களில் பேசப்பெறும் நிலையாமை யினையும், சமயப் புலவர் கூறும் நிலையாமையையும் ஒப்பிட்டு ஆய்ந்து முடிவு கண்டுள்ள இந்நூலாசிரியரின் கருத்து ஏற்புடைத்தாகும்.

தொல்காப்பியப் புறத்திணையியலையும், சங்க இலக்கிய புறத்திணை களையும் ஒப்பிடும் வகையில் திருமதி சி. உலகம்மாள் ‘புறத்திணை ஓர் ஒப்பீட்டாய்வு’ என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேட்டை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 1987 -இல் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வேடு கருதுகோள் நோக்கம், புறத்திணையின் இலக்கணம், புறத்துறைகள் பொருளமைவு, சங்கப் புறப்பாடல்களில் காணப்படும் திணை துறைகளை அவற்றின் போக்கில் விளக்குதல், தொல்காப்பியம் சங்க

இலக்கியத்தில் உள்ள ஒற்றுமை, வேற்றுமை ஆராய்தல் தொல்காப்பியம், சங்க இலக்கியம்வரை புறத்திணைத் துறைகளில் வளர்ச்சி நிலை, பொதுக் கருத்துக்கள் நிரலிப்படல், இலக்கண வரையரை பெறாத பாடாண்திணை, வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண் போன்றவைகளை வகைப்படுத்தும் மரபு வெளிப்படுத்தல், பிறசெய்திகள் என்னும் எட்டு தலைப்புகளைக் கொண்டு புறத்திணை ஒப்பீட்டை ஆராய்ந்துள்ளார்.

தொல்காப்பிய புறத்திணையியலை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியப் புறத்திணைப் பாடல்கள் வளர்ச்சியடைந்ததோடு சமுதாய மாற்றங் களை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. அந்த வகையில்,

> தொல்காப்பியமும் சங்கப் புறத்திணைப் பாடல்களும் பொருளமைவு, சமுதாய மாற்றங்களை எதிரொலிக்கும் முறை ஆகியவற்றில் தம்முள் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகின்றன. தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு சங்கப் புறத்திணை பாடல்கள் தமது வளர்ச்சி நிலையை வெளிக்காட்டி நிற்கின்றன. போரில் பெரும் வாகையுடன் வாழ்வில் அடையத்தகும் வெற்றிகளும் சமுதாயவியல் நோக்குடன் ஆய்வு செய்யப் பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் இடம்பெற்ற புறத்திணை சங்க இலக்கியங்களில் வளர்ந்து நின்று பிற்காலங்களில் இலக்கிய வகைகளுக்கு வழிவகுத்து நிற்றல் காண்கின்றோம். புறத்திணை கண்ட இவ்வளர்ச்சி நிலைகள் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை ஆராயப்பட்டுவிட்டது. அதன் பின்னர்த் தோன்றிய வளர்ச்சி நிலைகளும் தனிப்பட ஆராயத்தக்கவை களாகும். புறத்திணையில் காணப்படும் இவ்வளர்ச்சி நிலைகளைப் போன்று அகத்திணையும் பெரிதும் வளர்ச்சிகாட்டி நிற்கிறது. (1987: 288,289)

எனப் புறத்திணைகள் சமுதாய மாற்றங்களை விளக்குவனவாய்ச் சில புதுத் துறைகளை ஏற்று சங்க இலக்கியப் புற நூல்களில் ஒன்றான புறநானூற்றில் இடம்பெற்றுள்ள நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் புறத்துறைகள் மக்கள் வாழ்வின் வீரத்தை, அவர்களின் வாழ்வில் அடைந்த வெற்றியை விளக்குவதன் மூலம் பிற்கால இலக்கிய வகைகளுக்குச் சான்று பகர்வதாய் அமைகின்றன என்பதைனை விளக்கும் நோக்கோடு இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கையறுநிலைப்பாடல்களை எடுத்தியம்பும் நோக்கோடு இ.மொ. இராசேந்திரன் அவர்களால் ‘தமிழில் இலக்கியத்தில் கையறு நிலைப்பாடல்கள்’ என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேட்டை 1987-இல் மதுரை காமராசர் பல்கலைகழகத்திற்கு அளித்துள்ளார்.

இவ்வாய்வேடு, தலைவனை இழந்த நிலையில் பாடும் கையறு நிலை, வீரனுக்காகப் பாடும் கையறு நிலை, உறவினை இழந்து கையற்றுப் புலம்புவதாக அமைந்த புறநானூற்றுப் பாடலில் கணவன் இறந்ததற்காக மனைவி புலம்புதல், கணவனை இழந்த மனைவி புலம்பிய நிலையில் புலவர் தாமாகப் பாடுதல், மனைவியின் மரணத்திற்காகக் கணவன் புலம்புதல் என நான்கு பொருண்மைகளை உள்ளடக்கமாகக் கொண்டு இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

கையறுநிலைப் பாடல்கள் பாடும் மரபு பறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளதை விளக்க முனையும் ஆய்வாளர், “புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்களில் காணும் உவமைகளைக் கணக்கிட்டு 59 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. கையறுநிலைப் பாடல்களில் காணும் இலக்கிய நயத்தை எடுத்துக்காட்டி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. புறநானூற்று கையறுநிலைப் பாடல்களில் அரசன், வள்ளல், வீரன், போன்ற தலைவர் களுக்காகக் கணவனை இழந்து வருந்தும் மனைவியர் பற்றிய கையறுநிலைப் பாடல்கள் அமைகின்றன” (1987:363) என்கிற நிலையில் புறநானூற்றில் கையறுநிலைப் பாடல்கள் பாடும் மரபு இருந்துள்ளதை உணர்த்தும் வகையில் இவ்வாய்வேட்டின் போக்கு அமைந்துள்ளது.

கையறுநிலைப் பாடல்களின் மூலம் அரசனின் வீரம், கொடை, அரசாட்சி போன்றவற்றை அறியமுடிகிறது. சங்க இலக்கியச் சிறப்பிற்குச் சான்றாகக் கையறு நிலைப்பாடல்கள் அமைந்துள்ளன. கால வெள்ளத்தால் இவ்வகை இலக்கியங்கள் அழிந்துவிடாமல் இல்விலக்கியப் பாங்குகளே காப்பாற்றி வந்துள்ளன. அவ்வகையில் நல்ல இலக்கியம் காலத்தைக் கடந்து வாழும் என்பதற்கு புறநானூற்று கையறு நிலைப்பாடல்களைக் கொண்டு இவ்வாய்வேட்டின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

**வாகைத் திணை**

கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களால் 1978-இல் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ‘சங்க இலக்கியத்தில் வாகைத்திணை’ என்னும் ஆய்வேடு 1989-இல் நூலாக வெளியிடப்பெற்றது.

சங்ககாலப் புறப்பொருள் இலக்கணம், வாகைத்திணைப் பெயராய்வு, திணையும் துறையும், சங்க இலக்கியத்தில் வாகை, வாகைப் பாடல்களால் அறியப்படுவன, பிறமொழியில் வாகைப் பாடல்கள் சங்க காலத்திற்குப் பின் வாகை இலக்கண மரபுகள் ஆகிய ஏழு உட்தலைப்புகளில் ஆசிரியர் வாகைத்திணைக் குறித்து விரிவாக ஆய்ந்திருக்கிறார்.

தொல்காப்பியர் பன்னிரு புறத்திணைகளை தொகுத்து ஏழாக்கியுள்ளார் என்ற கருத்தை இந்நூல் மறுத்து பன்னிரு திணை என்பது பிற்கால விரிவே என விளக்கிச் செல்கிறது. அந்தவகையில், “தொல்காப்பியப் புறத்திணையியல் புறத்திணைகள் ஏழென்று கூறுகின்றது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி பாடாண் ஆகிய ஏழு திணைகளே தொல்காப்பியர்க்கு முன்னும் கூறப்பட்டிருக்க வேண்டும் என்பது அறிஞர் பலரின் கருத்தாகும். தொல்காப்பியக் காலத்தில் ஏழாக இருந்த புறத்திணைகள் பன்னிரண்டாகப் பிற்காலத்தில் வளர்ச்சியுற்றன என்பது பன்னிரு படலம் புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இரு நூல்களாலும் அறியப்படும். எனினும் இந்த வளர்ச்சிக்குரிய வித்து தொல்காப்பியராலேயே ஊன்றப்பட்டுள்ளது” (1989:1,2) என்று ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து ஏழாக இருந்த புறத்திணைகள் பிற்காலத்தில் பன்னிரு திணைகளாக வளர்ச்சியுற்றதை அறிய முடிகிறது.

புறத்திணையின் போர்ச்செயல் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறிப்பிட்ட மலரைச் சூடிக் காட்டும் பண்டைத்தமிழ் வழக்கம் வேறுயெம்மொழி இலக்கியங் களிலும் இதுவரை காணப்படவில்லை என்பதையும் நன்னன் எனப் பெயரிலமைந்த மன்னர் நால்வர் இருந்தனர் என்பதையும், இந்நூல் தெளிவுப் படுத்துகிறது. மேலும் வாகைத்திணை எவ்வாறு பாலைத்திணைக்கு புறனாக அமைகிறது என்பதனை,

> பாலைக்குப் புறனாக அமையும் வாகை, பாலைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களைப் பெற்றிருப்பதைத் தெளிவாக அறியக்கூடும்.

களரும் மணலும், பரந்த பொருகளம், வேனில் வெம்மை, வாகை முதலிய மரங்களின் சூழல், பிரிவு ஆகியன வாகைத் திணைக்கு பெரும்பான்மை பொருந்தக் காணலாம். கூதிர்காலப் போராயினும், பாலைத் திணைக்குரிய பிரிவென்னும் உரிப்பொருள் அப்புற நிகழ்ச்சிக்கும் உரியதாகிறது. ஆகவே முதல், கரு, உரிப் பொருள்களின் அடிப்படையில் வாகைத் திணை, பாலைத் திணைக்கு புறன் என உணரலாம் (மேலது: 28, 29)

என்று ஆசிரியர் சுட்டிச் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது. முதல், கரு, உரிப்பொருளின் அடிப்படையில் வாகை பாலைக்கு புறனாகியதை ஆசிரியர் தம் நிலையில் நின்று மேற்கூரிய காரணத்தை முன்வைத்துள்ளார்.

வாகைத் திணைக்கும் பாடாண் திணைக்கும் உள்ள வேறுபாடு நுண்மையானதாகும். ஒருவர் பெற்ற வெற்றியைப் பாராட்டிக் கூறுதல் என்பது இருதிணையிலுமுண்டு என்பதை, ஆசிரியர் இந்நூற்கண் விளக்கியிருக்கிறார் அதனடிப்படையில்,

**அண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய**
**அருஞ்சமம் ததையத் தாக்கி நன்றும்**
**நண்ணாகத் தெவ்வர்த் தாவ**
**பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே (புறம்: 126:20)**

என்ற மலையமான் திருமுடிக்காரியின் வெற்றி, வீரச் சிறப்புகளைக் கூறும் பாட்டு பாடாண்திணைக்குரியது என்று இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. "குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியிற் பெற்ற வெற்றி வலியும் வருத்தமும் தாங்கி அவற்றை வெற்றிக் கொள்ளும் திறம் ஆகியவற்றைக் குறித்துப் பாடுவது வாகை எனவும், பொதுப்பட ஒருவரின் வீரச்சிறப்பையும், கொடை மேம்பாட்டையும் பாடுவது பாடாண் ஒருவனின் வெற்றியும் வீரமும் கண்டு உளங்கிளர்ந்த ஒருவன் அவற்றைப் புகழ்தல் வாகை எனவும், ஒருவனின் ஆண்மை, வீரச்சிறப்புகளைக் கொடை முதலிய பயன்கருதி ஒருவன் போற்றுதல் பாடாண் எனவும் கொள்ளுதல் தக்கதாகும்" (மேலது:30, 31) என ஆசிரியர் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது. வாகை, பாடாண் ஆகிய இரு திணைகளும் புகழ்ச்சி கூறினும் இரண்டனுக்குமிடையில் வேறுபாடு பற்றி, குறித்த ஒரு போர் நிகழ்ச்சியைப்பாடுதல், வலியும் வருத்தமும் தாங்கும்

இயல்பை பாடுதல், பயன்நோக்காது ஒருவன் உயர்ச்சிகண்டு பாடுதல் என்ற மூன்றும் வாகைத்திணைப் பாடல்களுக்குரிய இலக்கணமாக இந்நூல் ஆராய்ந்து எடுத்துரைக்கும் பாங்கு ஏற்புடைத்தாக உள்ளது.

தொல்காப்பியர் 'வாகை' என்னும் சொல்லை துறை என்னும் பொருளிலேயே கொண்டிருப்பதையும், தொல்காப்பியத்தில் அமைந்துள்ளன புறத்துறைகளின் பெயர்கள் நீண்ட தொடர்களாக அமைய புறப்பொருள் வெண்பாமாலையார் அவற்றைச் சுருக்கி ஓரிரு சொற்பெயராக அமைத்துள்ளமை, தொல்காப்பியர் துறையின் பொருளையும், பெயரையும் நீண்ட தொடர்களால் கூறியிருப்பதை ஐயனாரிதனார், தொல்காப்பியர் கூறும் துறைப்பொருளை கொளுவாக்கிக் கொண்டு துறைப்பெயரைக் சுருக்கியுள்ளது என்று இந்நூல் நிறுவியுள்ளது.

தொல்காப்பியர் கூறிய அறுவகைப்பட்ட பார்ப்பன பாக்கம் முதலானவை வருணத்தை குறித்தது என இந்நூல் ஆராய்ந்துள்ளதை தெள்ளிதின் உணர முடிகிறது. அரசவாகை, வல்லாண் முல்லை, மூதின் முல்லை, மறக்களவழி, ஏறாண் முல்லை, தாபத வாகை, பார்ப்பன வாகை, சார்பு முல்லைத் துறை கொண்ட பாடல்கள் ஆராயப் பெற்றுத் துறை பொருத்தமும், பொருத்தமின்மையும் உரைக்கப்படுகின்றன. பதிற்றுப்பத்து மற்றும் பத்துப் பாட்டின் துறைகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

இந்நூல் வாகைப் பாடல்கள் காட்டும் செய்திகளையும் அதன்வழியாக அறியப்பெறும் அக்கால வாழ்க்கை முறைமைகளையும் எடுத்துரைக்கின்றது. வடமொழியான கிரேக்க சுமேரிய மொழிகள், ஆங்கில மொழிகாட்டும் வாகைப் பாடல்களை ஆராய்ந்ததோடு சங்க காலத்தின் பின்னர் வாகைத்திணை பெற்ற இடத்தை மதிப்பிடும் வகையில் நுண்ணிய முறையில் ஆசிரியர் ஆராய்ந்திருப்பது இந்நூலின்வழி தெளிவாகப் புலப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்களுல் ஒன்றான புறநானூறு முழுமையும் புறப்பொருளால் அமைந்த நூலாகும். பதிற்றுப்பத்து அரசர்க்கு உரியதாக, பரிபாடலும் மதுரைக்காஞ்சியும், பாண்டியர்க்கு உரியவாக, முருகாற்றுப்படை தெய்வத்திற்குரியதாக, பிற ஆற்றுப்படைகள் நான்கும் குறுநில மன்னர்க்கு உரியவாகப் புறப்பொருள் நூல்களில் புறநானூறு ஒன்றே மூவேந்தர், குறுநில

மன்னர், நாடெங்கிலுமுள்ள படைமறவர் கொடைமறவர் பற்றிய செய்திகளைத் தொகுத்துக்கூறும் ஒரு நூலாக அமைகிறது. இந்நூலின் 400 பாடல்களில் 2 முழுப்பாடல்கள் கிடைக்கவில்லை. எஞ்சிய பாடல்களில் கடவுள் வாழ்த்து ஒன்று நீங்க உள்ள 397 பாடல்களில் சீரும், அடியும் குறைந்த பாடல்கள் உள்ளன.

உ.வே.சா அவர்களின் பதிப்பின்படி, சீரும் அடியும் சிதைந்த பாடல்கள் 45 எனவும் அவற்றுள் 9 பாடல்களை ஔவை. துரைசாமி பிள்ளையவர்கள் நிறைவு செய்துள்ளதாகவும், ஔவை துரைசாமிப்பிள்ளையின் முயற்சியால் 9 பாடல்கள் அடி நிரம்பி 362 பாடல்கள் இப்போது முழுமையான நிலையில் உள்ளன. இப்பாடல்களில் திணை மட்டும் தெரிந்தவை 379 என்பர் இவற்றுள் 77 பாடல்கள் வாகைத்திணைக்குரியன. இத்திணைக்குரிய துறைகளான, பார்ப்பன வாகை, அரசவாகை, தாபதவாகை, மறக்களவழி, மறக்கள வேள்வி, வல்லான் முல்லை, ஏறான் முல்லை, மூதின் முல்லை, சால்பு முல்லை, ஆகிய ஒன்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் பெற்றுள்ளன. மேலும் புறநானூற்றுப் பாடல்களின் திணை, துறை, அமைப்பு தொல்காப்பியத்தின் அடிப்படையில் அமையவில்லை என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

அந்த வகையில் இதனை உணர்ந்த நச்சினார்க்கினியர் “தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றுக்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டு மென்றறிக” என நச்சினார்க்கினியரின் கருத்தை இங்கு எடுத்துக்காட்டி தம் கருத்துக்கு வலு சேர்த்துள்ளார் இந்நூலாசரியர். பன்னிருபடலமும், புறப்பொருள் வெண்பாமாலையும் கொண்டு புறநானூற்றுக்குத் திணை, துறை வகுத்தள்ளனர் என்று இந்நூலாசிரியர் சுட்டிச் செல்கிறார்.

புறநானூற்றுப் பாடல்கள் குறப்பிட்ட ஒரு வரிசைமுறை பெற்றுள்ளது அந்த வகையில், சேரர், பாண்டியர், சோழர் என்ற வரிசையில் 16 வரையுள்ள பாடல்கள், வள்ளல்களைப்பற்றி 87 முதல் 153 முடிய உள்ள பாடல்கள், படைத்தலைவர்களைப்பற்றி 167 முதல் 172 வரையுள்ள பாடல்கள், பின்நிலக்

கிழார்கள், பின்பொருண்மொழிக் காஞ்சியினர், பின்பு பரிசில் நீட்டித்தோர், அடுத்துக் கையறுநிலையினர் ஆகியோரைக் குறித்த பாடல்கள் என்ற ஒரு வரிசை முறை இருப்பதாகக் குறிப்பர்.

வாகைத் திணைப் பாடல்களை ஆராயுங்கால் மற்றொரு குறிப்பும் புலனாகிறது. அரசவாகை குறித்த 34 பாடல்களும் புறநானூற்றின் 19-ஆம் பாடல் தொடங்கி 174-ஆம் பாடல் வரையுள்ளவற்றில் இடம்பெற்று விடுகின்றன. வல்லாண் முல்லை, மூதின் முல்லை, ஏறாண் முல்லை, சால்பு முல்லை, ஆகிய முல்லைத் துறைப் பாடல்களும், பார்ப்பனவாகை, தாபத வாகைப் பாடல்களும் 178 முதல் 335 வரையுள்ள பாடல்களுக்கும் இடம் பெறுகின்றன. மறக்களவழி, மறக்கள வேள்வி பற்றிய பாடல்கள் 368 முதல் 372 வரை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. ஆகவே திணை, துறை அடிப்படையிலும், வேந்தர் குறுநில மன்னர் என்னும் முறையிலும், பாடினோர், பாடப்பட்டோர் என்னும் வகையிலும் புறநானூற்றுப் பாடல் வரிசை பெற்றுள்ளன என்று இந்நூலாசிரியர் புறநானூற்றுப் பாடல்வரிசையை எடுத்துரைக்கும் பாங்கு குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தின் நூறுபாடல்களும் பாடாண் திணைக்குரியன என்றும், அவற்றை பாடாண்திணையெனக் குறிக்கும் குறிப்பு முதறப்பத்தில் இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர் எண்ணுவர். பாடல்களில் பாடாண்திணை பற்றியனவே மிகுதியாக உள்ளன எனினும், பிறதிணைக் குறிப்புடைய பாடல்களும் உள்ளன. தொல்காப்பியப் புறத்திணை இயலை ஒட்டிப் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் பதிற்றுப்பத்துக்குத் திணை வகுத்துள்ளனர். அந்த வகையில் இதனை விளக்கும் பொருட்டு, இத்திணை வகுப்பின்படி வாகைத்திணைப் பாடல்கள் ஆறு இந்நூலில் உள்ளன. இவற்றுள், 36, 39-ஆம் பாடல்கள் முறையே களவழி, வாகைத்துறைகளை உடையவை. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் கடம்பின் பெருவாயில் நன்னனை வென்று அவனுடைய வாகை மரத்தைச் சாய்த்த வெற்றி இப்பத்தில் புகழப்பெறுகின்றது. 52-ஆம் பாட்டு குரவை நிலைத்துறையுடையது. 81-ஆம் பாட்டு முல்லைத் துறையுடையது. 84 வாகைத் துறையும், 89 காவன் முல்லைத் துறையையும் உடையன. இத்துறைகளால் ஆறுபாடல்களையும் வாகைத் திணைக்குரியவாக

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் கூற்றை தம் கருத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

சங்க காலப் புறப்பொருள் நூலாகிய புறநானூற்றுக்குத் திணை வகுத்தவர் பிற்காலத்தவர் என்பதில் ஐயமில்லை. புறப்பொருள்வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ள பன்னிரு திணைகளுள் நொச்சி தவிர்த்த ஏனைய பதினொன்றும் புறநானூற்றுத் திணை வகுக்கப்பட்டன.

சங்க காலப் புறப்பொருள் நூலாகிய புறநானூற்றுக்குத் திணை வகுத்தவர் பிற்காலத்தவர் என்பதில் ஐயமில்லை. புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ள பன்னிரு திணைகளுள் நொச்சி தவிர்த்த ஏனைய பதினொன்றும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. ஆகவே ஐயனாரிதனார் காலத்திற்குப் பின்பே புறநானூற்றுக்குத் திணை வகுக்கப்பட்டன என்றும் தொல்காப்பியம் கூறியுள்ள திணை துறைகள், புறப்பொருள் வெண்பா மாலையில் மாற்றத்தையும் வளர்ச்சியையும் காட்டுகின்றன. இரு நூல்களுக்கும் இடைக்காலத்தில் இலக்கியங்களில் உண்டான மாற்றங்களின் விளைவே வெண்பாமாலை புதுவகையான இலக்கணம் சொல்லக் காரணம் எனலாம். சிலப்பதிகாரம் தொல்காப்பியப் புறத்திணையியலுக்கு மாறாகப் பல திணை துறை அமைப்புகளைக் காட்டுவதை அறிஞர் மு. அருணாசலம் குறிப்பர். சிலம்பிலும், பின்நூல்களிலும் நிகழ்ந்துள்ள மாற்றங்களின் விளைவாகப் புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய மூன்று நூல்கள் குறிக்கத்தக்க வகையில் எழுந்துள்ளன.

இவற்றுள் வாகைத் திணை இலக்கணத்தை இலக்கண விளக்கம், வெண்பாமாலையிலிருந்து ஒரு சிறிதும் மாறாமல் அப்படியே உரைக்கின்றது. ஆகவே தொல்காப்பியம் கூறும் வாகை இலக்கணத்திற்கும் வெண்பாமாலை கூறும் வாகை இலக்கணத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும், புறப்பொருளைப் பொறுத்தவரை இந்நூல்களிலிருந்து ஒரு சிறிதே வேறுபடும் வீரசோழியம் கூறும் இலக்கணத்தையும் ஆராய்ந்தால் புறப்பொருள் இலக்கண வளர்ச்சி புலனாகும் என்று இந்நூலாசிரியர் எடுத்துரைக்கின்றார்.

தொல்காப்பியர் வாகையின் வகைகள் ஏழு என்றும் துறைகள் பதினெட்டு என்றும் குறித்தார். வகைகளும் துறைகளாகவே கருதத்தக்கன என்று முன் கூறப்பட்டது. ஐயனாரிதனார் வாகை வகைகள் என 33

பிரிவுகளைக் காட்டுகிறார். தொல்காப்பியர் ஒரு நூற்பாவில் கூறும் பார்ப்பன வாகை முதலான ஏழினையும் வெண்பாமாலையார் குறிப்பிடுகின்றார். இவை ஏழினோடு, அரசமுல்லை, பார்ப்பன முல்லை, அவைய முல்லை, கணிவன் முல்லை என்னும் நான்கினைப் புதியவாகப் படைத்துக் கூறுகிறார் புறப்பொருள் வெண்பாமாலையார்.

வாகையினை பிற்காலத்தவர் இயல்பாகப் பெற்ற வென்றி, உறழ்ச்சியால் பெற்ற வென்றி என்று இரு வகையாகப் பகுத்தாற்போலும் ஐயனாரிதனார், அரச முல்லை, பார்ப்பன முல்லை, அவையமுல்லை, கணிவன் முல்லை, என்னும் நான்கு துறைகளைப் புதியதாகக் கொண்டுள்ளார். எனினும் அரசவாகைக்கும் அரச முல்லைக்குமிடையே வேறுபாடு ஏதுமுள்ளதாக நூற்பாவோ, வெண்பாவோ காட்டவில்லை. பார்ப்பன வாகை பார்ப்பனரின் வேள்விச் சிறப்புரைக்க, பார்ப்பன முல்லை பார்ப்பனரின் நடுவுநிலைப் பண்பை உரைக்கும் வகையில் கொளுக்கள் அமைந்துள்ளன. இவ்வேறுபாடுகளிடையே ஒரு தெளிவான வரையறை இல்லை. ஆகவே ஒருவரோடு போட்டியிட்டோ, ஒரு பண்பின் மிகுதியாலோ, வெற்றி பெறுவதை ‘வாகை’ என்று பொதுக்குறியீட்டால் குறித்த தொல்காப்பியர் கருத்தே சிக்கலற்றதாகும் என்று இந்நூலாராய்ச்சியில் நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

முனைவர் கோ. சிவகுருநாதன் தம்முடைய முனைவர் பட்டத்துக்காக மதுரைப் காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அளித்த ‘வாகைத்திணை’ என்னும் ஆய்வேடு 1992- இல் நூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

இந்நூல் வாகை இலக்கணம், வாகைத் துறைகள், சங்க இலக்கியத்தில் வாகைப்பாடல்கள், காப்பிய வாகை, சிற்றிலக்கிய வாகை, நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் வாகை எனும் தலைப்புகளில் இந்நூலின் செய்திகள் தரப்பட்டுள்ளன.

திணை என்பது மனித வாழ்க்கையின் செயற்பாடுகளே. பேருணர்ச்சி மேலாண்மை செலுத்தியபொழுது போரின் வெற்றி வாகையாகக் கருதப்பெற்றது. வீரத்தின் விளைவு வெற்றி ஆதலால் வீர மேம்பாடே வாகையாயிற்று. மனித வாழ்க்கையின் செயற்பாடு போரளவிலேயே முற்றுப்

பெறுவதில்லை. ஆகையால் வீரம் ஒன்று மட்டுமே திறனாகாது, வாழ்க்கையின் செயற்பாடுகள் பலவற்றுள் போர் ஒன்று. அவ்வாறே மக்களிடம் அமைய வேண்டிய திறன்களுள் வீரமும் ஒன்று. மக்கள் வாழ்க்கையின் பல்துறை களையும் மக்கள் திறன்கள் பலவற்றையும் தன்னகத்தே பெற்று வாகைத்திணை அமைகிறது. இவையே முனைவன் கண்ட முதல் நூலான தொல்காப்பியத்தின் வாகைக் கோட்பாடாகும்.

காலத் தொடர்ச்சியில் எழுந்த பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம் முதலான இலக்கண நூல்களும் வாகைத் திணையை விளக்குகின்றன. இவ்வாறே சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் மற்றும் நாட்டுப்புறப்பாடல்கள், முதலிய காலந்தோறும் எழுந்த இலக்கியங்களும் வாகைக் கருத்துகளைத் தம்மகத்தே பெற்று, இலக்கண இலக்கியங்களில் காணலாகும் வாகைக் கருத்துக்களின் விளக்கமாக இந்நூல் அமைந்துள்ளது.

புறத்திணையின் முதல் இலக்கண ஆசானான தொல்காப்பியர் ‘வாகை தானே பாலையது புறனே’ என வாகையை அகத்திணையாகிய பாலைக்குப் புறனாகக் கூறுவர். புறப்பொருள் வெண்பாமாலை இப்போக்கில் இல்லை யென்றாலும், இலக்கண விளக்கம் தொல்காப்பிய நெறியைப் பின்பற்றுவதுடன் தொல்காப்பியச் சூத்திரத்தையே வழிமொழிகிறது. பாலை என்ற குறியீடு முதற்கண் இப்புறத்திணைச் சூத்திரத்தாலேயே கையாளப்படுகிறது. அகத் திணையில் முல்லை, குறிஞ்சி என நிலம் எண்ணும்பொழுது நிலமில்லாத பாலை எண்ணப்பெறவில்லை. புணர்தல், பிரிதல் என உரிப்பொருளாக எண்ணும் பொழுது பாலை என்ற சொல்லாட்சி வரும் வாய்ப்பில்லை. புறத்திணையாக இணையும் பிற திணைகளிலும், தன் அகத்திணைக்குக் குறியீட்டாகி தந்த பெருமை, வாகை என்னும் புறத்திணைக்கே கிடைத்தது. அந்த வகையில் இதனை விளக்கும் பொருட்டு,

> வாகை புறனாகும் முறைகளைத் தொல்காப்பியர் விரிவுபடக் கூறவில்லை. உரையாசிரியர்கள் பலரும் தத்தம் அறிவுத்திறத்தால் பலவாறு உரைப்பர். இளம்பூரணர் அதற்கு இது புறனாயது என்னை

எனின் பாலையாவது தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்தினும் காலம் பற்றிப் பிறப்பது போல, இதுவும் எல்லா நிலத்தினும் எல்லா குலத்தினும் காலம் பற்றிப் நிகழ்வதாலும், ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போலத் தன்னொடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுதலானும் அதற்கு இது புறனாயிற்று. நச்சினார்க்கினியர் பாலைக்குப் புணர்ச்சியின் நீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழ்யெய்துதற்குப் பிரியுமாறுபோலச் சுற்றுத் தொடர்ச்சியின் நீங்கி அறப்போர் செய்து துறக்கம் பெறுங் கருத்தினாற் சேறலானும் வானினும் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றி பெய்துவோரும் மனையோன் நீங்கிச் சேரலானும் பிரிவுளதாயிற்று. பாலை தனக்கென ஓர் நிலமின்றி நால்வகை நிலத்தும் நிகழுமாறு போல, முற்கூறிய புறத்திணை நான்கும் இடமாக வாகைத்திணை நிகழ்தலின் தனக்கு நிலமின்றாயிற்று. 'நாளு நாளுமாள் வினையழுங்க இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையாற் புகழ்' என ஆள்வினைச் சிறப்புக் கூறிப் பிரியுமாறு போல, இதற்குத் துறக்கமே எய்தும் ஆள்வினைச் சிறப்புக் கூறலுங் கொள்க. பாலை பெருவர விற்றாய்த் தொகைகளுள் வருமாறு போல வாகையும் பெருவரவிற்றாய் வருதலுங் கொள்க. டாக்டர் பாரதியார் பாலை அறக் காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை மிகுப்பதுபோல, வாகை மறக்காதலை வளர்த்து வெற்றி இன்பம் விளைப்பதாலும், பாலைபோல வாகையும் நிலம் வரைவின்றி யாண்டும் நிகழுமாகலாணும் பாலைக்கு வாகை புறனாயிற்று. டாக்டர் இலக்குவன் பிரிந்து சென்ற தலைவன் போர் வெற்றி பெற்றோ, பொருளீட்டிக் கொண்டோ, புதுக்கல்விச் சிறப்பு எய்தியோ வீட்டுக்குத் திரும்பி வருங்கால் தலைவியின் இன்பம் முன்னிலும் பன்மடங்காகும். வாகையிலும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து சென்று கடமையாற்றும் நிலைமைகள் உண்டு. பாலையால் தலைவியிடம் காதல் மிகுதல் போல, வாகையில் தாம் மேற்கொண்டுள்ள கடமைகள்பாற் காதல் மிகும். இவ்வுரை டாக்டர் பாரதியார் உரைக்கும் விளக்கம் போல அமைந்துள்ளது. புலவர் குழந்தை நச்சினார்க்கினியர் கருத்தை உடன்படுவர். திரு. க. வெள்ளைவாரணர் இளம்பூரணர் கருத்தை உடன்பட்டு எழுதுவர் (1992: 73,74)

என்று கூறும் உரையாசிரியர்களின் கருத்தை, தம் கருத்திற்கு ஏற்றவாறு இங்கு நிறுவி வலுசேர்த்துள்ளார் இந்நூலாசிரியர்.

புறப்பொருள் வெண்பாமாலை போர்வீரம் தொடர்பாகத் தொல்காப்பியம் கூறாத வாகையரவம், களவேள்வி, மூதின் முல்லை, ஏறாண் முல்லை, போன்ற பேராண் முல்லை, மற முல்லை, கண்படைநிலை ஆகிய ஏழு துறைகளைக் கூடுதலாகக் கூறும் இவற்றுள் வேள்வி, ஏறாண்முல்லை மூதின் முல்லை ஆகிய துறைகள் சங்க இலக்கிய வாகைப்பாடல்களில் ஆய்விடம் பெறுகின்றன. என்று இந்நூலாசிரியரின் கருத்து இங்கு போற்றத்தக்கது.

துறவுகொள்ளும் சூழலை தொல்காப்பியர் கூறவில்லை, ஆனால் திறனாய்வாளர்கள் போரில் பழிவந்த நேரத்து அரசர் கட்டில் துறப்பதாகக் கருதுவதுண்டு. அரசர்கள் தாமாகவும் சில நேரங்களில் அரசு துறப்பர், திரு. இராமச்சந்திர தீட்சதர், நிலவாட்சியை நிலைத்த சட்டங்கட்கு ஏற்ப, நிறை வாகவும் நன்றாகவும் ஆட்சி செய்த பின்னர், தம்முடைய வாழ்நாளில் இறுதிப் பகுதியில் இறைவழிபாட்டிற்கும் தவத்திற்குமான வாழ்க்கைகாக ஆட்சியைத் துறப்பர். மேலும் அரசன் துறவுகொண்டமைக்கு வரலாற்றில் சில சான்றுகள் உள்ளது. மகதநாட்டுச் சந்திரகுப்த அரசன் தன்னாட்டில் கொடும் பஞ்சம் நிலவியது அரசு துறந்து சமணணாகி உண்ணா நோன்பு கொண்டு உயிர் துறந்த செய்தியை வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதை இந்நூலாராய்ச்சியின் வாயிலாக ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழிலக்கியங்களில் துறவு பயின்று வந்துள்ளமையை அறிந்து கொள்ளும் வகையில்,

**மூத்தோர் முத்தோர்க் கூற்ற முயத்தெனப்**
**பா றர வந்த பழவிற்ற றாயம் ( புறம்: 75, 1-2)**

எனப் புறநானூற்றில் வரும் நலங்கிள்ளியின் பாடற்பகுதியில் அரியணைத் துறவு, தமிழ் வழக்காறன்மை உணரப்படும். அந்த வகையில் “தமிழிலக்கியத்திலும் ஓரிரு இடங்களில் இத்தகு துறவு பேசப்படுகின்றது. பல்யானை செல்கெழு குட்டுவன் காடு போந்த செய்தியை பதிற்றுப்பத்து பதிகம் கூறும். (ப.ப: 3-ஆம் பாகம்) வாழ்க்கையில் மாறான சூழல் நேர்ந்தபோது கோப்பெருஞ்சோழன் அரசு துறந்தான். சேரலாதன் செல்வம் மிகச் சேர்ந்து அவற்றை நிலம் தின்னுமாறு துறந்த செய்தியும் காணப்பட்டாலும்,

தொல்காப்பியர் காலத்தும் இவ்வரசு துறவு நிகழ்ந்திருத்தல் கூடும் என டாக்டர் என். சுப்பிரமணியம் அவர்கள் அரிதாக நிகழ்ச்சியினை தொல்காப்பியர் பொதுநிலைப்படுத்தி இத்துறை வகுத்துள்ளார்" (மேலது:114) என்று தொல்காப்பியர் கூறியதை நூலாசிரியர் இங்கு எடுத்துரைத்து விளக்கும் பாங்கு போற்றுதற்குரியது.

போர்ச் சாவு பற்றிய துறையான அவிப்பலி என்னும் துறை பகைவரின் கருவி பட்டுச் சாவதினும் வேறான ஒன்றாக உள்ளது. இதனையே மறவேள்வி என்றும் டாக்டர் பாரதியார் குறிப்பிடுவார். அஷ் என்ற சொல் 'தீ' என்று குறிக்கப்டுகின்றது வீரர்களம் புகுமுன்னர் வஞ்சினம் உரைப்பது மரபு. "போர்க்களத்தில் பொரும் மறவர் வெற்றியும் பெறாது. வீரச்சாவும் பெறாது ஒரு நிலையும் அமைதல் கூடும் அப்பொழுது பகைவர்களும் வெட்குற உயிர் போற்றாது தீப்பாய்ந்து உயிர் விடும் வீரரும் உளர் இதுவே அவிப்பலியாகும்." (மேலது: 109) மேலும் நச்சினார்க்கினியர், இளம்பூரணர், டாக்டர் பாரதியார், புலவர் குழந்தை ஆகிய நால்வரும் இத்துறையின் கருத்திற்கு உடன்பட்டு ஏற்றுக்கொண்டுள்ளதை இந்நூலின் வழியாக ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

உணர்வுநிலைச் செயற்பாடாக அவிப்பலித் துறை குறிக்கப்படுகிறது. உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்ட மாதரி, கண்ணகியின் துயரால் தீப்பாய் கிறாள். துறவு மேற்கொண்ட கவுந்தியடிகள் உண்ணா நோன்பு இருந்து உயிர் விடுகின்றமையும், தீப்பாயும் உணர்வு வழிப்படாது வடக்கிருந்து உயிர்விடும் பெருஞ்சேரலாதனின் இறப்பு போன்ற இவையனைத்தும் அவிப்பலியின் சாயலாகக் கொள்ளலாம். புறப்பொருள் வெண்பாமாலையின் அவிப்பலித்துறை உயிர் வழங்கலை உடன்படும். வஞ்சினக் குறிப்பை தராது இந்நூலாசிரியர்,

**வெள்வா ளமருட் செஞ்சோ றல்ல**
**துள்ளா மைந்த ருயிர்ப்பலி கொடுத்தன்று (184)**

என்று குறிப்பிடுகிறார். கொளுவிலும் வெண்பாவிலும் செஞ்சோற்றுக் கடன் குறிக்கப்படுவது தொல்காப்பியத்தில் காணப்படாத ஒன்று. தொல்காப்பியத்துள் 'அவி' என்ற சொல் 'தீ' என்ற குறிப்பைத் தருகிறது. புறப்பொருள் வெண்பா மாலையிலோ ஆவி எனப் பொருள்படுகிறது. ஆவிப்பலி என்பது அவிப்பலி எனக் குறுகி நின்றது என்பது உரை. வீரசோழியம் இத்துறையைக் கூறவில்லை. இலக்கண விளக்கம் அடல்கெழு மறவர் அவிப்பலி கொடுத்தல்

எனக் கூறுகிறதே தவிரப் பலிக்கான காரணத்தைக் குறிக்கவில்லை என்பதனையும் இந்நூலாசிரியர் மிக நுண்மையுடன் ஆராய்ந்து தெளிவுறுத்து கிறார்.

களவழியும் களவேள்வியும் ஒரே வகையான இலக்கிய மரபின. பாடற் பொருளானும் பாடுமுறையானும் ஓரே அமைப்புடையன. இவ்விருதுறைப் பாக்களிலும் போர்க்களத்தில் தடாரி கொட்டிப் பொருநன் பாடுதலும் களவழியில் பொருநண் பரிசில் வேண்டுவது போலவே வேள்வியிலும் ‘நிலவுத்திகழாரா முகக்குவ மெனவே’ எனப் பரிசில் வேட்கும் குறிப்பும் காணப்படுகின்றது. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இரண்டும் கொடைக் குறிப்பைக் கூறாவிடினும் புறநானூற்றுப் பாக்கள் கொடைக்குறிப்பினவாகவே அமைகின்றன என்று நூலாசிரியர் அழுத்தத்துடன் கூறுவது ஏற்புடையதாக உள்ளது.

களக்கொடுமையை விளக்கி வென்றவனைப் புகழ்வதே களவழி மற்றும் களவேள்வி ஆகிய இரண்டின் பாடுபொருளாகும், பாடுபொருள் விளக்கும் விதமாக களவழியின் ஒருபாடல் (368) நால்வகைப் படையழிவினைக் காட்டும். போர்செய் முறையும், படைகள் வீழ்ந்த நிலையும், பேய், பருந்து, நரி போன்றவற்றின் செயல்களை விளக்கும் நிலையும் சில பாடல்களில் காணப்படுகின்றன (மேலது: 369, 370), வீரர்களின் உடற்சிதைவும் காட்டப்பெறும். களவேள்விப்பாடல் இறந்த வேந்தர்களின் முடித்தலை, தொடித்தோள், மண்டையென உடற்சிதைவுகளைக் காட்டுகிறது அழிவுப் பகுதியிலோ உழவாகப் புனையும் பகுதியிலோ களவழிப்பாக்களில் யானை, குதிரை, தேர், படைக்குருவிகள் முதலியன பயின்று வருகின்றன. யானை 4 பாடல்களிலும், குதிரை 2 பாடல்களிலும் வாள் பற்றி 3 பாடல்களிலும் முரசு, அம்பு, வேல் முதலியன ஒரு பாடலிலும் பயிலப்படுகின்றன. அதரி திரித்துக்கூறும் பாக்களில் வீரர் அழிவு குறித்து 2 இடங்களில் கூறப்படும் களவேள்வியில் தெவ்வர் முடித்தலை அடுப்பு மண்டையோடு அகப்பை தொடித்தோள்-துடுப்பு, வேந்தர் குருதி – உலைநீரென இவை மாந்தர் நோக்கில் காணப்படுகின்றன. ஆதலின் போர்க்கள அழிவினைக் களவழி எல்லா நோக்கிலும் காட்டுவது என்றும் களவேள்வி மாந்தர் நோக்கில் மட்டுமே காட்டுவதென்றும் உணரலாம். களவழியின் 4 பாடல்களில் (370, 371, 373, 390)

களவேள்விக்குரிய பேய் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. ஆதலால் களவழியின் முழுமைப் பகுதியினின்றும் பிரிவு பட்ட ஒன்றே களவேள்வி எனலாம். தொல்காப்பியர் களவழியின் ஒரு கூறு களத்தை உழவு நோக்கில் உருவகப்படுத்துவது. பிற கூறுகளில் பாடும் முறையில் களவேள்வி அடங்கும். புறப்பொருள் வெண்பாமாலையோ வேந்தனை உழவனாகக் கூறுவது என வரையறுத்துக் கொண்டமையான் களவேள்வியென வேறு துறை காண நேரிட்டது." (மேலது: 188, 189) என்ற ஆசிரியர் நுண்மை பொருந்திய கருத்தை எடுத்தியம்பியமை இங்கு போற்றுதற்குரியது.

புறநானூற்று அரசவாகைப் பாடல்கள் பலவற்றின் பாடுபொருளாக வீரமே அமைகிறது. கொடை நோக்கம் கொண்ட இயன்மொழித்துறை இத்துறையினின்றும் வேறுபட்டு பதிற்றுப்பத்து வாகைத் துறைப்பாடல்கள் பாடுபொருளால் அரசவாகயையாக அமைகின்றன. இதனை விளக்க முனையும் ஆசிரியர். 'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என அரசவாகைக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியம், 'அடுத்தூர்ந்து ஏந்திய இயன்மொழி வாழ்த்தும்' என இயன்மொழிக்கு இலக்கணம் கூறும். இயன்மொழி ஐந்து பண்பினுட்படுவதே புறப்பொருள் வெண்பாமாலை இயன்மொழியைக் கொடை வேட்கும் துறையாக கூறிய பின்னர் மன்னன் இயல்பு மொழிவதையும் இயன்மொழியாக்கும். இந்நூலின் அரசவாகை இலக்கணம் 'இகல்வேந்தன் இயல்புரைத்தன்று' என்று கூறுகிறது. ஆதலின் இருதுறைகளும் ஒரு சாயலின. சில புறநானூற்று பாக்களுக்கு இரு துறைகளும் கூறப்படுகின்றன.

> அரசவாகை இயன்மொழி ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு தெரிவிக்கும் பொருட்டு நச்சினார்க்கினியர் இயன்மொழிக்குக் கொடைச் சூழலைக் காட்டுவர். தொல்காப்பியர் இயன்மொழித் துறைக்கு முன்னும் பின்னும் வருவன கொடைத் துறைகளே, புறப்பொருள் வெண்பாமாலையும், முதற்கண் கொடை வேட்கும் கருத்தையே கூறும் (194), புறப்பொருள் வெண்பாமாலையில் போர்ப் பகுதியை அடுத்து அரசவாகை வருவதும் கொடைச்சூழலை அடுத்து இயன்மொழி வருவதும் நச்சினார்க்கினியர் கருத்திற்கு அரணாக அமைகின்றன புறநானூற்று இயன்மொழித்துறைப் பாக்களில் வீரம் மட்டுமே நான்கு பாக்களில் காணப்படுவதும் இங்கு கருதற்குரியதாகும் (மேலது:232)

வீரத் தலைமை பெறுவதும் அரசவாகை யென்றும், கொடைத் தலைமை பெறுவது இயன்மொழி என்றும் ஆசிரியர் சுட்டிச் செல்கிறார்.

புறநானூற்றில் மிகப்பல பாக்களைப் பெற்ற துறைகளுள் அரசவாகையும் ஒன்று புறநானுற்றில் இயன்மொழித்துறையில் மிகக் கூடுதலாக 58 பாடல்கள் காணப்படுகின்றன. அடுத்த நிலையில் 36 பாக்களைப் பெற்று அரசவாகை அமைகிறது. இத்துறையில் பதினொன் புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களுள் இடைக்குன்றூர் கிழார், குறுங்கோழியூர் கிழார், ஐயூர் மூலங்கிழார், தாமப்பல் கண்ணனார், வெண்ணிக் குயத்தியார் ஆகியோர் இத்துறையில் மட்டுமே பாடியுள்ளனர். தொகை நூல்களில் இவர்கள் பாடியனவாக வேறு பாக்கள் இல்லை. பொருந்தில் இளங்கீரனார் புறநானூற்றில் இத்துறையில் மட்டுமே பாடியுள்ளார். இத்துறையில் அதிகப் பாக்கள் பாடியவர் ஔவையாராவர். இவர், இத்துறையில் ஆறு பாக்களில் அதியமானஞ்சியைப் பற்றி பாடியுள்ளார் என்று ஆசிரியர் கருதுவது குறிப்பிடத்தக்கது.

இத்துறையுள் 18 அரசர்கள் பாடப்பெற்றுள்ளனர் சேர, சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களும், அதியமான் நெடுமானஞ்சி, தேர்வன் மலையன் போன்ற குறுநிலத் தலைவர்களும், பிட்டங்கொற்றன், ஏனாதி, திருக்கிள்ளி, மலையமான் சோழிய ஏனாதி, திருக்கண்ணன் ஆகிய படைத் தலைவர்களும் இத்துறையில் பாடப்பட்டுள்ளனர். இவர்களுள் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே வாகை வேந்தர்களுள் அதிகமான பாடல்களைப் பெற்று விளங்குகிறான். இவனை 4 புலவர்கள் 8 பாக்களில் பாடியுள்ளனர்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, சேரமான் குட்டுவன் கோதை, சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, தேர்வண்மலையன், ஏனாதி திருக்கிள்ளி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் ஆகியோர் இத்துறை ஒன்றிலேயே பாடப்பட்டுள்ளனர் 36 பாக்களையுடைய அரசவாகையில் 19 பாக்கள் அரசர்தம் வீரத்தை மட்டுமே பாடும் என்று ஆசிரியர் இந்நூலின்கண் வலியுறுத்தியிருக்கிறார். கூதிர், வேனில் ஆகிய இரண்டையும் குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. கூதிர் காலத்தும் வேனிற் காலத்தும் பாசறையில் போர் மேற்கொண்ட காதலுடன் தலைவன்

தங்குதல் என்பது இத்துறைக் கருத்தாக தொல்காப்பியர் குறிப்பிடுவதாக ஆசிரியர் கூறுகிறார். கூதிர், வேனில் என்ற இரண்டாயினும் உளத்திண்மை என்ற ஒரே நோக்குட்படுவதால் இரண்டையும் ஒரு துறையாகவே கருதுவர்.

போருக்கு எனக் குறிப்பிட்ட ஒரு காலத்தைக் குறிக்க இயலாது. வீரப் பாடல்களை ஆய்ந்தவர் போர்கள் பெரும்பாலும் கோடையில் நிகழ்ந்தனவாக குறிப்பர். இந்தியப் போர்களை ஆய்ந்தவர் போர்கள் இளவேனிலும், இலையுதிர்க் காலத்திலும் நிகழ்வனவாகக் குறிப்பதோடு, இதனை விளக்க முற்படும் ஆசிரியர், சுக்கிர நீதியிலிருந்து,

> போர் செய்தற்குக் கூதிர் காலமும் முன்பனிக் காலமும் பின்பனிக் காலமும் தலை சிறந்தனவாம். இளவேனிற் காலம் இடையாயதாகும். முதுவேனிற்காலம் கடையாயதாகும் கார்காலத்தில் போர் செய்தல் கூடாத தொன்றாம் அக்காலத்தில் போர் செய்ய நேரின், சாமோ பாயத்தை மேற்கொள்ளல் வேண்டும் (மேலது : 101)

என்று ஆசிரியர் சுக்கிர நீதியின் கருத்தை எடுத்துரைத்து விளக்கியுள்ளமை போற்றுதற்குரியது. தமிழகப் போர்கள் கூதிர் பருவகாலத்தில் நிகழ்ந்தமைக்கு நெடுநல்வாடையே சான்றாகும். கார் பருவத்து தலைவன் வருகையைச் சுட்டும் பகுதியே கோடைக் காலத்துப் போரினைக் காட்டும். கூதிர், வேனில் ஆகிய இரு காலங்களும் இன்பத்துய்ப்புக்கு ஏற்றவையாக ஆசிரியர் இவ்விடத்து எடுத்துக் காட்டியுள்ளமை நன்கு புலனாகும்.

தலைவன் போர் மேற்கொண்டவிடத்து காதலுடன் பாசறையிருத்தல் அவனின் உளத்திண்மையை காட்டுவதாகும். தலைவன், பாசறையில் தலைவியை எண்ணும் அகப்பாக்களை கண்ட நச்சினார்க்கினியர் 'தலைவியை நினைவன வாகைக்கு வழூவாம்' அகத்திற்கு வழுவன்றென்றற்கு மரபு என்றார் என்ற நச்சினார்க்கினியரின் கருத்தை எடுத்துரைத்து ஆசிரியர் கூறுகிறார். பாசறையில் தலைவியை எண்ணுபவன் உணர்வு வயப்படும் அகத்தினை மாந்தன் இப்பொதுவியல் பாற்படாது. தலைவியை எண்ணாத திண்மையன் வாகை மைந்தன் என்று ஆசிரியர் சுட்டுகின்றார்.

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் கூதிர் பாசறையைக் கூதிர்பாசறை, வாடைப் பாசறை என இரண்டாகக் கொண்டு, வேனிற்

பாசறையைக் கூறவில்லை. கூதிர் என்ற காலநோக்கிலும் அக்காலத்து வீசும் வாடைக்காற்று நோக்கிலும், கூதிர் பற்றியதையே இரண்டாக வகுப்பர். தொல்காப்பியம் போலன்றிப் பிரிவுத் துயரையும் கொளுவில் வெளிப்பட காட்டுவர். 'ஆற்றாமை நனிபெருகவும்' (199) விதிர்ப்பெய்த வந்துலாய்த் துயர் செய்யும் 170 என்பன போன்ற புறப்பொருள் வெண்பாமாலை பாடலின் மூலம் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

பதிற்றுப்பத்து பாடாண்திணையைச் சார்ந்தது, புறநானூற்றுப் பாடாண்திணை போலன்றிப் பதிற்றுப்பத்தின் பாடான் பாக்கள் பிற புறத்திணைத் துறைகளின் அடிப்படையிலும் அமைகின்றன. வாகைத் திணையையே துறையாகக் கொண்டும் 7 பாக்கள் அமைந்துள்ளன. இப்பாக்களின் தன்மைகளுக்கும் புறநானூற்றுப் பாக்களின் தன்மைகளுக்கும் வாகை நோக்கில் ஒப்புமை காணல் ஏற்புடையது என்று ஆசிரியர் கருதுவது குறிப்பிடத்தக்கது.

வாகைத் துறைப் பாடாண் பாட்டு என்ற துறையில் ஒரு பாடலும் (35) வாகை என்ற துறையில் இரு பாடல்களும் (39, 84) இம்மூன்றும் ஒருசேர ஒப்புமை காணற்குரியன. ஒரு பாடல் படைகளின் அழிவையும் போர்க்கள காட்சிகள் கொடுமையையும் கூறி, 'உரைசான்றனவால் பெருமநின் வெற்றி' என அரசனின் வெற்றியைப் புகழ்கிறது (35) மற்றொரு பாடல் (84) படைகளின் ஆற்றலையும் இவன் ஆற்றலையும் அவற்றால் பகைவர் வருந்தும் அவலத்தையும் விளக்கி, அவன் வெற்றித் தோற்றத்துடன் ஆரவாரம் மிக்க நான் மகிழிருக்கையில் வீற்றிருக்கும் காட்சியைக் காட்டுகிறது. இவ்விரு பாடல் களிலும் வெற்றி பெற்ற தன்மை வெளிப்பட அறிந்தாலும், எஞ்சிய பாடல் (39) அவன் தும்பைப் போர்த்திறத்தையும் கூறி வெற்றியினைக் குறிப்பில் புலப்படுத்துகிறது. ஆதலால் பதிற்றுப்பத்து வாகை வெற்றியே கூறுகிறது. பொது நிலையிலும் வீரம் கூறுவது என்று ஆசிரியர் சுட்டிச் சென்றுள்ளார்.

சங்கச் சான்றோரின் பாக்களாகக் கருதப் பெறுபவை பாட்டும் தொகையுமே. அவற்றுள் தொகையுள் புறநானூறும் பதிற்றுப்பத்துமே புறம் பற்றிய செய்திகளை அறிவதற்கு பயன்படுவன. புறநானூறு உழிஞைத் திணை தவிரப் பிற புறத்திணை பாக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் வாகை பற்றிய பாடல்களாக டாக்டர் உ.வே. சா. குறிப்பிடுவனவாக,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 19 | 20 | 21 | 22 | 23 | 25 | 26 | 31 | 33 |
| 37 | 42 | 43 | 44 | 51 | 52 | 53 | 54 | 61 | 66 |
| 76 | 77 | 78 | 79 | 81 | 82 | 86 | 93 | 94 | 98 |
| 100 | 104 | 125 | 166 | 167 | 170 | 174 | 178 | 179 | 180 |
| 181 | 251 | 252 | 279 | 285 | 296 | 305 | 306 | 308 | 312 |
| 313 | 314 | 315 | 316 | 317 | 318 | 319 | 320 | 321 | 322 |
| 326 | 327 | 328 | 329 | 330 | 331 | 332 | 333 | 334 | 335 |
| 368 | 369 | 370 | 371 | 372 | 373. | | | | |

என, மொத்தம் 76 பாக்களைப் குறிப்பிடுகிறார். இதனைத் தொடர்ந்து துறை வரிசையாக உ. வே. சா. குறிக்கும் பாக்களான அரசவாகையில் 35 பாடல்கள் உள்ளன. அவை,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | 20 | 21 | 22 | 23 | 25 | 26 | 31 | 33 |
| 37 | 42 | 43 | 44 | 51 | 52 | 53 | 54 | 61 |
| 66 | 76 | 77 | 78 | 79 | 81 | 82 | 93 | 94 |
| 98 | 99 | 100 | 104 | 125 | 107 | 168 | 174 | |

ஏறான் முல்லை 86, 296 இரு பாடல்களும், மறக்களவழி 368, 369, 370, 371, 373 என ஐந்து பாடல்களும், மறக்களவேள்வி 327 என ஒரு பாடலும், பார்ப்பன வாகை 166, 305 இரு பாடல்களும், மூதின்முல்லை 279, 288, 306, 308, 312 என ஐந்து பாடல்களும், வல்லாண் முல்லையில்,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 170 | 178 | 179 | 180 | 181 | 313 | 314 | 315 | 316 |
| 317 | 318 | 319 | 320 | 321 | 322 | 326 | 327 | 328 |
| 329 | 330 | 331 | 332 | 383 | 334 | 335 | | |

என வல்லான் முல்லையில் 25 பாடல்களும், ஆக மொத்தம் 77 பாடல்கள் பயின்று வந்துள்ளதை ஆசிரியர் சுட்டிச் சென்றுள்ளார்.

திணைகளில் குறிக்கப்பெறும் பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் துறைகள் அனைத்தாலும் பெறும் பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் வேறுபடுகின்றன. அதாவது திணையில் காணப்பெறும், பாடல் எண்கள் 17, 285

ஆகியன துறைப்பாடல்களில் எவற்றுள்ளும் குறிக்கப் பெறவில்லை பாடல் 17 அடிக்குறிப்பில், அரசவாகை எனக் குறித்து, இயன் மொழியுமாம் என்று குறிக்கப்பெறுவதால் துறையகராதியில் இயன்மொழியுள் அடக்கப் பெற்றுள்ளது என ஆசிரியர் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

பாடல் 285 அடிக்குறிப்பில் திணை வாகை எனக் குறிக்கப் பெற்றுள்ளதால் வாகை வரிசையில் எண்ணப்பெற்றது. ஆனால் துறையில் முல்லை எனக் குறிக்கப் பெற்றுச் சிதைவு காணப்படுவதால் துறை வரிசையில் இடம் பெறவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதையர் துறையிறந்த பாடல்களில் இதனையும் ஒன்றாகக் கருதுவதால், துறை வரிசைப் பாடல்களில் இரண்டு குறைவுபட எண்ணப் பெறுகிறது. 76 – 2 = 74 என ஆசிரியர் வரையறுத்துக் கூறுவது சிறப்பான ஒன்று,

துறை வரிசையில் காணப்பெறும் பாடல்கள் 99, 168, 288 ஆகிய மூன்றும் திணை வரிசையில் காணப்பெறவில்லை. பாடல் 99-இன் அடிக்குறிப்பால் 'திணையும் துறையும் அவை' யென்ற குறிப்பு காணப்படுகின்றது. முன்பாடல் 98, வாகைத் திணையில் அரசவாகைத் துறையைச் சார்ந்தது. பாடல் 98-இன் அடிக்குறிப்பில் வஞ்சித்திணையில் கொற்றைவள்ளைத் துறையும் காணப்படு கிறது. டாக்டர். உ. வே. சாமிநாதையர் வஞ்சித்திணை வரிசையிலோ கொற்றவள்ளைத் துறையிலோ பாடல் 99-ஐச் சேர்க்க வில்லை. ஆதலால் பாடல் 99 வாகைத்திணை வரிசையில் எவ்வாறோ விடப்பட்டுள்ளது என்பதனையும் ஆசிரியர் அலசி ஆராய்ந்து இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாடாண்திணையும் அதன் தொடர்பான துறைகளும் பாடல் 168-இல் அடிக்குறிப்பில் குறிக்கப்பெற்றுப் பின்னர் அரசவாகையுமாம் என்ற குறிப்பும் இதனுள் அமைந்துள்ளது. பாடாண்தினையுள் அரசவாகை என்ற துறை இல்லை. வஞ்சி, காஞ்சி, உழிஞை, வாகை என்னும் திணைப் பெயர்களைத் துறைப்பெயர்களுடன் இணைக்கும் போக்கு, புறப்பொருள் வெண்பா மாலையில் காணப்படும். அந்நூலுள்ளும் அவ்வத்திணைத் துறைகளில் சிலவற்றில் இணைப்பு உண்டேயன்றி வேறு திணைத்துறைகளில் இணைப்பு இல்லை என்பதனை ஆசிரியர் மிகத் தெளிவாகவும், விரிவான முறையில் எடுத்துரைத்துள்ளார்.

பாடல்கள் 166, 167 ஆகிய இரண்டும் பாடாண்திணையோ என்ற மயக்கம் அடிக்குறிப்புகளால் ஏற்படுகின்றது. இரண்டன் அடிக்குறிப்புகளும் 'திணை அது' எனக் குறித்து முன்பாடலான 165-இன் பாடாண் திணையை உடன்படுமாறு உள்ளன. அவ்வாராயின் இவ்விரு பாடல்களின் துறைகளை பாரப்பன வாகையும் 166, அரசவாகையும் 167, பாடாண் திணையாகும் என்று டாக்டர். அ. சீனிவாசன் இவ்விரு பாடல்களையும் இவ்வடிக் குறிப்புக்களான பாடாண் திணையாகவே காண்பர். ஆனால் டாக்டர் உ. வே. சா. இவ்விரு பாடல்களையும் பாடாண்திணையாகக் கருதவில்லை என்பதை இப்பாடல்களை வாகைத்திணையுள் அடக்குவதால் அறியலாம். 'திணை அது' என்ற அடிக்குறிப்பால் நேர்ந்த மயக்கம் இது என்று இதனைத் தெளிந்த ஔவை துரைசாமியார் தம் பதிப்பில் 166-ஆம் பாடலை வாகைத் திணை என்றே குறித்து, பெருங்குழப்பத்தை களைந்த பெருமை ஔவை துரைசாமிக்குரியது என்று ஆசிரியர் கூறுகிறார்.

பாடல்கள் 167, 168 ஆகியவற்றின் அடிக்குறிப்புக்களால் நேர்ந்த பாடாண் திணையில் அரசவாகைத்துறை என்ற மயக்கம் நீங்குகிறது. பாடல் 168 -இன் முன்னதாகக் கருதப்பெறும் துறைகள் பாடான் திணையின் ஆதலால், இப்பாடலை டாக்டர். உ. வே.சா. பாடாணில் காட்டி வாகையில் நீக்குகிறார். ஆகையால் இப்பாடல் அரசவாகைத் துறையாகக் காணும்பொழுது வாகைப் பாடலே என்று உ. வே. சாவின் கருத்தை எடுத்துரைத்து ஆசிரியர் விளக்கமுற எடுத்துரைக்கிறார்.

தும்பைத் திணை, மூதின்முல்லைத்துறை ஆகிய இரண்டின் குறிப்பு பாடல் 288-இல் இடம் பெற்றுள்ளது. எனவே துறை வரிசையில் மூதின் முல்லையுடன் திணை வரிசையில் தும்பையுடனும் இணைக்கப் பெற்றுள்ளது மீண்டும் தும்பை வாகை ஆகிய இரு திணைகளிலும் மூதின் முல்லையாகிய ஒரு துறையைக் கொள்ளும் மயக்கம் ஏற்படுவதால், மூதின் முல்லைத் துறையில் இப்பாடல் மீண்டும் விளக்கம் பெறுகிறது. பின்பு துறையாய்விற்கு உட்பட்டு, இப்பாடலும் வாகைத்திணைப் பாடலாக ஏற்கப்பெறுகிறது என்று ஆசிரியர் தெளிவாகவும், விளக்கமுறவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

டாக்டர். உ.வே.சா. வின் திணை துறை வரிசையில் காணப்பெறும் வேறுபாடுகள் களையப் பெற்றன. திணை வரிசையில் கூறப்பெறும் 76

பாடல்களில், 2 பாடல்கள் துறை வரிசையில் இடம்பெறவில்லை (17, 285) துறை வரிசையில், திணை வரிசையில் கூறப்பெறாத 99, 168, 288 என்ற 3 பாடல்கள் சேர்கின்றன. (76 – 2+3 = 77) புறப்பாடலில் 17 ஆவது பாடல் வேறு துறையில் சேர்க்கப்படுவதால் விலக்குநிலை பெற்றதை முன்னர்க் குறித்தோம். வாகைத்திணைப் பாக்களான 22, 23, 31, 37, 98, 170, 180 ஆகிய பாடல்கள் வாகைத் திணைக்கு வேறான பிற திணைத்துறைகளை இரண்டாம் நிலையில் பெற்றிருந்தும் வாகைத் திணைப்பாக்களின் வரிசையில் டாக்டர். உ. வே. சா. சேர்த்தே எண்ணுகிறார். ஆதலால் இப்பாடலையும் வாகைத் திணை வரிசையுள் இணைப்பதில் தவறில்லை (77 + 1 = 78) என்பதையும் தெள்ளத் தெளிவாக உ. வே. சா. அவர்கள் எடுத்துரைத்துள்ளதை ஆசிரியர் கூறுகிறார்.

## புறநானூற்றில் திணை, துறை ஓர் ஆராய்ச்சி

1993-இல் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்குப் ப.சுசிலா அவர்களால் ‘புறநானூற்றில் திணை, துறை ஓர் ஆராய்ச்சி’ என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வேட்டினை அளிக்கப்பட்டது. இவ்வாய்வேடு, புறநானூறும் அமைப்பு முறையும், தொல்காப்பியப் புறத்திணையியலுக்குப் புறநானூற்றுப் பாக்களை மேற்கோள் காட்டிய இளம்பூரணாரும், நச்சினார்க்கினியரும், தொல்காப்பிய அடிப்படையில் திணை, துறை அமைப்பு பொருத்தமில்லாப் பாடல்களும் அவற்றின் உரைசாரந்த பொருத்தமும், தொல்காப்பியர் கூறிய எழுதிணைக்கு வேறாக வேறு நூல்கள் அடிப்படையில் திணை-துறை அமைந்தவைற்றைப் பொருளோடு பொருத்தி அமைத்துக் காட்டல், தொல்காப்பிய அடிப்படையில் திணை-துறை பொருத்தமாக அமைந்த பாடல்களையும் பொருத்திக் காட்டல் எனும் ஆறு தலைப்புகளைக் கொண்டு இவ்வாய்வேடு முன்னெடுக்கப்படுகின்றது.

> “தொல்காப்பிய நூற்பாவிற்குப் இளம்பூரணர் புறநானூற்றிலுள்ள ஒரு பாட்டின் அடியைக் காட்ட, நச்சினார்க்கினியர் அதே பாடலடியினைத் தொல்காப்பியத்திலுள்ள வேறு நூற்பாவிற்கு மேற்கோள் காட்டி விளக்கி உள்ளார். இவ்வாறு உரையாசிரியர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கருத்து மாறுபடுவதோடன்றித் தத்தமக்குள்ளேயே அஃதாவது ஒருவரே - ஒரே பாடலை அல்லது பாடல் வரியினை இரு வேறு திணை

> துறைகளுக்கு காட்டி மாறுபட்டும் சென்றுள்ளார். இவ்வாறு இரண்டு உரையாசிரியர்களிடையேயும் மாறுபாடு நிகழ்வதைக் காணும்போது இவர்கள் இருவரும் புறநானூற்றுப் பாடல்களுக்கு உரிய உரையைப் பற்றிக் கவலைப்பட்டதாக தெரியவில்லை. அதனால் இவ்விருவரும் பாட்டிற்கேற்ற பொருள் உணர்ச்சியோடு திணை-துறை அமைப்பிற்குப் பயன்பட மாட்டார்கள் எனத் தெளிவானதால் இவ்வாராய்ச்சியில் இவ்விருவரைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய இன்றியமையாமை நிகழ்ந்துள்ளது." (1993: 374,375)

என்னும் கருத்தை இவ்வாய்வாளர் எடுத்துரைக்கும் நோக்கு இங்கு குறிக்கத்தக்கது. பெரும்பாலான புறநானூற்றுப் பாடல்களின் திணை துறைகளில் சிக்கல் எழும் வகையில் தொல்காப்பியப் பொருளாதரத்தில் மேற்கோள் காட்டியுள்ள பாடல்கள் வெவ்வேறு திணை-துறைகளுக்குச் சான்றாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வகையில் தொல்காப்பியத்திற்கு மேற்கோளாகக் காட்டும் நிலையில் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் உரையைப் பற்றி கவலைப்படாமல் சான்று காட்டியுள்ளதை இவ்வாய்வு விளக்குகிறது.

## தொகுப்புரை

- தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை என்ற இவற்றுள் புறத்திணைப் பாடல்களின் திணை, துறைகள் எவையென எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அதே சமயம் சங்க நூல்களின் புறத்திணைப் பாடல்களும் பின்வந்தோரால் திணை, துறை வகுப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திணைத் துறை வகுப்புகளிடையே ஒன்றுக்கொன்று வேறுபாடுகள் மற்றும் சிக்கல்கள் இருப்பதை அறியமுடிகிறது. எனவே, இவ்வேறுபாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என நோக்க வேண்டிய நிலையில் புறநானூறு, பதிற்றுப்பத்து பாடல்களும், பத்துப்பாட்டின் பாடல்களும் இவ்வியலில் எடுத்துக்காட்டி, கவனப்படுத்தப்படுகிறது.
- சங்கப் புறத்திணைகளான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் இவ்வேழு திணைகளில் ஒரு

சில திணைகள் குறித்து மட்டுமே ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவ்வகையில் வாகைத்திணை மற்றும் பாடாண்திணை குறித்து சில ஆய்வறிஞர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடாண்திணைக் குறித்து ஓர் ஆய்வும், வாகைத் திணைக் குறித்து மூன்று ஆய்வுகளும், புறத்திணைச் சார்ந்து பொதுவாக சில ஆய்வேடுகளும், புறத்திணைக் கொள்கைகளை முழுமையாக ஆய்ந்துள்ள வகையில் கு.வெ. பாலசுப்பிரமணியனின் 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' என்ற ஒரு நூலும், திணைத் துறைகள் குறித்ததான முனைவர்பட்ட ஆய்வேடு என்ற வகையில் கையறுநிலைத் துறையைக் குறித்து ஓரிரண்டு ஆய்வேடும் வெளிவந்துள்ளது. மேலும் புறப்பொருள் வெண்பாமாலையில் குறிப்பிட்ட 12 திணைகள் குறித்தும், தனித்தனியாகவும் அதிக அளவில் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. ஆனால் இப்பொருண்மை குறித்து மிகச் சிலவே வந்துள்ளன. இனி வருங்காலங்களிலாவது ஒவ்வொரு திணைகள் குறித்து ஆழ்ந்த நிலையில் ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும். 64 துறைகள் இருந்தாலும் இத்துறை சார்ந்த ஆய்வுகளுமே ஓரிரண்டே வெளிவந்துள்ளன.

- புறத்திணைக் கொள்கைகள் குறித்தான ஆய்வுகளில் ஒன்றான கு.வெ. பாசுப்பிரமணியன் 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' என்னும் நூலில் புறத்திணைகளின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும், போர் குறித்தும், அரசியல், சமயவியல், வாழ்வியல் மற்றும் புலவரியல் உள்ளிட்ட பலவற்றை சங்கப் பாடல்களின் துணையாகக் கொண்டு, மிக விரிவான முறையில் ஆராய்ந்து பல்வேறு செய்திகள் இந்நூலில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

- தொல்காப்பிய புறத்திணையியலை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கிய புறத்திணைப்பாடல்கள் வளர்ச்சியடைந்ததோடு சமுதாய மாற்றங்களையும் எடுத்துக்காட்டி விளக்கும் வகையில்

சங்கப் புற நூல்களில் ஒன்றான புறநானூற்றில் இடம் பெற்ற இச்செய்திகள் குறித்து இவ்வியலில் கவனப்படுத்தப்பட்டுள்ளது.

- கு.வெ.பா.வின் ‘வாகைத்திணை’ என்னும் நூலில் தொல்காப்பியர் பன்னிரு புறத்திணைகளைத் தொகுத்து ஏழாக்கியுள்ளார் என்னும் கருத்தை இந்நூல் மறுத்து பன்னிரு திணை என்பது பிற்கால விரிவே என்று விளக்கிச் செல்லும் பாங்கு இவ்வியலில் கூறப்பட்டுள்ளது.

- சங்க காலத்தில் நிகழ்ந்த போர்க்குரிய காரணங்களை ஆராயும் வகையில், ஆண் மகன் என்றாலே வீரமும் போர் பண்பும் என்ற இயற்கைத் தகுதிகளாக இயல்பாகவே உடையவன் என்றும் அதோடு மண்ணாசையினும் புகழ், விருப்பமே பல போர்களுக்கு அடிப்படை என்றும் கு.வெ.பா. ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளதை இவ்வியல் கவனப்படுத்துகிறது.

- புறநானூற்றுப் பாடல்கள் பல்வேறு சூழலில் பல்வேறு காரணங் களுக்காகப் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. ஆகவே சில பாடல்களுக்கு பாடப்பட்ட சூழலை நோக்கியும், சில பாடல் களுக்குப் பாடப்பட்ட நோக்கத்தை ஒட்டியும், சில பாடல்களுக்கு பாடல்களில் உள்ள குறிப்பைக் கொண்டும் துறை வகுத்துள்ள முறைமையைக் குறித்தும், பதிற்றுப்பத்துக்கு துறை வகுத்து உள்ளதை குறித்தும் கூறப்பட்டுள்ளது. நா. செயராமன் அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளமை இவ்வியலில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

- திணை துறைப் பகுப்பில் சங்கப் புறப்பாடல்கள் தொல்காப்பியத்தைத் தழுவித் சென்ற போதிலும் பன்னிரு திணைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்றும் திணை, துறைகளில் சிக்கல் எழும்வண்ணம் புறப்பாடல் வரிகளைத் தொல்காப்பியப் பொருளாதாரத்திற்கு உரை ஆசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர் என்றும் திணையின் முழுமையைத் தெரிந்துகொள்ள முதல், கரு, உரிப்பொருட்கள் இன்றியமையாதன என்றும் திணை பற்றிய ஆய்வேடுகள்

சொல்லிச் செல்கின்றன. மேலும் பாடாண் திணை, வாகைத் திணை பற்றிய ஆய்வேடுகளே பெருமளவில் அளிக்கப் பட்டுள்ளன.

- சங்க இலக்கியப் புறத்திணைகளைத் தனித்தனியே சிலர் ஆய்ந்துள்ளனர். வாகை, பாடாண் என்பன விரிவாக ஆராயப் பெற்றுள்ளன. சில துறைகளை ஆய்ந்த நிலையும் உண்டு. புறத்திணைக் கொள்கைகளை முழுவதும் ஆய்ந்து காட்டியதாக சங்க இலக்கியத்தில் புறப்பொருள் அமைந்தது அதன் வளர்ச்சியாகும்.

- பாடாணுக்கும் கைக்கிளைக்கும் ஒற்றுமை கூறுகளாகப் பத்துக் கூறப்படும். அவற்றையும் தொகுத்து இவ்வியலில் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

- சங்க காலத்தை வீரநிலைக் காலம் என்று கருதுவோரின் கூற்றை மறுத்து வீரநிலைக் காலத்திற்குப் பிற்பட்டது சங்க காலம் என இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார். அதாவது வீரர்கள் சிறப்புற்றிருந்த காலமே வீரநிலைக் காலம் என்று ஆசிரியர் நிறுவியுள்ளதையும் இவ்வியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- ஒப்பியல் நோக்கில் பாடாண்திணை விளக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் ஈப்ரு, சூலுக்கு, நார்வே, வெல்சு, மெசப்படோமியா, எகிப்து, கிரேக்கம், லத்தீன், அராபிக், செர்மனி, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், அஸ்ஸாம், தெலுங்கு போன்றே இந்திய மொழிகளிலும் உள்ள பாடாண் பாடல் செய்திகள் இவ்வியலில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

`

# இயல் - 2

# தனிநூல் ஆய்வுகள்

சங்கப் புறநூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி இவ்வெட்டு புறநூல்களுள் தனி ஒரு இலக்கியத்தை முழுமையான நோக்கில் திறனாய்வு செய்யும் வகையில் புறநானூற்றைத் தவிர்த்து வேறுஎந்த ஆய்வுகளும் வெளிவரவில்லை. தொடக்கக் காலத்தில் சொற்பொழிவுகளாகவும், கருத்து விளக்க நூல்களாகவும், உரை விளக்க நூல்களாகவும் வெளிவந்திருக்கிறது. ஆயினும் ஆழ்ந்த நுண்ணாய்வு நோக்கில் எந்த ஒரு தனி இலக்கியமும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மேலும் மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி குறித்து ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகளும், கட்டுரைகளுமே அதிக அளவில் வெளிவந்திருக்கிறது.

புலியூர்க்கேசிகன் அவர்களால் 1965-இல் எழுதிய ‘புறநானூறும் தமிழர் நீதியும்’ என்னும் நூல் கிருஷ்ணகிரி பசுவேசுவரா பதிப்பகத்தினரால் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் நீதியின் நிலை, அரசர்களுக்கான நீதி, நீதி பிறழ்தல் போன்ற தலைப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாமை, சான்றோர்க்கு அணி என்பது வள்ளுவரின் வாக்கு. இந்த வாக்கின் உருவகமாக திகழ்ந்த தமிழரசர்கள் பலராவர். அவர்களுள் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதியும் ஒருவனாவான். இவனைக் குறித்துப் பாடும் காரிக்கிழார் என்னும் சான்றோர் அரசர்க்குரிய இந்த நடுவுநிலைமையைப் பேணும் நெறியினைக் குறிப்பிடுகின்றார். அவ்வகையில்,

‘தெரிகோன் ஞமணன் போல் ஒரு திறம், பற்றலியரே, நிற்றிறம் சிறக்க’ (புறம்.6:9,10) என்பது அவரின் வாக்கு. வேண்டியவர்கக்கு ஒரு நீதியும் வேண்டாதவர்க்கு மற்றொரு நீதியுமாக ஒரு நாட்டின் நீதிமுறை அமைவது சிறப்பாகாது எளியோர்க்கு ஒன்றும், வலியோர்க்கு மற்றொன்றுமாக அமையும் நீதி மரபும் தவறுடையதாகும். நீதியை நிலைபெறுதற்கு முற்படும் பொறுப்பினர்

என்றும் பிறழாத நடுநிலையாளராக இருத்தல் வேண்டும் (1965:20) என மன்னர்கள், மக்கள், புலவர்கள் போன்றோருக்குரிய அறநெறியினை உணர்த்தும் கருத்துக்கள் இந்நூலின் முன் வைக்கப்பட்டுள்ளன.

'புறநானூற்றுப் பூவையர்' என்னும் கட்டுரை தொகுப்பு நூல் வே. முனுசாமி அவர்களால் எழுதப்பட்டு சென்னை வானதி பதிப்பகம் 1967-இல் 84 பக்கங்களைக் கொண்டு பதிப்பித்துள்ளது.

அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, தாயங்கண்ணியார், பாரி மகளிர், பூங்கணுத்திரையார், பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப் பெண்டு, பெருங்கோழி நாய்க்கன் மகள் நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினி, பொன்முடியார், மாற்பித்தியார், மாறோகத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார், காவலன் மனமும் பாவலர் சினமும், ஔவையாரும் அதியமானும் போன்ற பொருண்மைகளைக் கொண்டு அமைந்த ஆய்வுகளைக் கொண்டதாக இந்நூலினை வடிவமைத்துள்ளார் ஆசிரியர்.

இந்நூலின் ஒவ்வொரு கட்டுரையின் தொடக்கத்திலும் புலவர்களின் வரலாற்று சுருக்கத்தையும், பெயர்க்காரணத்தையும் பல தமிழறிஞர்கள் எழுதியுள்ள நூல்களின் துணைக்கொண்டு விளக்கப்பட்டுள்ளது.

ஔவையார் தம் பாடலில் அதிகமானின் போர் வெற்றியை எடுத்தியம்பியுள்ளதை நோக்கும் பொருட்டு, "நீ விழுப்புண்பட்டு ஓய்வு பெறுதலால், பெருந்தகையே! நின்னோடு போர்புரியும் நோக்குடன் எதிர்த்து வந்தவர்கள் நினது தூசிப்படையைப் பொருதற்கும் மாட்டாராய் உடைந்தோடிவிட்டனர் அதனால் உனக்குத் தோற்றார் என்ற பழியும், நோயுற்று இறவாமையினால் வாளால் பிளந்து அடக்கம் செய்யும் சிறுமையும் இல்லாதபடி பட்டொழிந்தனர். இனியும் உன்னைப் போரில் எதிர்ப்பார் இல்லை. ஆகவே நீ இனியும் முரசு முழங்கச் சென்று செய்யும் போர் எங்கேயுண்டாகப் போகிறது' என்பது அதிகமானின் பெருமையும் அவனது பகைவரின் சிறுமையும் (புறம். 93) எடுத்துரைத்தார். புகழ் ஓம்புமின் (புறம்.87)

(1965:83-84) என்று இவ்வாறு விளக்கியுள்ளதைப் போன்று ஒவ்வொரு பெண்பாற் புலவர்களின் பாடல் இயல்புகளை இந்நூல் எடுத்துக்காட்டி விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

பத்துப்பாட்டில் இடம்பெறுள்ள வழிகள் குறித்து மிக விரிவானதொரு ஆய்வாக கருதப்படும் வகையில் அமைந்த முனைவர் மா. இரசமாணிக்கனாரால் எழுதப்பெற்ற பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1970–ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்நூலில் பத்துப்பாட்டின் காலம் குறித்து கி.மு. 2 முதல் கி.பி 3 வரை என விளக்குகின்றன. ஆற்றுப்படை வழிகள் குறித்து விரிவானதொரு ஆய்வாக இந்நூல் அமைந்துள்ளது. ஓய்மானாட்டு ஊர்கள், சேரனாட்டு ஊர்கள், பாண்டி நாட்டூர்கள் தொண்டைமான் இளந்திரையன், கரிகாற் பெருவளத்தான் ஏழு வள்ளல்கள் குறித்த செய்திகளை வரலாற்று நோக்கோடு ஆசிரியர் இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

செல்லும் வழியைப் பற்றி பொருநராற்றுப்படையில் கூறப்படாதமையைக் கொண்டு ஆசிரியர், இவர்தம் முடவராய் இருந்தமையே வழிகளையும், வழியிலிருந்த ஊர்களையும் அறியாது இருந்தமைக்குரிய காரணமாக இருக்கலாம் என்கிறார். நான்கு நில இயல்புகளையும் அவர் பாடியிருத்தலின் மேலே கூறிய கூற்று பொருந்துமென்று தோன்றவில்லை என ஆசிரியர் கருதுகிறார்.

பாணன் ஆற்றுப்படுத்திய வழி குறித்து பெரும்பாணாற்றுப்படையில் சில ஆய்வினை மேற்கொண்டு ஆசிரியர் சில செய்திகளைக் கூறுகிறார். அவ்வகையில், “பொருள் பெற்ற பாணன் பெறாத பாணனைத் தொண்டை நாட்டின் உள்ளிலிருந்தே காஞ்சிக்கு ஆற்றுப்படுத்தியுள்ளான். பரிசில் பெறாத பாணனை சந்தித்த இடம் கடற்கரைக்கு அண்மையானது ஆகையால் பெரும்பாணன் கடற்கரைக்கு அழகு சேர்க்கும் வழியையே கூறியுள்ளான். ஏரிகளும் குளங்களும் பூக்களும் நிறைந்த மருத நிலமாகப் பாணன் குறிப்பிடுவது கதிர்வாசகன் என்ற சதுரங்கப் பட்டினத்திற்கும் மாமல்லபுரத்திற்கும் இடையிலுள்ள ஏரிகளையும், குளங்களையும் எனக் கொள்ளலாம் என்றும் மாமல்ல புரத்திலிருந்து சாருவன் குப்பம் வரையுள்ள இப்பகுதியைப் பாணன் ‘நீர்பெயற்று’ என்று கூறியிருக்கக் கூடும். திருவெஃகா

என்று பாணன் குறிப்பிடுவது யாதோத்காரி என்றும் கோவலாகும். சங்க காலத்தில் இக்கோவிலுக்கு அருகில் வேகவதியாறு இருந்தது இவ்வாற்றின் கரையில் அமைந்த ஸ்ரீத்துறையையே பூமலி பெருந்துறை என்றும் பெரும்பாணன் குறிப்பிட்டுருக்க வேண்டும். இந்தப் பகுதி அப்போதிருந்த காலத்தில் 'கச்சிப்பேடு' எனவும் அழைக்கப்பட்டது என்றிவ்வாறு கூறும் செய்திகள் அக்காலச் சூழலை அறிய உதவுகின்றது.

சங்க இலக்கிய நிகழ்விடங்களை வரலாற்று வழி மீட்டுருச் செய்ய முயலும் முயற்சியாக அமைந்துள்ளது இந்நூல். இவ்வாராய்ச்சியின் வழியாக ஆற்றுப்படை பாடும் புலவர் தம்மூரிலிருந்தே பாடியமை அறியப்படுகிறது. மேலும் வழியிடைக் கண்டு எனக் கூறியது என்பது பாட்டுப் புனைவுக்குரிய நெறியாக வேண்டும் என்று இந்நூலாசிரியர் தெளிவுப்படுத்துகிறார்.

நன்னனின் நவிரமலை மற்றும் பல்குன்றத்துக் கோட்டம் அதற்குச் செல்லும் வழிகள் குறித்து, சேயாறு, செங்கண்மா என்று கூறப்பெற்ற நகர் போன்றவை பற்றியும் மிக நன்றாக ஆராய்ந்துள்ளார். அவ்வகையில், "ஒவ்வோர் ஆற்றுப்படையிலும் கூறப்பட்டுள்ள வழி கூற்றுவழியாகவே காணப்படுகிறது. அவ்வழி அக்கால மக்கள் பயணம் செய்த வழியாக இருக்கலாம் அல்லது ஐவகை நில வருணனை ஆற்றுப்படையும் புகுத்திக் கூற வேண்டும் என்று எண்ணி அவற்றை உள்ளடக்கிய வழியாகவும் இருக்கலாம்" என்று கூறுவது கவனித்தற்குடையது. மேலும், மலையின் மீது இவர்ந்தும் இழிந்தும் செல்லுமாறு ஆற்றுப்படுத்தினான் என்பதைக் காட்டிலும் மலையின் அடிவார வழியில் செல்லுமாறு பணிந்தான் என்று கொள்ளலாம், மேலும் பேராசிரியரின் இவ்வாராச்சி அக்கால நில வழிகளை இலக்கிய வழியாகத் எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

'புறநானூற்றுப் புதையல்' என்னும் நூல் கோவிந்தராசன் அவர்களால் 1977-இல் எழுதப்பெற்று 124 பக்கங்களைக் கொண்டு சென்னை தேன்மொழிப் பதிப்பகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கருத்துப் பரல்கள், இயற்கையில் எழிற்கோலம், வியப்பூட்டும் வீரமங்கையர், கொடை நல்கும் கோதையர், நோயும் மருந்தும், நெடும்பயணம் போன்ற பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

பண்டைத் தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் சிறப்புமிகுந்த பயன்மதிப்புகளாகப் போற்றிய நன்றி மறவாமை, விருந்தோம்பல் பண்புடைமை, வாய்மை, குறிக்கோள், கல்வியின் பெருமை, செல்வத்தின் பயன், அருளறம் முதலியவற்றின் பண்புகளைத் தெளிவுறுத்தும் வகையில் அறத்தின் அழகு என்னும் முதல் கட்டுரை எழுந்துள்ளது.

மக்களின் வாழ்க்கைப் போருக்கு உதவிய இயற்கைப் பொருள்கள் பறவைகளும், விலங்குகளும் அவ்வகையில், "பழுமரம் நாடிச் செல்லும் பறவையினம் போல் வரையாது ஈயும் வள்ளல்களை நாடிச்செல்லுங்கால் வழிநெடுகிலுள்ள நெஞ்சை அள்ளும் நன்செய் கொஞ்சிக் குலவும், பறவைகள், விலங்கினங்கள், அஞ்சும் பாலைவழி, கவின்மிகு காடுகள், வான்பொய்ப்பினும் தான் பொய்யா வளமிகு ஆறுகள், கழனிகள் ஓங்கி உயர்ந்த மலைகள், மலைமுகடுகளில் மஞ்சு வந்து சூழல்" (1977:42,43) என்று இயற்கையின் எழில் நலனை பாராட்டும் வகையில் திரட்டிக் கூறியுள்ளார் ஆசிரியர்.

புறப்பொருள் பாடல்களில் மகளிரின் வீரவுணர்வைக் கூறுமிடத்து, பண்டைத் தமிழரின் வீரவாழ்வு, புனையா ஓவியங்களாக பொலிவு பெற்று, அவ்வீர வாழ்விற்குத் தேவையான வீரவுணர்வைத் தம் முலைப்பாலுடன் குழைத்தூட்டிய மறக்குடி மங்கையரின் மாட்சியை வியப்பூட்டும் வீரமங்கையர் என்னும் கட்டுரை எடுத்துரைக்கின்றது. மேலும் 'கொடை நல்கும் கோதையர்' என்னும் கட்டுரைப் பகுதியில், ஆடவரேயன்றி மங்கையரும் வரையாது வழங்கும் வள்ளல்களாக விளங்கிய திறத்தினை ஆசிரியர் இப்பகுதியில் தெளிவுறுத்துகிறார்.

பண்டைக்கால நோய்கள் குறித்து சிலவற்றையும், மருந்துகள் சிலவற்றையும் அன்றைய தமிழ் மக்கள் அறிந்திருந்ததைச் சுட்டிக்காட்டி, நோயின்றி வாழ வழி என்ன என்பதை குறித்தும் நோயும் மருந்தும் எனும் கட்டுரையில் விளக்கியுரைத்துள்ளார் இந்நூலாசிரியர்.

நெடும்பயணம் என்னும் கடைசி கட்டுரையில் ஆசிரியர், மனிதனுடைய திரும்பி வாராப் பெரும்பயணத்தை அவலச்சுவை பொங்கும் விதத்தில் உருவகித்துள்ள மகளிர் புலம்பல், தாழிப்புதையல், நடுகல் வழிபாடு போன்ற

பழக்கவழக்கங்கள் நிலையாமை உணர்வு வெளிப்படும் வகையில் விரிவான முறையில் விளக்கி விவரித்துள்ளார் ஆசிரியர்.

நா. பார்த்தசாரதி அவர்களால் எழுதப்பட்ட ‘புறநானூற்றுச் சிறுகதைகள்’ என்ற நூலினை 1978-இல் 181 பக்கங்களுடன் தமிழ்ப் புத்தகாலயத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்நூலில், ஒரு சொல் இது ஒரு வாழ்வா? ஊசிமுனை, தோற்றவன் வெற்றி, பரணர் கேட்ட பரிசு, அடிப்படை ஒன்றுதான், நட்பின் கதை, வீரக் குடும்பம், அவனுக்குத்தான் வெற்றி, தலை கொடுத்த தர்மம், பறவையும் பாவலறும், எளிமையும் வலிமையும், புலவர் தூது, வேண்டாம் போர், பெற்றவன் பெருமை, மழலை இன்பம், புலியும் எலியும், மனம்தான் காரணம், இந்த உலகம், யாரைப் புகழ்வது, அவன் ஒரு வல்லாளன், நீரும் நெருப்பும் ஒன்றே, பாண்டியன் வஞ்சினம், ஒரு தயக்கம், சிறுமைக்கு ஒரு ஆடு, பழமை நினைவுகள், அன்றும் இன்றும், நினைவின் வழியே, சிவந்த விழிகள், முன்னோர் தவறு, வீரப்புலியும் வெறும் புலியும், பண்ணன் வாழ்க, எவனோ ஒரு வேடன், கனி கொடுத்த கனிவு, அன்பின் அறியாமை, தமிழ் காப்பாற்றியது, ஓர் அறிவுரை, பரிசிலர்க்கு எளியன் போன்ற தலைப்புகளோடு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

> பேகா! அந்த மயிலின் மேல் உனக்கு ஏற்பட்ட அன்பை நான் பாராட்டுகிறேன். ஆனால் நீ நினைத்தது போல அது குளிரால் நடுங்கவில்லை. மலைச்சிகரங்களில் தவழும் முகில் கூட்டங்களைக் கண்டு களிப்போடு தோகை விரித்தாடி கொண்டிருந்தது. மேகத்தைக் கண்டால் ஆடுவது மயிலின் இயற்கை, அன்பின் மிகுதி அறிவை மறைத்துவிட்டது புலவரே, பேகன் தலைகுனிந்தான் (ப.163)

புறநானூற்றிலுள்ள ஒரு சம்பவத்தைச் சித்தரிக்கும் பாங்கிலமைந்த பாடல்களை எளிய நடையில் கதை சொல்வது போன்று அமைத்துள்ளார் ஆசிரியர்.

‘புறநானூற்றுப் பெட்டகம்’ என்னும் நூல் மு. கோவிந்தராசன் அவர்களால் எழுதப்பட்டு 1980-இல் சென்னை தேன்மொழி பதிப்பகம் 32 பக்கங்களைக் கொண்டு வெளியிட்டுள்ளது.

புறநானூற்றுப் பாடல்களில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களைத் தெளிவுப்படுத்தும் நோக்கோடு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் வள்ளுவரின் வாய்மை, துறவின் தூய்மை, புராண வரலாற்றுக் கதைக் குறிப்புகள், பண்டையோர் பழக்கவழக்கங்கள் போன்ற உள்ளடக்கங்களைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

திருக்குறளின் கருத்துக்கள் புறநானூற்றின் கண் பொலிவுறும் திறத்தினை 'வள்ளுவரின் வாய்மை' என்னும் முதல் கட்டுரையில் எடுத்துக்காட்டியதோடன்றிப் பண்டைத் தமிழரின் சொற்கோடாமைப் பண்பினையும், எண்ணித்துணியும் திறத்தினையும், உள்ளுவதெல்லாம் உயர்வாக உள்ளும் பாங்கினையும், நன்றி மறவா நிலையில் நல்லதையே நினைக்க, நன்னோக்கோடு ஈந்து, புரக்கப் பொது நோக்கை ஒழித்து நடுவுநிலையோடும், வறுமையில் மானமே பெரிதென வாழ்ந்த பெற்றினையும், குறள் நெறிக் கருத்துக்களுடன் ஒப்பிட்டுக் காட்டி மிக அழகாக விளக்கியுள்ளார்.

'துறவின் தூய்மை' என்னும் தலைப்பிலமைந்த கட்டுரையில், வாழ்வை வளமாய்த் துய்க்க முனைந்த நம் முன்னோர் அறங்களாற்றுவது மறுபிறவிக்காகும் என நம்பி வள்ளுவரின் வழிநின்று யாக்கை நிலையாமையோடு செல்வ நிலையாமையுடைத்து என்பதறிந்து ஆசைகளை அறுத்து, புகழ் நிறுவி வீடு பேற்றிற்கான இவ்வாழ்வு நீத்துத் துறவு மேற்கொண்டு பெருவாழ்வு வாழ முனைந்த பாங்கினை ஆசிரியர் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

சிவன், திருமால், முருகன், இந்திரன் போன்ற அக்காலத்தில் நிலவிய பெருந்தெய்வங்களைப் பற்றியும், பேய், பேய்ப்பெண்டிர் போன்ற சிறு தெய்வங்களைப் பற்றியும், நடுகல்லை அனைத்துத் தெய்வங்களுக்கும் மேலாகக் கருதி வழிபட்டமைக் குறித்தும் 'புராண வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

காலத்திற்கு காலம் நாகரிகம் மாறிச்செல்லினும் தமிழர்கள் கொண்ட பழக்கவழக்கங்கள் மட்டும் அன்றும் இன்றும் மாறா நிலையில் தொடர்ந்து வருவது நம் முன்னோர் செய்த நற்பேறே என்று கொள்ள முடிகிறது. மேலும்

போரிலும் ஒரு நெறிகண்டு அறத்தை பேணியுள்ளனர் என்பன போன்ற வாழ்வியல் நெறிகளுக்கான கருத்துக்களை சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

மு. கோவிந்தராசன் அவர்களால் எழுதப்பட்ட 'புறநானூற்றுப் பூந்துணர்' என்னும் நூல் 98 பக்கங்களைக் கொண்டு 1980-இல் தேன்மொழி பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றது.

இந்நூல் கைக்கிளையும் பெருந்திணையும், உவமையில்லா உவமைகள், தூதின் வலிமை, சிந்தனைக்குச் சில கருத்துக்கள் போன்ற பொருண்மைகளைக் கொண்டமைந்துள்ளது.

கைக்கிளைப் பெருந்திணைப் பாடல்கள் புறநானூற்றிலும் காணக் கிடக்கின்றன என்பதையும், பழங்காலத் தமிழர்களின் பேச்சு நாகரிகத்தினையும் எடுத்தியம்புவதாக இந்நூல் அமைந்துள்ளது.

இல்லற வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து கணவருடன் இணைந்து வாழ்தல் மகளிர்க்கு இயல்பு. அவ்வகையில் ஆரத்தைப் பொருத்தி வந்த சிறிய வெண்மையான பல்லியானது வண்டிச் சக்கரத்தினோடு சுழன்று சுழன்று செல்வதைப் போலக் கணவனுடன் ஒட்டியொட்டியே வாழ்ந்து வருபவள் தான் மணைவி என்பதை விளக்கும் பொருட்டு, சிறுவெண் பல்லியை உவமைச் சிறப்பாக்கிக் காட்டுகின்றார் ஒரு புலவர் "அச்சுடைச்சாகாட்டாரம் பொருந்திய" (1980: 54, 55)

இவ்வாறு மிகுந்த கற்பனைத் திறன் கொண்ட கடைச்சங்க புலவர்கள் சொல்லும் உவமைகள் இயற்கையோடு ஒன்றறக் கலந்தனவாகவும், உண்மையோடு உறவு கொண்டதாகவும், நடைமுறையில் நின்று விளங்கக் கூடிய ஒன்றாகவும் இந்நூல் அமைந்துள்ளது என ஆசிரியர் இந்நூலின் வழி எடுத்துரைக்கின்றார்.

மு. கோவிந்தராசன் அவர்களால் எடுதப்பெற்ற 'புறநானுற்றுப் பேழை' என்னும் நூல் 1981–இல் 132 பக்கங்களைக் கொண்டு தேன்மொழிப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இருபது நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பல

நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களை உடைய புறநானூற்றுக் கருத்துகளில் சில இக்கால உலகப் போக்கிற்குப் பொருந்தாதவையாக உள்ளன. ஆயினும் நிகழ்ச்சிகளை விடுத்து அடிப்படையான உணர்வை ஆராய்தல் மூலம் எக்காலத்திற்கும் பொதுப்படையான உண்மைகள் பலவற்றை உணர முடியும் என்பதன் அடிப்படையிலேயே இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலில் நாகரிகம், அஞ்சாமை, அருள் உணர்வு, வஞ்சினம் கூறல், திருத்தும் கடமை, பரிசில் வாழ்க்கை, வயிற்றுக் கவலை, உணர்த்தலும் உணர்தலும் போன்ற பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு புறநானூற்றுப் பாடல்களின் செய்திகள் பல இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

போர்ச்சிறப்புகளையும், புகழுரைகளையும் கொண்டு புறநாற்றுப் பாடல்கள் பெரும்பாண்மையும் இயற்றப்பட்டுள்ளன. அவற்றில் புலவர்களின் அறிவுரைகள் அறத்தை வலியுறுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதை இந்நூலாசிரியர் பின்வருமாறு விளக்கியுரைத்துள்ளார்.

“அரசே யானை, குதிரை, தேர், காலான் என்னும் நாற்பெறும் படையால் பெருகிச் சிறக்கின்ற அரசு சிறப்புடையதெனக் கொள்ளல் வேண்டா அரசின் வெற்றிக்கு அடிப்படை இப்படைப்பெருமை அல்ல அறநெறியே” (1981:12) என்று மதுரை மருதனிளநாகனார் என்ற புலவர், பாண்டியன் ஒருவனுக்கு அறிவுறுத்தியது கருத்து நாகரிகமாகும். புலவரின் அஞ்சாமையையும் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைப்பனவாய் அமைந்துள்ளதையும் எடுத்துரைத்துள்ளார் இவர்.

நாகரிகம் என்பது தன்னலத்தைக் கொன்று வீழ்த்திய இடத்தில் விளையும் நன்மரநீழல், குடிநலம் கருதி நாட்டு நலம் நாடி உலகப் பொது நலமாய் விரியும் நன்மர நிழலே நாகரிகம். இந்த நாகரிகத்தின் சுவடு எனத்தக்க குடிப்பொருளை வற்புறுத்தினார் கோவூர்கிழார் “நுஞ்செய்தி குடிப்பொருள் அன்று’ என்று கடிந்துரைத்துத் தன்னலப்போரைக் கொன்று வீழ்த்த முனைந்தார்.” (1981:29) என்ற இக்கூற்றின் வழியே மன்னர்களிடம், உலகப் பொதுநலத்தை அறிவுறுத்திப் போரினால் ஏற்படும் அழிவுகளையும், இழிவுகளையும் புலவர் எவ்வயையில் விளக்கியுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

புலவர், புலமைகளை வளர்த்துப் போற்றி, உயர்வான எண்ணங்கள் என்றும் ஆற்றலைப் பெருக்கி அதனினால் உலகை உய்வித்தார் அரசரோ, பலவரைப் போற்றி அவர் எண்ணம் தெளிவித்த பெருஞ்செயல்களைச் செய்யும் ஆற்றலை வளர்த்து அதனால் உலகை உய்வித்தான் (1981:46) என்று மன்னர்கள் புலவர்களின் கருத்துக்கள் அனைத்தையும் ஏற்றும்,மன்னர்களின் கூற்றினைப் புலவர்கள் போற்றியும் வாழ்ந்துள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

தக்க தலைவனாய் விளங்கிய சோழன் நலங்கிள்ளி உலகைக் காக்க விரும்பிய பேருணர்விற்கு அடிப்படையாய் விளங்கிய அவன் ஒழுக்கத்தைப் போற்றிய விருப்பமே, அதனாலேயே பண்பட்ட காதல் வாழ்வைப் போற்றுவனாகி, "யான் சேர்ந்து தோற்பேனாயின் ஒழுக்கம் கெட்டுப் பொதுமகளிர்பால் வாழ்ந்து இழிவு உறுவேனாக" என்று தன்னுடைய உறுதியை விளக்கினான்" (1981:59) என்ற இக்கருத்தின் வழி தமிழ் மன்னனின் ஒழுக்க மேம்பாட்டைச் சுட்டிக் காட்டிச் சென்றுள்ளார் இந்நூலாசிரியர்.

பழங்கால வாழ்க்கையில் மன்னர்கள் புலவரை, உயிர்கொடுத்துக் காத்த கொடைச் சிறப்பினை விளக்கும் வகையில், "நாடு இழந்ததைவிட வாடும் புலவரின் வறுமையைக் காண்பது கொடியது எனக் கருதித் தலை துணிக்க வாள் தந்த குமணன்" (1981:95) இவ்வாறு மன்னர்கள் புலவரை உயிர் கொடுத்து காப்பாற்றிய சிறப்பினை மிகுந்த சிறப்புடன் எடுத்துக்காட்டி தெளிவுப் படுத்தியுள்ளார்.

"ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது தெளிந்தனம் ஆதலின் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தலும் அதனினும் இலமே என்று கணியன் பூங்குன்றனார் கூறுவது இன்னும் உலகம் உணர்ந்து கொள்ள இயலாத சிறந்த உண்மையாகும்." (1981:132) என இவ்வாறு புறநானூற்றில் பொதிந்துள்ள கருத்துக் குவியல்களை மக்களுக்குத் தெளிவாகவும், எளிதில் புரிந்து பயன்பெரும் வகையிலும் நூலாசிரியர் இந்நூலில் விளக்கியுள்ளார்.

'புறநானூற்றுப் பைங்கனி' என்ற நூல் மு. கோவிந்தராசன் அவர்களால் எழுதப்பட்டு, 1982-இல் சென்னை தேன்மொழி பதிப்பகத்தினரால் வெளியிடப் பட்டுள்ளது. பைங்கனிகள், சிறுவர் பெருமையும் செயல்களும், விலங்குகளின்

வாழ்க்கை, பண்ணும் கூத்தும் போன்ற உள் தலைப்புகளைக் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புறப்பாடல்களின் துணைக்கொண்டு தமிழகத்தில் உள்ள கனிவகை களைப் பற்றி இந்நூலில் ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். அவ்வகையில் 'பைங்கனிகள்' என்ற கட்டுரையில் 'புறநானூற்றில் வாழைக்கனி பற்றிக் குறிப்பிடவில்லை' என்று கூறுவதிலிருந்து ஆசிரியரின் நுணுகி ஆராயும் தன்மையைப் பற்றி அறிய முடிகிறது.

முக்கனிகளில் இறுதியாக வரக்கூடிய கனி வாழைக்கனியாகும். இக்கனி ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய கனி வகைகளிலும் ஒன்று. ஆனால் இக்கனியைப் பற்றி புறநானூற்றின் ஒரு பாட்டிலேனும் குறிப்பிடப்பெறாத ஏன் எனத்தெரியக்கூடவில்லை. "வாழைக்கனியைப் பற்றிக் குறிப்பிடவில்லையே தவிர அதன் இலை, பூ ஆகியவற்றைப் பற்றி புலவர்கள் பாடியுள்ளார்கள். 'செழுங்கோன் வாழையாகலின் படுக்கும்' (புறம். 168) தலைவனின் உயிரை அறனில்லாத கூற்றம் எடுத்துக்கொள்ளும். அக்கொடுமை தாங்காத தலை வாழைப்பூ போல வளையல் சிதறுகின்றன" (ப.17) என புறநானூற்றுப் பாடல்களை ஆராய்ந்து அவற்றின் இறுதி முடிவாக முக்கனிகளில் ஒன்றான வாழைக்கனியினைப் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை என்றும், ஆனால் வாழையின் பூ, இலை ஆகியனவற்றைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளார் எனும் செய்திகளை இந்நூலாசிரியரின் கூற்றுவழி அறிய முடிகின்றது.

பழங்கால மழலைச் செல்வங்களைப் பற்றிய செய்திகளைச் 'சிறுவர் பெறுமையும் செயல்களும்' என்ற தலைப்பில் படம்பிடித்து காட்டுகிறார். சங்ககாலக் குழந்தைகள் பற்றிய செய்திகளை ஒன்றுவிடாமல் கூறி 'பெருமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்ற குறளின் கருத்தை மிகச் சிறப்பாக விளக்கிச் சென்றுள்ளார் ஆசிரியர்.

சங்க நூல்களின் துணைக்கொண்டு வனவிலங்குகளைப் பற்றிக் கூறும் செய்திகளை ஆசிரியர் தெளிவாக ஆராய்ந்து கூறியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் இரைவேட்டெழும் புலி, பிற விலங்குகளை அடித்து உண்ணும்போது அவை வலப்பக்கம் விழுந்தால் மட்டும் உண்ணும். தவறி

இடப்பக்கம் விழுந்துவிட்டால் அவ்விலங்கு உண்ணாமல் வெறுமனே சென்றுவிடும் என்பது நாம் அறிந்துள்ள செய்தி என்றாலும்கூட இது தவறானது என்பதை இக்கட்டுரையில் சுட்டிக்காட்டி தெளிவாக விளக்கியுள்ளார் ஆசிரியர்.

பழங்காலத்துப் பாட்டும் பண்ணும் எவ்வாறு ஒன்றிலிருந்து வளர்ந்தன என்பதைப் பற்றி 'பண்ணும் கூத்தும்' என்ற தலைப்பில் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். மேலும் பாடலின் பொருளைக் கவனிக்காது வெறும் இசையை மட்டுமே எழுப்பும் இக்காலத்து மேடை இசையை இதன் மூலம் கண்டித்துரைப்பதைப் பற்றி அறிய முடிகிறது.

'சங்க இலக்கியத்தில் புறக்காட்சிகள்' என்னும் தலைப்பிலான நூல் லேனா தமிழ்வாணன் அவர்களால் எழுதப்பட்டு 1982-இல் வெளியிடப்பட்டது.

இந்நூலில் உண்டாலம்ம இவ்வுலகம், அல்லது செய்தல் ஓம்புமின், ஈன்ற ஞான்றினும் பெரிதே, மழலையின் மாண்பு, புலவர் உள்ளம், மயக்குறு மக்களே இல்லோர்க்கு நாளே, வரையாது கொடுக்கும் வள்ளியோன், ஞாயிறாகவும் – திங்களாகவும் விளங்குவோன் இது போன்ற புறநானூற்று பாடல் வரிகளை கூறி இதன் மூலம் சங்க இலக்கியத்தில் காணக்கூடிய புறக்காட்சிகளை கோவை வடிவில் படம் பிடித்துக் காட்டுகிறார் இந்நூலாசிரியர்.

'மயக்குறு மக்களே இல்லோர்க்கு நாளே' என்னும் தலைப்பின் கீழ் ஆசிரியர். விளக்கும் பொருட்டு, "பாண்டியன் அறிவுடைநம்பி புலவனாகவும் புரவலனாகவும் விளங்கியதோடு நில்லாமல், உலக இயல்பையும் ஆராயத் தொடங்கினான். அவ்வகையில் ஆராய்ச்சியில் அவன் கண்ட முடிவென்ன? என்று எண்ணும்போது மனிதன் செல்வங்கள் பல பெற்றிருந்தாலும் அவனுக்கு மக்கட் செல்வம் இல்லையென்றால், பிற செல்வங்கள் இருந்தும் பயனில்லை என்று கூறுகின்றார். பின்பு அதோடு நில்லாமல் தன்னுள்ளத்தில் நிலைத்த கருத்தை உலகிற்கு அறிவிக்க எண்ணினான். அதை அனைவரும் அறிந்து கொள்வது எப்படி என்று சிந்தித்து, சிந்தனையில் ஒரு முடிவு கிடைத்தது. அம்முடிவே பாட்டாக வெளிவந்தது. அவ்வகையில்,

**படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**

**இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே (புறம்.)**

இப்பாட்டில் அறிவுடைநம்பி அமைத்துள்ள நயத்தைப் பற்றி ஆசிரியர் எடுத்துரைக்கும் பொருட்டு, ஒருவர் பல வழிகளில் செல்வங்களை தேடி திரட்டலாம். திரட்டிய செல்வத்தால் என்ன பயன் என்று எண்ணும்போது 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற சொற்றொடரின் கருத்தை நன்குணர்ந்திருந்த ஆசிரியர் தேடிய செல்வத்தை பிறர்க்கும் கொடுத்து தானும் நன்முறையில் பயன்படுத்தும் அளவிற்கு செல்வ வளம் பெருகி இருந்து என்ன பயன் என்று ஆசிரியர் கேள்வி எழுப்பி அதற்கான விடைக்கு சான்று தந்து விளக்கி பின்னர் எல்லா செல்வத்தைக் காட்டிலும் பெற வேண்டிய முக்கிய செல்வமாக மக்கட் செல்வமே என்று கூறுகிறார்.

இவ்வாறு நூல் முழுமையும் புறநானூற்று அடிகளைக் கொடுத்து, அவ்வடிகளின் மூலம் புறநானூற்றிலுள்ள காட்சிகளை மிகச் சுவைபட இலக்கியச்சுவை குன்றாமல் கோவை வடிவில் எடுத்துரைத்தும், அதற்கு பிற நூல்களிலிருந்து சான்றுகள் தந்து விளக்கியும், பிறநூல் பாடல்களோடு ஒப்புமைப்படுத்தி இறுதியாக இந்நூலாசிரியர் தன்னுடைய கருத்தையும் இங்கு கூறி ஒரு முடிவை கொடுக்கிறார்.

அரிமதி தென்னகன் அவர்களால் 1986-இல் எழுதப்பட்ட 'புறநானூறு காட்டும் புதுமைகள்' என்னும் நூல் 111 பக்கங்களுடன் சென்னை இலக்குமி நிலையத்தினால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கூனை நிமிர்த்தும், புறநானூற்றுப் பூவையர், போரற்ற புதியபூமி, புலமை மனம், பொருள் பெற மட்டுமாம், போர் ஒரு விளக்கம், செங்கோலும் அஞ்சும், எப்படியெல்லாம் கொடுக்கலாம்?, இறைச்சித் துண்டின் சந்தன மணம், பாராமலும் நட்பா? வாழவைத்து வாழ்பவன், பாரிமகளிரா? பண்பின் மகளிரா?, வேந்தனளித்த விளக்கம், சுழலும் சக்கரம், சுற்றும் பல்லி, காவலர் படைத்த கவிதை ஆகிய உள் தலைப்புகளோடு படைக்கப்பட்டுள்ளது இந்நூல்.

சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களின் ஒற்றுமையை நாட்டின் முன்னேற்றமாகப் புலவர்கள் கருதியுள்ளனர் என்பதை விளக்கும் பொருட்டு, "மூவரும் பகைத்து, மூவரும் போரிட்டு, மூவரும் அழிந்தால் மொழி இனம் நாடு, கலை, பண்பாடு, நாகரிகம், செல்வம், ஒழுக்கம் எல்லாமே பகை மோகத்தால் மூடுண்டு, காலத்தால் அழிக்கப்படுமே என்று கவலை கொண்டிருந்த ஔவையார்? சேர, சோழ, பாண்டிய தமிழ் வேந்தர்கள் தம்பகை மறந்து இளைத்திருந்த காட்சியில் தழைத்த உள்ளத்தை பாடலாக்கி நமக்கெல்லாம் பாடமாக்கியுள்ளார்" (1986:255) என்று மேற்கூறிய கூற்றின்வழி தெளிவுறுத்து கின்றார் ஆசிரியர். மேலும், "குறித்துப் பாராட்டினால் எங்கே ஒருவன் பயன்பெற்று விடுவானோ என்றும் கடுமனம் அன்றைய தமிழ் நெஞ்சங்கட்கு இல்லை என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன" (மேலது: 29) என்று கூறியுள்ளார் ஆசிரியர்.

"ஒரு மன்னனின் முன்றின்று 'என் யானை உன் கொடி மரத்தில் கட்டப்பட்டுள்ளது' என்ற அளவிற்கு அதிகாரத்திற்குத் தலை வணங்கா ஆண்மையே ஒருவனை புலவனாக்கும் என்னும் உண்மையை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிப் போக்கினை விளக்குகிறது" (மேலது:59) என்றிவ்வாறு புரவலனுக்கும் அஞ்சாத வீர உணர்வு புலவரிடம் இருந்துள்ளதை எடுத்துக்காட்டி விளக்கி தெளிவுபடுத்தியுள்ளார் ஆசிரியர்.

புலவர்கள் மன்னர்களின் பொறுப்பு உணர்வுகளையும், கடமை உணர்வினையும் எடுத்தியம்பும் வகையில், ஒற்றுமையின்றி இனமானம் கருதாமல் தன்மானங்கருதித் தமக்குள்ளேயே மோதி அழியும் இனம் வரலாற்றில் தனக்குரிய சிறந்த இடத்தினைத் தானே இழக்கும் என்னும் தத்துவத்தையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல் வீரம் நிறைந்த மங்கையர்களும் வாழ்ந்துள்ளனர் என்பதை விளக்கும் வகையில், தன்மகனை போர்க்குப்போ! புலியெனப்பாய் பகைவரை வீழ்த்து, பரணி பாடு! என்றும் களம் நோக்கி அனுப்பும் மறக்குல மங்கையர்களும் (மேலது:19) வாழ்ந்துள்ளனர் என்ற இக்கூற்றின் வழி புலப்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.

'தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை' என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேடு மா. நவநீத கிருட்டிணன் அவர்களால் எழுதப்பட்டு 1988-இல்

நூலாக்கம் பெற்று வெளியிடப் பெற்றது. ஆற்றுப்படை இலக்கணம், ஆற்றுப் படைகளின் பெயரும் வகைமையும், சங்க ஆற்றுப்படைகள், எட்டுத் தொகையில் ஆற்றுப்படைகள், ஆற்றுப்படையில் பிற புறத்துறைகள் ஆற்றுப்படைச் சாயலும் கூறும் உள்ள பாடல்கள், ஆற்றுப்படை வழிகளும் ஆற்றுப்படுத்தும் தன்மையும், ஆற்றுப்படைகளில் இயற்கை நோக்கு நில அமைப்புப் பாடல், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படைகளின் இடம், ஆற்றுப்படைகளின் தோற்றமும் வளர்ச்சியும், பிற்கால ஆற்றுப்படைகள் ஓர் ஆய்வு, ஆற்றுப்படையும் சிற்றிலக்கியங்களும், ஆற்றுப்படையும் வழிநடைச்சிந்தும், ஆற்றுப்படையும் பயண நூல்களும், ஆற்றுப்படை இலக்கிய வளர்ச்சிக்குச் செய்துள்ள தொண்டு போன்ற பல்வேறு விதமான பொருண்மைகளைக் கொண்டு ஆராய்ந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆற்றுப்படை என சங்க இலக்கியத்தில் காணத் தக்கவை பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, கூத்தராற்றுப் படை எனப்படும் மலைபடுகடாம், திருமுருகாற்றுப்படை, புலவராற்றுப்படை போன்றனவாகும். இவற்றுள் பாணாற்றுப்படை என்பது சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என இரு பிரிவாகப் பத்துப்பாட்டில் காணப்படுகிறது. புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் இது ‘பாணாற்றுப்படை’ என்று பாகுபாடு இன்றியே வழங்கப்படுகிறது. பொருநராற்றுப்படை என்ற பெயரில் காணக்கிடைப்பது பத்துப்பாட்டில் ஒன்றேயாகும், விறலியாற்றுப்படை புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலுமே இடம் பெறுகிறது. பத்துப்பாட்டில் பாணருடன் செல்பவளாக விறலி குறிக்கப்படுதலின்றித் தனித்து விறலியாற்றுப்படை என்ற ஒன்று இல்லை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

முருகாற்றுப்படை என்பது பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள, தொல்காப்பியர் குறிப்பிடாத புதிய ஆற்றுப்படையாகும். புறநானூற்றில் மட்டுமே உள்ள புலவராற்றுப்படையாக தொல்காப்பியர் குறிப்பிடாத வகையே, கூத்தராற்றுப்படை என்ற துறையில் புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும் பாடல் இல்லை. பத்துப்பாட்டிலுள்ள மலைபடுகடாமே கூத்தராற்றுப் படை எனப்படுகிறது.

“ஆற்றுப்படைகளில் பெரும்பாலன ஆற்றுப்படுத்துகின்ற மற்றும் ஆற்றுப்படுத்தப்படுகின்ற கலைஞரின் பெயரையொட்டியே அமைகின்றன. மிகச்சில ஆற்றுப்படைகள், குறிப்பாகத் தெய்வ ஆற்றுப்படைகள் – பாட்டுடைத் தலைவரின் பெயரால் அமைகின்றன. சில ஆற்றுப்படைகள் அவ்வாற்றுப் படையில் இடம்பெறும் சொற்றொடரையோ கருத்தையோ அடிப்படையாகக் கொண்டு பெயர் பெறுகின்றன. அவ்வகையில் ‘யாருக்கு வழி காட்டுகிறார்களோ அவர்களுடைய பெயரோடு சார்த்தி ஆற்றுப்படை நூல்களுக்குப் பெயரை அமைப்பார்கள்’ என்பார் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள். ஆற்றுப்படுத்துபவனும், ஆற்றுப்படுத்தப்படுபவனும் ஒரே கலை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று டாக்டர் க. ஆறுமுகனார் அவர்கள் கருதுகிறார்கள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் முதலிய பல அறிஞர்களும் இவ்வாறே கருதுகின்றனர்” (1988:70) என இவ்வறிஞர்களின் கருத்துக்கள் ஆற்றுப்படைகளின் பெயரமைதிக்கு எவ்வகையில் துணைசெய்கின்றன என்பதனை இந்நூலின்வழி ஆசிரியர் மா. நவநீதகிருஷ்ணன் எடுத்து உரைத்துள்ளார்.

புறநானூற்றுப் பாணாற்றுப்படைகளில் இடம்பெற்றுள்ள யாழ் குறித்ததான முரண்பாட்டிற்கான விளக்கத்தை குறிப்பிட முற்படும் வகையில் “புறநானூற்றுப் பாணாற்றுப்படைகளில் சீறியாழ் குறிக்கப்படுகிறது. ஆனால் பேரியாழ் குறித்து இடம்பெறவில்லை.

**ஈங்கெவன் செய்தியோ பாண (புறம் - 68 : 4)**

**ஓம்பி யுடுத்த உயவற் பாண (புறம் - 69 : 4)**

மேற்கூறிய பாடலடிகளில் பாணன், சீறியாழ்ப் பாணனா, பேரியாழ்ப் பாணனா என்பது தெளிவாக இல்லை. இவ்விரு பாடல்களும் பாணாற்றுப்படை எனப் பொதுவாகவே குறிக்கப்பெற்றுள்ளன. இப்பாணாற்றுப்படைகள் சிறுபாண், பெரும்பாண் என வகுக்கப்படவில்லை. அப்பாணாற்றுப்படையுள்ளும் சில பாடல்கள் (புறம். 49,180, 181) இது புலவராற்றுப் படையுமாம் இயன்மொழியுமாம் என இரு துறைகளுக்கும் பொதுவாக்கப்பட்டுள்ளன. மேலும் இவற்றை ஆழ்ந்து நோக்கினால் பெரும்பாலும் ஆற்றுப்படையுள் அமையும் விளிகளே அவ்வாற்றுப்படைகளுக்கு பெயர் அமையக் காரணமாய்

அமைந்துள்ளன” (1988:70) என நூல் ஆராய்ச்சியின் மூலம் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்காட்டி விளக்கமளித்துள்ளார்.

பத்துப்பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இவ்விரண்டு பாணாற்றுப்படைகளையும் அவற்றின் பெயர்ப் பொருத்தத்திணையும் ஆராயும் சில உண்மைகள் பெறப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையுள் ‘இன்குரற் சீறியாழ்’ என யாழ் குறிக்கப்பட்டுள்ளது. பாணரோடு விறலியும் கல்லா இளையரும் அவர்தம் சுற்றமும் உடன் சென்றனர் என்பது புலப்படுகின்றது. ஆனால் பாணர் தலைவன் சீறியாழ்ப்பாண என்று விளிக்கப்படவில்லை. அவன் ‘முதுவா யிரவல்’ என்றே விளிக்கப்படுகின்றான் இம்முதுவா யிரவலனின் கையில் சீறியாழ் இருப்பதாகவும் காட்டப்படவில்லை.

பெரும்பாணற்றுப்படையில் ‘இடனுழைப் பேரியாழ்’ எனப் பேரியாழ் குறிக்கப்படுகிறது. பரிசில் பெறாத பாணருடன் விறலியும் கல்லென்ற சுற்றமும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பரிசில் பெற்ற பாணனுடன் இரும்பேரொக்கல் சென்றதற்குக் குறிப்புள்ளது. இதில் விளி, பெரும்பான! என்று அமையவில்லை. புல்லென்யாக்கைப் புலவுவாய் பாண! எனவும், சென்மோ இரவல எனவும் அமைந்துள்ளன. ‘பெரும்பாணர் குழலர்’, பாணர் முதலிய பெரிய இசைகாரர்’ என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்துள்ளதை இந்நூலாசிரியர் இங்கு எடுத்துரைத்து விளக்கிச் சென்றுள்ள பாங்கு பாராட்டிற்குரியது.

இதுவரை கூறியவற்றால் பேரியாழ், சீரியாழ் எனும் யாழ் எனும் வேறுபாட்டினால் மட்டும் ஆற்றுப்படைப் பாகுபாடு ஏற்படவில்லை என்றும், எல்லாப் பாணரும் பெரும்பாலும் எல்லாவகை யாழ்களையும் இயக்கக் கற்றிருந்தனர் என்றும் பெரிய பாணன், சிறிய பாணன் என்ற வேறுபாடு இல்லை என்றும், பெருமை சிறுமை என்பன ஆற்றுப்படைகளின் அடி அளவைக் குறித்து அடைமொழி என்றும் கொள்ள இடமிருக்கிறது என தெள்ளிதின் ஆராய்ந்து ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பெருங்கௌசிகனார் தம் நூலில் இசைக்கருவிகள் பற்றி 33 இடங்களிலும் இசை பற்றி 9 இடங்களிலும் ஒலி, ஓசை பற்றி 9 இடங்களிலும் ஆக மொத்தம் 68 இடங்களில் தமது செவிப்புல நுண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

பத்தல், பச்சைப் போர்வை, நுண்துளை, ஆணி, வருவாய், மருப்பு, திவவு, யாப்பு, நரம்பு, கவைக்காட, உந்தி போன்றவை யாழின் உறுப்புகளாக ஆற்றுப்படை கூறுகிறது. மேலும் யாழிசைக்கும் முறையைப் பற்றியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. அதாவது சீறியாழ், பேரியாழ் போன்றவற்றை இடத்தோல் பக்கம் அணைத்துக் கொண்டு பாடுவர்.

**இடனுடைப் பேரியாழ் முறையுழிக் களிப்பி**
**தொடையமை கேள்வி இடவயிற் றழீஇ**
***சீறியாழ் இடவயிற் றழீஇ***

என்ற பாடல் வரிகளின் மூலம் இடப்பக்கம் யாழினை வாசித்துள்ளனர் என அறிந்து கொள்ள முடிகிறது.

பாடினி, விறலி வருணணை குறித்தும் இந்நூலில் ஆசிரியர் தொகுத்துரைத்துள்ளனர். அவ்வகையில், பொருநனுடன் செல்லும் பாடினியின் கூந்தல், நுதல், புருவம், கண், வாய், பல், காது, கழுத்து. தோள், முன்கை, விரல், நகம், மார்பு, நகில், கொப்பூழ், இடை, அல்குல், தொடை, கணுக்கால் அடி ஆகிய உறுப்புக்களை முடத்தாமக்கண்ணியார் வருணிக்கிறார். இவ்வருணணை தலை முதல் அடிவரை அமைந்துள்ள கேசாதிபாத வருணணை என ஆசிரியர் தெளிவுப்படுத்துகிறார்.

சிறுபாணருடன் செல்லும் விறலியின் அடி, தொடை, கூந்தல், மார்பும், வயிறு ஆகிய உறுப்பு நலன்களைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது. கூத்தருடன் செல்லும் விறலியரது அடி, கண் ஆகிய இரண்டு உறுப்புகளை மட்டும் மலைபடுகடாம் வருணிக்கிறது. வறுமை, விறலியரின் கலை நாட்டத்தைக் குறைக்காதது போலவே உடலின் இயற்கை அழகையும் குறைக்கவில்லை என்பதனையே இவ்வுறுப்பு வருணணை உணர்த்துகிறது.

புறநானூற்று ஆற்றுப்படைப் பாடல்களுள் 5 பாடல்களில் யாழ் வருணனை குறிக்கப்படுகிறது. 'தோந் தீந்தொடைச் சீறியாழ், வணர்கோட்டுச் சீறியாழ், வள்ளுகிர்ச் சீறியாழ், கடனிறை யாழ், நல்யாழ் என பொதுவாக வருணிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பாக உவமை காட்டி வருணிக்கப் படவில்லை. இவ்யாழினின்று எழும் இசைத் திறமையின் புலமையைச் சிலர் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்ற குறிப்பும் உள்ளது. மேலும்,

பதிற்றுப்பத்திலுள்ள ஆற்றுப்படைகளுள் இரண்டில் மட்டும் யாழ் வருணனை சுட்டப்படுகிறது. இவற்றுள் ஒன்று விறலியாற்றுப்படை மற்றது பாணாற்றுப்படை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆற்றுப்படுத்திப் பாடும் மரபும் வாய்மொழிப்பாட்டாக்கி பாணரிடையே இருந்திருக்க வேண்டும். பாணர் வாய்மொழிப்பாடலிலும் இசைக்கருவிகளிலும் வல்லவராக இருந்தனர். அதனால் மன்னர் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். புலவரும் பாணரின் வாய்மொழிப் பாட்டில் ஈடுபாடு கொண்டனர். இசைக்கருவி வல்ல பாணர்கள் மன்னன் புகழ்பாடுவது அவன் நாட்டுவளம், நகர் வருணனை பாடுவது போன்ற சில மரபுகளைத் தம் பாட்டுக்குக் கருவாகக் கொண்டிருந்தனர். ஆற்றுப்படை வடிவமும் அவரிடையே சில மரபுகளோடு வாய்மொழிப்பாட்டாக வழங்கியது.

'புலவராற்றுப்படை' என்ற ஒரு துறை இல்லாத நிலையே, ஆற்றுப்படை வாய்மொழி இலக்கியமாக இருந்து பின் புலவர் கைகளில் வரிவடிவ இலக்கியமாக உருவெடுத்தது என்பதற்கு சான்றாக அமையும் தொல்காப்பியர் புலவராற்றுப்படை என்ற துறையைக் குறிக்கவில்லை என்பதோடு புறநானூற்றிலும் அத்துறைப் பாடல்கள் இல்லை என்பதும் காணத்தக்கது. 'புலவரலாற்றுப்படை' எனத் துறை எழுதப்பட்டுள்ள பாடல்கள் அவ்வமைப்பு உடையன அல்ல என்பதும் முன்னரே ஆராயப்பட்டுள்ளது. புலவர்கள் நம்மைப் பாணனாகவும், கூத்தனாகவும், பாடினியாகவும் கற்பனை செய்தே பாடினர் என்ற கருத்தைப் பலரும் வலியுறுத்தியுள்ளனர். புலவரின் இந்த கற்பனை போக்கு ஆற்றுப்படைப் பாடல், பாணர் முதலாகிய கலைஞருக்குரிய தொன்று தொட்டுவந்த வாய்மொழிப்பாட்டு என்பதை உணர்த்தும்.

அக்கலைஞரின் வாய்மொழிப் பாட்டு, சற்று வளர்ச்சிபெற்றுப் புறநானூற்றில் கிணைப் பொருநன் பாடல்களிலும் ஆற்றுப்படைத் துறைப் பாடல்களிலும் ஓரளவு இலக்கிய வடிவம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அவ்வடிவம் புலவரின் கற்பனையாலும் கவித்திறத்தாலும் ஒரு துறை இலக்கியமாக வளர்ச்சி பெற்ற நிலையைப் பத்துப்பாட்டுள் காணலாம். கிணைப்பொருள் பாடல்கட்கும் பத்துப்பாட்டு ஆற்றுப்படைகளுக்கும் உள்ள ஒற்றுமை இக்கருத்தை அரண் செய்யும். பாடிய மரபுகளும், தொடர்களும்

உவமைகளும் புறநானூற்று ஆற்றுப்படைகளிலும், பத்துப்பாட்டு ஆற்றுப்படைகளிலும் தொடர்ந்து பயின்று வந்துள்ளமை இக்கருத்தை வலியுறுத்தும். ஆற்றுப்படுத்தும் கலைஞரின் வாய்மொழிப்பாட்டாக இருந்த இப்பாட்டு, பாணர் அரசவையில் இசைக்கருவியோடு இசைத்த பாட்டாக வளர்ந்து, புலவர் இலக்கிய வடிவம் தரும் அளவு உயர்ந்தது. இதனால் ஆற்றுப்படை இலக்கிய வடிவம் வாய்மொழிப்பாட்டின் வளர்ச்சியே என்பதனை இந்நூலாசிரியர் தெளிவாக எடுத்துரைத்து விளக்கியுள்ளார். இவ்வாறு ஆற்றுப்படை, வாய்மொழி இலக்கியத்தினின்றும் தோன்றி வளர்ந்து வரிவடிவம் பெற்றது என்ற கருத்து, காரண காரியத்துடன் உறுதிசெய்யப் பட்டுள்ளது.

சிறுபாணாற்றுப்படைச் செல்வம் என்னும் தலைப்பிலான நூல் மு.பி. பாலசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்டு, 1989-இல் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் பெயர்ப்பொருத்தம், உவமை நயங்கள், சொல்லாட்சி, வருணனைத்திறன் போன்ற தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

சேர நாட்டின் செழிப்பையும், பாண்டிய நாட்டின் இயல்பையும், சோழ நாட்டின் இயற்கை வளத்தையும் அழகாக வருணித்தும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி எனும் கடையெழு வள்ளல்களின் சிறப்புகளை நயம்பட எடுத்துரைக்கும் வகையில் எழுந்த ‘சிறுபாணாற்றுப் படைச்செல்வம்’ எனும் நூல் மு. பி.பாலசுப்பிரமணியன் அவர்களால் எழுதப்பெற்று 1989-இல் இந்நூல் வெளியிடப்பெற்றது.

நெய்தல் நிலத்திலுள்ள எயிற்பட்டினம், கிடங்கில் முல்லை நிலத்திலுள்ள வேலும், மருத நிலத்திலுள்ள ஆமூர் ஆகிய ஊர்களின் தன்மையையும் அங்குள்ள மக்களின் விருந்தோம்பும் பண்பையும் தெளிவுபடக் கூறியுள்ளார். நல்லியக் கோடன் பரிசிலரை உரவேற்கும் முறையையும், உணவூட்டும் உயர்வையும், பரிசு கொடுக்கும் பான்மையையும் புகழ்ந்து பாடியுள்ளமை குறித்தும் இந்நூலாசிரியர் திறம்பட எடுத்துரைத்துள்ளார்.

‘பத்துப்பாட்டில் மலைப்படுகடாம் – ஓர் ஆய்வு’ என்னும் நூல் ச. கலைமகள் அவர்களால் 82 பக்கங்களைக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் 1992-இல் பக்கிரியம்மாள் பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆற்றுப்படை பெறும் இடம், மலைபடுகடாம் – பகுப்பாய்வு, மலைபடுகடாமும் பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளும் ஒப்பாய்வு போன்ற பொருண்மைகளைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னது சிறப்புகள் அவனால் சிறப்பிக்கப் பெற்ற இரவலர், ஆற்றுப்படுத்தப்படுகின்ற இரவலர், செல்லும் வழிகள், மக்கள் விருந்தோம்புதல் ஆகிய பல செய்திகளையும் இயல்பாக விளக்குகின்றன. மலைபடுகடாம் இதே போன்று பல செய்திகளை இயல்பாக விளக்கி இருக்கிறது. இந்த இயல்புத் தன்மையே சங்க இலக்கியங்களின் பாடல்களினின்றும் பிற்காலக் காப்பியங்களினின்றும் ஆற்றுப்படையைத் தனித்து காட்டுகின்றது.

பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளோடு பெரிதும் மலைபடுகடாம் ஒத்துள்ளது. நூல் அமைப்பு என்று பொதுவாய்ப் பார்க்கும் பொழுது மலைபடுகடாத்துடன் பெரும்பாணாற்றுப்படையே பெரிதும் ஒத்து அமைகிறது. இருப்பினும் தனக்கென்று சில தனிப் பண்புகளையும் மலைபடுகடாம் பெற்றுள்ளது. பொருநராணாற்றுப்படையிலும், சிறுபாணாற்றுப்படையிலும் பரிசில் பெற்று வந்த இரவலன் அரசனிடம் பெற்ற சிறப்புகள் விரிவாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் மலைப்படுகடாத்திலும், பெரும்பாணாற்றுப் படையிலும் பெருவளம் பெற்று அவனின்று வருகின்றோம் என்று மட்டுமே கூறி, வறியவன் சென்றால் அரசன் எவ்வாறு உபசரித்துப் பரிசில் நல்குவான் என்பதும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

அரசனது அரண்மனை முற்றத்தின் காட்சி மலைபடுகடாத்திலும் பெரும்பாணாற்றுப்படையிலும் மட்டுமே தரப்படுகின்றது. மலைபடுகடாத்தில் அரண்மனை முற்றத்தில் காணப்படுபவை அரசனுக்கு நாட்டு மக்கள் அன்பாய் நல்கிய பொருட்கள், ஆனால் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுபவை அரசனின் சீற்றத்திற்கு அஞ்சி அடங்கி இருக்கும் ஏனைய மன்னர்கள் கொண்டு வந்து குவித்த திரைப்பொருள்கள்” (1992: 54) என்று ஆசிரியர் கூறுகிறார்.

ஆற்றுப்படை இலக்கியம் தாம் விரும்பிய மன்னனைப் புலவர் புகழ்ந்து பாடுவதற்கு ஏதுவாய் அமைந்த ஒரு இலக்கிய வகையே, ஆதலால் புரவலனின் சிறப்பு எல்லா ஆற்றுப்படைகளிலும் விரிவாக இடம்பெறுகின்றது. "எல்லா ஆற்றுப்படைகளிலும் புரவலனின் முன்னோன் முதலில் பேசப்படுகின்றான். புரவலனின் வீரமும் கொடை வழங்கும் அருட்பண்பும் கூறப்படுகின்றன. பொருநராற்றுப்படையும், பெரும்பாணாற்றுப்படையும் புரவலனாகிய கரிகாலன் இளந்திரையன் ஆகியோரின் பிறப்புப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் மலைபடுகடாமும் சிறுபாணாற்றுப்படையும் நன்னன், நல்லியக்கோடன் ஆகியோரது பிறப்பினைக் கூறவில்லை. இம்மூன்று ஆற்றுப்படைகளுள்ளும் காணப்படாத ஒரு செய்தி மலைபடுகடாத்துள் அமைந்து இந்நூலுக்கே சிறப்புச் சேர்க்கின்றது. புரவலனின் சிறப்பைக் கூறத்தொடங்கிய போதே அவன் மனைவியைக் குறிப்பிட்டு 'மங்கையர் கணவன்' எனத் தொடங்குகிறது. இதுபோல் நூலின் இடையில் ஓரிடத்தில் நன்னனை, 'கொடியோள் கணவன் ……' (மலை: 424) அதாவது, கற்புக்குரிய கொடியினை உடையவள் கணவன் என்று கூறியுள்ளது" (1992:57) என்று ஆசிரியர் இந்நூலினுள்ளே சுட்டிக் காட்டியுள்ளார்.

மலைபடுகடாம் இசைக் கருவிகளின் பட்டியலை கலைநயத்துடன் தந்து விவரிக்கின்றது. அவ்வகையில் எல்லா ஆற்றுப்படைகளிலும் யாழும், அதன் வருணையும் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக மலைபடுகடாத்துள் காணப்படும் பேரியாழ் ஒன்பது நரம்புகளை உடையது. சங்க காலத்தில் 21 நரம்புகளைக் கொண்டே பேரியாழும் இருந்தது என்று புறநானூறும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையும் கூறுகின்றன என இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

பெரும்பாணாற்றுப்படை 'வில்யாழ்' என்ற ஒரு யாழைப்பற்றிக் கூறுகின்றது. இவ்வாழ் ஏழு நரம்புகளைக் கொண்டது. இதனைப் பற்றி யாழ்நூல் விளக்கமாக கூறுகின்றது.

மலைப்படுகடாம் ஒன்றே 13 இசைக் கருவிகளைப் பற்றிக் கூறுகின்றது. சீறியாழ், சிறுபறை தவிர மற்ற அனைத்தையும் ஒரே இடத்தில் தொகுத்துச் சொல்லுகின்றது. கூத்தராற்றுப்படை கூத்தர் வைத்திருந்த பல வகை

இசைக்கருவிகளைப் பற்றி கூறியுள்ளதில் சிறப்பொன்றுமில்லை என்றாலும் பாணரோ, பொருநரோ யாழ் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு தம் தொழிலைச் செய்திருக்க முடியாது. பாணர் வாழ்ந்து விடினும் பொருநர் யாழ் ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு ஏர்க்களத்ததையோ, போர்க்களத்தையோ பாடியிருக்க இயலாது. ஆகையால் இவர்களைப் பற்றிப் பாடிய ஆற்றுப்படையிலும் மலைப்படுகடாம் ஒன்றே மிகுதியான சங்க கால இசைக்கருவிகளைப் பற்றிக் கூறிச் சிறப்புப் பெறுகின்றது.

இவரது இந்த இசை உணர்வே இவரை மலைகளில் கேட்கும் பலவகை ஓசைகளையும் தனித்தனியே இனம் கண்டு துய்க்கச் செய்திருக்கிறது என்று ஒருவாறு புரிந்துகொள்ள முடிகிறது. மன்னனை வாழ்த்துதற்கென்றே இரவலர்கள் இசைக்கும் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்விசைக் கருவியைக் குறித்து ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

**மழையெதிர் படுகண் முடிவுக ணிகுப்பக்**
**கழைவனர் தூம்பின் கண்ணிட மிமிர**
**மருதம் பண்ணிய கருங்கோட்டு சீறியாழ்**
**…………………………………………..**
**சென்றது நொடியவும் விடாஅன் (மலை : 532-45)**

இரவலனுக்குத் தகுந்தபடி இவ்விசைக் கருவிகள் வேறுபடுகின்றன. அதனை விளக்கும் பொருட்டு, பொருநன், தடாரி, முழவு, சீறியாழ் ஆகியவற்றையும் சிறுபாணன் சீறியாழ் ஒன்றையும், பெரும்பாணன் பேரியாழைப் பயன்படுத்துகின்றான். கூத்தன் முழவு, தூம்பு, சீறியாழ் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றான்.

இவற்றில் சீறியாழ் ஒன்றே பொருநன், சிறுபாணன், கூத்தன் ஆகியோர் அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால், இரவலர்கள் சங்க காலத்தில் மன்னர்களை வாழ்த்த சீறியாழையே பெரிதும் பயன்படுத்தினர் என்ற உண்மை இங்குப் புலனாகின்றது. பெரும்பாணனிடம் பேரியாழ் ஒன்றே இருந்தமையால் அவன் அதை மட்டுமே இசைக்கின்றான்.

எல்லா ஆற்றுப்படைகளிலும் இரவலர்கள் மன்னனை வாழ்த்துகின்றனர். ஆனால் மலைபடுகடாத்திலும் மட்டுமே கடவுளை வாழ்த்திய பிறகே மன்னன் வாழ்த்தப்படுகின்றான் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளில் நான்கு ஆற்றுப்படைகள் மன்னரைப் பாட்டுடைத் தலைவராக கொண்டவை. பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர் போன்றோர் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். புதிதாக வரும் இரவலர்களுக்கு மன்னரையும், நாட்டையும், செல்லும் வழிகளையும், பெறக்கூடிய பரிசில்களையும் முறையாக வரிசைப்படுத்திக் கூறும் அமைப்பு இந்த ஆற்றுப்படை இலக்கியங்களின் பொதுமைப் பண்புகளாகக் காணப்படுகின்றன. மன்னனை வாழ்த்தும்போது சீறியாழ் கொண்டு இசைத்தே இரவலர்கள் வாழ்த்தியுள்ளனர்.

பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களை விடவும் ஏனைய பெரும்பாணாற்றுப்படையும், கூத்தராற்றுப்படையும் பெருமளவில் தம்முள் ஒத்துள்ளன. ஆற்றுப்படை இலக்கியங்களில் பெரும்பாலானவை விறலி வருணனையிலும், இசைக் கருவிகளின் வருணனையிலும் சிறப்புறுகின்றன. அவற்றுள்ளும் மலைபடுகடாம் இசைக் கருவிகளுக்குத் தனியிடம் தந்தும், மலைபடு ஓசைகளின் நயமுரைத்தும், மன்னர்களின் கோயில் முன் காணப்படும் பொருள்களைக் கூறியும், பரிசில் நல்குதலில் நுண்ணிய வேறுபாடுகளைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க சிறந்த படைப்பாகக் காணப்படுகிறது.

மன்னனைப் புகழ்ந்து பாடுதற்குரியவர்கள் சூதர், மரகதர், பாணர், கூத்தர் முதலியோராவர். இவர்களுள் இசைவல்ல பாணர், கூத்தர், பொருநர், விறலி முதலியோர் ஆற்றுப்படைக்கு உரியவராகின்றார் என நூலாசிரியர் சி. கலைமகள் குறிப்பிடுகிறார். கூத்தர் என்பவர் நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றோர், மற்றும் தனிக் கூத்திலும் கதை தழுவிய இசைக்கருவிகளோடு இசைக் கலையை வளர்ப்போர் பொருநர்-ஒப்பனை பூண்டு நடிக்கும் கலையில் சிறந்தோர். இவர் ஏர்களப் பாடுநர், போர்க்கலம் பாடுநர் என இருவகைப்படுவர். விறலி என்பவர் இசையிலும் நாட்டியத்திலும் வல்லோரின் பெண்பாலர்.

போர்க் காலச் சமுதாயத்தில் மக்கள் இசைக்குழுக்களாய் வாழ்ந்தனர். குழு வாழ்க்கையில் நடனம் ஒரு சமூக ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. குழு வளர்ச்சி பெறும்போது வேலைப் பிரிவினை தோன்றுகின்றது அப்பொழுது ஆடல் பாடல்களில் வல்லவர்களுக்குக் கூத்தும் பாட்டுமே தொழிலாகி விடுகின்றன. "இந்நிலையிலேயே பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலையைத் தொழிலாகக் கொண்டவர்களான ஒரு சமூகப் பிரிவு தோன்றியது. நாளடைவில் இப்பிரிவினரே கலையை வளர்க்கத் தொடங்கினர் என்று கா. சுப்பிரமணியம் கூறுவதாக" (1992:19) ஆசிரியர் இங்கு குறிப்பிட்டுச் சென்றுள்ளமை போற்றுதற்குரிய ஒன்றாக உள்ளது.

மேலும் தமிழகத்தில் நடனம், கூத்து, இசை முதலிய கலைகள் வளர்ச்சி பெற்றமைக்கும் இவர்களே முதன்மையானவர்கள் இவர்கள் யாவரும் வாழ்க்கை முறையிலும், தொழில் துறையிலும் சிற்சில வகையில் வேறுபட்டவர்கள் என்றாலும் கலையையே தொழிலாகக் கொண்டவர்கள்.

இவர்களுள் கூத்தரும் பாணரும் விறலியும் தலைவன் தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயில்களாக விளங்கினர். "கூத்தன் பாணனையோ, பாணன் கூத்தனையோ ஆற்றுப்படுத்தினான் எனப் பாடல்கள் அமையவில்லை. இதற்குக் காரணம் தம்மையொத்த தம் துறையில் உள்ள மற்றொரு கலைஞரே தம் மனத்தை உள்ளபடி அறிவான் என்று அவர்கள் கருதியதுதான் என்று இரா. தண்டாயுதம் கூறுவதாக" (1992:20) ஆசிரியர் இந்நூலின் வழியே எடுத்துக்காட்டி தெளிவுபடுத்துகின்றார்.

எட்டுத் தொகையுள் ஆற்றுப்படை பாடாண் திணையுள் அமைந்த ஒரு துறையாகவே உள்ளது. எனினும் புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் இத்துறை பற்றி 21 பாடல்கள் உள்ளன. மேலும் புறநானூற்றில் 14 பாடல்களும் பதிற்றுப்பத்தில் 17 பாடல்களும் அமைந்துள்ளன. புறநானூற்றுள் பாணாற்றுப் படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை சார்ந்த பாடல்களும் பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை சார்ந்த (1), விறலியாற்றுப் படை (6) சார்ந்த பாடல்களும் காணப்படுகின்றனள.

புலவரை ஆற்றுப்படுத்துதல் பற்றித் தொல்காப்பியத்துள் கூறப்படவில்லை. ஆனால் ந.வீ. செயராமன் புலவரைப் புரவலரிடமும்

இறைவனிடமும் ஆற்றுப்படுத்தலாம் என்பது தொடக்கத்தில் இருந்த நிலை. நாளடைவில் (நாளாவட்டத்தில்) ஆற்றுப்படுத்தப்படுவோரில் ஒருவராக புலவரைக் கருதாத நிலை வளர்ந்தது என்று கூறுகின்றார். இவ்வாறு எட்டுத்தொகையுள் ஆற்றுப்படை பயின்று வந்துள்ள முறைமையைக் குறித்து மிகச்சிறப்பாக விளக்கியுரைத்துள்ளார்.

ஒரு துறையாக இருந்த ஆற்றுப்படை தனி இலக்கிய வகையாக வடிவம் பெற்றது. பத்துப்பாட்டிலுள்ளேயே பத்துப்பாட்டுகளுள் ஒரு பாதி ஆற்றுப்படைப் பாடல்களே. அவைகளாவன திரு முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் போன்றவை பத்துப்பாட்டில் அமைந்த ஆற்றுப்படை நூல்கள்.

பலவகையான இசைக்கருவிகளைப் பற்றித் தம் நூலில் பெருங்கௌசிகனார் குறிப்பிடுகிறார். மேலும் இவை சார்ந்த உவமைகளையும் பெருகக் கையாண்டுள்ளார். அவ்வகையில்,

**திருமழை தலைஇய விரூணிற விசும்பின்**
**விண்ணதி ரிமிழிசை கடப்பப் பண்ணமைத்துத்**
**திண்வார் விசித்த முழவொடு (மலை : 1,3)**

ஆகுளி, நுண் உருக்குற்ற கஞ்சதாளம், தழை அணிந்த கொம்பு, துளையுடைய யானையின் கை போன்ற தூம்பு இளியென நரம்பின் ஓசையை எழுப்பும் குறுந்தூம்பு, குழல், அரிக்குரல் தட்டை (கரடிகை), வல்வாய் எல்லரி (சல்லி), ஒருகண் உடைய கிணைப்பறை, ஒன்பது நரம்புடைய,

**களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்**
**வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ் (மலை: 36, 7)**

**மான் தோற் சிறுபறை (மலை :321)**

**மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ் (மலை :534)**

என்று 13 இசைக்கருவிகளைப் பற்றி ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

புறநானூற்றில் புரட்சிக் குயில்கள் என்ற நூலினை சோ. உலகநாதன் அவர்கள் 1993-இல் சென்னை சங்கப் பலகையில் வெளியிட்டுள்ளார். வீரகாவியமாகப் போற்றக்கூடிய புறநானூறு என்னும் நூலில் பாடியுள்ள

தமிழ்க்குடி வீரமகளின் கவிதைகளைத் தனியாகப் பிரித்து தனிநூலாகத் தமிழ் வாசகர்கள் எளிமையாகப் படித்து புரிந்து கொள்ளும் வகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றில் 400 பாடல்களில் சுமார் 150 பேர்கள் புறநானூற்றின் ஆசிரியர்கள் என்றும், இவற்றுள் ஆசிரியர் அறியாத பாடல்கள் 13 என்றும், அதோடு பெண்பால் புலவர்கள் என அறியப்பட்டோர் 17 பேர்கள் என்றும், மேலும் அவ்வையார் பாடிய 33 பாடல்கள் உட்பட பெண்பால் புலவர்கள் பாடியதாக காணப்படும் பாடல்கள் 61 பாடல்களாகும். பெண்பாற் புலவர்களின் பாடல் எண்ணிக்கையை எடுத்துரைக்கும் வகையிலும், இப்பாடல்களின் நயங்களையும் தொகுத்து வழங்குவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

சங்க கால மகளிரின் மகப்பேற்றிற்கான காரணத்தைப் பின்வரும் சான்றின் மூலம் விளக்குகிறார் ஆசிரியர். "புறநானூற்றில் வீரந்செறித்த தமிழ்த் தாயாரின் சிறப்புகள் பற்றிப் பாடியுள்ள பல பாடல்களில், அவர்கள் முதுமையிலும், இளமகனைப் போருக்கு முடிசீவி அனுப்பினர். நரைத்த கூந்தல் உடையோர், உலன்று வற்றிய தோள்களை உடையோர், என்றெல்லாம் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. ஏன்? அக்கால முதுமையில் தான் (அல்லது) முதுமையிலும் மகவினை ஈன்றார்களோ? (Late issue) என ஐயுற இடமுண்டு! இப்படி முதுமையில் மகனை ஈன்ற தாயாக, ஒரு மற மாண்புடைய தாயை நமக்கு அறிமுகம் செய்கின்றார். பூங்கன் உதிரையார்! "மீன் உண் கொக்கின் தூவி அன்ன வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்" (புறம். 277), தனது மகன் மிக்க இளையோனை, அதாவது சிறுவனைப் போருக்கு அனுப்புகின்ற தாயின் தோற்றத்தை பூங்கன் உதிரையார் குறிப்பிட்டுள்ள உதாரணம் எளிமையானது. (1993: 43, 44) எனப் புறநானூற்றுப் பாடல்களில் காணக்கூடிய மகளிரின் மாண்பினை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

புறநானூறு என்னும் மிகச்சிறப்பு வாய்ந்த இந்நூலின் கருத்துக்களை இவ்வுலகிலுள்ள அனைவரும் அறிந்துகொள்ளும் நல்ல நோக்கத்தோடு, பேராசிரியர் முனைவர் இரா. மணியன் அவர்களால் எழுதப்பட்ட புறநானூறு –

ஓர் அழகோவியம் என்ற நூல் 144 பக்கங்களைக் கொண்டு 1994 – இல் சென்னைப் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டது.

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பல்வேறு அழகு நயங்களை அவருடைய நுண்மாண் நுழை புலத்தால் ஆய்வு செய்துள்ளார். அதாவது பெயரழகு, செய்யுளழகு, கலையழகு, உணர்ச்சியழகு, கற்பனையழகு, கருத்தழகு, வழவழகு, அமைப்பழகு என்ற ஒன்பது பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார் ஆசிரியர்.

இந்நூலின் தனித்தனியே சொற்களையும் தொடர்களையும் எடுத்துக்கொண்டு அவற்றின் கருத்துக்களை விளக்கியும், அவற்றினால் ஏற்படும் பல்வேறு உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திக் காட்டியதோடு இடையிடையே தொல்காப்பியரின் கருத்துக்களை ஆங்காங்கே பொருத்திக் காட்டிச் செல்லும் நடை பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. இதனால் இலக்கணத்தில் அவருக்கு இருக்கும் புலமையை நன்கு அறிய முடிகிறது.

புதிய கோணத்தில் புறநானூற்றை ஆராய்ந்து, கவிதைகளுக்கு கற்பனை அழகும், உணர்ச்சியழகும் மட்டும் போதாது கருத்தழகும், வடிவழகும் மிக இன்றியமையாதவை என்று வற்புறுத்திக் கூறித் தம் கருத்தை இங்கு பல்வேறு எடுத்துக்காட்டுகளால் எடுத்துரைத்து நிலைநாட்டுகின்றனர் ஆசிரியர் அவ்வகையில், ‘முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே’ என்ற 242 ஆம் பாடல் தொடரின் உட்பொருள் யாவருக்கும் விளக்குமாறு தெளிவுப் படுத்தியுள்ளார். செய்ந்நன்றி மறந்ததால்தான் பெருஞ்சாத்தன் மாய்ந்த பின்னரும் முல்லை பூத்துக் குலுங்கியது போலும் என்று சொல்லி, செய்ந்நன்றி மறந்தவர்கள் எவ்வளவுதான் சிறந்தவர்களாக இருந்தாலும் நாட்டு மக்களால் விரும்பப்படமாட்டார்கள் என்ற கருத்தை உணர்த்திக் கீரத்தனாரின் பாடலில் உள்ள உணர்ச்சியழகை நன்கு வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

**சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்து**
**வழிப்படூஉம் தோற்றம் போல**
**இருகுடை பின்பட ஓங்கிய (புறம்.31)**

என்னும் புறப்பாட்டடிகள் சோழன் நலங்கிள்ளியின் வெண்கொற்றக்குடை சிறப்பினை எடுத்துக் கூறுகின்றன. புலவர் கோவூர்கிழார் சேர, சோழ, பாண்டியன் குடைகளைப் பொருள் இன்பங்களுக்கும், சோழனின் குடையை

அறத்துக்கும் ஒப்பிட்டு. அறம் முன் செல்வதாகவும், அதனைத் தொடர்ந்து பொருளும், இன்பமும் செல்வதாகவும் கூறி அறத்தின் சிறப்பை வலிறுத்துகிறார்." (1994: 11, 102) என்ற இக்கூற்றின் வழி பாடலின் கருத்தழகை மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார் ஆசிரியர் இரா. மணியன் இந்நூல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள சொற்பொருள். கலை உணர்ச்சி, கருத்து, வடிவு போன்ற இவை பற்றிய ஒரு எடுத்துரைப்பு நூலாக உள்ளது.

"மேலை நாட்டுத் திறனாய்வாளர்களுள் தலைசிறந்த அறிஞராக கருதப்பெறும் 'ஹட்ஸன்' என்பவர் 'இலக்கியம் கற்றற்குரிய முன்னுரை' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலில் மொழியின் வாயிலாக வாழ்வை விளக்குவதே இலக்கியமாகும் என்று இலக்கியத்திற்கோர் இலக்கணம் வகுத்துள்ளார். அவ்விலக்கணத்துக்கு இலக்கியமாகப் பாண்டியனின் பாடல் அமைந்து இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

வாழ்வின் வழி காட்டியாக விளங்கும் திருக்குறளில் மக்கட் பேறு என்றும் அதிகாரத்துள் மக்கட் பேற்றினது சிறப்பைக் கூறுகின்ற,

**பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த**
**மக்கட் பேறல்ல பிற**

என்ற குறட்பாவும் மக்கட் பேற்றினால் பெறக் கூடிய பயனைக் கூறும்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்" என்ற குறட்பாவும் பாண்டியன் அறிவுடைய நம்பியின் பாடலை நினைவூட்டுவதோடு அப்பாடலில் ஓசை இனிமையை ஊட்டுகின்ற எதுகை, மோனை, இயைபு போன்ற தொடை நயங்கள் பாண்டியனின் இசைக்கலைப் புலமையைப் புலபடுத்துகின்றன. மேலும் அப்பாடலைப் படிக்கும்பொழுது பாண்டியன் உண்ணுகின்ற காட்சியும், தன் சிறுகைகளை நீட்டிக் குழந்தை உணவைத் துழாவும் காட்சியும், உணவு சிதறிக்கிடக்கின்ற காட்சியும் சிறந்த சிற்பி ஒருவனால் வழக்கப்பெற்ற சிலைகளைப் போன்று நம் சிந்தையில் நிற்கின்றார்கள்."(1994:19,40) இலக்கியக் கலையில் சிற்பக்கலை இணைந்துள்ளது மிகச்சிறப்பான ஒன்றாகும்.

இவ்வாறு புறநானூற்றுச் செய்யுளழகினை மேலை நாட்டுக் கவிஞர், திறனாய்வாளர்களின் கருத்துகளோடு பொருத்திக்காட்டி விளக்கியிருப்பது மிக அழகுடன் எடுத்துரைத்துள்ளார் இந்நூலாசிரியர்.

'புறநானூறு ஒரு புதிய பார்வை' என்ற நூலினை இரா. குருநாதன் அவர்களால் எழுதப்பட்டு, பின்னர் 1997-இல் சென்னை வானதி பதிப்பகத்தில் வெளியிட்டுள்ளார். புறநானூறு ஓர் அறிமுகம், போரும் மன்னரும், புறப்பாட்டின் புலமையோர், மன்னர் சிந்தனைகள், வாழ்வியல் சிந்தனைகள் ஆகிய உள் தலைப்புகளின் வழியாக புறநானூற்றுப் புதிய பார்வை முன்வைக்கப்பட்டுள்ளது.

தந்தைவழி மகன் அரசுரிமைபெற்று ஆள்வதைத் தக்க சான்றுகளோடு எடுத்துரைக்கின்றார் ஆசிரியர். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நலங்கிள்ளி போன்றோரின் வஞ்சின மொழிகளை எடுத்தாண்டு, வெஞ்சினத்தின் வெப்ப ஊற்றே வஞ்சினமாகியுள்ளது என்ற கருத்துகளையும் இரா. குருநாதன் அவர்கள் எடுத்தியம்புகின்றார்.

பொதுப்பெண்டிர் இருந்தனர். ஆனாலும் அவர்களோடு தொடர்பு கொள்வது இழுக்கானது என்பதனை நலங்கிள்ளியின் வஞ்சினம் எடுத்துக்காட்டுகின்றது. மன்னரின் இச்செயற்பாடு நாளைய சமுதாய வாழ்வின் மரபாகவும், பெரும்பாலோரின் பழக்கமாகவும் இருந்ததைக் கூட அறத்தாற்றில் நின்றவர்கள் ஏற்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது என்று கூறுகின்றார்.

"பாதுகாப்பு அரண்களில் உயரமாக அமைக்கும் பாதுகாப்புக் கோபுரம் (Watch Tower) அன்றும் இருந்துள்ளது. அதன் பெயர் 'பார்வல் இருக்கை' என்று எடுத்துரைக்கும் ஆசிரியர் பார்வல் இருக்கை என்னும் இச்சொல்லை இன்றும் பழக்கத்திற்கு விடலாமே! எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதற்கு துணை நிற்குமே!" (ப. 58) என்கிறார்.

> ஆநிரையே செல்வமாகக் கருதப்பட காலத்தே அவற்றைக் கவர்தலும் பின்னர்ப் பேணுவான் பொருட்டு நிலம் கவர்தலும் போருக்கு அடிப்படையாயிற்று (ப. 55)

என்று ஆசிரியர் கூறுவது சமுதாய வளச்சியோடு இணைந்த போரின் வளர்ச்சியைத் தொட்டுக்காட்டுவதாக அமைகின்றது. மேலும் போரில் வெற்றிபெற்ற மன்னர், பகைவர் நாட்டை எரியூட்டியாமை அக்கால வெறியைக் காட்டுவதையும் ஆசிரியர் குறிப்பிடத் தவறவில்லை.

> தாய்மை உணர்ச்சி புலவர்களுக்குப் பொதுவானது தாய்மைப் பேறோ பெண்களுக்கே உரியது (ப. 101)

என்ற இக்கருத்தை பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களால் விளக்கும் சிறப்புடையதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

அக்காலச் சான்றோர்கள் உலகப் பொதுமை எண்ணம் மிக்கவர்களாக திகழ்ந்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் (1921), என்ற எண்ணம் உலக ஒருமைக்கு வித்து ஒன்றே உலகம் என்ற சிந்தனைக்கு உரம் என்பதை உணர்த்துகிறது. உண்பதும் உடுப்பதும் தவிர பிற அனைத்தும் ஒன்றே (புறம் – 189) என்ற கருத்தும் பொதுமைச் சிந்தனையின் விளைவு ஆகும். எல்லார்க்கும் ஏமம் (புறம். 1, 11), எல்லாரும் உவப்பது (195, 8), எல்லார்க்கும் கொடு (புறம். 16:3-7), எல்லா உயிர்க்கும் ……. வாழ்க்கை (புறம்.203,3), என்று வரும் புறநானூற்றுத் தொடர்கள் மேற்கூறிய எண்ணத்திற்கு வலிமை ஊட்டுவனவாய் உள்ளன. எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுமைச் சிந்தனை புலவர்களிடையே அரும்பியிருந்ததற்கான அடையாளங்களைக் காணுகின்றோம். இந்தச் சிந்தனை புலமை சான்ற நெஞ்சங்களுக்கிருந்துள்ள ஆளுமை ஆட்சியின் நெஞ்சங்களில் அரங்கேறியதற்கான தடயங்கள் எதுவும் இல்லை (ப.140) எனப் புலவர்கள் தன் நாடு, தன் மக்கள், தன் குடும்பம் என்று சிந்திக்காமல் உலகப் பொதுக் கருத்துக்களைத் தம் செய்யுட்களில் பதிவு செய்துள்ளமையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஞாயிறு பற்றிய அறிவு உலக வாழ்க்கை நிலையற்றது என்ற சிந்தனை மேலுலகம் பற்றிய எண்ணம், மறுபிறப்பு, நம்பிக்கை, அறத்தைப் போற்றும் பழக்கம் இறைச் சிந்தனை போன்ற வாழ்வியல் கருத்துகள் எவ்வாறெல்லாம்

நினைக்கப்பட்டன நிலைநாட்டப்பட்டன என்பனவற்றைக் கூறி இரா. குருநாதன் அவர்கள் தமது நூலை நிறைவு செய்துள்ளார்.

‘புறநானூறு புதிய தளிர்கள்’ என்ற நூலினை கு. ராஜவேலு அவர்கள் 1999-இல் சென்னை திருவரசு புத்தக நிலையத்தில் பதிப்பத்துள்ளார். புறநானூறு புதிய தளிர்கள் என்னும் இந்நூலில் புறநானூற்றுச் செய்யுட்களைப் பின்புலமாக வைத்துக்கொண்டு, இராமயணம், மகாபாரதம், தொல்காப்பியம், எட்டுத்தொகை நூல்களில் இருந்தும், அதாவது புறநானூற்றின் அருமை பெருமைகளையும் ஆராய்ந்து எழுதியுள்ளார். மேலும் சொல் நயம், பொருள் நயம், இயற்கைக் காட்சி, உவமைச் சிறப்பு, செய்யுள் அமைதி, தெய்வங்கள், தெய்வ வணக்க முறைகள், இல்லாத தர்மம், அரசியல் நீதி, சமுதாய உயர்வு தாழ்வு, மறு உலக வாழ்வு பற்றிய உண்மைகள், போர் முறைகள், புராணங்கள், வேதம், வேள்வி, தவம், பொதுநீதி போன்றவை பற்றிய எண்ணங்கள் எல்லாம் பாரத நாடு முழுவதும் ஒரேவிதமாகப் பரவி இருந்தன என்பதை போற்றக்கூடிய வகையில் சிறப்புடன் விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

சேலம் அன்பரசு அவர்கள் 1999-இல் ‘புறநானூற்று வீரக் கதைகள்’ என்ற நூலினை 103 பக்கங்களில் உருவாக்கியுள்ளார் மேலும் இந்நூல் சென்னை வசந்தா பிரசுரத்தில் பதிப்பக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஒன்றன் கல்லன் கவிஞன், சிறுவரைக் காத்த செம்மல் கோவூர்கிழார், நேரில் காணாத நண்பர்கள், இருவருக்கும் வெற்றி இல்லை, மான வீரன் பெருஞ்சேரலாதன், நெல்லிக்கனி, ஔவையார் தூது, மன்னனைத் திருத்திய மாமனிதர், சேரமான் கணைக்கால் இரும்பொறை, பாரி மகளிரும் கபிலரும், சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, விழுப்புண் வீரரும் மறக்குலப் பெண்டிரும், வென்று வா மகனே, அகுதை என்னும் வீரனின் பொன் சக்கர ஆயுதம், எமனைச் சபித்த வீரமங்கை, பெருஞ்சித்திரனார் பெருமிதம், வள்ளல் குமணனின் வாள், பொன்முடியார் பாட்டு, குகை இங்கே! புலி எங்கே? என்ற பொருண்மைகளில் அமைந்த ஆய்வுகளைக் கொண்டதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கக் கூடிய வகையில் வீரக்கதைக் கொண்டமைந்துள்ளது இந்நூல். அவ்வகையில், “தன் மகன் பூனை

இல்லை புலி அவன் எந்தச் சூழ்நிலையிலும் போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடி வரமாட்டான் வெற்றியோடுதான் திரும்பி வருவான் என்பதை அவன் இவ்வாறு உணர்த்துகிறான். அதுமட்டுமில்லாமல் ஒரு புலியானது கற்குகையில் பாதுகாப்பாகத் தங்கி இருப்பது போல அவன் கருவான நாளிலிருந்தே அவனைப் பாதுகாத்து வந்த தனது நிலையினை எடுத்துக் கூறுகின்றாள்" (1999:109) என்று இதுபோன்று வரலாற்று செய்திகளைக் தரக்கூடிய வகையில் கதையமைப்பினைக் கொண்டு அமைந்துள்ளது இந்நூல்.

## தொகுப்புரை

- சங்க இலக்கிய நூல்களில் உள்ள பாடல்கள் மொத்தம் 2381, அவற்றுள் அகம் பற்றியது 1862, புறம் பற்றியது 519 பாடல்களைக் கொண்டது. பாட்டும் தொகையுமாகிய நூலில் புறம் நூல்களாகக் கருதப்படுபவை புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி எனும் எட்டு நூல்கள் மட்டுமே புறப் பொருளை மையமாகக் கொண்ட புற இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அறிமுக நூல்களாகவும், கருத்து விளக்க நூல்களாகவும், ஆய்வு நூல்களாகவும் மிகச் சிலவே வெளிவந்துள்ளன.
- தொடக்கத்தில் தனித்தனி நூல்களைப் பற்றிய சொற்பொழிவுகளும் பாடற்கருத்துகளுமே நூல்களாகி உள்ளன. அதன்பின்னரே திறனாய்வு அடிப்படையிலும், தொல்காப்பியக் கோட்பாடுகளோடு ஒப்பு நோக்கியும் ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது. அதனடிப்படையில் தனிநூல்கள் சார்ந்து வெளியான ஆய்வுகளை மையமாகக் கொண்டு இவ்வியல் கவனப்படுத்துகிறது.
- சேர நாட்டின் செழிப்பையும் பாண்டிய நாட்டின் இயல்பையும் சோழ நாட்டின் இயற்கை வளத்தையும் அழகாக வருணித்தும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி எனும் கடையெழு

வள்ளல்களின் சிறப்புகளை நயம்பட மு.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை இவ்வியலுள் கவனப் படுத்தப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் நடனம், கூத்து, இசை முதலிய கலைகள் வளர்ச்சி பெற்றமைக்கு பாணர், கூத்தர், பொருநர், விறலியர், பாடினி முதலிய இவர்களே முதன்மையானவர்கள் என இவ்வியலில் விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- போர்ச் சிறப்புகளையும், புகழுரைகளையும் கொண்டு புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பான்மையும் இயற்றப் பட்டுள்ளதோடு அப்பாடல்களில் புலவர்களின் அறிவுரைகள், அறத்தை வலியுறுத்தவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதையும் இவ்வியலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மன்னர்கள், புலவர்களின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றும், மன்னர்களின் கூற்றினைப் புலவர்கள் போற்றியும் வாழ்ந்துள்ளார்கள் என்பதையும் இவ்வியலில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.
- பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளில் நான்கு ஆற்றுப்படைகள் (பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர்) மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டவை என்றும், பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களைவிடவும் ஏனைய பெரும்பாணாற்றுப்படையும், கூத்தராற்றுப்படையும் பெருமளவில் தம்முள் ஒத்துள்ளன என்பதையும், ஆற்றுப்படை இலக்கியங்களில் பெரும்பாலானவை விறலி வருணனையிலும், இசைக் கருவிகள் வருணனையிலும் சிறப்புறுகின்றன என்பதையும் பற்றி இவ்வியலில் ஆராய்ந்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.
- இசைக் கருவிகளான ஆகுளி, கஞ்ச தாளம், தூம்பு, குறுந்தூம்பு, குழல், அரிக்குரல், தட்டை (கரடிகை), வல்வாய், எல்லரி (சல்லி),

கிணைப்பறை போன்ற 13 இசைக்கருவிகளைப் பற்றி இவ்வியலில் விரிவாக ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- மலைபடுகடாம் ஓர் ஆய்வு என்னும் நூலில் பத்துப்பாட்டின் பிற ஆற்றுப்படைகளோடு மலைபடுகடாம் பெரிதும் ஒத்துள்ளது. நூல் அமைப்பு என்று பொதுவாய்ப் பார்க்கும் பொழுது மலைபடுகடாத்துடன் பெரும்பாணாற்றுப்படையே பெரிதும் ஒத்து அமைகிறது. மற்றும் அரசனது அரண்மனை முற்றத்தின் காட்சி மலைபடுகடாத்திலும் பெரும்பாணாற்றுப்படையிலுமே மட்டுமே தரப்படுகின்றது என்று பலவாறான செய்திகள் இவ்வியலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

- பத்துப்பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை என்ற இவ்விரண்டு பாணாற்றுப்படை களையும் அவற்றின் பெயர்ப் பொருத்தத்தினையும், ஆராயும் சில உண்மைகளை இவ்வியல் கவனப்படுத்துகிறது.
- பாடினி, விறலி வருணணை குறித்தும், பொருநறுடன் செல்லக்கூடிய பாடினியின் கூந்தல், நுதல், புருவம் கண், வாய், பல், காது, கழுத்து, தோள், முன்கை, விரல், நகம், மார்பு, நகில், கொப்பூழ், இடை, தொடை, கணுக்கால் அடி இவ்கேசாதி பாத வருணனைக் குறித்த செய்திகளும் இவ்வியலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

# இயல் - 3

# தமிழர் வாழ்வியல் மற்றும் பண்புசார் ஆய்வுகள்

உலகத்தில் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறைகளை ஒழுங்குப்படுத்திக் கூறும் உயரிய சிந்தனைகளையே வாழ்வியல் நெறிகள் என்னும் சொற்றொடர் குறிக்கும். மனித அனுபவம், பண்பாடு, ஆன்மீகம் ஆகியவற்றை விளக்கும் இயல் வாழ்வியல். அவ்வாழ்வியல் கூறுகளில் ஒன்றான பண்பாடு என்பது காதற் பண்பாடு (களவு, கற்பு), வீரப்பண்பாடு, கொடை, ஈகை, ஒப்புரவு, தெய்வ வழிபாடு, நம்பிக்கைகள், பிறப்பு, இறப்பு, திருமணம், பிற குறித்த சடங்குகள், உயர்வு, தாழ்வு, சாதி, தீட்டு, நிலம் சார்ந்த பழக்க வழக்கங்கள், உணவு, உடை, உறையுள் போன்ற பண்புகளை உள்ளடக்கியதே சங்க காலத் தமிழர்களின் வாழ்வியல் ஆகும்.

இவ்வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆய்வு நூல்களும், முனைவர் பட்ட ஆய்வேடுகளும் வெளிவந்துள்ளன. அவ்வகையில் தொடக்க காலத்தில் வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையிலான நூல்கள் பொதுத் தன்மையிலேயே வெளிவந்துள்ளனவற்றைக் காட்டிலும் புற நூல்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகள் மிகச் சிலவே. சங்க காலத் தமிழர் நாகரிகம் பண்பாடு குறித்த நூல்கள் பல எழுந்துள்ளன. வில்டூராண்ட்டின் 'நாகரிகத்தின் கதை' (The story of civilization) என்ற நூலின் தொகுதிகளைப் போலப் தமிழர் நாகரிக பண்பாடு வரலாறுகளும் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கில்பர்ட் சிலேட்டரின் இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, க. வெள்ளைவாரணரின் 'சங்க காலத் தமிழ் மக்கள்' இரா. பி. சேதுப்பிள்ளையின் தமிழர் வீரம், லெ. ப. கரு இராமநாதன் செட்டியாரின் 'சங்ககாலத் தழிழர் வாழ்வு' இளவழகனாரின் 'சங்கநூற் கட்டுரைகள் அல்லது பழந்தமிழர் நாகரிகம்' வையாபுரிப்பிள்ளையின் 'தமிழர் பண்பாடு' நா. வானமாமலையின் 'தமிழர் வரலாறும் பண்பாடும்', கே.சி.வன்மீகநாதனின் 'பண்டைத் தமிழரின் நித்திய வாழ்க்கை' க.த. திருநாவுக்கரசின் 'தமிழர் நாகரிக வரலாறு' தேவநேயப் பாவணரின் பண்டைத் தமிழ்நாகரிகமும் பண்பாடும், பிள்ளையின் 'பண்டைய கேரளம்', சு.வித்தியானந்தனின் 'தமிழர் சால்பு', க.சுப்பிரமணியனின் 'சங்க காலச் சமுதாயம்', கு.வெ. பாலசுப்பிரமணியனின் 'சங்க இலக்கியத்தில் சமூக

அமைப்புகள்', ந. கடிகாசலத்தின் சங்கச் சமூகம், சிவகாமி, உமா மகேஸ்வரி ஆகியோரின் 'பழந்தமிழ்ப் புதுமை' சாலினி இளந்திரையனின் 'சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்' கா. காந்தியின் 'தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்', மு.சண்முகம் பிள்ளையின் 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்', கு.சுந்தரமூர்த்தியின் 'சங்க இலக்கியங்களில் சமய நோக்கு', க. கைலாசபதியின் 'பண்டைத் தமிழரின் வாழ்வும் வழிபாடும்' ஆகியனவும் இன்னும் பலவும் சங்ககாலப் பண்பாட்டு வரலாற்றையும், பண்பாட்டுக் கூறுகளையும் விளக்கும் வகையில் பலநூல்கள் வெளிவந்துள்ளன.

**பண்பாடு**

டாக்டர் செ. பழனிசாமியின் 'புறநானூற்றில் தமிழர் பண்பாடு' என்னும் இவ்வாய்வு நூல் 1989-இல் நூலாக வெளியிடப்பட்டது. இந்நூல் சங்க இலக்கியங்களில் புறநானூறு, பாண்பாட்டின் விளக்கம், சங்ககாலச் சமுதாய அமைப்பு, புறநானூற்றில் சமுதாயம், தொழில், மகளிர் நிலை, பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ஆட்சி முறை, போர், கலைகள், சமயம், உயர் நெறிக் கொள்கைகள் போன்ற பல்வேறு பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் மிகச்சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றில் தமிழர் பண்பாடு என்னும் இவ்வாய்வு நூல் புறநானூற்றில் புலனாகும் சங்ககால மக்களின் பண்பாட்டினை நன்கு தெளிவுபடுத்துகிறது. அவ்வகையில் பண்பாவது மக்கள் பெற்றிருப்பவையின் அடிப்படையில் அவர்கள் ஒழுகும் ஒழுகலாறுகளை ஒட்டியதெனப் பண்பாட்டிற்கு தந்துள்ள விளக்கம் பொருத்தமுள்ள வகையில் அமைந்துள்ளது.

தமிழ் நாட்டவரின் வாணிபம், உழவு, மட்கலம் வனைதல், அணிகலன்கள் செய்தல், இரும்புத்தொழில், தச்சுத்தொழில் முதலியன சங்ககாலத் தமிழகத்தில் சிறப்புற்றிருந்த பாங்கினையும், அவற்றின்வழி அக்காலத் தமிழர் பண்பாடு எய்தியிருந்த தன்மையினையும் இந்நூலாசிரியர் சிறப்புற எடுத்துரைத்து தெளிவுப்படுத்தியுள்ளார்.

புறநானூற்றுப் பாடல்களால் அறியும் இல்வாழ்க்கையின் சிறப்பு, கணவன் மனைவியின் பண்புகள், விருந்தோம்பல், மகளிர் நிலை, கல்வியின் மேன்மை, வாணிபம், உழவு போன்ற தொழில்கள் ஆகியனவற்றைப் பற்றி இந்நூல் திறம்பட ஆராய்கிறது.

அன்புடைமை, மனைமாட்சி, விருந்தோம்பல், மக்கட்பேற்றின் சிறப்பு போன்றவை இல்லறம் மேற்கொண்ட கணவன் மனைவியின் பண்பாடாகப் புறநானூற்றில் விளங்குகிறது என இவ்வாய்வு நூலின் வழியாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். மேலும் பூப்பற்ற பெண்டிர் கலந்தொடாமை, கைம்மை நோன்பு, சகுனம் பார்த்தல் முதலிய பழக்கங்களும், போர்த் தொடர்பான பழக்கங்களும், மக்களிடையே நிலவிய பல்வகை நம்பிக்கைகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மன்னர்களின் ஆட்சி முறைகளையும், போர் முறைகளையும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

சங்ககால சமுதாயத்தில் மகளிர் எய்தியிருந்த சிறப்பு, அவர்களின் போற்றுதற்குரிய பண்புகள், அப்பண்புகளால் அவர்தம் கணவர்கள் எய்திய பெருஞ்சிறப்பு, கணவரை இழந்த பெண்டிர், தம் கணவர்பால் கொண்டிருந்த பேரன்பினால் தாமே விரும்பி கைம்மை நோன்பு மேற்கொண்ட திறம், ஆடவர் போலப் பெண்டிரும் கல்வியால் அடைந்த புலமை ஆகியவற்றின் வழி மகளிரின் பண்பாடு இந்நூலில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

பரத்தையர் ஒழுக்கம் இழிவானது என்று அக்காலச் சமுதாயம் கருதினும் சங்க இலக்கியங்கள் அவ்வொழுக்கத்ததைப் பற்றி பல பாடல்களில் பாடியிருப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது என்று டாக்டர் செ. பழனிச்சாமி கூறுவது குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது. அவ்வகையில்,“சங்க காலத்தில் பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகிய இவர்களுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தமையால் ஆடவர் பலர் போரில் மடிந்தனர். இதன் விளைவாக நாட்டில் ஆடவர் தொகை குறைந்தது. பெண்டிர் தொகை மிகுதியாயிற்று. சங்க காலத்தில் ஒருவன் ஒருத்தியை திருமணம் செய்து கொள்ளும் முறையே இருந்தது. இதனால் திருமணம் செய்து கொள்ள வாய்ப்பற்ற மகளிர், பரத்தையர் ஆகும்நிலை உண்டாயிற்று எனலாம்.” (1989: 72, 73) என்பதை எடுத்துரைத்துள்ளார்.

புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியும் பலதிறப்பட்ட பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் விளக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் முடியாட்சியே நிலவினும் அரசர்களும் மக்களும் தம்முள் வேறுபாடின்றி பொதுநல மனப்பான்மையுடன் வாழ்ந்து வந்த திறத்தினை இந்நூல் விரிவாக விளக்குகிறது.

இசை, அதற்குரிய பல்வகைப் பண்கள், இசைக்கருவிகள், ஆடற்கலை அதன் வகைகள் இக்கலைகளில் கலைஞர்கள் பெற்றிருந்த பெரும்புலமை ஆகியன உணர்த்தும் பண்பாடும் பல கடவுளர்களையும் மக்கள் வேற்றுமை மனப்பான்மையின்றி வழிப்பட்ட பண்பாட்டுத் திறனும், அக்கால மக்களிடையே நிலவிய உயர்தெறிக் கொள்கைகளும் படிப்போர் மனங்கொள்ளும் வகையில் இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

புறநானூற்றுப் பாடல்களில் பண்டைத் தமிழரின் சில பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அவை அக்காலப் பண்பாட்டினைப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளது. அவ்வகையில், “வையாவி கோப்பெரும்பேகன், தன் மனைவியை விட்டுப் பிரிந்து பரத்தையிடம் வாழ்கிறான். கபிலர், பரணர் போன்ற புலவர்கள் பேகனை கண்ணகியுடன் சேர்ந்து வாழ அறிவுரை கூறுகின்றனர். அரிசில்கிழாரும் ‘உன்னுடைய பிரிவினால் கண்ணாகி தன் கூந்தலில் மலரைக்கூட சூடிக் கொள்ளாமல் இருக்கின்றாள். ஆகவே அவள் துயரத்தைப் போக்கப் புறப்பட்டுச் செல்வாயாக’ என்று அறிவுரை கூறுகின்றார். இதனால் பெண்கள், கணவனைப் பிரிந்திருந்த காலத்தில் பூச்சூடமாட்டார்கள் என்பது பெறப்படுகின்றது” (1989:92) அதாவது கணவனைப் பிரிந்த மகளிர் தம்மை அலங்கரித்துக் கொள்ளமாட்டார்கள் என இந்நூலாசிரியர் எடுத்துரைக்கும் போக்கு சிறப்பிற்குரியது.

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் தூய்மையற்றவர்களாக கருதப்படுவர். அவர்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் கலந்தொடா மகளிர் எனப்பட்டனர். இந்நிலை இன்றும் இருந்து வருகின்றது. அவ்வகையில் இதனை விளக்கும் பொருட்டு, “மாதவிலக்கு கொண்ட பெண் ஒருத்தி இனிய பழந்தரும் மரத்தினடியில் நின்றால் அம்மரத்தின் பழம் கொடிய கசப்பாக மாறிவிடும். அவள், தானியத்தைத் தொட்டால் அது விதைப்பதற்கு உதவாது.

வளரும் பூச்செடியருகில் சென்றால் அது வாடி வதங்கிவிடுகின்றன என்று பிளினி கூறும் கருத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். இவற்றால், இயற்கையின் கூறுகள் மாதவிலக்காகிய பெண்களால் பாதிக்கப்படுகினறன, மேலும் அக்காலத்தின் நம்பிக்கையினைப் புலப்படுத்துவதாகவும் உள்ளது என்றும் கருவேப்பில்லை, துளசி முதலியவற்றின் அருகில் மாதவிலக்குக் கொண்ட பெண்கள் சென்றால் அவை காய்ந்து விடும் என்று இன்றும் கூறி வருகின்றனர்," (1989: 92, 93) என்ன எதார்த்தமாக கூறுகிறார் ஆசிரியர்.

'புறநூல்களில் பொருளியல் கோட்பாடுகள்' என்றும் நூல் முனைவர் மகா. வேங்கடராமன் அவர்களால் எழுதப்பட்டு 1989-இல் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையில் நிதி உதவி பெற்று வெளியிடப்பட்டது.

இந்நூலில் சங்க காலப் பொருளியலின் பொதுச்சூழலும் நடைமுறைகளும் பகுதி – I-இல் என்னும் தலைப்பின் கீழ் நில அமைப்பு, வேளாண்மை, வேளான் தொழில்நுட்பம், தொழில்வள வாய்ப்புகளும் நடைமுறையும், மக்கள் தொகை மற்றும் சங்க காலப் பொருளியலின் பொதுச்சூழலும் நடைமுறைகளும், பகுதி-2 என்னும் தலைப்பின் கீழ் கனிவளமும் பிறவளங்களும், வெளிநாட்டு வாணிபம், உள்நாட்டு வாணிபம், பொருளியல் வளர்ச்சிக்கான அமைப்புகள் ஒரு மதிப்பீடு, நாணயம், பாதுகாப்பு, பொது வருவாய் வாய்ப்பு, வரி வருவாயும் செலவினங்களும், புறநூல்களில் காணலாகும் பொருளியல் கோட்பாடுகள் போன்ற பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கோட்பாடுகளை சங்கப் புறநூல்களின் கருத்துக்களோடு இணைந்து ஒப்புநோக்கி எழுதப்பட்டுள்ளது இந்நூல். மக்கள் தொகை பற்றியும், வெளிநாட்டு வாணிபம் குறித்தும், நாணயம் குறித்தும் இந்நூலாசிரியர் புலப்படுத்தும் செய்திகள் சிந்தித்தற்குரியதாகும்.

மக்கள் தொகைப் பெருக்க கட்டுப்பாட்டைக் குறித்தும் அதனால் ஏற்பட கூடிய விளைவுகள் குறித்தும் இந்நூலாசிரியர் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். அவ்வகையில், "நாற்பத்தெட்டாண்டுகள் மணவாழ்வை மேற்கொள்ளாது வாழ்ந்த சான்றோர் சிலர் மதக்கோட்பாட்டின் நெறிக்குட்பட்டு இருந்தனர் என்பதைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. திருமணம் செய்து கொள்வதில்

சிலருக்கு ஏற்பட்ட காலத்திலும் மக்கள் தொகை கட்டுப்பாட்டிற்கு காரணமாயிற்று என்றும், மேலும் அன்றைய சமுதாயத்தில் போர்ச் செய்யச் செல்வதன் காரணமாகவும், வாணிபம் காரணமாகவும் தமிழரின் மணவாழ்வில் தடை ஏற்பட்டுள்ளது என்று இந்நூலாசிரியர் ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளார் 'யாண்டு தலைப்பெற வேண்டு புலத்திறுத்து' (பதிற்றுப்.:37) என்னும் பதிற்றுப்பத்து அடி போர்மேல் சென்றவர் பல ஆண்டுகள் போர்ப்பாசறையிலேயே வாழ்வர் என்பதை உணர்த்துகிறது. ஓதற்பிளவு, துதிற்பிளவு பொருள்வயின் பிரிவு போன்ற பல்வகைப் பிரிவுச் சூழ்நிலைகளும் அன்றைய இல்லற வாழ்வின் சிறு தடையாகி மக்கள் தொகைபெருக்கத்தை கட்டுப்படுத்தியிருக்கலாம்," (1989:85) என்று இந்நூலாசிரியர் கூறுகிறார்.

அன்றைய சமுதாயத்தில் பரத்தையர்ப் பிரிவு பெருவாரியாக இருந்தது. உரிமை மகளிரோடு காதற் பரத்தையர், சேரிப்பரத்தையர், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் போன்றோரை அகநூல்கள் காட்டுகின்றன. இத்தகைய கூடாவொழுக்கம் அன்றைய நாளில் கடிந்துரைக்கப்படவில்லை. இதுவும் மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாட்டிற்குக் காரணமாகலாம். அன்றிருந்த சமூகக் கேடுகளுள் மிகவும் பெரியதானதொரு கேடு இக்கூடாவொழுக்கமாகும் என்று கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் கூறுகிறார்.

படைவீரர்களும் சிலர் அரசனைச் சூழ்ந்து அவனுக்குப் பாதுகாப்பாய் இருப்பர். அரசன் இறப்பின் அவன் உடலோடு இவ்வீரர்களையும் உயிருடன் வைத்துப் புதைப்பதோ, எரிப்பதோ வழக்கமாயிருந்தது என மார்க்கோபோலோ குறிப்பிட்டிருப்பதாக அ.கி. பரந்தாமனார் அவர்கள் குறிப்பிடுகிறார். இதனாலும் மக்கள் தொகை அளவோடு இருந்திருக்க வாய்ப்புண்டு.

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாடலில், தென்புலக் கடன் செய்தற்குரிய புதல்வர்களைப் பெறாதோர்க்குப் போரில் கலந்து போர் செய்யும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. மேலும் புதல்வர் பெறாமை யாதும், அத்தகையோர் வாழ்நாள் பாழே என்று கருத்துப்பட பாண்டியன் அறிவுடைநம்பி 'மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறையில்லை தாம் வாழும்நாள்' எனக் கூறியுள்ளான்.

மேலும்பொன்முடியார், மூதின் மகளாயிருந்து காளைகளை ஈன்று புறத்தருதல் என்தலைக்கடன் என்கிறார்.

மேலும், பெண்மகப் பேற்றினும் ஆண்மகப் பேற்றையே சங்காலத்தமிழர் விரும்பினர். மக்கட்கொடைப்போர் காரணமாகத் தாம் பிறந்த ஊருக்கு அணங்காயினார் சிலரைப் புறப்பாடல் காட்டுகிறது. பெரும்போருக்கும், பேரழிவிற்கும் காரணமாகும் இத்தகைய பெண்கள் பிறப்பதை காட்டிலும் பிறவாமல் இருப்பதே மேல் என்றுக் கருத்துப்பட பரணர் 'குவளை உன்கண் இவளைத் தாயே ஈனாள் ஆயினள் ஆயின் ஆனாது' என்று பாடுகிறார். எனவே, அன்றைய சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் மக்கள் பேற்றை பெரிதும் விரும்பியது உறுதி.

போருக்கு காரணமாகும் பெண்பிறப்பை வெறுத்த பழந்தமிழ்ச் சமுதாயம்,போரிலிடபட்டு களிறெறிந்து பெயரும் காளையரை விரும்பியது எனின் மகட்கொடை காரணமாக வரும்போரை மட்டும் அன்றைய சமுதாயம் விரும்பவில்லை எனக் கருதலாம்.

ஏற்றுமதிப் பொருள் வளம் மிகுதியாக உடையது சங்ககாலத் தமிழகம். அப்பொருள்வளம் அயல் நாட்டினரைக் கவர்ந்தது. கிருத்து பிறப்பதற்கு முன்னதாகவே தமிழகப் பொருள்கள் அயல்நாடுகட்கு ஏற்றுமதியாயின. கலை, கலாச்சார நோக்கமோ, வியாபார நோக்கமோ கொண்ட தூதுவர்கள் அனுப்பப்பட்டனர் அயல்நாடுகளுக்கு.

சங்க காலத்தில் கடல் வாணிபம் நடந்தமைக்கும், மிகப் பெருங்கலங்கள் அன்றிருந்தமைக்கும் சங்க இலக்கியச் சான்றுகள் நிரம்ப உள்ளன. எனினும் அவை தமிழகக் கப்பல்களே என உறுதியாகக் கூற வாய்ப்பில்லை என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

கிரேக்க நாட்டுக் கப்பல்களில் பிறநாட்டு வணிகர்க்கு வாடகைக்கு கொடுத்தால் வருவாய்ப் பெருகும் என்பார் செனஃபன் (கி.மு. 440-353). இதன்படித் தமிழர் கிரேக்கர் கப்பல்களை வாடகைக்குப் பெற்றிருக்கவும் கூடும் எனக் கருதலாம் என இந்நூலாசிரியர் யூகிக்கின்றார்.

“இந்திய மருந்து என அழைக்கப்பட்ட மிளகு அன்று மிகச்சிறந்த ஏற்றுமதிப் பொருளாக இருந்தது. வீடுகளில் மிளகு மூட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும், அவைகளை ஏற்றிக் கொண்டு சில கலங்கள் கடலில் செல்லும்” (புறம். 343:3) என்கிறது பறநானூறுகடல் வாணிபம் பற்றி மிக விரிவாக பேசும் நூல்களில் ஒன்று பத்துப்பாட்டின் ஒன்பதாவது பாடலான பட்டினப்பாலையாகும். இந்நூலின் வாயிலாக வடமலையின் மணி, பொன், குடமலை, ஆரம், அகில், தென்கடல் முத்து, குணகடல் துகிர், கங்கைவாரி, காவிரிப்பயன், மேலைக் கடற்கரையிலிருந்து வந்த கருங்கறி மூட்டைகள் என்னுமிவை சிறந்த ஏற்றுமதிப் பொருள்களாக இருந்தமையை” (பட்டினப். :187-191) இந்நூலாசிரியர் எடுத்துரைக்கிறார்.

புறநானூற்றில் காணப்படும் ‘கலம் தந்த பொற்பரிசம்’ (புறம். 126:14) ‘வானவன் குடகடல் பொலம்கதரு நாவாய்’ (புறம். 126:15) என்னுந் தொடர்களும், யவனர் நன்கலம் தந்த தன்கமழ் தேறல் (புறம். 56:78) என்ற தொடரும் அன்று பொன்னும், மதுவும் இறக்குமதிப் பொருட்களாய் இருந்தமைக்குச் சான்றாகும். ஈழத்துணவு, காழகத்தாக்கம், நிமிர் பரிப்புரவிகள் என்னுமிவற்றை இறக்குமதிப் பொருள்கள் எனச் சுட்டுகிறது பட்டினப்பாலை (பட்.பா. 185:191) என இந்நூலாராய்ச்சியின் மூலம் ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார்.

மீனைக்கொடுத்து நெல்லைப் படகுகளில் ஏற்றிக் கொண்டு திரும்பினர் சிலர் என்று கடற்கரை ஓரமாய்ப் பண்டமாற்று முறையில் கடல் வாணிகம் நடைபெற்றதைப் புறநானூறு (புறம். 343: 1-2) விளக்குகிறது.

| | |
|---|---|
| **பொன்னொடுவந்து கறியொரு பெயரும்** | **(அகம். 149 : 9-10)** |
| **புகா அர்ப் புகுந்த பெருங்கலம்** | **(புறம். 30 : 10-12)** |
| **யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்** | **(புறம். 56 : 18)** |
| **கலந்தந்த பொற்பரிசம்** | **(புறம். 343 :5)** |
| **நீரின் வந்த நிமிர்பரிப் புரவி** | **(பட்.பா.: 185)** |
| **பொலந்தரு நாவாய்** | **(புறம். 125 : 15)** |

'கலந்தரு திரு' (சிலம்பு-2:1-2) என்பன போன்ற இலக்கியச் சான்றுகளைக் கூர்ந்து நோக்கினால் (வந்து .... பெயரும், புகுந்த, தந்த, வந்த) தமிழர்கள் கலங்கள் கடல் கடந்து சென்றதாக உறுதியாக கூற முடியவில்லை. தமிழரின் வாணிபம் பெரும்பாலும் கடற்கரையோடு வாணிபமாகவே இருந்திருக்க வேண்டும் எனக் கருத வேண்டியுள்ளது என ஆசிரியர் கூறுகிறார். மேலும் தமிழர் வாணிபம் பெரும்பாலும் கீழ்க்கடற்கரையையே முக்கியமாகக் கொண்டு நடைபெற்றுள்ளது எனவும் எண்ண வேண்டியுள்ளது.

ஆப்பிரிக்காவின் வடகிழக்கில் இருக்கும் சோமலிலாந்து மக்கள் இலவங்க எண்ணெய் வியாபாரத்தில் இந்தியரை ஏமாற்றினர். அயல்நாட்டு வணிகரால் இந்த உண்மை இந்தியருக்குப் புரிந்தது என்கிறது பெரிப்ளூஸ் என்னும் நூல் என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

வாசாப் என்னும் வழிச் செலவினன் சுட்டிக் காட்டியிருக்கும் அராபிய வணிகரின் குதிரை வியாபார சூது தமிழர்கட்குப் பலநாட்கள் புரியாமல் இருந்ததோடு பெரும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியது. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகள் பயன்படுத்த முடியாத நிலையில் திரும்ப அனுப்பப்படும்போது அவை கடல் நடுவே இறந்துபடுமாயின் நட்ட ஈடாக செலுத்த வேண்டிய தொகை குதிரை ஒன்றுக்கு 210 டினார் என்னும் சிவப்புத் தங்க நாணயங்கள் என்கிறார் வாசாப் என்பர். இச் செய்திகள் சங்கத் தமிழருக்கு அயல்நாட்டு வாணிபத்தில் நேரடித் தொடர்பில்லை என்பதை உறுதி செய்வதோடு வாணிகச் சாதக சூழ்நிலை இருந்திருக்க வாய்ப்பில்லை என்பதையும் புலப்படுத்துகின்றன.

குதிரை வியாபாரத்திலும், இலவங்க எண்ணெய் வாணிபத்திலும் தமிழர் ஏமாற்றடைந்ததுபோல் அயல்நாட்டு வணிகர் ஏமாற்றமடையவில்லை. தமிழரிடம் இருந்த வாணிக நேர்மை, நாணயம் அன்று அயல்நாட்டினரிடம் இல்லை. அயல்நாட்டு வாணிபத்தில் வந்து குவிந்த பொற்கட்டிகள் ரோம் நாட்டிற்கு அனுப்பப்பட்டு, நாணயங்களாக மாற்றப்பட்டுத் திரும்பின. அந்நாணயங்கள் எபிரான் (Apyron) என்றழைக்கப்பட்டன என்று 'டையோ டோராஸ்' (Diodorus) என்ற வரலாற்று அறிஞர் கூறியுள்ளதாக பெரிப்ளூஸ் குறிப்பிடுவதாக ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

பண்டமாற்று முறையே பெரிதும் வழக்கிலிருந்து பழந்தமிழகத்தில் அயல்நாட்டு வாணிகத்தில் மட்டும் பண்டமாற்று முறையோடு நாணயச் செலாவணியும் நடைமுறையில் இருந்திருக்கக் கூடும். மேலும் விலையுயர்ந்த பொருள்கள் வாங்குவதற்கும் அந்நாணயங்கள் பயன்பட்டன.

அயல்நாட்டு வாணிகத்தைப் போன்றே உள்நாட்டு வாணிகமும் ஒரு நாட்டின் பொருள் வளர்ச்சிக்குத் துணையாகும். உள்நாட்டு வாணிகமும் சங்ககாலத் தமிழகத்தில் சிறந்திருந்தது. அயல்நாட்டு வணிகரைப் போன்றே உள்நாட்டு வணிகரும் செல்வ வளமுடையராயிருந்தனர்.

'கூலம் பகர்நர் குடி புறந்தரா அ' என்ற பதிற்றுப்பத்து அடியை எடுத்துக்காட்டி, சாமி சிதம்பரனார், உணவு தானிய வியாபாரிகளிடம் உயர்ந்த செல்வமுண்டு என்று கூறுகிறார். உள்நாட்டு வணிகர்க்கு ஆறலைக் கள்வராலும் பிறவற்றாலும் ஊறு நேராவண்ணம் காப்பது மன்னன் கடமை என்பதையும் இவ்வரி விளக்குகிறது.

'கூலம் குவிந்த கூலவீதியின் சிறப்பைச் சிலப்பதிகாரம் விரிவாகப் பேசுவதால், அன்று தானியம் விற்கும் கடைத்தெரு தனியே இருந்தது என அறிய முடிகிறது. மேலும் நாளங்காடி, அல்லங்காடி பற்றி அந்நூல் கூறுவதால், அன்று பகற்கடைத் தெருவும், இரவுக்கடைத் தெருவும் இருந்தன என்பதையும் அந்நூல் சுட்டுகிறது.

பண்டமாற்று முறை வாணிபம் நடைபெற்ற அன்று, பணம் போன்ற இடைப்படு (Medium) மதிப்பு ஒன்றில்லை.வட்டில் நிறைய மான்தசை கொண்டு சென்று வீரர்களாய் வேட்டுவனும், தசும்பு நிறைய தயிர் கொண்டு சென்று விற்ற ஆய்மகளும் முறையே வட்டில் நிறையவும், தசும்பு நிறையவும் வெண்ணெய் பெற்றுத் திரும்பியதைப் புறநானூறு காட்டுகிறது.

'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' (அகம். 140: 7) நெல்லின் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோ (அகம். 390: 8-9) எனவரும் அகநானூற்றடிகளைக் கொண்டு, அன்று நெல்லும் உப்பும் ஒத்த மதிப்புடையன என உணரலாம்.

நீண்டநாள் பாதுகாத்து வைக்க முடியாத உப்பு அன்று மிகுந்த தேவைப் பொருளாகப் பற்றாக்குறை நிலையில் இருந்திருக்கக் கூடும். (அகம்.8-9), தம்மிடமுள்ள பொருளைத் தந்து கள்ளை விரும்பியுண்டமையை இலக்கியங்கள் காட்டுகின்றன. கள்ளின் ஒள்விலையாகச் செந்நெல்வல்சி தந்தமையைப் பதிற்றுப்பத்து காட்டுகிறது, (ப.75: 10-12). தேனும் கிழங்கும் தந்து மாற்றாகக் கள்ளுண்டமையைப் பொருநர் ஆற்றுப்படை சுட்டுகிறது.

இச்சான்றுகளைக் கொண்டு அன்று பண்டமாற்று முறையே வழக்கிலிருந்தது என்பது பெறப்படுவதோடு, பொருள்களுக்கெனத் தனித்தனி விலை மதிப்பின்றித் தேவையே பொது மதிப்பாக இருந்தது என்றும் தெரிய வருகிறது.ஒருவனிடம் பல வழிகளில் பயன்படுத்தத் தக்க பொருள் இருக்குமானால் அதை எல்லாவற்றின் இறுதிநிலைப் பயன்பாடும் ஒன்றுக்கொன்று சமமாக உள்ள பல பண்டங்களுக்குப் பகிர்ந்து அளிப்பர் என்ற மார்ஷலின் கூற்றுக்கேற்ப அன்றைய மக்கள் தம்மிடம் மிகுதியாக உள்ள பொருள்களைக் கொடுத்தத் தாம் விரும்பிய பொருள்களை வாங்கினர்.

ஆறலைக் கள்வர்களின் அச்சம் காரணமாக அவர்கள் கூட்டம் கூட்டமாக வாணிபத்தில் ஈடுபட்டனரேயன்றிக் கூட்டு வாணிப நோக்கமன்று. அவர்களது முயற்சி கூட்டுத் தொழில் முயற்சி இருந்தது போலக் கூட்டு வாணிப முயற்சி அன்றில்லை. ஏனெனில் அன்றைய வணிகர் பெரும்பாலும் ஓரிடத்தில் தங்கியிருக்க வாய்ப்பில்லை.

ஒரு மதிப்பீடு என்றும் தலைப்பினுள், அரசு அமைப்பு குறித்து பேசப்பட்டுள்ளது. அதாவது பொருள்வழி வாணிபம் செய்தல் அரசர்க்கு உரியது ஒன்றாயினும் அவ்வாறு வாணிபத்தில் நேரடியாக ஈடுபட்ட அரசனையோ அரசையோ இலக்கியத் துணையுடன் அறிய முடியவில்லை. நாடு காவல் என்னும் பொதுப் பணிக்குட்பட்டு வணிகர்க்கு ஆறளைக் கள்வரால் ஊறு நேராவண்ணம் பாதுகாப்புத் தந்ததும், வணிகர் சிலரிடம் வரித்தண்டல் செய்ததும் தவிர, உள்நாட்டு வாணிபத்தை கண்கானித்து வளரச் செய்ய அரசு எத்தகைய நடவடிக்கைகளும் எடுத்தற்கான நேரடிச் சான்றுகளில்லை.

வெளிநாட்டு வாணிபத்தில் அரசு சிறிது அக்கறை காட்டியுள்ளது என்பது பட்டினப்பாலையால் புலனாகிறது.கடற்கரை ஓரமாக ஆற்றின் கழிமுகப் பகுதியில் ஆயத்துறை அல்லது சுங்கச்சாவடி இருந்தமையைப்

பெரும்பாணாற்றுப் படை குறிப்பிடுகிறது. (பெரும்.70-82 & 117-129) உள்நாட்டில் வாணிபம் செய்வாரிடம் வரி வசூலிக்கப்பட்டமையைப் பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது. (பெரும். 80-81)

‘கூலம் பகர்நர் குடிபுறந்தருதல்’ மன்னர் கடமை எனப் பதிற்றுப்பத்துச் சுட்டுவதால், வாணிபம் செம்மையாக நடைபெறச் சங்ககால மன்னர் உதவியுள்ளனர் என்பது உறுதி. உழவும் வாணிபமும் உலகத் தொழில்களில் மிகுத்துச் சொல்லத் தகுவன. அவ்விரண்டால்தான் செல்வத்தைத் திரட்ட முடியும் என்கிறார் மா. இராசமாணிக்கனார் என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

பொன் வணிகர், கூலவணிகர் அறுவை வாணிகர் என்ற அடைமொழிகளால் புலவர் சிலர் அழைக்கப்படுவதால், அவர்கள் ஒவ்வொரு தொழிலைத் தனித்தனியே செய்து வந்தனர் என அறிய முடிகிறது. இத்தனி வியாபாரிகள் தாம் விற்பனை செய்யும் பொருள்களுக்கு அடையாளமாகக் கொடிகளைக்கட்டி வைத்தனர் என்பதைப் பட்டினப்பாலையின் 180-வது பாடல் குறிப்பிடுகிறது. கட் கொடி நுடங்கும் ஆவணம் பற்றி பதிற்றுப்பத்தின் 68-வது பாடல் குறிப்பிடுகிறது.

முத்து, யானைத்தந்தம், மிளகு, தோகை, மஸ்லின் ஆடைகள் மணப்பொருள்கள், மரவகைகள், மூலிகைகள் போன்றன ஏற்றுமதிப் பொருள்களாயிருந்தன. இவற்றுக்குப் பதிலாக வெள்ளி, பொன் நாணயங்கள், மதுவகைகள், பவழம், ஈயம், தகரம், எந்திரப் பொறிகள் என்பன இறக்குமதிப் பொருள்களாயிருந்தன என ஆசிரியர் மகா. வேங்கடராமன் எடுத்துரைத்துள்ளார்.

வாணிபத்தில் ஈடுபட்டிருந்தோர் பெருஞ்செல்வராகயிருந்தனர். கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தோர் பெருந்தன வணிகராய் இருந்தனர். இவ்வாறு அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டோர், அயல் நாட்டினர் விரும்பும் உள்நாட்டுப் பொருள்களைத் தேடிச் சேகரித்துக்காத்து அயல் நாட்டு கலன் வரும்போது அவற்றை ஏற்றுமதி செய்தனர். அன்றைய தமிழர் நேரடிக் கடல் வாணிபத்தில் ஈடுபடாமல், பண்டங்களைச் சேகரித்து அனுப்ப உதவும்

இடைத்தரகர்களாகவே இருந்திருக்க வேண்டும். எனவே அவர்கள் செய்து வந்த வாணிகம் Carring Trade என்றே கொல்லலாம் என இந்நூலாராய்ச்சியின் மூலம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

**நாணயம்**

பொருளியல் தொடர்பான ஆய்வை மேற்கொள்பவர்களுக்கு வேளாண்மை, வாணிபம், வரவு செலவு என்னுமிவை பற்றிய ஆய்வு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது நாணயச் செலவாணி பற்றிய ஆய்வும்.பண்டமாற்று முறையே பெரிதும் இருந்த கடைச்சங்க காலத்தே, நாணயச் செலவாணி நடைமுறையில் இருந்ததெனக் கூற உறுதியான அகச்சான்றுகளில்லை.

'காசு' என்னுஞ் சொல் அகப்புற இலக்கியங்களில் காணப்பெற்றாலும், அணிகலமாக அணிந்து கொள்ளப் பயன்பட்ட பொற்காசுகளையே குறிக்கின்றது அச்சொல்.அகப்புற இலக்கியங்கில் காணப்பெறும் 'காசு' என்னுஞ் சொல், அணிகலமாக அணிந்து கொள்ளப் பயன்பட்ட பொற்காசுகளையே,

**பொலஞ்செய் பல்காசு அணிந்த (புறம். 353 : 2)**

**பொலஞ்செய் காசின் (அகம். 363)**

**பொலங்காசு நிரைத்த (அகம். 269: 15)**

**கைவினை பொலிந்த காசமை பொலங்காழ் (கலி. 85 : 3)**

**'……… சீறடிப் பொலிந்த**
**தவளை வாய பொலஞ்செய் கிண்கிணிக் காசு (குறுந். 148 : 1-3)**

'பல்காசு நிரைத்த' என வரும் திருமுருகாற்றுப்படை இலக்கிய அடிகளில் உள்ள 'காசு' என்னுஞ்சொல் அனைத்தும் அணிகலக் காசினையே குறிக்கின்றன.

வேப்பம்பழம், கொன்றையரும்பு போன்ற வடிவ அமைப்புக் கொண்ட காசுகள், அணியாகப் பயன்பட்டதோடு, மிக மிக இன்றியமையாத நேரங்களில் நாணயம் போன்று பயன்பட்டிருக்குமோ என எண்ணந்தோன்றுகிறது.

“சங்ககால வரலாற்றிற்கு நாணயங்கள் புரிந்துள்ள உதவி மதிப்பிடற்கரிய ஒன்றாகும். சதுரவடிவிலும் நீண்ட சதுர வடிவிலும் பழம் பாண்டியர்களின் நாணயங்கள் சில கிடைத்துள்ளன. அவற்றின் ஒரு புறம் மீன் வடிவமும் மறுபுறம் யானை அல்லது காளை உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட தாகலாம். பொன், வெள்ளி, செம்பு என்ற உலோகங்களால் ஆக்கப்பட்ட உரோமானிய நாணயங்கள் புதை பொருள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை அவர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட வியாபாரத்திற்குப் பயன்பட்டிருக்கக் கூடும் என்றும் கனகசபைப் பிள்ளையவர்கள் குறிப்பிடுவதாக ஆசிரியர் இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்,” (1989: 134)

“இந்தியாவிலிருந்து பொற்கட்டிகள் ரோம நாட்டுக்கு அனுப்பபட்டு அங்கிருந்து அவை நாணயங்களாக அடிக்கப்பட்டு இந்தியாவுக்குத் திரும்ப அனுப்பப்பட்டன. இவ்வகைப் பொன் ஏபிரான் (Apyron) எனப்படும் என்று ‘டையோடோரஸ்’ (Diodorus) என்ற வரலாற்று ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது என பெரிப்ளூஸ் குறிப்பிடுகிறது,” (1989: 136) என தன் கருத்துக்கு வலு சேர்க்கும் வகையில் கூறியுள்ளார்.

சங்க காலத் தமிழர் நாணயம்பற்றி அறியாதவர் எனக் கூற முடியாது. அவர்கள் தம்மிடமுள்ள அணிகலன்களைப் பண்டமாற்றுப் போலவே பயன்படுத்தினர் எனக் கூறலாம். அவ்வாறு பயன்படுத்தியவை அயல் நாட்டு நாணயங்களேயாகும். நாணயச் செலாவணியின் நன்மையையும் எளிமையினையும் உணர்ந்த சங்கத்தமிழர் மீன், யானை, காளை உருவம் பொறித்த நாணயங்களைத் தயாரிக்கச் செய்து இறக்குமதி செய்து கொண்டிருக்கக் கூடும்.இதுவரை கூறியவற்றை நோக்கினால், சங்க காலத்தே நாணயச் செலவாணி அன்றாட நடைமுறையில் இல்லை. அத்தியாவசிய நேரங்களிலும், அயல்நாட்டு வாணிபத் தொடர்புகளின் போதும் அயல் நாட்டு நாணயம் பரிமாறப்பட்டது என ஒருவாறு விளங்கிக்கொள்ள முடிகிறது.

பண்டைத் தமிழகத்தில் பழமையான தமிழ்க்குடிகள் பல வாழ்ந்திருந்தாலும் அவற்றுள் புகழ்மிக்கது பாணர்குடி. அக்குடியைப் பற்றிய

பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) ஆய்வாகவும், இன மரபியல் (Ethnology) ஆய்வாகவும் விளங்கக்கூடிய 'தமிழ்ப்பாணர் தம் வாழ்வும் வரலாறும்' என்னும் நூல் வெ. வரதராசன் அவர்களால் எழுதப்பெற்று 1973-இல் வெளியிடப்பட்டது.

இந்நூலில் பாணரின் வாழ்வையும் வரலாற்றையும் ஆசிரியர் புதிய முறையில் அணுகியுள்ளார். மேலும் பண்டைத் தமிழும் பாண் மக்களும், பாணரும் ஆற்றுப்படையும், பாணரும் புலவரும், பாணரும் புரவலரும், பாணரும் பொது மக்களும், பாணரும் இசைக் கருவிகளும், பாணரும் இலக்கிய மரபும் என்னும் ஏழு வகையான பொருண்மைகளைக் கொண்டு தமிழ் பாணரின் வாழ்வையும் வரலாற்றையும் இந்நூலாசிரியர் ஆராய்ந்துள்ளார்.

பாணர்களில் ஒரு பிரிவினராகிய யாழ்ப்பாணரைப் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில், இவ்யாழ்ப்பாணர்களில் சிறுபாணர், பெரும்பாணர் என்ற இரு வகையினர் இருந்தனர். 9 நரம்பினையுடைய சிறிய யாழை வாசித்தோர் சிறுபாணர் எனவும் 21 நரம்பினையுடைய பேரியாழை வாசித்தோர் பெரும்பாணர் எனவும் கூறப்பட்டனர் என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணர்கள் யாழைத் தாம் வழிபடும் தெய்வமாகவே போற்றினர். யாழ்த்தெய்வமும் ஒன்றுண்டு என்பதை நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையிலும் கூறுகிறார். அதன் பெயர் மாதங்கி என்பதாகும் என ஆசிரியர் சுட்டிச் செல்லும் பாங்கு இங்கு கவனிக்கத்தக்கது.

"பாணர்கள் காட்டுவழிப் பயணங்களை மேற்கொள்ளும்போது கள்வர்களாலும் காட்டு விலங்குகளாலும் பிற வருத்துந் தெய்வங்களாலும் தீங்கு வாராது காத்தற் பொருட்டு கடவுளைப் பாடிபரவுவதும் வழக்கம். பொருநர் ஆற்றுப்படையில் பொருநன் கானுரை தெய்வத்தை வழிபட்டமையை ஆசிரியர்,'கைவல் இளையர் கடவுள் பழிச்ச' என்னும் பதிற்றுப்பத்தின் (41:6) அடியும் இசைத்துறையில் வல்ல இளையவர்கள் தாம் செல்லும் வழியில் தீங்கு வாராமை பொருட்டு தெய்வத்தை வழிபடும் வழக்கமுன்டென்பதை வலியுறுத்துகிறது.

பாணர்கள் புலவரைக் காணும் விருப்பத்துடன் புறப்படும்போது நிமித்தம் பார்த்துச் செல்லும் வழக்கமும் இருந்துள்ளது.

**வளரத் தொடினும் வெளவுடி திரிந்து**
**தளரும் நெஞ்சம் மனையோள்**
**உளரும் கூந்தன் நோக்கி, கலர (புறம். 260)**

அதாவது விரித்த கூந்தலுடன் ஒருத்தி முன்னால்வரின் அதனைத் தீய நிமித்தமாக கருதினர். பின்னர் இத்தீநிமித்தத்தால் உண்டான தீங்கை விலக்குதல் வேண்டிக் 'கள்ளி நீழல் கடவுளை' வாழ்த்தினன் அப்பாணன் என்று கூறுகிறார் ஆசிரியர். இதன் மூலம் பாணர் தீ நிமித்தத்தை நீக்கவும கடவுளைப் பரவினர் என ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது.

நமக்கு கிடைத்துள் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும், பத்துப் பாட்டிலுமே ஆற்றுப்படைப் பாடல்கள் காணப்படுகின்றன. மேலும் புறநானூற்றில் கூத்தராற்றுப் படைக்கும் பொருநராற்றுப் படைக்கும் பாடல்கள் இல்லை. ஆனால் பாணாற்றுப் படைக்கும், விறராயாற்றுப் படைக்கும் பாட்டுகள் உள்ளன. பாணாற்றுப்படையாகப் புறத்தில் எட்டு பாட்டுகள் உள்ளன. 68, 68, 70, 138, 141, 155, 180, 181 என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பதிற்றுப் பத்தில் பாணாற்றுப் படையிலும், விறலியாற்றுப் படையிலும் அமைந்துள்ள பாடல்களே இடம்பெற்றுள்ளன. பிற ஆற்றுப்படைகளான பொருநராற்றுப்படையும் கூத்தாராற்றுப்படையும் காணப்பெறவில்லை இதில் பாணாற்றுப்படையில் 2, விறலியாற்றுப்படையில் 6 பாடல்கள் உள்ளன.

பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைப் பாடல்கள் உள்ளன. அவற்றுள் திருமுருகாற்றுப்படை தவிர்த்து மற்ற நான்கும் பொருநனை ஆற்றுப் படுத்தியும், சிறு பாணனையும் பெரும்பாணனையும் ஆற்றுப்படுத்தியும் கூத்தனை ஆற்றுப்படுத்தியும் பாடப்பட்டுள்ளது. இவையனைத்தும் புலவர் தம்மை பாண்குடியினராக வைத்துப் பாடிய பாடல்களே. மேலும் பத்துப்பாட்டில் விறலியாற்றுப்படை பாடல்களே இடம்பெறவில்லை என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

சங்க காலப் பெண் புலவர்களில் முதன்மையானவர் ஒளவையார். அவர் பாடியதாக சங்க நூலான எட்டுத்தொகையில் 59 பாடல்கள் கிடைக்கின்றன. இவற்றுள் அவர் 9 பாடல்களில் தாம் பாண்குடியினர் என்பதைப்

புலப்படுத்தியள்ளார். வேறு 7 பாடல்களில் பறை, பணிலம் (சங்கு) யாழ், குழல், பதலை, சிறுமுழா, முரசம், முழவு முதலிய இசைக்கருவிகளையும், இவற்றைத் தூக்கிச் செல்லும் காவடி, கலப்பை ஆகியவற்றையும் தடாரி, ஒரு கண்மாக்கிணை, துடி முதலியன பற்றியும் பாடியுள்ளார். ஆக 16 பாடல்களில் பாணர் பற்றியும், இசை பற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிடுவது கருதத்தக்கது. ஔவையாரின் பாடல்களை விருப்பு வெறுப்பின்னி ஆராயும் போது இவர் பாண்குடியை சேர்ந்தவர் என இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார். அவ்வகையில்,

**இழையணிப் பொலிந்த ஏந்து கோட்டல்குல்**
**மடவரல், உண்கண், வாள்நுதல் விறலி (புறம். 89)**

என்னும் இப்பாடலின் மூலம் அரசன் ஒருவன் ஔவையை விறலி என விளித்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

வேந்தர்களையும் வள்ளல்களையும் நாடிச் சென்ற பாணர்கள் நீண்ட நெடுவழியைக் கடந்து போக வேண்டியிருந்தது. சாலைகளும் ஊர்திகளும் இல்லாத அக்காலத்தில் கால் நடையாகத்தான் போக வேண்டியிருந்தது. இந்நிலையில் எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்த சாமானிய மக்களும் வள்ளல்களைப் போலவே பாணர்களை வரவேற்று உபசரித்தனர் என்பதைச் சிறுபாணாற்றுப் படையும், பெரும்பாணாற்றுப் படையும் கூத்தராற்றுப்படையும் குறித்து செல்கின்றன. ஆனால் பொருநர் ஆற்றுப்படையில் பாணன் சென்ற வழியே சொல்லப்படாததால் வழியில் பெரும் விருந்து பற்றியும் பேசப்படவில்லை என நூலாசிரியர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

அக்காலத்தில் ஊர் ஊராகச் சென்று ஊர் மன்றத்திலிருந்து கூத்தாடும் கூத்தர்களும் இருந்தனர். இங்கிலாந்து நாட்டிலும் ஊர் ஊராகச் சென்று கூத்தாடும் குழுவினர் இருந்தனராம். அவர்களை ‘Strolling Players’ என்பர் அந்நாட்டில். அத்தகைய இயங்கும் கூத்தர் குழுக்கள் நம் நாட்டிலும் சங்க காலத்தில் இருந்தன என்பதை சான்றோர் செய்யுட்களின் வாயிலாக அறியலாம் என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பண்டைக் காலத்து வீரமறவர் போருக்குச் செல்வதற்கு முன் போர் மறவருக்குப் புறத்தினைக்குரிய பூக்களைக் கொள்ளுதற்கும் தண்றுமை அறையப்பட்டது. பூக்கோள் இன்றென்றறையும் மடிவாயத் (புறம். 289) என்ற புறப்பாடலின் வழியாக அறிய முடிகிறது.

## பழந்தமிழர் வாழ்வியலும் வழிப்பாடும்

'புறநானூறு காட்டும் வாழ்வியல்' என்னும் நூல் என். இராமலிங்கம் அவர்களால் எழுதப்பெற்று 1995-இல், 235 பக்கங்களைக் கொண்டு திருவள்ளுவர் பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்நூலில் அருளும் அன்பும், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, செய்தி கொன்றோர்க்கு உய்தி இல், பகைவரும் போற்றுவர்! அறநெறி முதற்றே அரசின் கொற்றம், அறவிலை வணிகன் ஆயலன்! வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், பேரும் ஊரும் கூறாப் பெரியோன்! எல்லோர்க்கும் கொடுமதி, பிறர்க்கென முயலுநர், செல்வத்துப்பயனே ஈதல்!, உரனுடையார் கேண்மை!, யாதும் ஊரே யாவரும் கேளிர்!, ஓடி உய்தலும் கூடுமன்!, இன்னா தம்ம இவ்வுலகம், அல்லது செய்தல் ஓம்பு மின்!, கொள்ளெனக் கொடுத்தோன், அல்லற்கலை நில்லலன்!, ஐவர்க்குரிய அருங்கடன்கள் இன்னா வைகல் போன்ற உள்தலைப்புகளைக் கொண்டமைந்துள்ளது இந்நூல்.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற தலைப்பின் கீழ் புறம் 55-ஆம் பாடலின் மையக்கருத்தை விளக்கும் பொருட்டு ஒரு அரசனின் வெற்றிக்கு அவனுடைய வலிமை வாய்ந்த நால்வகைப் படைகள் காரணமாக இருப்பினும் அவன் எக்காலத்தும் எந்தசூழ்நிலையிலும் நெறி பிறழாமல் அறநெறிகளைப் போற்றி நடப்பது ஒன்றே உண்மையான வெற்றியும் பயனுமாகும் என ஆசிரியர் மிகச்சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

'பேரெழில் வாழ்க்கை' என்னும் நூல் அ. வெ. சுப்பிரமணியன் அவர்களால் எழுதப்பட்டு 1990-இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முழுமையும் பதிற்றுப்பத்தை திறனாய்வு செய்யும் வகையில் அமைந்துள்ளது.

சேரர்களின் பண்புகளை எடுத்துரைக்கும் வகையில் அமைந்த ஒரு நூல் பதிற்றுப்பத்து, எட்டுச் சேர அரசர்களைப் பற்றிய எட்டுப் பத்துகள் நமக்குக்

கிடைத்துள்ளன. இவற்றில் சில பாடல்களின் கருத்தை ஆசிரியர் இந்நூலில் நயமுடன் விளக்குகின்றார். அவ்வகையில், "கவரிமான்கள் வடநாட்டு மன்னர்களைக் குறிப்பன. அவர்கள் சேரலாதனொடு பொருது தோல்வியுற்றபின் அவர்களது நாட்டின் வளமெல்லாம் இல்லாததாயிற்று. சென்று போன பழைய சிறப்பை எண்ணிக் களவில் அதைக் கண்டு அவர்கள் இன்று இவ்வாறு இல்லையே என்ற வருந்துவதை இது ஒரு குறியீடாக உணர்த்தலாம்," (1990:23) என புறப்பனுவல்களிலும் ஆசிரியர் உள்ளுறையை எடுத்துக்காட்டியுள்ளார்.

சேரனை ஒப்பிடுகின்றபோது ஞாயிறு வடவை போன்ற ஆக்கத்திறன்களோடேயே ஒப்பிடுதலையும் ஆசிரியர் சுட்டிகாட்டியுள்ளார். கரும்புத் தெப்பத்தைக் காட்டிலும் பொறையன் உதவுவதில் சிறந்தவன் என்ற ஆசிரியரின் கருத்துப் பகுதி சிறப்புடையது.

'சங்கத் தமிழர் வாழ்வியல்' என்னும் நூல் மு. சண்முகம் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 1997-இல் வெளியிடப் பெற்றுள்ளது.

சங்க இலக்கிய அறிமுகம், குடி, சிற்றூரும் பேரூரும், நாற்பால் குலம், தொழிலும் தொழிலாளரும், மக்களின் நாள்முறை வாழ்க்கை, சமூக நடைமுறையும் நம்பிக்கையும், தெய்வங்கள், கலை, செந்நெறியும் சீறிய குறிக்கோளும் என்னும் பத்து பொருண்மைகளை உள்ளடக்கமாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.சங்க இலக்கியம் பற்றிய முதல் ஆய்வு நூல் 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்' என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறரார்.சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் குறித்த செய்திகளை இந்நூலின் முதல் இயலில் பேசப்படுகிறது.

சங்க தமிழரின் வாழ்வும் பண்பாடும் என்னும் இந்நூலில் பத்து தலைப்புகள் உள்ளது. அவற்றுள் முதலாவது அத்தியாயம் சங்க நூல்களின் அறிமுகமாக அமைகிறது. இவ்விலக்கியங்களின் பழமை, ஆற்றின் பொதுத்தன்மை குறித்தும், பாண்டியர் மூன்று சங்கங்கள் நிறுவித் தமிழ் வளர்த்த

பாங்கு போன்றவை முதலில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் பத்துப்பாட்டு பற்றிய பொது இயல்புகள் முதலில் தரப்பட்டுள்ளது.

அடுத்து திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் ஈறாகப் பத்துப் பாடல்களுள் ஒவ்வொன்றின் அமைப்பு, தன்மை பொருளடக்கம் அவற்றில் காணும் சிறப்புக் கூறுகள் முதலிய விவரங்கள் விரிவாக அமைந்துள்ளன. இதைப்போன்றே எட்டுத்தொகை நூல்களின் பொதுநிலைகளை விளக்கி, அதன்பின் நற்றினை முதல் புறநானூறு ஈறாக உள்ள எட்டுத்தொகை நூல்களின் அமைப்பு, தொகுத்தார் தொகுப்பித்தார் பற்றிய செய்திகள் ஆகியவற்றோடு அவற்றின் சிறப்புத் தன்மை முதலியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியை சங்க இலக்கிய வரலாறு என்ற குறிக்கலாம், மேலும் சங்க நூல்களுக்கு இலக்கியமாக விளங்கும் தொல்காப்பிய வரலாறு இந்நூற்கண் இடம் பெறுகிறது.

குடி என்பதில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் இயல்பும், வாழ்க்கை முறைகளும், அதாவது ஐவகை நிலத்து வாழும் மாந்தர்களின் தனித்தன்மை, அக்கால மக்களின் உணவுப்பழக்கம், விருந்தோம்பல், கடவுள் வழிபாடு, நானில வாழ்க்கை, தொழில் வாழ்விடம், வழிபாடு முதலியவை பற்றி விவரித்துள்ளார் ஆசிரியர். இதன் மூலம் ஒவ்வொரு நில மாந்தரும் அவ்வந்நிலத்திற்குத் தக்க வண்ணம் வாழ்ந்து வரும் முறை தெரிய வருகின்றது.

அடுத்து அந்நாளில் மக்கள் வாழ்ந்த சிற்றூரும், பேரூரும் எவ்வெவ்வாறு அமைந்திருந்தன என்பது எடுத்துகாட்டப்படுகிறது. நகரின் உள்ளமைப்பு எவ்வாறு இருந்தன என்பது மதுரையும் கச்சி நகரும் பற்றிய செய்தி (பெரும். 402-411) என்ற பாட்டினைக் கொண்டு விளக்கப்படுகிறது.

தெருக்கள், மாட மாளிகை, அரண்மனை, பல்வேறுபட்ட மக்களின் வாழ்விடங்கள், கோயில்கள் போன்றவற்றின் காட்சியும், மக்களின் வாழ்க்கை நிலையும் சித்தரிக்கப்படுகின்றன.அந்தனர், அரசர், வாணிகர், வேளாளர் முதலியோர் தொழில் முறைபற்றித் தனித்தனிக் குழுவினராய் வாழ்ந்தனர். எனினும் ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்தனர். நாற்பால் குலத்தவர் வாழ்வியலும் நன்கு விவரிக்கபட்டுள்ளன. பழங்குடி மக்கள் வாழ்ந்த நிலையும்

தரப்படுகிறது. தமிழகத்தில் பிற நாடுகளிலிரந்து வந்து தமிழருடன் கலந்து வாழ்ந்த வேற்று நாட்டார் ஆசிரியர் பற்றிய செய்திகள் விரிவாக உள்ளன. ஆரியச் சொற்கள் தமிழில் வந்து கலந்தமையும் குறிக்கப்படுகிறது. இறுதியாக கொற்றவனும் குடிகளும் எந்நிலையில் வாழந்து வந்தனர் என்பதும் எடுத்துரைக்கப்படுகிறது.

கொல்லர், தச்சர், பொன் செய் கம்மியர், சங்கறுப்பார், குயவர், ஆடை நெய்வோர், மருத்துவர் முதலாகப் பலரையும் அதற்குரிய பணியாளர்களாக அமைச்சர், சேனாதிபதியர். தூதர், ஒற்றர், பல்வகைப் படைவீரர் முதலியோரையும் சுட்டுகின்றார்ஆசிரியர். உழவர்க்கு உதவியோர், இசைகாரர், கூத்தாடுவோர், நாடோடி கலைஞர் முதலியவர்களைப் பற்றிய விவரங்களையும் இந்நூலினுள் எடுத்துரைத்துள்ளார்.

மக்களின் நாள்முறை வாழ்க்கைக் குறித்து அதாவது ஒவ்வொரு நாளும் துயிலெழுவதிலிருந்து மீண்டும் படுக்கைக்குச் செல்வது வரையில் பல்வேறு செயல்களில் மக்கள் ஈடுபடுகின்றனர்.சமுதாய நடைமுறையும் நம்பிக்கையும் குறித்து ஒரு சில நிகழ்ச்சிகள் பரம்பரை வழக்கமாக வந்து, பின் சடங்குகளாக மாறிவிடுகின்றன. கட்டுவிச்சிகுறி, வேலரின் கழங்குக்குறி முதலியன பார்த்தல் முதலிய நடைமுறை. விளையாட்டு, குதிரைக்கூத்து, கடவுள் வழிபாடு முதலியன குறிப்பிடத்தக்கன. நாள் கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், கனவுப்பலன் கேட்டல் முதலியவை மக்கள் நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு என ஆசிரியர் எடுத்துச் சொல்லும் விதம் குறிப்பிடத்தக்கது.

தெய்வங்கள் பற்றியும் வழிபாட்டு முறைகள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. அச்சம் விளைவிக்கும் பேய், பிசாசு, பூதம் என்பவற்றையும் மக்கள் வழிபட்டனர். ஊர்களில் சதுக்கம் சந்தி, அம்பலம் ஆகியவற்றிலும் தெய்வம் போற்றினர். திருமால், முருகன், முக்கண்ணன் முதலிய பெருந்தெய்வங்களும் வழிபடப்பட்டனர். நித்திய பூசை, சிறப்பு விழா முதலியன வழிபாட்டில் இடம் பெற்றன.

யாழ், குழல், முழவு முதலிய இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. ஆடற்கலை இருபாலாரிடத்திலும் சிறப்புற்றிருந்தது.

பண்டைகால உலக மக்களின் வாழ்வு காலத்திற்கு காலம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை நம் பண்டைய இலக்கிய நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது. பழங்காலமக்களின் வாழ்வின் வளர்ச்சியைக் குறித்து திரு. சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பட்ட பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் என்னும் நூல் 1961-இல் 229 பக்கங்களைக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

பழங்கால மக்களின் வாழ்வின் வளர்ச்சியை இலக்கிய வரலாற்று நூல்களில் காணும் சிறந்த உண்மைகளை-பழந்தமிழ் நூல்களாகிய திருக்குறள், கம்பர்கவி, நெய்தற்கலி, புறநானூறு, மணிமேகலை, தொல்காப்பியம், அகநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு, நற்றிணை, இராமலிங்கர், பாரதியார், பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல், சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, தாயுமானவர் பாடல்கள், திருஞான சம்பந்தர் தேவாரம், நாலடி வெண்பா முதலிய நூல்களில் பழந்தமிழர் வாழ்வின் வளர்ச்சி குறித்து எடுத்தியம்புகின்றன.

வாழ்விலே வளர்ச்சி, தமிழர் கண்ட கடவுளர், முன்னோர்களின் கடவுள் வழிபாடு, வாழ்வும் வழிபாடும், பண்டைத் தமிழர் சமயம், பழந்தமிழர் உணவு வகை, சாதியும் தமிழரும்,பழந்தமிழர் நம்பிக்கைகள், தமிழகத்தில் பெண் உரிமை, தமிழ்நாட்டுப் பெண்களின் பண்பாடு, பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி, சமுதாயப்பணி, உலகம் போற்றும் தமிழர், தமிழர் கண்ட நல்லறம் என்னும் பதினான்கு தலைப்புகளைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

பண்டைக் கால மக்களின் சிந்தனை, செயல், வாழ்வு இவைகளைவிட இக்கால மக்களின் சிந்தனை, செயல், வாழ்வு அனைத்தும் வளர்ந்திருக்கின்றன. இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாது.ஆதிகால மக்கள் ஆடையில்லாமல் திரிந்தனர், வீடில்லாமல் அலைந்தனர். அவர்களுக்கு மொழி கூடத் தெரியாது. ஒழுக்கம் இன்னதென்றே அறியமாட்டார்கள், வாய்க்கு ருசியாக சமைத்துச் சாப்பிடக் கூடத் தெரியாது. இப்படி வாழ்ந்த மக்கள் தாம் இன்று இவ்வுலகில்

உள்ள எல்லாவற்றையும் அடக்கியாளும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் மக்கள் முன்னேறியிருப்பதைக் காண்கிறோம். கல்வி, அரசியல், தொழில், கலை, சிந்தனை, சமுதாய வாழ்வு, ஆடை, அணிகள், செல்வப் பெருக்கம், மக்கள் இன்ப வாழ்வுக்கான சாதனங்களைக் கண்டுபிடித்தல் போன்ற பல துறைகளில் இன்றைய மக்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றனர்.

இத்தகைய வளர்ச்சியால் மக்களுக்குத் தீமையா? நன்மையா? இன்பமா? துன்பமா? என்று விவாதிப்பது வேறு விஷயம், வளர்ச்சி உண்டா? இல்லையா? என்பது தான் கேள்வி. நிச்சயமாக எல்லாத் துறையிலும் பண்டைக்கால மக்களை விட இக்காலத்து மக்கள் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்திருக்கின்றனர் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.இந்த வளர்ச்சியைப் பார்க்கும்போதும், எண்ணும்போதும் உலகத் தோற்றம்பற்றி விஞ்ஞானிகள் கூறும கருத்தை உண்மையென்பதைக் காணலாம்.

புராணக்காரர்கள் மனித சமூகம் நாகரிகத்திலே வளர்ச்சியடைந் திருக்கிறது என்பதைக் கூட ஒத்துக் கொள்வதில்லை. பண்டைக்கால மக்கள் தாம் எல்லாவற்றிலும் உயர்ந்த நிலையில் இருந்தனர். இக்காலத்து மக்கள் தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டனர். பண்டைக்கால மக்கள் தாம் அறிஞர்களாகவும், ஆற்றல் உடையவர்களாகவும், இன்ப வாழ்வினராகவும் இருந்தனர். இக்கால மக்கள் இவைகளில் குறைந்து விட்டனர் என்று கூறுவார்கள்.

இப்படிக் கூறுவது இயற்கைக்கு முரணாகும் என்பதே அறிஞர் கருத்து. வரலாறும் இதை மறுக்கிறது. இவ்வுண்மையைஎடுத்துக்காட்டுவதே பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் என்னும் இந்நூலின் நோக்கம். பல துறைகளிலும் மக்கள் முன்னேறியிருக்கின்றனர் என்பதை இப்புத்தகத்தில் உள்ள கட்டுரைகளால் காண முடிகிறது. இக்கட்டுரைகளைப் படிப்போர் வளர்வதுதான் இயற்கை என்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். வளர்வது இயற்கை என்பதை ஒப்புக்கொள்ளுவோர் மேலும் மேலும் வளரத்தான் முயல்வார்கள் என்பது உண்மை.

மக்கள் வாழ்விலே வரவர நாளுக்குநாள் வளர்ச்சியைத்தான் கண்டு வருகின்றோம். ஒரு காலத்தில் காலம் இன்னது என்று குறிப்பிட முடியாத காலத்திலே மக்கள் அநாகரிகமாக வாழ்ந்தது உண்டு. உடையில்லாமல், வீடு இல்லாமல் இற்கையாகக் கிடைத்த உணவுகளை உண்டு வாழ்ந்தார்கள்.

'முன்னோர்களின் கடவுள் வழிபாடு' என்றும் தலைப்பில் பண்டைத் தமிழர்கள் புலாலையும் மதுவையும் வெறுத்தவர்கள் அல்லர். சங்க நூல்களிலே புலால் உணவும், கட்குடியும் கண்டிக்கப்படவில்லை. சிறந்த வள்ளல்கள், பெரிய புலவர்கள், குறிப்பாகக் கபிலர், ஔவையார் போன்ற புலவர்கள் எல்லாரும் இவற்றை விளக்கவில்லை. இவர்கள் எல்லோரும் புலால் உணவையும், மதுவையும் மகிழ்ந்து உண்டதையும், பாராட்டியதையும் புறநானூற்றிலே காணலாம். பத்துப்பாட்டிலே புலால் உணவும் மதுவும் பாராட்டப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

புலால் உண்ணாதவர்களும் சங்க காலத்திலே இருந்தனர் என்பதைப் பத்துப்பாட்டிலே காணலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினர். பெரும்பாலான தமிழர்கள் பழந்தமிழர்கள், மதுவும் மாமிசமும் உண்டு மகிழ்ந்து வாழ்ந்தவர்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

இத்தகைய தமிழ் மக்கள் தங்கள் கடவுளர்களை எம்முறையில் வணங்கியிருக்க முடியும்? தங்கள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றித்தான் வணங்கியிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆடு கோழிகளைப் பலியிட்டு வணங்கினார்கள். மது மாமிசங்களைப் படைத்து வழிபாடு செய்தார்கள். இந்த உண்மையைச் சங்க இலக்கியங்களின்வாயிலாகப் புலப்படுவது இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றிலேயும் கடவுளர்க்குப் புலால் உணவு தான் – புலால் வைத்துப் பூசை செய்வதுதான் விருப்பமானது என்ற கருத்து காணப்படுகின்றது.

**வாடாப் பூவின் இமையா நாட்டத்து**
**நாற்ற உணவி னோரும் (புறம். 62)**

வாடாத கற்பகத்தின் தாரினையும், இமையாத கண்ணினையும் நாற்றமாகிய உணவையும் உடைய தேவர்களும் நாற்றம் என்பது சங்க காலத்தில்

நறுமணத்தைக் குறித்தது. சமைத்த புலால் உணவின் வாசனையை நறுமணம் என்றே இன்றும் முகர்வோர் உண்டு.

இப்புறநானூற்றுக் குறிப்பு தமிழர்கள் தெய்வங்களுக்கு புலால் படைத்து வணங்கி வாழ்த்தினர் என்பதைக் காட்டுகிறது. பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சியில் "சிவபெருமானை உள்ளிட்ட எல்லாத் தெய்வங்களும் புலால் உணவையே விரும்பும் தெய்வங்களாக இருந்தன" என்ற குறிப்பு காணப்படுகின்றது.

**நீரும், நிலனும், தீயும் வளியும்**
**மாகம் விசும்போடு ஐந்துடன் இயற்றிய**
**மழுவாள் நெடியோன் தலைவனாக,**
**மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்**
**வாடாப் பூவின் இமையா நட்டத்து**
**நாற்ற உணவின் உருகெழு பெரியோர்.**

என்ற இப்பாடல் வழி பண்டைத் தெய்வங்கள் புலாலையே விரும்பினர். மக்களும் அவ்வுணவையே அவைகளுக்குப் படைத்தனர் என்ற உண்மையை உணர்த்துகிறது. (1961: 33,34)

'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்னும் நூல் க. கைலாசபதி அவர்களால் 1966-இல் நூலாக வெளியிடப்பட்டது. இது கட்டுரைகள் அடங்கிய ஒரு தொகுப்பு நூலாகும்.இந்நூலில் தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி, அழிவும் ஆக்கமும், வீர வணக்கம், பேய் மகளிர், நாடும் நாயன்மாரும், அறமும் அரசியலும், பேரரசும் பெருந்தத்துவமும், பொய்ம்மையும் மெய்மையும் போன்ற பல்வேறு தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரைத் தொகுப்பு" உருவாக்கப்பட்டுள்ளது.

'பேய்மகளிர்' என்னும் தலைப்பில் தசையும் கொழுப்பும் குருதியும் குடரும் உண்டு. குரவைக் கூத்தாடும் பேய்மகள் அச்சத்தைத் தரும் வகையில் இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கின்றாள். இதனை விளக்கும் முற்படும் ஆசிரியர்,

**களிற்றுக் கோட் டன்ன வாலெயி றழுத்தி**
**விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினாள்**

**குடர்த்தலை மாலை சூடி யுணத்தின**
**ஆனாப் பெருவளஞ் செய்துதோன் வானத்து**
**வயங்குபவன் மீனினும் வாழியர் பலவென**
**உருகெழு பேய்மக ளயர்"** **(புறம். 371 : 31,26)**

என்று புறநானூற்றுப் புலவர் கல்லாடனார் பாடியுள்ளார். பன்றியின் கோடு போன்ற வெள்ளிய பற்களால் கடித்து ஈர்த்து தசையொடு கலந்த வெள்ளிய கொழுப்பைத் தின்று சுவை காண்பவளாய் குடல்களைத் தன் தலையில் மாலையாக அணிந்து, 'யாம் நிரம்ப உண்ணவும தின்னவும் குறையாதவாறு மிக்க மணங்களாகிய பெரிய வளங்களைக் கொடுத்த அரசன் பல்லாண்டு வாழ்வானாக' என்று அச்சம் பொருந்திய பேய்மகள் பாடிக் குரவைக் கூத்தாடுவதை நாம் கல்லாடனார் காட்டும் ஓவியத்தில் காண்கின்றோம் என இந்நூலாசிரியர் எடுத்துரைக்கின்றார்." (1966 : 61, 62)

மேலும், இத்தகைய செய்திகள் புறநானூறு, பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, திருமுருகாற்றுப்படை முதலிய பழந்தமிழ் இலக்கியங்களில் இதுபோன்ற செய்திகள் ஆங்காங்கு காணப்படுகின்றன.பேய்மகள் சங்க காலப் புலவனின் கற்பனையிற் தோன்றிய பாத்திரம் என அமைதி காண்போமா? அல்லது பழந்தமிழ் மக்களின் மூட நம்பிக்கைக்கு உதாரணமாகவிருக்கிறது எனச் சமாதானம் கூறுவோமா? அல்லது உண்மையில் அது பேயைக் குறிக்கிறது என விளக்கம் விளம்புவோமா? உன்னதமான கருத்துக்கள் சிலவற்றையும் சங்க இலக்கியங்களிற் காண்கின்றோம். பிற்காலத்திலே கொல்லாமை என்பது நமது சமய அடிப்படைகளிலே ஒன்றாக அமைந்துவிட்டது. இந்நிலையிற் சங்க இலக்கியத்திலே ஆங்காங்கு காணப்படும் குரூரமான இப்பேய்மகள் யார் என்று அறிய முற்படுவது பயன்தரும் முயற்சியாகும் என்பதில் ஐயமில்லை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பேய் மகளிரைப் பாடும் சங்கம் செய்யுட்களிலிருந்து மேலும் பல செய்திகளை நாம் அறிகின்றோம். மேலும் இச்செய்திகளை ஆதாரமாகக் கொண்டு புராதன மக்கட் கூட்டத்தினரிடையே வழங்கிய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றின் துணையுடன் இத்தகைய பேய்மகளிரின் செயல்களுக்கு விளக்கங்கான முற்படும் வகையில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் பேய் மகளிர் செயல்கள் உண்மையில் ஒரு மக்கட் கூட்டத்திலே காணப்படும்பொழுது அச்செய்கையை (Magic, Witchcraft) மந்திரச் சடங்கு அல்லது சூனியம் என்று மனிதவியல் ஆராய்ச்சியாளர் வருணிப்பர் என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

எனவே, இதுகாறுங் கூறியவற்றால், புராதன உலகின் முக்கிய தெய்வங்களுள் ஒன்று பேரன்னை என்றும் அது தமிழர் (திராவிடர்) தெய்வமாக இருந்தது என்றும், அது மந்திரச் சடங்குகளினால் வழிபடப்பட்டது என்றும் அதன் பின்னர் அது உழவுத் தெய்வமாகவும் மாறியது என்றும், அவற்றின் அடிப்படையில் இறப்பு, பிறப்பு முதலியவற்றின் தெய்வமாகப் பிற்காலத்தில் நிலவியது என்றும் காணலாம். பிற்காலச் செய்யுட்களாக சங்க இலக்கியங்கள் அத்தகைய பழைய செய்திகள் சிலவற்றை இனநினைவுகளாகவோ, அல்லது எஞ்சியிருந்த வழிபாட்டு முறையாகவோ, எமக்குக் காட்டுகின்றது. பேய் மகளிர் உண்மையான மகளிரே. ஆனால், பெண் தெய்வ வழிபாட்டிற்காகப் பிணந்தின்னிகளாகவும் இருந்தனர். அந்த வழக்கம் பின்னாளிலே சிவ வழிபாட்டுடன் கலந்தது, எனினும் அதனை ஆராய இது ஏற்ற சந்தர்ப்பமன்று என்று கூறும் ஆசிரியரின் கருத்து கவனிக்கத்தக்கது.

'சங்க காலத் தமிழர் வாழ்வு' என்னும் நூல் வெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களை எழுதப்பெற்று 1967-இல் வெளியிடப்பெற்றது.சங்க நூல்கள், தமிழகம், அரசு, வாழ்க்கை, இல்வாழ்க்கை, தொழிலும் வாணிகமும், உணவும் உடையும், நுண்கலைகள், தமிழர் பண்பாடு என்னும் பொருண்மைகளை அடிப்படையாக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூல் சங்க காலத்து தமிழகம், தமிழரசு, தொழில், வாணிகம், நுண்கலைகள், தமிழர் பண்பாடு முதலியன பற்றிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிற் காணப்படும் செய்திகளுக்குச் சங்க கால நூல்கள் சான்றாகும் என்பதனை உறுதிப்படுத்தச் சங்க இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் இடையிடையே எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. தமிழரசர் ஆட்சியில் தமிழகம் பெற்றிருந்த பலவகை நலன்களை இந்நூலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**நாகரிகமும் பண்பாடும்**

'பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்' என்னும் நூல் ஞா. தேவநேயன் என்பவரால் எழுதப்பட்டு 1966-இல் வெளியிடப் பெற்றது.

ஆரியச் சூழ்ச்சியாலும், ஆரிய வருகைக்குப் பிற்பட்ட மூவேந்தரின் பேதைமையாலும், பல்வகைப்பட்ட கொண்டான் மாரின் (வையாபுரிகளின்) காட்டிக் கொடுப்பாலும், தமிழ் நாகரிகம் மேனாட்டார்க்குத் தெரிந்த அளவுகூடத் தமிழர்க்குத் தெரியாது மறையுண்டு கிடக்கிறது. இவ்விரங்கத்தக்க நிலைமை தமிழரின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாயிருத்தலால் இதை நீக்குதற் பொருட்டு இந்நூலை எழுதினதாக இந்நூலாசிரியராகிய ஞா. தேவநேயன் குறிப்பிடுகிறார்.

இந்நூலுல், பண்டைத் தமிழ் நாகரிகம் என்னும் தலைப்பினுள் ஊன், உடை, அணி, உறையுள், வாழ்க்கை வகை, இல்லறம், துறவறம், தனிவாழ்க்கை, சமய ஒழுக்கம் என்பதில் சிறு தெய்வ வணக்கம், பெருந்தெய்வ வழிபாடு, கடவுள் நெறி, தொழில்கள், நெசவு, கம்மியம், கொத்தம், கலவினை, பிற தொழில்கள், வாணிகம், அரசியல், கல்வி, கலைகள், பொழுதுபோக்கு, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, அந்தனர் பண்பாடு, பிற வகுப்பாளர் பண்பாடு, கள்வர் பண்பாடு, பெண்டிர் பண்பாடு போன்ற பல்வேறு பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

'பழந்தமிழர் வீரப்பண்பாடு' என்னும் நூல் முனைவர் கதிர் மகாதேவன் அவர்களால் எழுதப்பெற்று 1980-இல் 315 பக்கங்களை கொண்டு இலட்சுமி பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றது. இந்நூல் அவரது முனைவர்பட்ட ஆய்வேடாகும்.

பழந்தமிழர் வீரப்பண்பாடு களமும் காலமும், வினைநவில் கவிதைகளின் வகைகள், பழந்தமிழர் பண்பாட்டின் வளர்ச்சி, வீரப்பண்பாட்டின் களமுறையும் பண்பாடும், களங்காட்டும் படைகளும் படைக்களன்களும், நாவல் கவிதைகளின் புனைதிறமும் பொருள் திறமும், அகவாழ்வில் புறவாழ்வின்

தாக்கம், எயில் காட்டும் பகுதிகள் போன்ற தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்நூல்.

சங்க இலக்கியப் பின்புலத்தை அடிப்படையாக வைத்து அக்காலப் பண்பாட்டை மதிப்பீடு செய்ய முயல்கிறது இவ்வாய்வு நூல். “புறநானூற்றுப் பாரதப்போர் நிகழ்ச்சிக்குறிப்பு நிகழ்காலத்தில் பேசப்படுவது கொண்டுவடநாட்டு இதிகாச வீரநிலைக்காலத்தோடு ஒப்பவைத்து எண்ணக்கூடிய பழமை பழந்தமிழர் வீரநிலைக் காலத்திற்கு உண்டென்று அறியலாம்,” (1980:27) என வீரநிலைக் காலத்தினைப் பற்றிய கருத்து முன்வைக்கப்பட்டிருப்பதுகவனிக்கத்தக்கது.

தமிழரின் வீரநிலைக்காலத் தொடக்க எல்லை பாரதப்போர் நடைபெற்ற காலமென்றும், இதிகாச காலத்தை அடுத்த கி.மு. ஆறாம் நூற்றாண்டே சங்க இலக்கிய காலத் தொடக்கமென்றும் ஆசிரியர் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இந்நிலையில் ஆசிரியர், “பழந்தமிழர் வீரநிலைக் காலத்து நால்வகை நிலங்களும் அமர்புரியும் களங்களாயின. இதனால் ஐந்தாவது நிலம் தோன்றியது. வாகை வீரர் வாழ்விலே வெற்றிக்கும் நிலத்தின் பெற்றியிலே பாலைக்கும் வழி வகுத்தது” என்று குறிப்பிடுகிறார்.

சங்க காலத்தை வீரநிலைக் காலாமாக கருதும் ஆசிரியர் சங்க காலத்தில் அமைந்த வீரநிலைக் காலப் பண்புகளை ஓரியியலில் விளக்கிக் காட்டுகிறார். அதோடு இப்பண்புகளை ஆசிரியர் கிரேக்க பிரெஞ்சு இலக்கியப் பகுதிகளோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். மேலும் இவ்வொப்புமைகளைக் காண ஆசிரியர்க்கு பௌரா மற்றும் சாட்விக் போன்ற அறிஞர்களும் நன்கு பயன்பட்டிருக் கின்றனர்.

“வினைநவில் கவிதைகளின் வகைகளை குறித்து குறிப்பில் ஆசிரியர், வீரநிலைக் காலத்தில் சொந்த எண்ணங்களை புலப்படுத்தும் கவிதைகள் (Personal Poetry) இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவைகள் கிடைக்கவில்லை என்று குறைபட்டுக் கொள்ளும் தருவாளர் சாடுவிக்குகளுக்குப் பழந்தமிழ்க் கவிதைகளில் இவ்வகை இருப்பது தெரிந்திருக்குமானால், மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.” (1980:3) என்று கதிர்மகாதேவன் தன் முன்னுரையில் உரைக்கின்றார்.

“வீரநிலைக் காலப் பண்பாட்டின் வளர்ச்சி குறித்தது விளக்கும் வகையில், வீரநிலைக்கால பண்பாட்டு வளர்ச்சி, திணைகளிலே இயற்கையாக மலர்ந்ததை வெளிப்படுத்துகிறது. பழந்தமிழர் தம் புறப்பாட்டின் எதிரொலியாகப் புறநானூற்றுப் பாடல்களும், பதிற்றுப் பத்துப் பாடல்களும் அகப்பாடல்களில் அமையும் புறப்பொருள் செய்திகளை உணர்த்தும் குறிப்புகளும் அமைகின்றன எனலாம். வீரத்திற்குப் புலவர் தரும் பரிசு புகழாகும் என்ற உண்மையை அறிகிறோம். பகைவனை வெற்றிக் கொள்ளும் ஆற்றலுக்கு ஏற்றவாறு புலவர்கள் பாடும் சிறப்பை, “ஆடகொள் வரிசைக்கு ஒப்பு, பாடுவல் மன்னனால், பகைவரைக் கடப்பே” (புறம். 53) என்று கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

‘கள முறைகளும் பண்பாடும்’ என்ற பகுதியில் வெட்சித் திணைப் போர், பழந்தமிழர் வீரநிலைக்காலத்து உண்டென்பதையும் பிற களமுறைகள் போல வெட்சித்திணைப்போரும் உடன் நடைபெற்றது என்பதையும் எடுத்துரைத்துள்ளார்.

பழந்தமிழ் நாட்டின் வீரநிலைக்காலப் பண்பாட்டை உருவாக்கப் பயன்பட்ட விவரங்கள் படைகளும் படைக்கலன்களும் என்னும் தலைப்பின் கீழ் கொடுக்கபட்டுள்ளன. சான்றாக, புறநானூற்றில் மகட்பாற் காஞ்சி துறையில் வரும் 20 பாடல்கள் மகன் மறுத்தல் போருக்கு காரணமானதைச் சான்று காட்டி நிற்கின்றன. கபிலர் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு பல மன்னரிடைச் சென்று திருமணம் முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்றதை அறிகிறோம். இதனால் பறம்புமலை மீது மூவேந்தரும் படையெடுத்தற்கு ‘மகள் மறுத்தல்’ காரணமாவதை உய்த்துணர வழியுண்டு. மேலும், குன்றூர் கிழார் மகனார் பாடிய பாடலில், மகளைப்பெற்ற மன்னன், “கொற்ற வேந்தர் வரினும், தன்தலை வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்” என்றார். அக்காலக் குறுநில மன்னரின் மகனை வேட்டோர், வேந்தராயினும் வணங்கிக் கேட்க வேண்டும் என எதிர்பார்த்தனர் என்று எண்ண வேண்டியுள்ளது.

நாநவில் கவிதைகளின் புனைதிறம், பொருள் திறம் பற்றி எடுத்துரைக்கையில், மில்மன்பாரி கூறிய இலக்கியப் படைப்பாக்கத்திற்குரிய மூலக்கூறுகளைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பவைத்து ஆராய்கிறார் ஆசிரியர்,

மேலும் வீரநிலைக் கவிதைகளை வினைநாவல் கவிதைகள் எனலாம் என்றும் அவை நாவல் திறம் உடையவை என்பதைப் பண்பாட்டுச் சூழலில் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். இவரின் கருத்து சிந்தித்தற்குரிய ஒன்றாக உள்ளது.

'அகவாழ்வில் புறவாழ்வின் தாக்கம்' என்ற தலைப்பின் கீழ் தமிழ் வீரர்கள் வினைவயின் காரணமாக பிரிந்த நிலை போர்க்களப் பிரிவைக் காட்டுகிறது என்பதையும், பெரிதும் பொருள் திரட்டல் பகைக்களத்தில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பதையும் குறிப்பாக கொடுத்துள்ளார் ஆசிரியர்.

'சங்க கால வாழ்வியல்' என்பது முனைவர் ந. சுப்பிரமணியன் அவர்களால் எழுதப்பெற்ற முனைவர் பட்ட ஆய்வேடாகும். இந்நூல் 1966- இல் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் தமிழிலும் மொழிபெயர்ப்பு செய்யப் பெற்றுள்ளது.

இந்நூலில் சங்க காலம், தலைநகரில் அரசு, நகராட்சியும் சிற்றூராய்ச்சியும், போரும் படையமைப்பும் சட்டமும் நீதியும், வருவாயும் நிதியும், பொருளாதாரச் செயன்மைகள், சமூக வாழ்வியல், கல்வி, இலக்கியம், கலைகள், சமயம், சங்கத் தமிழரின் அரசியல் தத்துவம் போன்ற பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சங்க கால வரலாற்றினை அறிய உதவும் சான்றுகளாக கல்வெட்டுக்கள், புராணங்கள், நாணயங்கள், தொல்பொருளாய்வுகள், இலக்கியங்கள், புராணங்கள் போன்றவற்றின் மூலம் சங்க கால வரலாற்றினை அறியலாம் என இந்நூலாசிரியர் கருதுவர்.

சேர, சோழ பாண்டியரின் குடிப் பெயர்களை மட்டுமே ஆராயாமல், தலைநகரிலமைந்த அரசு பற்றியும் ஆராய்கிறார். மேலும் அரசனின் மூத்த மகனே அரசுரிமை பெறுதல் சங்க கால வழக்கமாகும் என்றும் மருமக்கட்டாயம் சேர நாட்டில் வழக்கில் இருந்தது என்று கூறுவதை ஆசிரியர் ஏற்கவில்லை. அவ்வகையில், "பதிற்றுப்பத்தின் பதிகங்களில் பயிலும் சில தொடர்களை

மருமக்கள் தாயத்திற்கு ஆதரவாகக் காட்டுவர். ஆனால் பதிகங்களின் ஆசிரியர் தலைவனின் தாய்வழிப் பாட்டனைக் குறிக்கவே இவற்றை பயன்படுத்தியுள்ளார்." (1966: 47) என்று கூறுவது நோக்கத்தக்கது.

அரசரின் 'அவை'யை குறிக்க அவையம், அரசவை ஓலக்கம், வேத்தவை, அரசிருக்கை போன்ற சொற்களால் குறிக்கப் பெற்றிருப்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் தொல்காப்பியர் அவையத்திற்குரிய எட்டுவகைப் பண்புகளை கூறுகிறார். சான்றோர் அரசர்க்கு அறிவுரை பகர்ந்தனர் என்பதையும். அவ்வறிவுரை மென்மையும் பாராட்டும் கொண்டதாக அமைந்ததென்றும் ஆசிரியர் தெளிவுபடுத்தி விளக்குகிறார்.

அரசர்க்கு அறிவுரைக்கும் ஐம்பெருங்குழுக் குறித்து கூறும் இலக்கியச் செய்திகள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. மற்றும் எண்பேராயம் என்னும் அமைப்பில் இடம்பெற்றோரைக் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன. அரசர் அக்காலத்தில் வழங்கிய பெருங்கொடைகளைப் பற்றியும், வள்ளல்கள் எழுவரின் கொடை மடமும் விரித்துரைக்கப்பட்டுள்ளதை ஆசிரியர் இந்நூற்கண் குறிப்பிடுகிறார்.

சிற்றூர் நிர்வாகம் அவ்வூர்க்குரிய மூத்தோர் இடம்பெற்ற மன்றத்தால் நடத்தப் பெற்றிருக்கின்றது. எனினும் நகரங்கள் பெற்ற சிறப்பைச் சிற்றூர்கள் பெறவில்லை என ஆசிரியர் உரைப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சங்க காலத்தில் போர் மனிதனின் போராடும் இயற்கைப் பண்பு, அரசுரிமை, பிறர் மண்ணைக் கவர்தல், பிறர் செல்வமும் புகழும் கண்டு பொறாமை, மறக்குலத்தின் வீரப்பண்பு, போரில் இறப்போர் துறக்கம் அடைவர் என்ற நம்பிக்கை மகள் மறுத்தல், அரசர்க்குப் போர் புகழ் சேர்க்கும் எனும் கருத்து, நடுகல் நட்டுப் பரவுதல், காவல் மரத்தின் புனிதம், எல்லை வரையறுக்கப்படாத குறுநிலப் பகுதிகள், போரின் தொடர்ச்சியாக போர் விளைதல் போன்றவற்றின் அடிப்படையில் போர் தோன்றியதாக ஆசிரியர் விளக்குகின்றார். மேலும் போரின் பின் விளைவுகள் குறித்து நன்கு ஆராய்ந்து தெளிவுற விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

பண்டைத் தமிழரின் வாழ்வியல், நிலப்பாகுபாடுகளின் அடிப்படையில் இருந்ததேயன்றி, வருண அடிப்படையிலான வாழ்வு இல்லை என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து பிராமணராக மாறியவர் பற்றியும் எடுத்துரைக்கும் கருத்து கவனிக்கத்தக்கது.

“தமிழக சமூக வாழ்வில் பார்ப்பனர் இனம் வேர் கொண்டு விட்டது. ஆகையால் அவர்கள் இந்த நிலத்தின் சொந்தக்காரர்கள். ஆதலால் இந் நாட்டின் மீதும் மொழியின் மீதும் பற்றுக் கொண்டிருந்தனர். மேலும் அவர்களின் சமய மொழியாகச் சமஸ்கிருதம் இருந்ததேயன்றி வேறில்லை. சங்க இலக்கியம் சமஸ்கிருதத்தை வடமொழி என்றே குறிக்கிறது. ஆனால் தேவபாஷை என குறிக்கவில்லை. பார்ப்பனர்கள் தம் தாய்மொழியின் மீது பெரிதும் பற்றுக் கொண்டிருந்தனர்.” (1966:287) என ஆசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

சமயம், மெய்யியல் ஆகிய துறைகளில் அன்றைய தமிழகம் பெற்றிருந்த வளர்ச்சியைக் குறித்தும் ஆசிரியர் மிக ஆழ்ந்த நோக்குடனும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். இந்நூலில் சங்க இலக்கியம் முழுமையும் எண்ணிப் பார்க்கப்பட்டுள்ளது என்பதை நூலாய்வின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**மகளிர்**

‘சங்க கால மகளிர்’ என்னும் தலைப்பிலான நூல் டாக்டர். சி. பாலசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்டு 1983-இல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில் மகளிர் அழகு, திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை, மகளிர் இளம்பருவ விளையாட்டுகள், பெண்கல்வி, இசைப் புலமைத்திறம், மகளிரின் கூத்துப் பயிற்சி, திருமணத்திற்குப் பின்னர் வாழ்க்கை நிலை, காளையை அடக்கிய காளையரை விரும்பிய பெண்கள், கற்பு, காமம், நல்ல குடிபிறப்பொழுக்கம் போன்ற மகளிர் குறித்த பல்வேறு பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது.

சங்க கால மகளிர் பெண் கல்வியைக் குறித்து கூற முற்படும் ஆசிரியர், "சங்ககால மகளிர் இயல், இசை, கூத்து என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர். நல்லிசைப் புலமை மெல்லியலார் பலர் அந்நாளில் திகழ்ந்தனர். ஆடவர்க்குரிய கல்வி வேறு, மகளிர்க்கு வேண்டிய கல்வி வேறு. போர், தூது, காவல், பொருளீட்டல் முதலிய துறைகளில் ஆண்மக்கள் ஈடுபட்டதனால் அதற்குரிய துறைக்கல்வியினை ஆண்மக்கள் கற்றனர். மகளிர் தம் குடும்பப் பாங்கிற்குத் துணை செய்யும் கல்வியினைப் பயின்றனர். கல்வியில் வல்ல மகனையே தாயும் விரும்பினாள். அறிவுடையோன் ஆற்றுப்படுத்திய வழியிலேயே அரசனும் ஒழுகினான் என்பது புறநானூறு அறிவிக்கும் செய்தியாகும்." (புறம். 183)

## பழந்தமிழர் நம்பிக்கைகளும் சடங்குகளும்

'தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்' என்னும் நூலில் க. காந்தி அவர்களால் எழுதப்பெற்று 1980-இல் வெளியிடப்பெற்றது.தமிழரின் பழக்கவழக்கங்கள், தமிழரின் நம்பிக்கைகள், தமிழரின் நம்பிக்கை வயப்பட்ட பழக்க வழக்கங்கள், தமிழரின் மீவயல்பாற்றல்கள் பற்றிய நம்பிக்கைகள், தமிழரின் வாழ்வியல் மரபுகள் என்ற பொருண்மைகளை உள்ளடக்கங்களாகக்கொண்டு இந்நூலை வடிவமைத்துள்ளார் ஆசிரியர்.

மடலேறுதல், சிலம்பு கழி நோன்பு, ஏறு தழுவுதல், முதலியவை பழந்தமிழரின் சிறப்பான வாழ்க்கைக் கூறுகள் எனலாம். காதல் கை கூடாத நிலையில் தலைமகன் மடலேறுவானே தவிர, எவ்வளவு துன்பம் மிகினும் தலைமகள் மடலேறுதல் இல்லை என இந்நூலாசிரியர் சுட்டுகிறார். பழங்காலத் திருமண முறைகள், விழாக்களைப் பற்றிய செய்திகள், பிறந்த நாள் விழா, தெய்வங்கள் தொடர்பான விழா, மகளிரைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் இந்நூலாசிரியர் மிக விரிவான முறையில் எடுத்துரைத்துள்ளார்.

சிறுவர்கள் ஐம்படைத்தாலி அணியும் வழக்கத்தினை ஆசிரியர் கூற முற்படுகையில்,

“ஐம்படைத்தாளி பற்றிய நேர்மையான குறிப்பினை மணிமேகலையில்தான் காணமுடிகின்றது. அது சிறுவரின் கழுத்தில் அணிந்திருந்தமையினையே சுட்டிச் செல்கின்றது. ஐம்படைத்தாலி, இளமைப்பருவத்தில் ஆண் குழந்தைகளின் கழுத்திலணியும் ஒருவகை அணி (புறம். 636) எனவும் காவலாகக் குழந்தைகளின் கழுத்தில் பூட்டுவதோர் ஆபரண விசேடம் எனவும் காத்தற் கடவுளாகிய திருமாலுடைய ஐந்து ஆயுதங்கள் போலப் பொன்னாற் செய்யப்படுதலின் இஃது இப்பெயர் பெற்றது எனவும் டாக்டர். உ.வே.சா. குறித்துள்ளார்,” (1980 : 199).

பெண்கள் பிறை தொழும் வழக்கத்தினைக் குறிப்பிட்டு, அவ்வாறு பிறை தொழும் பெண்கள் விரும்பிய கணவரை எய்தப் பெறுவர் என்பதனையும் சொல்லிச் செல்கிறார் ஆசிரியர். கட்டும் கழங்கும் சங்க இலக்கியத்தில் பயில வந்திருக்கக் காணலாம். வேலன் பூசாரி, முருக வாழபாடு, வெறியாட்டுதல் முதலான செய்திகள் முறையே குறிப்பிடப் பெற்றுள்ளன. . ‘வடக்கிருத்தல்’ என்றும் பழைய வழக்கு, சமணர்பால் எவ்வாறு அமைந்திருந்தது, புறநானூறு முதலான தமிழ் நூல்களில் எவ்வாறு சுட்டப்பட்டுள்ளது என்பதை நூலாசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். வடதிசை மங்கல திசையெனக் கருதப்பட்ட நம்பிக்கையும் இடம்பெற்றுள்ளது. நடுகல் பற்றிய விரிவான ஆராய்ச்சினை நூலாசிரியர் மேற்கொண்டுள்ளார். மேலும் நடுகல் வழிபாடு நிலவியதனை ஆசிரியர் விடாது குறிப்பிடுள்ளார்.

நிமித்தங்களில் பழந்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கைகள் பற்றி திறம்பட கூறியுள்ளார் ஆசிரியர். புள், ஓந்தி, பல்லி, காக்கை முதலியவை நிமித்தம் பார்த்தற்கு உதவும் பான்மையும் விளக்கப்பட்டுள்ளன. ஊழ்வினை மற்றும் இம்மை மறுமை ஆகிய இரண்டினைக் குறித்தும் மிக விரிவாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

தமிழர் தம் இயற்கை வழிபாட்டினையும், இறை வழிபாட்டினையும் குறிப்பிட்டு, வழிபாட்டு நிலைகள் பண்டை நாளில் எவ்வெவ்வகையில் அமைந்திருந்தன என்பதனைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. இந்நூல். சூரறமகளிர், வானவ மகளிர், நாளங்காடிப் பூதம், சதுக்க பூதம், வருணப் பூதம்

என்பன குறித்த இலக்கியச் செய்திகள் முறையாக ஆசிரியரால் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. பேய் பற்றிய கருத்துக்களையும் கூறியுள்ளார்.

அரசனின் அங்கங்களாக அந்நாளில் விளங்கிய வென்கொற்றக்குடை, காவல், முரசு, காவ மரம் முதலியன பற்றியும், போரில் தோல்வியடைந்த நாட்டு நிலத்தைக் கழுதை ஏர் பூட்டி உழுதல் என்னும் மரபு நிலவிய செய்தி பற்றியும் ஆசிரியர் இலக்கிய பிண்னணியோடு எடுத்துரைத்துள்ளார்.

வேந்தனின் வெண்கொற்றக்குடையின் பயன்பாட்டினை மருத்துவர் தாமோதரனார், 'உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்' (புறம். 60 : 90-12) இக்குடைக்கு தீங்கு ஏற்படுவது மன்னனின் வீழ்ச்சிக்கு அடையாளமாகக் கருதப்பட்டதனைக் கூடலூர்கிழார், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் வீழ்ச்சி கொண்டு காட்டிச் செல்கின்றார். (1980 : 336)

காவன் முரசு அரசராலும் மக்களாலும் சிறப்பாகப் போற்றிக் காக்கப்படும். இதனைப் பூசணையோடு வழிபட்டுப் பாதுகாத்து வருவது மன்னனது கடமையாகும். இம் முரசுக்கு ஊறு ஏற்படின் மன்னனுக்குத் துன்பம் தொடரும் என்பது அன்றைக்கிருந்த நம்பிக்கையாகும். இக்காவன் முரசின் சிறப்பினைக் குறித்து மோசிகீரனாரின் (புறம். 229: 17-22) புறநானூற்றுப் பாடலடியின் மூலம் எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர்.

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்னும் நூலில் சுசீலா கோபால கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டு 1987-இல் வெளியிடப்பட்டது.நாள் நிமித்தம், புள் நிமித்தம், ஏனைய நிமித்தம், மாந்தர் தொடர்பான நிமித்தங்கள், தெய்வங்கள் தொடர்பான நிமித்தங்கள் போன்ற பொருண்மைகளைக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது.

நம்பிக்கைகளின் ஒரு பிரிவில் அடங்கக்கூடிய நிமித்தம் என்பது பின்னர் வருவதை முன்னர் அறிவிக்கும் குறி ஏனறு ஆசிரியர் குறிப்பிடுகிறார். நிமித்தம் அல்லது சகுனம் பார்த்தல் என்பது இன்றும் பாமர மக்களிடம் மட்டுமல்லாது, படித்த மக்களிடமு் காணப்படுகிறது. அதிலும் பெண்மக்கள் அதிக நம்பிக்கைகள் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

பண்டையத் தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலான நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் விரிந்து காணப்படுவதைக் காணலாம். மருத்துவத்துறையில் நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூட நம்பிக்கைகள் என்றாலும், அத்தகைய நம்பிக்கை மக்களுக்குத் தேவைப்படுகிறது.

ஆறறிவு படைத்த மனிதனைக் காட்டிலும் ஐயறிவு படைத்த விலங்கினங்களும் பறவையினங்களும் மற்றும் பூச்சியினங்களும் பின்னர் விளையப் போவதை முன்னறியும சக்தி வாய்ந்தனவாக உள்ளன. அவ்வகையில் ஆசிரியர் இதனை விளக்கும் பொருட்டு, எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் தப்பாது மழை பெய்யும் என்பது உண்மையென்றும், சிலந்திகள் ஒன்றிற்கொண்டு சண்டையிட்டுக் கொண்டால் புயல் வரும் என்றும், 'தட்டான் பூச்சிகள் தாழ்வாகப் பறந்தால் மழை வரும்' மற்றும் 'பறவைகள் ஓரிடத்தில் அதிகமாக வந்து அடைந்தால் அவ்வாண்டில் பழங்கள் அதிகம் பழுக்கம்' என நம்பப்படுகிறது. அது உண்மையாகவே இருக்கிறது. இதுபோலவே, பறவைகள் தாம் வழக்கமாகத் தங்குமிடத்தில் ஒரு விபத்து நிகழப்போவதை முன்னரே அறிந்து சில காலத்திற்கு முன்கூட்டியே அகன்று போகும் என்றும் பாம்புகள் கூட்டமாக ஓரிடத்தைக் கடந்து போனால் அந்த இடத்தில் சில நாட்களில் பூகம்பம் நிகழும் என்றும் கண்டறிந்துள்ளனர். மேலும் நாய்களுக்கும் இத்தகைய நுட்பமான புலன் உண்டு. ஆகாய விமான தளத்தில் வரப்போகும் ஆபத்தை முன்னரே நாய்கள் குரைத்துத் தெரிவித்தன என்பன போன்ற பல செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

பண்டையத் தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலன நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் விரிந்து காணப்படுவதை இந்நூலாசிரியர் சுட்டிக்காட்டி எடுத்துரைத்துள்ளார். நல்ல காரியங்களுக்கு நேரம் பார்த்தல், குறிப்பாக திருமணங்களை வளர்பிறையில், நல்ல நாளில், நல்ல நேரத்தில் முடிக்க வேண்டும் என்பது இன்றைய மக்களிடமும் காணப்படுகின்றது. சுப காரியங்களுக்குச் செல்லும்போதும், பயணங்களை மேற்கொள்ளும்போதும், நல்ல நேரம் பார்ப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அதோடு புறப்படும்போது சகுனம் பார்ப்பதும் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மணமக்கள் புறப்படும்பொழுது எதிரில் சுமங்கலிப் பெண் நிறை குடத்துடன் சென்றால்

நல்லது என்பதால், வீட்டுப் பெண்களே அத்தகைய சூழலை உருவாக்கி, மண மக்களை அனுப்பி வைக்கின்றனர் என்று ஆசிரியர் சுட்டுவர்.

மருத்துவத் துறையில் நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூட நம்பிக்கைகள் என்றாலும், அவ்வகையான நம்பிக்கைகளும் மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே அவ்வகையான நம்பிக்கைகளை எடுத்துரைக்கும் வகையில் ஆசிரியர், பல கருத்துக்களை இந்நூற்கண் வழங்கியிருக்கிறார். மணமக்களுக்கு ஜாதகம் பார்த்தல் என்பது இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. அவ்வகையில் குழந்தையின் பிறப்பு நேரத்தை வைத்து சாதகம் கணிக்கப்படுகிறது. பிறப்பு நேரம் நன்றாக இருப்பின் அவன் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கணிக்கிறார்கள். அம்முறை இன்றும் வழக்கிலுள்ளது. கரிகாற் பெருவளத்தான் நல்ல முகூர்த்தம் பெருமளவும் தன் தாயினுடைய வயிற்றிலே இருந்து பிறந்தான் என்பது நமக்கு, அறிவியலுக்கு புறம்பாணதாகத் தெரிகிறது. ஆனால், இன்றைய நாளிலும், நல்ல நட்சத்திரத்தில் குழந்தை பிறப்பின் நல்லது என்ற நோக்கோடு அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறக்க வேண்டிய சூழலில் உள்ள தாய்மார்கள் நேரத்தையும் முன்கூட்டியே குறிப்பதும் தற்காலத்தில் காணப்படுகிறது" என அக்கால நம்பிக்கையின் சாராம்சங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளதை ஆசிரியர் எடுத்துரைக்கும் விதம் மிகச் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

மனிதனின் உடலுறுப்புகள் குறித்த நம்பிக்கைகளைப் பற்றியும் இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார். அவ்வகையில் பொதுவாக ஆண்களுடைய வலப்புற உறுப்புகள் துடித்தல் நன்மைக்கு அறிகுறி என்றும், உள்ளங்கை அரித்தால் 'பணவரவு' என்றும் உள்ளங்கால் அரித்தல் 'பயணம்' ஏற்படும் என்றும் இன்றைய மக்களும் நம்புகின்றனர்.

உளவியல் அடிப்படையிலான நம்பிக்கைகள் குறித்தும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அதாவது பழங்காலத்தில் விரிச்சி அல்லது நற்சொல் கேட்டல் என்ற பழக்கம் உண்டு. அப்பழக்கம் இன்றும் மக்களிடையே நிலவி வருவதை ஆசிரியர் விளக்கும் பொருட்டு, இருவர் உரையாடிக் கொண்டிருக்கும்போது, மணி அடித்தால் நற்சகுனம் என நம்புகின்றனர். மேலும் பல்லி ஒலியெழுப்பினால், மூன்று முறை தரையில் விரலால் கொட்டி, தங்களுடைய

காரியங்களுக்குப் பதில் கிடைத்ததாக நம்புகின்றனர். ஒரு காரியம் பற்றிப்பேசும்போது கழுதைக் கத்தினால் நற்சகுனம் என நம்புகின்றனர். இத்தகைய உளவியல் அடிப்படையிலான நம்பிக்கைகள் மக்களுக்கு ஒரு வகையில் மனநிறைவு ஏற்படுத்தும் செயல்களாகவே உள்ளன என ஆசிரியர் தெளிவுறும் வகையில் விளக்கியிருப்பது மிகவும் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது.

வழிபாடும் சடங்குகளுடம் மனித வாழ்வோடு ஒன்றியவை. இத்தகைய வழிபாடும் சடங்குகளும் நம்பிக்கை வயப்பட்டனவாக வாழ்வோடு ஒன்றிய நிலையில் காணப்படுவனவாகும் இத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்' என்னும் நூல் மு. சண்முகம் பிள்ளை அவர்களால் எழுதப் பெற்று 1996-இல் நூலாக வெளியிடப்பெற்றது.

இந்நூல் வேத நெறி, கடவுளர், மால், முருகன், முக்கண்ணன், பெருந்தெய்வங்களுக்குள் பெருந்தெய்வம், வேதநெறிக்கு மாறுபட்ட வேற்றுச் சமயங்கள், மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர், பல்வகைப் பாவை, கோளும் நாளும், நாள்முறை வழிபாடும் விழாக்களும், சடங்குகள், செந்நெறி காட்டும் திருத்தகு சான்றோர், வேற்றுமையில் ஒற்றுமை போன்ற பல்வேறு பொருண்மைகளைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

'மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும்' எனத் தொல்காப்பியர் நிலத் தெய்வங்களுள் கரியோனாகிய திருமாலையும் சேயோனாகிய முருகனையும் முற்பட வைத்துப் போற்றியுள்ளார். இவ்விரு பெருந் தெய்வங்கள் பற்றிய பாடல்கள் மிகுதியாக உள்ளன. மேலும் சங்கப் பாடல்களில் 'திருமால்' என்னும் பெயர் வழக்கு இல்லை. எல்லா இடங்களிலும் 'மால்' என்றே குறிப்பிடப்படுகிறது என இந்நூலாசிரியர் சுட்டிச் செல்கிறார். மால், முருகன், முக்கண்ணன் ஆகியோர் பெருந்தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுள் மாயோனும், முக்கண்ணனும் மட்டுமே இரு பெருந்தெய்வங்களாகப் போற்றப்படலாயினர் என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

ஞாயிறு முதலாகக் கொண்டு எண்ணப்படும் நவகோள்கள், அசுவினி முதலாக எண்ணப்படும் இருபத்தேழு நட்சத்திரங்கள் ஆகியவற்றுள் சங்கப் பாடல்களிலும் இடம்பெற்றவையெல்லாம் நன்கு விவரிக்கப் பட்டுள்ளன. திருமணம் புரிவதற்கு உகந்த நாளாகத் திங்கள் உரோகிணியுடன் கூடியிருக்கும் நாள் தேர்ந்தெடுக்கப் பெற்றதையும், ஓணமும் ஆதிரையும் தெய்வ சம்பந்தம் பெற்ற பெருமையுடையவை. அறுமீனாகிய கார்த்திகை நாள், எழுமீன் (சப்தரிஷி மண்டலம்) வடமீன் (அருந்ததி) ஆகியவை பறறியும் இந்நூலில் ஆசிரியர் சிறப்புற எடுத்துரைத்துள்ளார்.

கோயில்களில் வழிபட்டு வந்த தெய்வங்கள் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ற வண்ணம் பலவகை வடிவங்களை உடையனவாய் இருந்தன. வழிபாட்டிற்கு பல்வகைச் சாந்து, புகை, விளக்கு, மலர், தெய்வத்திற்குப் படைக்கும் பால் சோறு, பலிச்சோறு முதலியனவும் கொண்டு சென்று வழிபட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மன்றங்களிலும், வெறியாட்டுக் களங்களிலும் வழிபட்ட தெய்வங்களுக்குக் குருதிப் பலியும் கொடுத்து வந்துள்ளமையையும், மறையவர் தாம் செய்யும் வேள்வியில் அவி மூலமாகத் தெய்வங்களுக்குப் பலி செலுத்தினர். மேலும் வழிபாட்டுக் காலத்தில் பற்பல இசைக்கருவிகளையும் இயக்கினர். திருக்கோயிலை வலமாகச் சுற்றிவந்து வழிபடும் பழக்கம் இருந்து வந்துள்ளதையும், கடவுளுக்குப் பல பொருள்கள் காணிக்கையாக்குதலும் நேர்த்திக்கடன் செலுத்துதலும் உண்டு எனத் தெரிய வருகின்றது என்பது இந்நூலில் புலப்படுகிறது.

இளமகளிர் அம்பா ஆடல் என்னும் பாவை நோன்பு நோற்றனர் என்பது குறித்தும் குரைவைக்கூத்து முதலிய ஆடல்களிலும் ஈடுபட்டனர் என்பதையும் யானையை வழிபடும் வழக்கம் அப்போது இருந்துள்ளதையும் இந்நூலாசியர் குறிப்பிடுகிறார். திருமணச் சடங்கு பற்றியும், சிலம்பு கழி நோன்பு குறித்தும், மணகளுக்கு தாலி அணியும் வழக்கம் இருந்துள்ளமையையும் எடுத்துரைத்துள்ளார்.

சங்ககால மக்கள் வாழ்க்கையில் போரும் பூசலும் இல்லாமல் இல்லை. தமிழ்நாட்டுச் சேர சோழ பாண்டியர்களுக்குள்ளும் மாறுபாடுகள் பல நிகழ்ந்தன.

பல்வேறு சமயத்தினரும் பல மொழி பேசுவோரும் தமிழகத்தில் வாழ்ந்தனர். உழவு, வாணிகம் முதலிய பல தொழில்களும் வளமுடன் அமைந்தன. யவனர், சோனகர் முதலிய மேலை நாட்டினரும் தமிழகத்தில் வாழந்து வந்தனர் என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

வேள்வி மூலமாக அந்தணர் வழிபாடு செய்து வந்தனர் என்றும், வேள்விச் செய்திகள் சங்கப் பாடல்களில் நிரம்பக் காணப்படுகின்றன என்றும் வேள்வி வழிபாட்டிற்கு மன்னர்கள் ஆதரவு தந்தமையும் தெரிய வருகிறது. மக்களும் இதில் ஈடுபாடுடையவர்களாயிருந்தனர். முனிவர்களின் வேள்விப் பயனால் நன்மை உண்டென்றும், வேள்வி செய் அந்தணர் வாழ்க்கை, அவர்தம் சிறப்பியல்புகள், பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகளும் பற்றி இந்நூலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

**பழந்தமிழர் அரசியல்**

பண்டைக் காலத் தமிழகத்தில் அரசியல் நீதிகள் எவ்வாறு இருந்தன என்பது குறித்து தெள்ளத் தெளிவாக விளக்கும் வகையில் வெளிவந்த ‘பழந்தமிழர் அரசியல்’ என்னும் நூல் சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பெற்று 1960-இல் வெளியிடப்பட்டது.

பல கட்டுரைகளின் தொகுப்புகளைக் கொண்டது இந்நூல். கரந்தை தமிழ்ச் சங்கதிலிருந்து வெளிவரும் ‘தமிழ் பொழில்’எனும் மாதப் பத்திரிக்கையில் எழுதி வெளிவந்த கட்டுரைகளின் ஒரு பகுதிதான் இந்நூல்.

பண்டைத் தமிழகத்தில் மன்னர் ஆட்சிதான் நிலைத்திருந்தது. அவர்கள் ஆளும் பரம்பரையைச் சேர்ந்தவர்களாதலால், அவர்கள் சர்வாதிகாரிகளாக விளங்கினார்கள் என்றும் இந்நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.பண்டைத் தமிழ் மன்னர்கள் சர்வாதிகாரிகளாக விளங்கினாலும், நாட்டு மக்களின் நன்மைக்காகவே உழைத்து வந்தனர். நாட்டு மக்களின் நன்மைக்காக வாழ்ந்த மன்னர்களே மக்களின் மதிப்பைப் பெற்று வாழ்ந்தனர் என்றும் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

நற்பண்புகள் நிறைந்த சங்கச் சமூகத்தில் பண்பற்ற செயல்களும் நிகழ்ந்துள்ளன. இவை சில பாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நிகழ்வுகள் உண்மை என்பதை மறுக்க இயலாது. நிகழ்வுகள் குறைவாக இருந்ததா? நிறைந்து காணப்பட்டதா? ஆங்காங்கே ஒரு சில இடங்களில் நடைபெற்றது? என்ற ஐங்களை அறியும் முன்னர், சங்கச் சமூகத்தில் இந்நிகழ்வுகள் நடந்துள்ளன என்பதை முதலில் அறிய வேண்டுவதாகிறது.

அறவழியில் ஆட்சி செய்ய வேண்டிய அரசர்கள் பொருளாசை கொண்டு அறத்திற்கு மாறாக நடந்தனர். குடிகளுக்குள்ளே போரிட்டு அழிவது, தோற்ற பகை மன்னர்களை இழிவுபடுத்துவது. அவர்களின் அரசுகளை அழிப்பது. தன் நாட்டு மக்களைக் காக்கும் அரசன், பகை நாட்டு மக்களைத் துன்புறுத்துவது, வென்ற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள்களைத் தம்மைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குக் கொடுப்பது முதலான செயல்களில் ஈடுபட்டிருந்தனர்.

மண்ணாசை, பொருளாசை, புகழாசை என பல ஆசைகளைக் கொண்டவராக அரசர்கள் இருந்தனர். அவ்வாசைகள் நிறைவேறும் பொருட்டு அறவழியிலிருந்து விலகி நெறியற்ற வழியில் நடந்தனர். நெறியற்ற அரசனிடம் அதிகாரமும் ஆணவமும் மிக்கிருந்தன. நெறியற்ற தன்மைக்கு சாமி. சிதம்பரனார் தனியதிகார வெறியைக் காரணம் காட்டியுள்ளார். பண்டைத் தமிழகத்து மன்னர்களிடையே அறநெறியும் மக்கட் பண்பும் நிறைந்திருந்தன. அவர்கள் சிறந்த செங்கோலர்களாக வாழ்ந்தனர். இது உண்மையாயினும் தனியதிகார வெறி காரணமாக பல அரசர்கள் அறநெறியைச் சிதைக்க அஞ்சவில்லை. வெறி பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது.

‘சங்க இலக்கியத்தில் சமய நோக்கு’ என்னும் நூல் கு. சுந்தரமூர்த்தி அவர்களால் எழுதப்பட்டு 1991-இல் வெளியிடப்பட்டது.சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சமய நோக்கு, வாழ்வியல்வழி வளர்ந்த சமயக் கூறுகள், திருக்கோயில்கள், விழா, வழிபடு கடவுளர், சிவன், திருமால், காமன், நான்முகன், கொற்றவை, இந்திரன், திருமகள், திங்கள், தேவர், கூற்றுவன், புத்தர், அருகன், வழிபாடு, மந்திரங்கள்,சைவ சித்தாந்த மெய்ப்பொருள் இயல்பு:

இறை, உயிர், தளை போன்ற பல்வேறு பொருண்மைகள் குறித்து இந்நூல் ஆராய்ந்துள்ளது.

**பண்டைய தொழில்கள்**

முனைவர் வி.சி. சசிவல்லியின் பண்டைத் தமிழர் தொழில்கள் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 1989-இல் வெளியிடப்பெற்றுள்ளது. சங்க காலத்தில் தொழில்கள், மகளிர் தொழில்கள் என்றும் இவ்விரண்டு பகுதிகள் அக்காலத்தில் செய்யப்பெற்ற தொழில்களை விரிவாக விளக்குகின்றன.

தொழில்களை வாழ்வியல், போர், வணிகம், கலை சார்ந்தன எனப் பகுத்து உடல் உழைப்புத தொழில், அறிவுத் தொழில் என வகுத்தும் கைவினைத் தொழில், பொறிவிளைத் தொழில் எனப் பாகுபடுத்தி காணும் முறை இந்நூலில் குறிக்கத்தக்கது. அக்காலத்துத் தொழில்களின் இயல்புகளை ஆராயும் ஆசிரியர், அக்காலத்தில் கைத்தொழில் வல்லார் குறைந்த மூலத்தைக் கொண்டு தம் எளிய கருவிகளையும் திறமையையும் பயன்படுத்தித் தத்தம் இருப்பிடத்திலேயே தொழில் செய்தனர். தொழிலில் ஏற்படும் உயர்வுக்கும் தாழ்வுக்கும் தொழிலாளியே பொறுப்பானவன். தொழிலாளிக்குத் தன் ஆக்க வேலையில் ஆர்வமும் அக்கறையும் உண்டு. அவனுக்கு அவனுடைய மனைவி உடனிருந்து உதவினர். தொழிலாளியின் தனி முயற்சி உழைப்பு பொறுப்பு இவற்றுடன் அவளது குடும்பத்தினரின் கூட்டுழைப்பு ஆகியவை பண்டைத் தமிழரின் தொழில்களின் தனிப் பண்புகளாக விளங்குகின்றன என்று குறிப்பிடுகிறார். சேரனை ஒப்பிடுகின்றபோது ஞாயிறு வடவை போன்ற ஆக்கத் திறன்களோடேயே ஒப்பிடுதலையும் ஆசிரியர் காட்டுகின்றார். கரும்புத் தெப்பத்தைக் காட்டிலும் பொறையன் உதவுவதில் சிறந்தவன் என விளக்கும் பகுதி சிறப்புடையது. அரசி அரசனோடு ஊடி வீசிய செங்குவளை அவளுடைய சினத்தின் குறியீடு என்பனவற்றையும் இந்நூல் விவரிக்கிறது.

**பண்டைய சமூகம்**

கு. வெ. பாலசுப்பிரமணியன் அவர்களால் எழுதப்பெற்ற சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் என்னும் நூலை 1994-இல் புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் பிரஸால் 350 பக்கங்களைக் கொண்டு பதிப்பித்துள்ளது.

சங்ககாலச் சமூக நிலை, சங்ககாலம் சமூகப் பிரிவுகள், சங்ககாலச் சமூக மதிப்புகள், சமூக அமைப்பில் சமயம், சமூக அமைப்பில் ஒருமைப்பாடு, பிற சமூக அமைப்புகளோடு தொடர்புகள் இன்றைய சமூக நல்வாழ்விற்குச் சங்ககாலச் சமூகம் காட்டும் வழிகள் என்பனவற்றை உள்ளடக்கமாக கொண்டமைந்துள்ளது இந்நூல்.

சங்ககாலச் சமூகம், வீரநிலைக் காலத்திலிருந்து வளர்ந்து வந்த சமூகம். அச்சமூகத்தில் சமய உணர்வு மெல்லப் புகுந்து விட்டது. இயற்கைநெறி வாழ்க்கையிலிருந்து அறிவாலும், நம்பிக்கையாலும், பழக்க வழக்கங்களாலும் தானே படைத்துக் கொண்ட ஒரு புது வாழ்க்கை நெறிக்குள்ளே பண்டைச் சமூகம் புகத் தொடங்கியிருக்கிறது. அச்சமூகத்தின் வளர்நிலையில் பற்பல எச்சங்கள் சங்க சமூகத்தில் காணக்கிடக்கின்றன. இதனை விளக்க முற்படும் ஆசிரியர்,

> இயற்கைச் செடி கொடிகளைத் தலையில் தம் கருத்தறிவிக்கவும் அடையாளமாகவும் சூட்டிக் கொள்ளுதல், இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைத்தல், இறந்த வீரர்க்கு நடுகல் அமைத்து ஐயவி சிதறி ஆம்பல் ஊதிக் கள்ளுகுத்து வழிபடுதல் ஆகிய செயல்கள் காணப்படும் சமூகத்திலேயே பொன்மலர் மாலையும் ஐம்படைத்தாலி ஆகியவற்றை அணிதலும், இறந்தவரை எரித்தல், புராண வரலாறுகள் மிக்க தெய்வங்கள் அமைந்த பெருங்கோயிலுக்குச் சென்று அருச்சித்தல் முதலியனவும் இருந்திருக்கின்றன. (1994 : 41)

எனச் சங்ககாலப் பண்புகளை மேற்கூறிய கூற்றின் வழியாக எடுத்துரைத்து இந்நூலில் தெளிவுப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

பண்பாடு என்ற சொல்லாக்கமும் அதனை நாகரிகத்தினின்று வேறுபடுத்தி எண்ணிப் பார்க்கும் கோட்பாட்டு முறை வளர்ச்சியும் அண்மைக் காலத்தின் இந்நிலையில் சங்கச் சமூகப்பிரிவுகள் எவ்வகைக் கண்ணோட்டத்தோடு காணத்தக்கன என்பதும் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் கொண்டிருந்த சாதி பற்றி கருத்தை இந்நூலே நடுநிலையில் நின்றுரைக்கின்றது அவ்வகையில் நிலப்பிரிவுகள், தொழிற்பிரிவுகள், சாதிப் பகுப்புகள் ஆகியன தமிழகத்தில் ஏற்படுத்திய சமூக நிலைகளை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இழிப்பிறப்பாளன் என்ற

புறநானூற்று ஆட்சி, சாதியில் கீழானோர் எனச் சிலர் கருதப்படுவதற்குரிய காரணங்கள் போன்றவையும் விளக்கப்பட்டு தெளிவுப்படுத்தி எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர்.

மன்னர் வேறு, வேந்தர் வேறு என்பதையும் இந்நூல் அழுத்தமான சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றது. அமைச்சர்கள், அதிகாரிகள், பிற அலுவல் புரிவோர் முதலியோரின் பணி நிலையையும் வடநூல்களில் இன்னோர் குறித்ததான செய்திகளையும் தெளிவுப்படுத்தி இந்நூலில் விளக்கியுரைத்துள்ளார் ஆசிரியர்.

வீரநிலைக்காலச் சமூக எச்சங்கள் சங்ககாலத்தில் இருந்தமையால் போர் வாழ்வை விரும்பியேற்றுக் கொண்ட சமூக இயல்பு அக்காலத்திலிருந்தது. போர் தவிர்க்க என்ற அறிவுரை ஒருபால் கேட்கப்படினும், மன்னரும் மைந்தரும் வேந்தரும், மறவரும் உடற்சினஞ் செருக்கியுரைக்கும் வஞ்சின உனிகளும் கேட்கப்படுகின்றன என்பதனையும், சங்கச் சமூகம் மறப்பண்பையும் மானத்தையும் அரிய சமூக மதிப்புகளாகப் போற்றியது. வேந்தர் நிலையிலிருந்து பொருளாதார நிலையில் மிகக் கீழ்த்தட்டில் வாழ்வோர் வரையில் மான உணர்ச்சியைப் பேணுதலைத் தம் இன்றியமையாத குடிக்கடனாகக் கருதினர் போன்ற செய்திகளையும் இந்நூலில் முன்வைத்துள்ளார் ஆசிரியர்.

அக்காலச் சமுதாயத்தில் இறைவன் என மதித்துப் போற்றப்பெற்ற வேந்தனை நெறியறிந்து செலுத்தும் ஆற்றல் புலமைச் செல்வர்க்கே அமைந்தது. சமூகத்தின் இயற்கை புகழ்ச்சி விருப்பம், அதிகாரப் பெரும்பதத்திலிருப்போர் இதற்கு ஆட்படுவதில் வியப்பில்லை. பிறரறியாது கொடை நேர்தலும், புகழக் கேட்டுத் துஞ்சு மரம் போல நாணுதலும், வழிபடுவோரை ஆய்ந்து காணுதலும், குறைகூறுவார் மொழிகளைத் தம்மொடு பொருத்திப் பார்த்தலும் நேரிய வேந்தர்க்கு இன்றியமையாத பண்புகள் ஆயினும் பலரும் தம்மைப் பரவும் செயற்கைப்புகழ் நோய்க்கு ஆட்படும் இயல்பினராய் இருக்கக் காண்கின்றதையும் எடுத்துக்காட்டி விளக்கியுரைத்துள்ளார்.

இன்னோர்க்கு உள்ளது கூறி அறிவுறுத்தும் அறச் செம்மலோராக அக்காலப் புலவரிற் பலர் திகழ்ந்தனர். புலமை வாழ்க்கை உலக அமைதியை அவரவரது போர் தவிர்க்க என அறிவுறுத்துவது, “வள்ளியோர்ப் படர்ந்து

புள்ளிற் போகி பிறர்க்குத் தீதறிஞ் தன்றோ வின்றோ” என கோவூர்கிழார் இவ்வாழ்க்கையின் இயல்புகளைப் படம்பிடிப்பர்” (மேலது: 249,250) எனப் புலவர்களின் கூற்று வழியாக ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டி தெளிவுப்படுத்துகிறார்.

சங்ககாலச் சமயச் சூழலை புலப்படுத்தும் வகையில், ஆசிரியர் “ஓங்குயிர் வெற்பும் ஓதப் பெருங்கடலும் நிழல்மலி காடும் நீர் கொளுந்துறையும், மரமும் என்றின்ன இயற்கை வடிவின எல்லாம் தெய்வம் தங்குமிடங்களாகச் சங்கச் சமுதாயம் கண்டது. எவையெல்லாம் அவர்க்கு அருளும் மருளும் பயந்தனவோ அவையெலாம் தெய்வமாயின. தத்தமக்குரிய தெய்வம் தங்குமிடங்களாகச் சங்கச் சமுதாயம் கண்டது. தத்தமக்குரிய நிலச்சூழலுக்குப் பொருந்த கருப்பொருளாகக் கொண்ட தெய்வமே அவ்வந்நிலத்தவரின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மாயோனும் சேயோனும், வேந்தனும், வருணனும், சங்க கால மக்கள் தத்தம் நில அளவில் வழிபட்ட தெய்வங்கள். இத்தெய்வங்கட்கும் இவர்க்கும் நெருங்கிய உணர்ச்சித் தொடர்பு உண்டு. மெய்தின் விரும்பி விதிர்விதிர்த்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி அரற்றி வழிபடல் அன்று இல்லை. என் காதற்றுத் துணையாகுக, என் கணவணைக் காக்க, என் மகள் நோய் தணிக்க, மழை பொழிக, பகை அழிக்க, விருந்து தருக என்றெல்லாம் வேண்டவும் உரியன இத்தெய்வங்கள். அக்கால மக்களின் வீரப் பண்பிற்கும், காதல் வாழ்விற்கும் துணயையாகக் கருதப்பட்டன. இவை, இத்தெய்வங்களுக்கெனப் பற்பல புராணங்களைப் படைத்து வழங்கிற்றிலர் அக்காலத்தவர். சீற்றமிகு வீரனாக முருகனையும் புகழ்மிகப் பொலிந்தோனாகத் திருமாலையும் கண்டது அற்றைச் சமூகம். சிவபெருமான், பலராமன், ஆகிய தெய்வங்கள் நிலத் தொடர்பின்றிப் பொதுநிலையிற் கூறப்பெறுகின்றன. ஆனிரை காரணமாக எழுந்த பூசலில் மடிந்தோர்க்கு நடுகல் சமைத்து அன்னோரையும் தெய்வமாக வழிபட்டிருக்கின்றனர். இயற்கைக் கூறுகளின் வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடு, வீரநிலைக் காலத்தில் நடுகள் வழிபாடு, முருக வழிபாடு, நிலத்தெய்வ வழிபாடு, பொதுத் தெய்வ வழிபாடு எனப் பல்வேறு படிநிலைகளில் பல்வேறு தெய்வங்கள் வழிபடப்பட்டுள்ளன என அறியலாம்.” (மேலது: 207) என்றவாறு சங்ககாலச் சமயச் சூழலையும், தெய்வ வழிபாடு குறித்தும் எடுத்தியம்பியுள்ளார் இந்நூலாசிரியர்.

சங்ககால மக்கள் பிற சமூக அமைப்புகளோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதனை தெளிவுபடுத்தும் பொருட்டு, சங்ககாலத்தில் அயல் மொழியினரும் அயல்நாட்டினவரும் தமிழகத்திற்கு வராமலில்லை. ஆனால் அவர்தம் வரவால் தமிழகம் தமக்குரிய மொழியையும், பண்பாட்டையும் இழந்து விடவில்லை. வேங்கடத்திற்கு அப்பாலுள்ள பல்வேறு இந்திய மொழியின மக்களோடும், இந்திய எல்லைக்கு அப்பாற்பட்ட பல அயல்நாடுகளோடும் தமிழகத்திற்குத் தொடர்பிருந்தது. நளியிரு முந்நீர் நாவாயோட்டி பளிதொழில் ஆள வல்லவராக அமைந்தனர் என்ற பிற சமூக அமைப்புகளோடு சங்ககால மக்கள் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதனை இந்நூல் விளக்குவதோடு, இருபது நூற்றாண்டுகளுக்கு முற்பட எழுந்த சங்கப்பனுவல்கள் இன்றும் வாழும் இலக்கியங்கள் ஆதலைத், இன்றைய சமூக நல்வாழ்விற்குச் சங்ககாலம் காட்டும் வழிகள் என்னும் இயலின் வழியாக தெளிவுப்படுத்துகிறார்.

முரட்டுத்தன்மையை வீரமெனக் கருதும் அறியாமையும், கலகத்தைப் புரட்சியெனக் கருதி மயங்கும் மயக்கமும், விளம்பரத்தைப் புகழெனப் போற்றும் பேதைமையும் இன்று நாடெங்கிலும் உள்ள நலிவு நோய்கள். இவற்றுக்கெல்லாம் சங்கப் பேழையுள் மருந்துண்டு எனச் சாற்றுவது இந்நூல் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். புகைவண்டிப் பயணத்திற்குப் பொழுது போக்கிற்குரியதாகிப் பின்பு வீசி எறிவன எல்லாம் இலக்கியப் பெயர் ஏற்குமிக்காலத்தே வாழ்க்கைக்கு நின்று பயனளிக்கும் பொன்றாத்தன்மை வாய்ந்த மூப்பிளமை வாய்ந்த சங்க இலக்கியங்களைச் சாவா மூவா மருந்தெனச் சாற்றுதல் பொருத்தமென்பதை இந்நூல் காட்டுகின்றது என மேற்காட்டிய சங்கச் செய்திகளை இந்நூலின் வழி இன்றைய சமூக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.

## தொகுப்புரை

- நம்பிக்கை, வழிபாடு, சமயம், சடங்கு, நடைமுறை வாழ்க்கை, மற்றும் மன்னரின் வீரம், கொடை, புகழ், அரசியல் முதலிய வாழ்வியல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறான நூல்கள் வெளிவந்துள்ளன.

- செ.பழனிச்சாமியின் புறநானூற்றில் தமிழர் பண்பாடு எனும் நூலில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் குறித்தும் பண்பாடு குறித்தும் மிக வரிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- பழந்தமிழ் மக்களின் தொழில்களான இரும்புத் தொழில், தச்சுத் தொழில், மட்கலம் வனைதல், அணிகளன்கள் செய்தல் இவ்வியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் பற்றியும் நாணயங்களின் பயன்பாடு குறித்தும் பழந்தமிழ் மக்களிடையே நிலவிய பண்டமாற்று முறை குறித்தான ஆய்வுப்போக்குகளை இவ்வியல் கவனப்படுத்துகிறது.

- மகளிர் பூப்புற்றக் காலத்தில் கலந்தொடாமை, கைம்மைநோன்பு மற்றும் சகுனம் பார்த்தல் குறித்த செய்திகளும் பரத்தையர் ஒழுக்கம் குறித்தும் விரிவான முறையில் ஆராயப்பட்டிருப்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

- பாணர்களின் வாழ்க்கைமுறையும், விறலி மற்றும் பாடினியின் வருணனையும், பேரியாழ், சீறியாழ் முதலிய இசைக்கருவிகள் பாணர்களின் வாழ்க்கையோடு எவ்வகையில் ஒன்றியிருந்தது என்பதனை விவரிக்கு ஆய்வுகளின் ஆய்வுப்போக்கு இவ்வியற்கண் கவனப்படுத்தப்பட்டுள்ளன.

- நாள் கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல் , விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், கனவு பலன் கேட்டல் போன்ற நம்பிக்கை சார்ந்த ஆய்வுகளும் அவ்வாய்வுகளின் ஆய்வுமுறையும் இவ்வியலில் விரிவுர எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- இசை, அதற்குரிய பலவகை பண்கள், ஆடற்கலை, அதன் வகைகள், இக்கலைகளின் கலைஞர்கள் பெற்றிருந்த பெரும் புலமை ஆகியன உணர்த்தும் பண்பாடும் பல கடவுளர்களையும் மக்கள் வேற்றுமை மனப்பான்மையின்றி வழிப்பட்ட பண்பாட்டுத் திறனும் அக்கால மக்களிடையே நிலவிய உயர்நெறிக்

கொள்கைகளையும் குறித்து விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- முத்து, யானைத் தந்தம், மிளகு, தோகை, மஸ்லின் ஆடைகள், மணப்பொருட்கள், மரவகைகள், மூலிகைகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்களாய் இருந்தன. இவற்றிற்கு பதிலாக வெள்ளி, பொன் நாணயங்கள், மது வகைகள், பவழம், ஈயம், தகரம், எந்திரப் பொறிகள் என்பன இறக்குமதிப் பொருள்களாய் இருந்தன என்பனவும் இவ்வியலில் சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.
- நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூடநம்பிக்கைகள் என்றாலும் அவ்வகையான நம்பிக்கைகள் மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அவ்வகையான நம்பிக்கைகளை எடுத்துரைக்கும் வகையில் இவ்வியல் ஆழ்ந்த கவனப்படுத்துகின்றன.
- பழந்தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலான நிமித்த வகைகள் நல்ல காரியங்களுக்கு நேரம் பார்த்தல், திருமணங்களை வளர்பிறையில் முடித்தல், சுப காரியங்களுக்குச் செல்லும் போதும், பயணங்களை மேற்கொள்ளும் போதும் நல்ல நேரம் பார்ப்பது போன்ற நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் காணப்படுவதை இவ்வியலில் மிக விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# இயல் - 4

# சங்க கால வரலாற்று ஆய்வுகள்

சங்க இலக்கிய ஆய்வுகளில் மிக மிகத் தொன்மையானதும். மதிப்பிற்குரியதாகப் பலராலும் போற்றப்பட்டதுமாகிய நூல் அறிஞர் கனகசபைப் பிள்ளையின் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் (The Tamils Eighteen hundred years ago) என்னும் நூலாகும். 1904-ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப் பெற்றது. 1895-ஆம் ஆண்டிலிருந்து 1901-ஆம் ஆண்டு வரை (Madras Review) என்னும் ஏட்டில் தொடர் கட்டுரைகளாக எழுதப்பட்டு, பின்னர் 1904-ஆம் ஆண்டு இக்கட்டுரைகள் நூலாக்கம் பெற்று வெளியிடப்பெற்றது. இந்நூல் பண்டைத் தமிழரின் பண்பாடு குறித்து தமிழிலக்கியங்கள் கூறும் அனைத்துச் செய்திகளையும் வெளிக்கொணர வேண்டும் என்னும் நோக்கோடு எழுதப்பட்டது. இதனைத் தொடர்ந்து எம். சீனிவாச ஐயங்கார் 1914-இல் தமிழாய்வு (Tamil Studies) என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளி வந்தது. மேலும் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் தென்னிந்திய வரலாற்றின் தொடக்க நிலைகள் (Beginners of South Indian) என்ற நூல் பழந்தமிழ் அரசர் சிற்றரசர் பெயர்களையெல்லாம் இலக்கியங்களிலிருந்து தேடித்துருவி அவர்களின் ஆட்சி, கால வரிசை ஆகியன குறித்து எழுதியுள்ளார். ஆனால் சங்க காலச் சமுதாய வரலாறு பற்றிச் சிந்திக்க வில்லை. இந்நிலையிலேயே அறிஞர் பி.டி. சீனுவாச ஐயங்கார் 1929-இல் ‘தமிழர் வரலாறு’ (History of the Tamils) என்னும் நூலை வெளியிட்டார்.

இவர்களைத் தொடர்ந்து கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் 1929-இல் பாண்டிய அரசு (Pandya Kingdom) மற்றும் 1955-இல் சோழர்கள் (Colas) என்ற நூல்களை வெளியிட்டர். சங்க காலத்தில் நிலவிய இருபெரும் அரச பிரபுகளின் நிலை குறித்தும் இந்நூல்களில் கூறப்பட்டுள்ளது. 1904-இல் சதாசிவப் பண்டாரத்தார் ‘பாண்டியர் வரலாறு’ என்னும் நூலையும், சங்க காலச் சேர அரசர்கள் (Cera Kings of the Sangam Period) என்ற நூலை கே. ஜி. சேஷையர் 1937-இல் எழுதியுள்ளார்.

சேரர் வரலாறு குறித்து நூல்களாக துடிசைக் கிழார் சிதம்பரனாரின் ‘சேரர் வரலாறு’ என்னும் நூலையும், ஔவை துரைசாமிப் பிள்ளையவர்களின் பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு என்னும் இரு நூல்களுக்கும்,

பதிற்றுப்பத்தும் புறநானூறும் இவையிரண்டும் அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன. இவ்வாறு தொடக்ககாலத்தில் அறிமுக நோக்கிலேயும், செய்தி தொகுப்புகளையும் கொண்டு நூல்கள் பல வெளிவந்துள்ளது. ஆனால் ஆராய்ச்சி நோக்கிலான நூல்கள் எதுவும் தொடக்ககாலத்தில் வரவில்லை. 1960-க்கு பின்னரே சங்க இலக்கியம் குறித்தான வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் வெளிவரத் தொடங்கின. அவ்வகையில்,

சங்ககால வேந்தர், மன்னர், குறுநில மன்னர் ஆகியோர் குறித்து பலர் ஆய்வு செய்துள்ளனர். கரிகாற் பெருவளத்தான், செங்குட்டுவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், செங்கணான், கணைக்காலிரும் பொறை, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் போன்ற வேந்தர்களைக் குறித்தும், பாரி, பேகன், அதியமான், திருமுடிக்காரி, ஆய் போன்ற குறுநில மன்னர்கள் குறித்தும் ஆய்வுகளும், படைப்பிலக்கியங்களும் எழுந்துள்ளன. எனினும் இவை வரலாற்று நோக்கிலானவை அல்ல புறநானூறு, பதிற்றுப்பத்து, ஆகிய நூல்களில் காணப்பெறும் செய்யுட் கருத்துகளைச் சிறப்புற விளக்குகின்றனவாகவே இவை அமைந்துள்ளன. இந்நிலையில் 1932-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற கே. என். சிவராச பிள்ளையின் ‘The Chronology of Early Tamils’ என்ற நூல் பழந்தமிழ் அரசர்களின் கால வரிசையை இயன்ற அளவில் வரிசைப்படுத்தி உரைக்கின்றது. வரலாற்றுணர்வைத் தூண்டும் அளவில் சங்க கால அரசர்களைக் குறித்து எழுந்த முதல் நூல் இதுவே. இதன் பின்னர் கா.அப்பாதுரையாரின் தென்னாட்டுப்போர்க்களங்கள் என்ற நூலும், சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், தமிழர் வாணிகம் என்ற மயிலைச்சீனி வேங்கடசாமியின் நூல்களும், பத்மஜா இரமேஷின் சங்ககால மன்னர்களின் காலநிலை சேரர் வரலாறு மற்றும் பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு, சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு என்னும் நூல்கள் எழுந்தன.

பண்டைத் தமிழர்கள் தங்கள் வரலாறு பற்றிய செய்திகளை முறையாகக் குறித்து வைப்பதில் போதிய அக்கறை செலுத்தவில்லை. ஏன் இன்றும் கூட காலமுறைப்படி செய்திகளை நிரல்பட எழுதிவைக்கும் பழக்கம் நம்மில் பலரிடம் இல்லை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அவ்வகையில்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகத்தில் இருந்த முடியுடை மன்னர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், பிற தலைவர்கள் காலவரிசையை உரைப்பதென்பது எளிய செயலன்று. பெயர்களை அறிய முடிகிறதே தவிர அவர்கள் வாழ்ந்த காலத்தை நிரல்படச் சொல்வதற்கான ஆதாரங்கள் நம் கையில் இல்லை. இலக்கியங்களைத் தவிர வேறு சான்றுகள் இல்லை. இருந்தாலும் கிடைக்கும் இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அறிஞரின் கருத்துகளையும் இணைத்து ஆய்ந்து, 'சங்ககால மன்னர்களின் கால நிலை வரலாறு' என்னும் நூலினை வி.பி. புருஷோத்தமன் அவர்களால் எழுதப்பட்டு 1989-இல் வெளியிடப்பெற்றது.

சங்க காலத்தில் இருந்த மூவேந்தர் 52 பேர், (சேரர் 20, சோழர் 18, பாண்டியர் 14) சதியபுத்ரர் 13 பேர், ஆவியர் மூவர், நன்னர் நால்வர், பழையர் நால்வர், மலையர் நால்வர், கள்வர் இருவர், பிற தலைவர்கள் 91 பேர், குழுத்தலைவர்கள் 17 பேர் ஆக மொத்தம் 199 பெயர்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து அவர்களை பதினான்கு தலைமுறைகளாக்கி ஒவ்வொரு தலைமுறையிலும் அமைந்திருந்தவர்கள் யார் என்ற பெயர்களை இந்நூலாசிரியர் வரிசைப்படுத்தித் தந்துள்ளார்.

சங்க காலத்துச் சேரர், சோழர், பாண்டியர் ஆகியோரின் வரலாறுகளை வரையறுத்துக் கொண்டுள்ள இந்த ஆராய்ச்சி, சேரர்களின் வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லுகிறது. சேர மன்னர்களுக்குள்ளேயே இரண்டு கிளை மரபினர் இருந்துள்ளார்கள், ஒரு கிளையினர் பொறையர்கள் என்றும் வழங்கப்பட்டனர் என்பதையும் எடுத்துச் சொல்ல தவறவில்லை. இந்த இரண்டு கிளையினரும் ஆட்சிப் பொறுப்பை இருவேறு கூறுகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொருவரும் ஒரு பகுதியை முன்னெடுத்துச் சென்றார்கள் என்னும் ஒரு புதிய கருத்தை இவ்வாய்வு நூல் வெளிப்படுத்துகிறது.

அதாவது, ஒரு கிளையினர் நாட்டின் தலைநகரில் இருந்துகொண்டு மக்கள் நலத் திட்டங்களை நடத்திக்கொண்டு இருந்தார்கள். மற்றொரு கிளையினர் கலை வளர்ப்பிலும் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதிலும் ஈடுபட்டு வந்தார்கள் என்பதை இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

ஓர் இரவு மக்களின் வரலாறு என்பது போர்க்களத்தோடும் அதனில் நின்று கொண்டு இருந்த மன்னர்களின் புயபல பராகிரமத்தோடும் ஒடுங்கி முடிந்துவிடுவதில்லை. அவர்களின் ஆட்சி நலத்தையும் பண்பு நலத்தையும் அவர்கள் காலத்து மற்றத் துறையினரின் நடவடிக்கைகளையும் ஒருங்கே சொல்லுவதுதான் அவர்களின் வரலாறு. இதைச்சொல்லும் நிலையிலும் கணிசமாக நடந்திருக்கிறார் இந்நூலாசிரியராகிய புருசோத்தமன். சான்றாக,

அக்கால மன்னர்களின் பெயர்களுக்கு முன்னால் ஒட்டிச் சொல்லப்பட்ட சிறப்புப் பெயர் அடைமொழிகளைக் கொண்டே அவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன தனித்தன்மை உடையவர்களாக இருந்தார்கள், அதற்கேற்ப என்னென்ன பணிகளில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள் என்பதையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் குழுமூர் என்னும் தனது பேரூரில் பெரிய சமையல் கூடம் ஒன்றை வைத்து எல்லோருக்கும் உணவு வழங்கினான். தன் முன்னொர்களின் நினைவு நாளில் பெருஞ்சோறு வழங்கினான் என்றும், அதனாலேயே அவனுக்குப் ‘பெருஞ்சோற்று உதியன்’ என்ற புகழ்ப்பெயர் கிடைத்தது என்றும் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். அதேபோல, ஆடல் பாடல் விநோதங்களில் மங்கையரோடு துணங்கைக் கூத்து ஆடுவதிலும் ஈடுபாடு காட்டிய சேரமன்னன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்று சிறப்பிக்கப்பட்டான். மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னன் கூர்த்த மதியும் சீர்த்த பார்வையும் உடையவனாக இருந்ததால், அவன் யானைக்கண் சேய் மாந்தரஞ் சோல் என்று சிறப்பிக்கப்பட்டான். சங்க காலத்தில் உள்நாட்டு வாணிகம் மட்டுமின்றி அயல் நாட்டு வாணிகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று அடிப்படையிலே இருந்தது. அவ்வகையில்,

உள்நாட்டு வாணிகத்தை பொறுத்தவரை போக்குவரத்து மிகக் குறைவாகவே இருந்தது. பெரும்பாலான ஊர்கள் நுகர்பொருள் தேவையில் தன்னிறைவு பெற்றிருந்தன. ஆகையால் உப்பு போன்ற ஒரு சில பொருள்களே இடம்விட்டு இடம் கொண்டு செல்லப்பட்டன. தங்கள் பகுதியில் கிடைத்த வெண்ணெய்க்குப் பதிலாக உப்பை வாங்கி அதனைப் பிற பகுதிகளில் விற்று வாணிகம் செய்தனர் உமணர். இவ்வாறு சங்க காலத்தில் நடந்த உள்நாட்டு

வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று அடிப்படையிலே இருந்தது என ஆசிரியர் எடுத்துரைத்தள்ளார்.

"தேன், நெய், கிழங்கு ஆகிய பண்டங்கள், மீனுக்கும், நறவுக்கும் மாற்றப்பட்டன. கரும்பும் அவலும், மான் ஊனூக்கும் கள்ளுக்கும் மாறின என்றும், நெய்யை விற்று எருமை வாங்கினர். உப்புக்கு நெல் மாற்றப்பட்து. பச்சை பயிற்றுக்கு மாற்றாக 'கெடிறு' என்னும் மீன் மாற்றிக் கொள்ளப்பட்டது. பண்டமாற்று முறையில் 'குறியெதிர்ப்பை' என்ற ஒரு முறையும் வழங்கி வந்தது. குறிப்பிட்ட ஓரளவு பண்டத்தைக் கடனாகக் கொண்டு ஒரு காலத்திற்கு பிறகு அதைத் திரும்பிக் கொடுப்பதே அம்முறையாகும்.

முல்லை நில வேட்டுவர்கள் மருத நில ஊர்களுக்கு வந்து தங்களது மான் கறியை வெண்ணெய்யாக மாற்றிச் சென்றனர். இதே ஊர்களில் ஆய் மகளிர் தயிர் கொண்டு வந்த பாத்திரம் நிறைய வெண்ணெய் பெற்றுச் சென்றான் (புறம் 33: 1, 6). பாண் மகள் (மீனவப் பெண்) கெடிறு மீனும், விரால் மீறும் கொண்டு வந்த வட்டி (கூடை) நிறைய பயிறு அல்லது வெண்ணெய்யை நிரப்பி அனுப்பினாள் வேளாளப் பெண். பாண் மகள் கொஞ்சம் மீன் கொடுத்து விட்டு மிகுந்த நெல்லைப் பெற்றுச் சென்ற செய்தியும் காணப்படுகிறது." (1989: 7, 8). இவ்வாறு உள்நாட்டு வாணிகம் குறித்து இந்நூலாசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு மிகச் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டின் இயற்கை அமைப்பும், எவ்வித மனித முயற்சியுமின்றி இயற்கையாகவே விளைந்த சில பொருள்களும், தமிழரின் அயல்நாட்டு வாணிகத்திற்குத் தூண்டு கோலாய் அமைந்தன. மேலும் கரையோரப் பயணமாகத் தொடங்கிய தமிழரின் அயல்நாட்டு வணிகம், நடுக்கடல் வணிகமாக மாறி வளர்ச்சியுற்றதை சங்க நூல்களும், அயல்நாட்டார் குறிப்புகளும் உறுதிப்படுத்துகின்றன. ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பெற்ற பொருள்கள் குறித்தும் அவை விரிவாகப் பேசப்படுகின்றன.

பல நாட்கள் கடலில் செல்லும் வங்கம் பற்றி அகநானூறும் (255: 1-7), யானைக்கு உவமையாகக் கூறப்படும் நாவாய் பற்றி பட்டினப் பாலையும் (172 - 14) பேசுகின்றன. இவையிரண்டும் நெடுந்தொலைவுக் கடற்பயணத்திற்குப்

பயன்பட்டன என்பதை பதிற்றுப்பத்து (52:3-4) எடுத்துக் காட்டுவதாக இந்நூலாசிரியர் சுட்டியுள்ளார்.

உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்றை அடிப்படையாக கொண்டிருந்தது என்று கூறுவதைப்போல அயல்நாட்டு வாணிகமும் பெரும்பாலும் பணத்தை – அதாவது தங்கத்தை அடிப்டையாகக் கொண்டிருந்தது எனலாம்.

'சங்க காலச் சேரர் அரசியல் நெறிமுறைகள்' என்னும் தலைப்பிலான முனைவர்பட்ட ஆய்வேடு சா. குருசாமி அவர்களால் எழுதப்பெற்று 1989-இல் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டது. குலத்தொன்மையையும் அரசர் நிலமும், சேரர் மரபு, அவையோரும் அரசியல் விளைநரும், ஆட்சி முறை அரண்நிலைகள் போர்கள், சோழர் புரிந்த போர் நெறிகள் என்னும் ஐந்து பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வேடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசு என்பது பழைய சமுதாய அமைப்பினின்று தோன்றியது என்றும், தமிழகத்தை ஆண்ட முடிவுடை மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர் படைப்புக்காலந்தொட்டு ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். மூவேந்தராட்சிக்கு முன்பு நகராட்சி இருந்துள்ளது என்பதையும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். முடியுடை மூவேந்தர்களில் தமிழகத்தின் முதல் வேந்தன் யார் என்பதை பற்றி விளக்க முற்படும் ஆசிரியர்.

"பண்டைத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த முடியுடை மூவேந்தருள் சேரர் முதன்மையானவர் என்று கூறவும் இடம் உண்டு. தொல்காப்பியர் மூவேந்தருடைய அடையாளப் பூக்களைப் 'போந்தை வேம்பே ஆரென வரூஉம்' என்று குறிப்பிடும்போது, சேரர் பூவாகிய போந்தையினையே முதன்மையாகக் குறிப்பிடுவதாலும் அசோகர் கல்வெட்டுச் சேரரை முன்னிறுத்திக் கூறுவதனாலும், புறநானூறு சேரரைப் பற்றிய பாடலைத் தொடக்கத்திலேயே அமைத்திருப்பதனாலும், சேர, சோழ, பாண்டியரென வழக்காற்றில் முறைப்படுத்திக் கூறுவதிலும் சேரர் இனமே முதன்மையாக இடம் பெறுவதாலும் மூவேந்தரில் மூத்தோர் சேரர் எனக் கூறலாம் (1989:13) என்று ஆசிரியர் இங்கு கருதுவது நோக்கத்தக்கது.

தமிழகத்தின் எல்லையினை ‘வடவேங்கடம் தென்குமரி’ எனக் கூறினாலும், ஒரு காலத்தில் வடக்கே இமயம் முதல் தெற்கே தென்பாலி வரை அது பரவியிருந்தது. சேர நாடு என்பது மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கேயும் அரபிக்கடலுக்கு கிழக்கேயும் அமைந்த நிலப்பகுதி என்றும், தொல்காப்பியர் காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் பன்னிரு பகுதிகளாக பிரிந்திருந்தன. இவற்றில் சேரநாடு ஆறு பிரிவுகளைக் கொண்டது. இதன் தலைநகர் வஞ்சியே என்றும் கருவூர் சேரரின் மற்றொரு தலைநகரம் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அரசியல் தோன்றிய பிறகுதான் மக்கள் சமுதாயம் நாகரிகம் அடையத் தொடங்கியது. பழைய சமுதாயத்தில் அறிவாலும் ஆற்றலாலும் சிறந்தவனே தலைவன் என்றும், சங்க காலத் தமிழக ஆட்சி முடியாட்சி என்றும், இது தனியாட்சி, துணையாட்சி, கூட்டாட்சி என 3 வகையுடையது. சங்ககால அரசியல் அறநூலும், நீதிநூலும் கூறும் பண்பின் அடிப்படையிலும், மக்களிடையே நிலவிய பழக்கவழக்கங்களின் அடிப்படையாலும் அமைந்தது என இந்நூலாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

அரச மரபு சங்க காலத்திற்கு முன்னதாகவே இருந்து வருவதென்றும் தந்தையின் பின் மைந்தன் என அரச மரபினைப் பொதுபடக் கூறினும், உடன்பிறந்தோர் பேரரசராக முடிசூடிய பின்பே, மைந்தருள் மூத்தோன் பேரரசன் ஆவான். அரசன் இன்ன வயதினில்தான் அரியணை ஏறவேண்டும் என்னும் வரம்பு இல்லை என ஆசிரியர் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியுள்ளார். இச்சேரமரபினர் கி. மு. 4000 முதல் கி.பி. 1200 வரை ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் மூத்த வழியினர், இளைய வழியினர் என்னும் இரு பிரிவினராவர். மூத்த வழியினர், உதியன் என்னும் அந்துவன் குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றும் வானவர் மற்றும் வானவரம்பர் என்றும் இவர்கள் வழங்கப்படுவதுண்டு. இளைய வழியினர் இரும்பொறை என்னும் குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றும் இவர்களைப் பொறையர் எனவும் வழங்குவர் என ஆசிரியர் கூறுகிறார்.

சேர மரபில் தோன்றிய பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் முதலாகக் குட்டுவன் மன்னன் ஈறாக முப்பது சேர மன்னர்கள் சேர நாட்டை சங்க

காலத்தில் ஆண்டுள்ளனர். சேரரின் தாயமுறை குறித்து விளக்க முற்படும் ஆசிரியர், தாயமுறை என்பதற்கு உரிமை முறை என்பது பொருள். ‘தொன்றுதொட்டு, வழிவழியாக வரும் அரசுரிமை பெற்றொழுகிய பெருவேந்தரைப் பொருதழித்து நிலவுலகத்தை ஆண்டவன் சேரன் செங்குட்டுவன் என்பர். இவ்வரசு உரிமையினை தாயம் என்றும் கூறுவர். இத்தாய முறை மகன் வழி வருமாயின் மக்கட்டாய முறை எனவும், மகள்வழி மருமகற்கு உரிமை வருமாயின் மருமக்கட்டாய முறை எனவும் கூறப்படும். மூவேந்தரின் சோழ, பாண்டியர்களின் அரசமுறை மக்கட்டாய முறையாகக் தொன்றுதொட்டு மரபாகி நிலவி வந்தது என்பதில் கருத்து வேறுபாடு எவருக்கும் இல்லை. சேரநாட்டில் நிலவிய அரச உரிமையானது ‘மக்கட்டாய முறை’ ஆகும். ‘தாயத்தின் அடையா’ என்னும் தொல்காப்பியத் தொடருக்குத் “தந்தையின் சொத்துக்களை மக்கள் வழிவழியாக அடைதல்” என உரைவிளக்கம் தருவர். தந்தைக்குப்பின் தன் மூத்த மகன் அரியணையேறும் பேற்றினைப் பெற்று அரசாளும் உரிமை தொன்றுதொட்டு வந்த மரபாக இருந்தது. தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேர மன்னன், தன்னிலும் நல்லாட்சி நிலவ வேண்டி, வேள்வி செய்து அரசியல் துறைபோகிய நன்மகனைப் பெற்றான் என்று அரிசில்கிழார் குறிப்பிடுகிறார். மேலும், சேரர் வரலாற்றினை தெள்ளிதின் காட்டும் பதிற்றுப்பத்தின் பதிகத்தில் மக்கட்டாயமுறை பற்றிய கருத்து உள்ளது. பதிகமானது பிற்காலக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட மெய்க்கீர்த்தி உருவாயிற்று எனலாம். சேரநாட்டில் தந்தைக்குப் பின் மகன்வழி வரும் மக்கட்டாய முறையே நிலவிற்று என அறுதியிட்டு கூறும் நிலையில்,

**இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு**
**வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகன்**

மற்றும்,

**பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு**
**வேளாவிக் கோமான் பதுமன்றேவி யீன்ற மகன்**

என்று வரும் பதிக அடிகள் இவற்றில் காணப்படும் ‘மகன்’ என்னும் சொல்லே மக்கட்டாய முறையினை வலியுறுத்த போதுமானது என இந்நூலாசிரியர் அழுத்தமாக பதிவு செய்துள்ளார்.

சேர நாட்டில் மக்கள் இல்லாத காலத்தும், இளையோனாக இருந்த காலத்தும், போர்மேற் சென்றபோதும் அவையோராலும் பிறராலும் இடைக்கால ஆட்சி நடைபெற்று உள்ளது என்று ஆசிரியர் தன்னுடைய கருத்தை குறிப்பிடுகிறார்.

சங்க கால மன்னர்கள் அரசாட்சி நடத்த அவைகளைத் துணையாகக் கொண்டிருந்தனர். இவ் 'அவையை' அரசவை, ஓலக்கம், இருக்கை, வேட்டவை முதலிய பெயர்கள் கொண்டு வழங்குவதோடு, நாட்பொழுது அவை குறித்து நாளவை, நாள்மகிழிருக்கை, நாளோலக்கம், நாளிருக்கை, பெருநாளிக்கை என்று அவைக்குரிய பெயர்களை ஆசிரியர் கூறுகின்றார். அவையோரை சுற்றத்தினர் என்றும், சான்றோர் என்றும் வழங்குவர் 'காவிதி மாக்கள்' என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அமைச்சர் என்று வள்ளுவரும், அமைச்சன் என்றும் மந்திரி என்றும் இளங்கோவடிகளும் குறிப்பிடுகிறார், மேலும் இவ்வகையினை 'எட்டுவகை நுதலிய வவையத் தானும்' என தொல்காப்பியம் சுட்டுகிறது. இதனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே 'அவை' என்னும் அமைப்பு இருந்து வந்தமையினை ஆசிரியர் சான்று காட்டி தெளிவுறுத்துகின்றார்.

சங்க மருவிய காலத்தில் சிலப்பதிகாரம் தான் முதன் முதலில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் என இரு அவைகளைப் பற்றிக் கூறுகின்றது. இருப்பினும் நாற்பெருங்குழு, பொலம்பூன் ஐவர் என்னும் பெயரால் 'அவை' இருந்தமையினை மதுரைக்ககாஞ்சி குறிப்பிடும். ஐம்பெருங்குழு என்னும் சொல்லுக்கு 'ஐந்து குழுவாரின் பெருந் தொகுதியே ஐம்பெருங்குழுவாம்' என்று ஞா. தேவநேயன் பொருள் கூறுகின்றார். இதனால் ஒவ்வொரு குழுவிலுள்ளும் பலர் இருந்தனர் என்றும், அமைச்சர் புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்னும் ஐவர் இருக்குழுவில் இடம்பெற்றுள்ளனர் என ஆசிரியர் இந்நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

அரசனுக்கு அடுத்த நிலையில் நிற்பவன் அமைச்சன் ஆவான். அமைச்சரின் பணிகள் இன்னவை என எந்த இலக்கியமும் தெள்ளிதின் குறிப்படவில்லை என ஆசிரியர் இங்கு சுட்டிக் காட்டியுள்ளார். இருப்பினும் இவர்கள் ஆட்சியில் முக்கிய இடம் பெற்றிருந்தனர் என்றும், பொதுவாக

அரசாட்சியின் முக்கிய பணிகளை இவர்களே கவனித்து வந்தனர் என்றும், இவர்கள் எப்போதும் அரசனுடன் இருந்து வேண்டுங்காலத்துப் பெரிதும் துணைப்புரிந்தனர். ஆகையால் இவர்களை மெய்யார்த்த சுற்றம் எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது என அமைச்சன் நிலை குறித்து ஆசிரியர் எடுத்துக்காட்டி தெளிவுப்படுத்தியுள்ளார்.

"நாட்டின் வருவாயையும், அரசாங்கச் செலவையும் நீதி முறைகளையும் அமைச்சரே கவனித்து வந்துள்ளனர். நாட்டின் நிலைமைகளையும், மக்களின் குறைகளையும் அவ்வப்போது வேந்தனுக்கு எடுத்துரைத்து நிலைமைக்கேற்றவாறு அரசாட்சி புரிவதில் இவர்கள் துணையாக இருந்தனர். அரசாட்சியில் வரும் வினைகளுக்கேற்ப, 'பகைவர்க்குத் துணையாயிருப்பவரைப் பிரிக்க வேண்டின் பிரித்தும், தம்மிடம் உள்ளோரைப் பிரியவிடாமல் கொடை இன்சொற்களால் பேணிக் காத்தும்' தம் முன்னோராலும் தம்மாலும் பிரிந்தாரை மீண்டும் பொருந்த வேண்டின் பொருந்தியும் வினையாற்றுபவனே சிறந்த அமைச்சன் ஆவான். அரசன் இரவலர்க்கும் விழுப்புண் எய்திய வீரர்க்கும் பரிசிலினை வழங்கும்போது, அவற்றை வரிசைப்படுத்தி நல்குவதில் அசைச்சரே துணைபுரிந்தனர். முடிசூடுதலாயினும், போர் நிகழ்ச்சியாயினும் அவையோரைக் கலந்த பின்பே முடிவு செய்யும் மரபு இருந்தது" (மேலது: 109,110) என அமைச்சனின் சிறப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்தும் ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

சமயக் கருத்துக்களின் அடிப்படையில் கணக்கிட்டுக் கூறும் சமயப் பிரதிநிதிகளாகவும், நல்ல நேரத்தைக் கணக்கிட்டுக் கூறும் கணியராகவும், பருவ காலங்களையும் அவற்றின் இயல்புகளையும் எண்ணிக் கூறுவோராகவும் புரோகிதர்கள் இருந்துள்ளமையையும் நூலில் கூறிச் செல்கிறார் ஆசிரியர்.

ஐம்பெருங்குழுவிற்கு அடுத்த நிலையில் ஆட்சிக்கு துணைபுரிந்த பேரவை எண்பேராயம் ஆகும். கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானை மறவர், இவுளி மறவர் என்னும் எண்மரே எண்பேராயத்தின்கண் இடம் பெறுவோர் என ஆசிரியர் உரைக்கின்றார். மேலும் எண்பேராயம் மற்றும் ஐம்பெருங்குழு இவைகளின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில்,

"ஐம்பெருங்குழு அரசனுடைய நிர்வாக சபை அதாவது செயற்குழுவாகும். மந்திரிசபை என்றும் கூறலாம். எண்பேராயம் என்பது பொதுமக்கள் சபையாகும். இந்த எண்பேராயம் என்னும் சபையிலே அரசாங்கத்தை நடத்தும் பொறுப்புள்ள ஒவ்வொரு துறையின் பிரதிநிதிகளும் இருந்தனர்" (மேலது :113)

எனவே இவ்விரு அவைகளின் சிறப்புக் குறித்து ஆசிரியர் தெளிவுர எடுத்துக்காட்டி விளக்கிச் சென்றுள்ளார்.

அரசவையில் இடம்பெறும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியவற்றினோடு 'உறுதிச்சுற்றம்' என்றொரு குழு இருந்துள்ளது. இக்குழுவில் நட்பாளர், அந்தணாளர், படைத்தொழிலாளர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப் புலவர் முதலிய ஐவர் இருந்தனர். அரசவைக் குழுக்களில் இடம்பெறாத வினைஞர்களும் உண்டென்றும், அவர்கள் அரசியல் வினைஞர்கள் ஆவார்கள் என்றும், அரசியல் வினைஞரின்றி அரசாட்சி நடத்த இயலாது என்பது உண்மை என இந்நூலாசிரியர் பதிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மூவேந்தர்கள் தம் ஆள்நிலத்தைச் சிறுசிறு உட்பிரிவுகளாகப் பிரித்து ஆண்டனர். மூத்தோன் பேரரசனாகவும், இளையோர் உட்பிரிவுகளின் தலைவர்களாகவும் இருந்து ஆட்சி புரிந்தனர். அரசவை நடைபெறும்போது அரசமாதேவியும், இளங்கோவும் உடனிருப்பர். அரசியல் நிகழ்ச்சிகளோடு கலை நிகழ்ச்சிகளும் அவையில் நடைபெறுவது உண்டு எனவும், ஓதல், பொருதல் நாடுபுரத்தல், ஈதல், வேட்டல், படைபயிரல் ஆகியன அரசனது தொழில்களாக அமைந்தன. அரசன் அனைத்து அதிகாரங்களும் பெற்றவனாக இருந்தாலும் அவைகளின் துணைகொண்டு ஆட்சி புரிந்துள்ளான் என ஆசிரியர் கூறுவது இங்கு கருதத்தக்கது.

ஆள்நிலம் முழுவதும் ஆட்சிமுறை செவ்வனே நடைபெற ஊராட்சி முறை இருந்துள்ளன. பொதியில், அம்பலம் என்னும் பெயர்களால் ஊரவை இருந்தது. அது வழக்குகளை தீர்த்து வைக்கும் மன்றமாகவும் விளங்கியது எனவும், ஊரவை குடவோலை முறைப்படி அமைக்கப்பெற்று, வயதிலும், அறிவிலும்,

முதிர்ந்தோரை தலைவராகக் கொண்டு விளங்கியதாக ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பிற்குரியது.

தார்ப்படை, நாற்படை, கூழைப்படை என்பன பொது என்றும், கடற்படை, ஈர்ம்படை என்பன சேரர்க்குரிய சிறப்புப் படைகளாகவும், போரிடும்பொழுது பெரும்பாலும் தார்ப்படை, காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, கூழைப்படை என்னும் முறையில் படையினை நிறுத்திப் போர் புரிந்துள்ளனர் என்பதை இந்நூல் காட்டுகின்றது.

சங்க காலத்தில் போரிடுதல் என்பது பெருமையாகக் கருதப்பட்டது. போருக்குரிய காரணங்கள் பல. அவற்றுள் அரசுரிமைப் போரும் மகட்கோடல் போரும் மிகவும் இழிவாகக் கருதப்பட்டன. போர் தொடங்குமுன் மாற்றானுக்கு ஒற்றன் மூலம் செய்தியினை அறிவிக்கும் முறை இருந்துள்ளது. போருக்கு புறப்படுவதற்கு முன்பாக நாள் குறித்தல், குறி பார்த்தல், கொற்றவையை வணங்குதல் ஆகியவை நடைபெறும். போரிடும்போது தார்ப்படை, முன்னேயும், கூழைப்படை பின்னேயும் நாற்படைகள் நடுவேயும் நின்றன. படைகளை நிறுத்தும்போது பரிதியை போல வட்டமாக ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்திப் போரிட்டனர் எனவும், போர் நிகழும் தன்மைக்கேற்பச் சதுரமாகவும், நீள சதுரமாகவும், அரை வட்டமாகவும் படைகளை நிறுத்திப் போரிடுவது உண்டு. எழுவகை திணை ஒழுக்கங்களுக்கேற்பப் போர் புரிந்துள்ளமையையும், வெற்றியடைந்தப்பின் தெய்வத்தை வணங்கிப் பரிசுகள் நல்கி, களவேள்வி செய்துள்ளமையையும், சேரமன்னர்கள் புறத்திணை ஒழுக்கத்திற்கேற்பவே போர் புரிந்தனர் என்றும் இவர்கள் ஆரியருடனும், சோழருடனும், கொங்கு நாட்டவரோடும், மோகூர்ப் பழையனோடும் பல போர்களை புரிந்து வெற்றி வாகை சூடியுள்ளமை முதலியவற்றை ஆசிரியர் திறம்பட ஆய்ந்து கூறியுள்ளமை போற்றுதற்குரியது.

அன்பு, அறன், பொய்யாமை, பொறையுடைமை, அஞ்சுதல், அஞ்சாமை முதலான பண்புகளை கொண்டவர்கள் சேர மன்னர்கள். இவர்கள் இல்லற வாழ்க்கையில் சிறந்தவர்களாகவும், மான உணர்வின் உறைவிடமாகவும் விளங்கியுள்ளதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். காட்சித்

தெளிவாகவும் கடுஞ்சொல் அற்றவராகவும் இருந்தார்கள். வேந்தர் கடமை நம் நாட்டு மக்களைக் காப்பாற்றுவது. ஆயினும், சேரர் தம் நாட்டு மக்களைக் காத்தலோடு, பகைவர் தம் நாட்டு மக்களையும் காத்தது சிறப்பு வாய்ந்தது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். உழவர் குடியினருக்கு நீர்நிலைகளை உண்டாக்கியும், வணிகர் குடியினர்க்குப் படைகொண்டு காவல் வழங்கியுள்ளமையையும், அரசாட்சிக்குத் துணைப்புரிந்தோர் முதுமையடைந்த போது அவர்களுக்குப் பேணுதலாகிய பேரறத்தைச் செய்துள்ளமையும், சேர மன்னர் தன்னை நாடி வரும் இரவலர்க்கு வரையாது வாரி வழங்கியும் அவர்களுடன் அமர்ந்து உணவுண்டு பெருமைப்படுத்தியமையும். இவ்வாறு வழங்கியதால் இரவலர்க்கு இல்லாமல் போயினர் போன்ற செய்திகள் அனைத்தும் நூலாகி ஆராய்ந்து வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

அரசன் வீற்றிருந்த திருவோலக்கமே நீதிமன்றமாக விளங்கியது என்றும், இதில் அரசனே நீதிபதியாவான் என்றும், நடுவு நிலைமை பிறழாது ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி ஆகிய முறைகள் கையாளப்பட்டு நீதி வழங்கப்பட்ட முறைமையையும், குற்றம் புரிந்தவர்க்குக் குற்றத்திற்கேற்பத் தண்டனை வழங்கியுள்ளமையையும் தெளிவாக எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

சேர மன்னர்கள் போர் புரிவதிலும் அறத்தைப் பின்பற்றியுள்ளனர். அவ்வகையில் ஒத்தாரோடு போரிடுதல், புறமுதுகிட்டோடுபவர்மேல் பொராதிருத்தல், போரிட விருப்பமில்லாதவர்மேல் போரிடாதிருத்தல், தோற்றாரைத் துன்புறுத்தாதிருத்தல் போன்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்டு போர் புரிந்துள்ளமையையும் ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைக்கும் பாங்கு போற்றுதற்குரியதாகும். மேலும் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும், பொருள்களை வகுத்து அளித்தலிலும் அறத்தைப் பின்பற்றியுள்ளமை போன்றவற்றை ஆராய்ந்து இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

அரசன் வரியாக ஆறில் ஒரு பங்கினை மட்டும் பெற்றான் என்றும் சேரவேந்தர்கள் நெறியறிந்து இறை பெற்றமையையும், வான்பொய்ப்பின் வரிநீக்கம் செய்துள்ளனர் என்றும், கையிகந்த கடமை வாங்குவதில் வெறுப்பு கொண்டுள்ளனர் என சுட்டிக்காட்டி விளக்கியுரைத்துள்ளார் ஆசிரியர். இவ்வாறு, சேர மன்னர்கள் அரசியல், நீதி, போர், வரி ஆகிய நான்கு

நெறிமுறைகளிலும் மிகச் சிறப்புடன் விளங்கியதோடு இனிமையான அறவழி அரசாட்சி நடத்தியுள்ளார் என்பதை ஆசிரியர் நுணுகி ஆராய்ந்து தெள்ளத்தெளிவாக எடுத்துரைப்பதன் மூலம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

'சங்க காலச் சோழர்' என்னும் நூல் சி. முத்துகிருட்டின நாட்டார் அவர்களால் எழுதப்பட்டு 1967-இல் நூலாக வெளியிடப்பெற்றது. தமிழ் மொழி தமிழகத்தின் ஆட்சி மொழியாக அரியணை ஏறிப் பெருமையுற்று விளங்கும் இந்நாளில், பண்டைக் காலத் தமிழகத்தைக் கோல் கோடாது ஆட்சி புரிந்து வந்த முடியுடை மூவேந்தர்களைப்பற்றி அறிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும். அவ்வகையில் அம்முடியுடை மூவேந்தர்களுள் நடுவண் வைத்துச் சான்றோரால் எண்ணப்படும் பெருமை சோழமன்னர்களைச் சார்ந்ததாகும். புறநானூறு, அகநானூறு போன்ற சங்கத் தமிழ் நூல்களில் அவர்களைப் பற்றிப் பல செய்திகளை அறிகின்றோம். கடைச்சங்க காலத்தில் மிகச் சிறப்புற்று விளங்கிய சோழ மன்னர் எழுவர் வரலாற்றினை அக்காலப் புலவர் பெருமக்கள் அம்மன்னர்களைப் பாடிய பாக்களின் துணை கொண்டும் அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து எழுதிய சோழர் வரலாறுகள் துணை கொண்டும் 'சங்க காலச் சோழர்' என்னும் பெயரால் இந்நூல் இயன்ற அளவு எளிய நடையில் இனிய மொழிகளால் எழுதப்பெற்றதாகும்.

இந்நூல் சங்ககாலச் சோழர் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு ஓரளவு துணைசெய்கின்றன. தமிழகத்தை குடபுலம், குணபுலம், தென்புலம் என்ற மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்துப் பண்டுதொட்டு மாட்சியொடு ஆட்சி புரிந்து வந்தோர் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தராவார். அவர்கள் ஆட்சி புரிந்து வந்த பகுதிகள் முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என வழங்கப்பட்டுவந்தது. இத்தகைய தமிழகத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் "வாண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" என்று குறிப்பிட்டுள்ளார். மற்றொரு பழந்தமிழ்ப்புலவர் "பொதுமை சுட்டிய மூவருலகம்" என்று கூறியுள்ளார்.

சேர, சோழ, பாண்டியர்களாகிய இம்மூவரும் முடிபுனைந்து நாடாண்டமையின் முடியுடை மூவேந்தர் என அழைக்கப்பெற்று வந்தனர். இம்முடிவுடை வேந்தர்கள் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி மக்களாவார். பழங்குடி என்பதற்குப் பரிமேலழகர் "சேர, சோழ, பாண்டியர்

என்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருங்குடி" என்று பொருள் கூறுவர். மேலும், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியினராகிய சோழர் எக்காலத்து இச்சோழநாட்டினை ஆட்சிபுரியும் உரிமை பெற்றனறென்றாதல், எவராலும் வரையறுத்துக் கூற முடியாத அத்துனைப் பழமை வாய்ந்த குடியினர் என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

கரிகாள் பெருவளத்தானின் பெயர்க்காரணம் குறித்து கூற ஆசிரியர் கரிகால் பெருவளத்தானை கொள்ளக்கருதி சிறைச்சாலையை தீயிலிட்டுக் கொளுத்தினர். தீ நாற்றமும் தீயும் நாள்புறமும் சூழ்ந்து கொண்டது. தீயின் வெம்மை அவனைப் பற்றத் தொடங்கியது. உடனே தீயினை மிதித்து வெளிவர முயன்றான். முயலும்போது அவன் கால்கள் தீயாற் சுடப்பட்டுக் கரிந்து போயின. அதனால் இவன் கரி (கரிந்த) எனப்பட்டான். இதனைச்

**சுடப்பட்டு உயிர் உய்ந்த சோழன் மகன்**

என்று பழமொழி செய்யுளாலும்,

**அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய்புனல் நீர் நாடன்**
**கரிகாலன் கால்நெடுப் புற்று**

என்னும் பட்டினப்பாலை ஈற்றுச் செய்யுளடிகளாலும் அறியலாம். இதனால் இவனை யாவரும் கரிகாலன் என அழைப்பாராயினர்.

பண்டைத் தமிழரின் வீரத்தை வெளிப்படுத்தும் இலக்கியங்களிலே இளமைகாலந் தொட்டே ஈடுபாடுகொண்ட கி. பாண்டுரங்கன் அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாகப் 'பண்டைத்தமிழர் போரியல் வாழ்க்கையும் தற்காலப் போர் நடவடிக்கையும்' என்னும் தலைப்பில் ஒப்பிட்டு ஆய்ந்து முனைவர் பட்ட ஆய்வேட்டை 1983-இல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்துள்ளார். பின்னர் இவ்வாய்வேடு நூலாக்கம் பெற்று 1986-இல் நூலாக வெளியிடப்பட்டது.

இந்நூல் போரும் புவியியலும், தொல்காப்பியம் காட்டும் போரியல், பழந்தமிழ் இலக்கியங்களும் பண்டைத்தமிழர் போரியல் வாழ்க்கையும் பண்டைத் தமிழர் பாதுகாப்புத்திறன் என்னும் நான்கு தலைப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

வீரச்சிறப்பும், வெற்றிச்சிறப்பும், கொடைச்சிறப்பும் கொண்ட கொள்கையினின்று குன்றாத குணச் சிறப்பும் பண்டைய மன்னர்களிடம் குடி கொண்டிருந்தன. அம்மன்னர்கள் குடிமக்களைக் காக்கும் பணியில் ஈடுபடுவதற்கு இப்பண்புகள் அடிப்படையாக அமைந்தன. இத்தகைய சீரிய பண்புகளுடன் சிறக்க வாழ்ந்த அக்காலத்தமிழ் வேந்தர்களின் போரியல் நெறிகளைப் பற்றி, விரிவான கருத்துகளடங்கிய நூல் உருவாக வேண்டும் என்ற விழைவை வேட்கையைத் தீர்த்திடும் வகையில் 'பண்டைத் தமிழரின் போரியியல் வாழ்க்கையும் தற்காலப் போர் நடவடிக்கையும்' என்னும் இந்நூல் கி. பாண்டுரங்கன் அவர்களின் முயற்சியால் வெளிவந்துள்ளது.

பழந்தமிழ் காதல் வாழ்வு குறித்து வெளியான கருத்துரைகளை நோக்குகையில் அளவிலும் ஆழத்திலும் புறவாழ்வு வீர உணர்வு குறித்து எழுந்த கருத்துரைகள் குறைவு என்றே இந்நூலிற்கு அணிந்துரை எழுதிய டாக்டர். ச. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுகின்றார். பின்னர் இதனைப் போன்றே "தமிழில் அக இலக்கியங்களும் அவை பற்றிய ஆய்வுரைகளும் தோன்றி உள்ள அளவிற்கு புறப்பொருள் இலக்கியங்களும் அவை பற்றிய ஆய்வுரைகளும் தோன்றவில்லை" என்று இந்நூலாசிரியிராகிய கி. பாண்டுரங்கன் அவர்கள் புறநூல் ஆய்வின் தொய்வு குறித்து தன்னுடைய நன்றியுரை பகுதியில் சுட்டிச் சென்றுள்ளார்".

புவியியல் கூறுகள் நாட்டின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதனவாக விளங்குவதைக் குறிப்பிடுகின்றார் நூலாசிரியர் மேலும் ஒரு நாட்டின் நிலை பேற்றிற்கும் அழிவிற்கும் அந்நாட்டின் புவியியல் அமைப்பே அடிப்படையாகின்றது என்று அவர் வலிறுத்துவது இங்கு நோக்கத்தக்கது. இதற்கேற்பவே பழந்தமிழ்நாடு பாதுகாப்பு அமைப்பில் சிறந்திருந்தது. எனவேதான் வடஇந்தியர் தமிழகத்துள் நுழைந்து தமது ஆதிக்கத்தை நிறுவமுடியவில்லை என்றும் பண்டைத் தமிழர் வீரச்சிறப்புடனும், போர்ச்சிறப்புடனும் வாழ்ந்ததற்கு நிலவியற் கூறுகள் வாய்ப்பாக அமைந்தன என்றும் நூலாசிரியர் கூறுவன பொருத்தமுடையதாக உள்ளது.

ஒரு நாட்டின் இயற்கை வளத்தினைக் கொண்டு அந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையில் நட்பு நாடுகளிடம் உதவி பெற்றோ, பகை நாடுகளுடன் போரிட்டோ, அதனால்

பெறும் வளத்தினைக் கொண்டேனும் தன் நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வது அரசின் கடமையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

"அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் கிடைத்துவிட்டால் போதுமென்று மனித மனம் நிறைவடைவதில்லை. மேலும் மேலும் வசதிகளைப் பெருக்கவே விரும்புகிறது. இத்தகைய நிறைவு பெறா மனம் ஆசையைப் பெருக்குகிறது. அது பேராசையாக முகிழ்த்து. பிறர் நலத்தை கெடுத்தேனும் தன் வளத்தைப் பெருக்கும் மனநிலை ஏற்படுகிறது. தன் நாடு மட்டும் மற்ற நாடுகளைவிட வளமும் வலிமையும் உடையதாக இருக்க வேண்டும் என்ற பேராவல் போருக்குரிய தவிர்க்க முடியாத ஒரு காரணமாகிறது." (மேலது: 2) என ஆசிரியர் போருக்குரிய காரணத்தை இங்கு சுட்டிச்செல்கிறார் இக்கருத்து ஏற்புடைத்தாகவும் உள்ளது.

குயின்சி ரைட் என்பார் போர் பற்றிய ஆய்வு (A study of war) என்ற நூலில் போர்த் தொடர்பான பல்வேறு செய்திகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். அவர் போரின் உந்தல் அல்லது தூண்டுதல்களாக (drives), உணவுபெறுதல், பாலுணர்வு, நாட்டு எல்லையை விரிவாக்கல், வீரச்செயல் – வேட்கை, தற்காப்பு, பிறரை அடக்கி ஆளும் விருப்பம், விடுதலை வேட்கை, சமுதாயச் சூழல் போன்றவற்றைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

அன்பு நெறியாகப் போதிக்கப்பட்ட பௌத்தம், சமணம், சைவம், கிறித்தவம், முதலிய நெறிகளனைத்தும் சமயக் குறியீடுகளாக மாறின, நாளடைவில் அச்சமயங்களே போருக்குரிய காரணமாகவும் மாறின. இன்று உலகில் உள்ள நாடுகள் எச்சமயத்தை பின்பற்றுவதாக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கைகளைப் பின்பற்றுவதாக இருந்தாலும், பிறநாடுகளுடன் போரிடுவதற்கு (தற்காப்பிற்காக) நிலையான படைகளை (Standing Army) வைத்துள்ளன என்பதையும் ஆசிரியர் இந்நூலின் வழியாக ஆய்ந்து எடுத்துரைத்துள்ளார்.

"நாட்டின் போர்த்துறை (War Deapartment) என்பது பாதுகாப்புத்துறை (Defence Department) என்றும், போர் அமைச்சர் என்பவர் பாதுகாப்பு அமைச்சர் என்றும், போருக்கான முன் ஏற்பாடுகள் (Preparation for War) என்பது,

பாதுகாப்பு ஏற்பாடுகள் (Defence Preparation) என்றும், பெயர் மாற்றம் பெற்றனவே தவிர, போரும் போர் ஏற்பாடுகளும் எங்கும் மறையவும் இல்லை, குறையவும் இல்லை. பாதுகாப்பு என்ற போர்வையில் போர்க்கலையும் போர் அறிவியலும் (Art of War and Military Science) நாளுக்கு நாள் வளர்ந்து வண்ணமே இருக்கின்றன". (மேலது: 5) என நாட்டின் போர்த்துறையின் பெயர் மாற்றம் ஏற்பட்டிருப்பதையும், ஆசிரியர் தெளிவுறுத்தும் பாங்கு போற்றுதற்குரியது.

புறத்திணை இயலைப் பழந்தமிழரின் போரியல் என்றே ஆசிரியர் சுட்டுகின்றார். தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை, பன்னிருபடலம் ஆகிய நூல்களில் குறிப்பிடப்படும் புறத்திணைப் பாகுப்பாடுகளை ஆராய்ந்து, தொல்காப்பியரின் புறத்திணைகள் ஏழு என்ற பாகுபாடே சரியானதென்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். புறத்திணை இயலைப் பற்றிக் குறிப்பிடுகையில் அன்றைய போரியலை முறையாகவும், உண்மையாகவும் கண்டறிய புறத்திணையியல் நன்கு உதவும் கருத்துப் பேழையாக உள்ளது என தெளிவுப்படுத்துகிறார். வெட்சி, கரந்தை முதலான ஏழு திணைகளும் போர் வகைகள் என்றும், ஒவ்வொரு திணைக்குமுரிய துறைகள் போரில் அமைந்த பல்வேறு படிநிலைகள் என்று குறிப்பிடும் ஆசிரியர், இப்போர் வகைகளும், படிநிலைகளும் தற்காலப் போர்வகை மற்றும் படிநிலைகளோடு ஒத்திருக்கும் பாண்மையையும் விளக்கியும், விரிவான முறையில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

சங்க இலக்கியங்களில் புறத்தைப் பற்றிய இலக்கியங்களாக புறநானூற்றையும் பதிற்றுப்பத்தையும் கொள்வர். இந்நூல்களில் முழுவதும் புறத்திணைச் செய்திகளே கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாண்மையான பாடல்களில் வீரமும் கொடையுமே பாடு பொருளாக அமைந்துள்ளன. அதாவது ஒரு தலைவன் புகழ்பெற விரும்பினால் அவன் வீரத்திலும் கொடையிலும் சிறக்க வேண்டும் என்ற நிலையை எடுத்துக்காட்டி அக்காலச் சமுதாயச்சூழலை விளக்குகின்றார்.

சேர மன்னர்கள் நிலத்திலும் நீரிலும் படை நடத்தி வெற்றி கண்ட வரலாற்றைப் பதிற்றுப்பத்து பகர்கிறது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலுள்ள

பதிகம் அக்குறிப்பிட்ட மன்னனின் வெற்றிகளைத் தொகுத்துரைக்கிறது. பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி, முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை, என்றும் மூன்று பாடல்களில் போர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. ஏனையவற்றுள் ஒரு சில குறிப்புக்களே உள்ளன. அவற்றுள் எயினர் அரண் பற்றியும் பாசறை அமைப்பு குறித்ததான செய்திகள் ஆகியவற்றை சிறப்பாக குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார் ஆசிரியர்.

போரையும், போர்க்களத்தையும் குறிப்பதான அடல், அமர், அழுவம், கலாஅம், களம், சமம், செரு, ஞாட்பு, பறந்தலை, புலம், போர் போன்ற பல சொற்கள் புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து நூல்களில் இடம் பெற்றுள்ளது. இச்சொற்கள் வழக்கில் இருந்துள்ளதையும், பெரும்பாலும் இச்சொற்கள் அடைமொழிகளோடு ஆளப்பட்டுள்ளதையும் இந்நூலாசிரியர் சுட்டிச் செல்கிறார்.

போர்க்களத்தில் படையிழந்து நிற்பவன், புறங்கொடுத்து ஓடுபவன், அஞ்சி அடைக்கலம் புகுபவன் போன்றோரைப் போர்க்களத்தில் கொல்லக் கூடாது என்ற தமிழ் மரபையும், அத்தகையோர் கொல்லப்பட்டால் அது கொலைக்களச் செயலாகும் என்பதையும் இந்நூலாசிரியர் இந்நூலின் வழியாக எடுத்துரைத்துள்ளார்.

போர்க்களத்தில் படைக்கருவிகளைக் கொண்டு தாக்கப்படும் குறி எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்பதைக் கணித்து அதற்கேற்ற கருவியைப் பயன்படுத்தும் முறையையும் தற்கால போர் முறையை குறித்து விளக்க முற்படும் ஆசிரியர்.

“தாக்க நிற்கும் படைவீரருக்கு முன்னால் ஏறக்குறைய 270 மீட்டர் வரையிலுள்ள நிலப்பகுதியை அருகாமை என்றும், 270 மீட்டரிலிருந்து 450 மீட்டர் வரை உள்ள நிலப்பகுதியை இடைப்பட்ட தொலைவு என்றும் 450 மீட்டருக்கு அப்பால் உள்ள நிலப்பகுதியை நெடுந்தொலைவு என்றும் இக்காலப் போர் முறையில் பகுத்துக் கூறுவர். பகைவரின் இருப்பிடம் இந்த மூன்று நிலப்பகுதியில் உள்ளது என்பதைப் பார்வையில் கணித்து, அதற்கு ஏற்ற போர்க்கருவியைப் பயன்படுத்த வேண்டும். பகைவர் அருகாமையில் இருந்தால் கைத் துப்பாக்கி (Sten gun, Pistol) கைக்குண்டு (Hand Grenade) முதலியவற்றைப்

பயன்படுத்தினால் போதும். இடைப்பட்ட தொலைவில் பகைவர் இருந்தால் துப்பாக்கி, பளு குறைந்த இயந்திர துப்பாக்கி (Light Machine Gun) போன்ற கருவிகளையும், நெடுந்தொலைவிலுள்ள பகைவர்களைத் தாக்க மேற்குறித்த கருவிகள் பயன்படாது என்றும், வலிமிக்க இயந்திரத் துப்பாக்கி (Heavy Machine Gun) பீரங்கி (Artillery Gun) முதலிய கருவிகளே பயன்படுத்தப்பட வேண்டும்". (மேலது:120) என்று ஆசிரியர் இந்நூலின் வாயிலாக எடுத்தியம்பி தெளிவுற விளக்கிச் செல்கிறார்.

பழந்தமிழ் போர்முறையில் பயன்படுத்தப்பட்ட போர்க்கருவிகளையும் இம்மூன்று நிலைகளுக்கு ஏற்ற கருவிகளாகக் காணுவதோடு, இக்கால கருவிகள் வெடிமருந்தின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டவை. பழந்தமிழர் பயன்படுத்திய கருவிகள் உடல் வலிமையை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் பயன்படுத்திய போர்கருவிகளை வாள், வேல், வில் என்ற மூன்றினையும் மேற்குறிப்பிட்ட மூன்று நிலைக்கும் ஏற்ற கருவிகளாகும் என்று விளக்க முனையும் ஆசிரியர்,

வாள் - அருகாமையில் உள்ள பகைவரைத் தாக்கும் கையில் பிடித்த நிலையிலேயே பகைவரைத் தாக்குவது வாள்.

வேல் - கையால் வீசப்பட்டு ஓரளவு தொலைவுவரை செல்லுமாதலால் இடைப்பட்ட தொலைவில் உள்ள பகைவரைத் தாக்கும்.

வில் (அம்பு) - வில்லில் பொருத்தி நாணின் வேகத்தால் செலுத்தப்படும் அம்பு, நெடுந்தொலைவில் உள்ள பகைவரைத் தாக்கும். அம்பும் வேலும் செலுத்துபவன் கையிலிருந்து விடுபட்டுச் சென்று பகைவரைத் தாக்கும் இயல்பின.

இந்த மூன்று வகையான படைக்கருவிகளை பற்றிய விளக்கம் பழந்தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன "(மேலது:121) என்று ஆசிரியர் பழங்காலப் போர் முறைக் கருவிகளை எடுத்துரைத்து அதனை தெளிவுற விளக்கும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

முரசு, தண்ணுமை, போர்ப்பறை முதலிய தோற்கருவிகளும், விளை, வயிர் முதலிய ஊது கருவிகளும் பழந்தமிழரின் போர்களில் சிறப்பாகப்

பயன்படுத்தப்பட்டுள்ளதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அக்காலத்தில் வழங்கப்பெற்ற 'சான்றோர்' என்றும் சிறப்புப் பெயர் இக்காலப் போரியல் துறையில் Gentleman என்று குறிப்பிடப்படுவதாகச் சுட்டியுள்ளார்.

முல்லையும் குறிஞ்சியும் திரிந்ததே பாலை என்ற கருத்தை மறுத்து, முல்லை, குறிஞ்சி என்னும் இரு நிலப்பகுதிகட்கும் இடைப்பட்ட வளமற்ற பகுதியே பாலை என்று நூலாசிரியர் உரைக்கின்றார். இவருடைய கருத்து சிந்தித்தற்குரியது.

அரசு, படைத்தலைமை, படைவகைகள், அரசன், ஒற்று, தூது, போர்முறைக் கோட்பாடுகள், மரபுகள் ஆகியவை பழந்தமிழ் நாட்டில் சிறந்திருந்த நிலையைப் பற்றி ஆசிரியர் ஆராய்ந்துரைத்துள்ளார். ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு நாடு, அரசன், படை என்னும் மூன்றும் இன்றியமையாதவை என்றும், இம்மூன்றும் பழந்தமிழகத்தில் ஒருங்கிணைப்புடன் திகழ்ந்ததை நூலாசிரியர் விளக்கியுள்ளார். அக்கால அரசர்கள் காலாள், தேர், யானை, குதிரை என்னும் நால்வகைப் படைகள் என்பதையும், சில மன்னர்கள் கடற்படையும் வைத்திருந்தனர் என்பதனையும் ஆசிரியர் எடுத்துரைத்து சென்றுள்ளார்.

போரில் ஈடுபடுவோர் கொண்டிருந்த மரபுகளும், நம்பிக்கைகளும் சுட்டிக்காட்டி, அரசர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே நிலவிய உறவு நிலையையும் ஆசிரியர் சுட்டுகின்றார். பழந்தமிழ்ப் புலவர்கள் அக்கால மன்னர்களின் புகழ்பரப்பியும் வாயில்களாக விளங்கினர் என்ற கருத்தினை மறுத்து, அவர்கள் அறிவு கொளுத்தும் சான்றாண்மை படைத்தவர்களாகவே இருந்தனர் என்று நூலாசிரியர் குறிப்பிடுவது முறையானதாகவும், ஏற்புடைத்தாகும் வகையில் அமைந்துள்ளது.

உலக வரலாற்றில் போரை ஒழிக்க வேண்டும் என்று கூறிய சான்றோர் மறைந்தனர். ஆனால் போர் மட்டும் மறையவில்லை. ஆகவே உலகம் முழுவதற்கும் ஒரே அரசு ஏற்பட்டால் போர் நிகழாமல் இருக்கும் என்று ஆசிரியர் தன்னுடைய கருத்தை எடுத்துரைத்து விளக்கியுள்ளார்.

புறத்திணை தொடர்பான செய்திகளை முதன் முறையாகத் தற்கால நடைமுறைகளோடு ஒப்பிட்டு எழுதப்பட்ட இந்நூல் தமிழுலகிற்கு குறிப்பாகத் தமிழாய்வுலகிற்குக் கிட்டிய ஒரு புது வரவாகும்.

சங்கப் புலவர் சன்மார்க்கம் என்னும் நூல் சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பெற்று 1961-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. தமிழர் தம் பண்டைய வாழ்வியலில் வைதிக நெறி மிகுதியான அளவில் இடம்பெறவில்லை எனவும், தமிழ்ப்புலவர்கள் அறநெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் அக்கால அரசர்க்குக் கற்பித்தனர் எனவும் இந்நூல் உரைக்கின்றது.

“கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன் தோன்றிய கவிதைகளிலும், நூல்களிலும், வைதிக மார்க்கத்தையோ, பக்திமார்க்கத்தையோ மிகுதியாகக் காண முடியாது. அக்கவிதைகளும் அந்நூல்களும் பெரும்பாலும் ஒழுக்க நெறியையே எடுத்துரைக்கின்றன.” (மேலது:35) இதனை ஆசிரியர் பல சான்றுகளைக் கொண்டு வலியுறுத்துகின்றார். நெடிய மொழிதலும் கடிய உளர்தலும் செல்வமன்று, யாதும் ஊரே யாவரும் கேளிர், பல் சான்றீரே பல்சான்றீரே, பொன்னும் துகிரும் மன்னிய, எனத் தொடங்கும் பாடல்களையும் விளக்கியுரைத்துள்ளார்.

திரு.சாமி சிதம்பரனார் அவர்களால் அறிவுக்கொடி, என்னும் மாதப் பத்திரிக்கைகளில் எழுதி வெளிவந்த தமிழர் வீரம் என்னும் கட்டுரைகளை, அவருடைய இறப்புக்குப்பின் அவரின் வாழ்க்கைத் துணைவியாராகிய திருமதி. சிவகாமி சிதம்பரனார் அவர்கள், கணவர் விட்டுச்சென்ற அக்கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவமாக ‘தமிழர் வீரம்’ என்னும் தலைப்பில் 1964-இல் சென்னை இலக்கிய நிலையம் என்ற பதிப்பகத்தால் வெளியிட்டுள்ளார்.

தமிழர் வீரத்தன்மையில் சிறந்தவர்களாயிருந்தது எவ்வாறு என்பதை விளக்கிக் காட்டும் நோக்கோடு இந்நூல் எழுந்துள்ளது. இதில் பண்டையகால வீரர்கள், புலவர்கள், பெண்டீர் முதலிய பலருடைய அருஞ்செயல்களை இந்நூல் விளக்கியுரைக்கின்றது.

இந்நூல் தமிழர் வீரம், குமணன், வேள்பாரி, பல்யாக சாலை, முதுகுடுமிப் பெருவழுதி, கிள்ளிவளவன், பாண்டியன் இளஞ்சேட்சென்னி, பாண்டியன்

நெடுஞ்செழியன், சேரன் சேங்குட்டுவன், மனுநீதிகண்ட சோழன், போர் நெறி, தமிழர் கண்ட இன்ப வாழ்வு என்னும் தலைப்புகளை உள்ளடக்கமாக்க கொண்டு இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் வீரம் என்றும் இந்நூல் சங்க காலத்துத் தமிழரின் வீரச்செயல்கள் கூறப்படுவதோடு வீரம் என்பது போர்க்களத்தில் போர் வீரம் காட்டும் வீரம் மட்டும் அன்று கொடை, கடமை, நீதி, ஒழுக்கம் முதலியவைகளிலும் வீரம் உண்டு. இவ்வீரங்கள் எல்லாம் இந்நூலில் விளக்கப்படுகின்றன. இந்நூலின் 'போர் வெறி' என்னும் தலைப்பில் யுத்தங்களினால் நாட்டு மக்களுக்கு உண்டாகும் துன்பங்களையும், கொடுமைகளையும், கஷ்ட நஷ்டங்களையும் எடுத்துக்காட்டி விளக்கிச் சென்றுள்ளார் ஆசிரியர் 'தமிழர் கண்ட இன்ப வாழ்வு ' என்னும் கட்டுரையில் நூலாசிரியரான சாமி சிதம்பரனாரின் முற்போக்குக் கருத்துக்கள் எடுத்துரைத்துச் சென்றுள்ளதையும் காணமுடிகிறது.

'சங்க கால சோழர் நாணயங்கள்' என்னும் நூல் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்று 1986-இல் நூலாக வெளிவந்துள்ளது. சங்ககாலச் சோழர்கள், சங்க கால வணிக நிலை, சங்க இலக்கியத்தில் காசு, சங்க காலத்தில் இந்தியாவில் வணிக நிலையும் நாணய வளர்ச்சியும், தமிழகத்தில் கிடைத்துள்ள முத்திரை நாணயங்கள், வெள்ளி முத்திரை நாணயங்கள், பழங்காலச் சோழர் நாணயங்கள், சங்ககாலச் சோழர் நாணயங்கள், பருந்து நாணயம் போன்ற பல்வேறு பொருண்மைகளைக் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பல தென் மாவட்டங்களில் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் குகைத் தளங்களில்தான் காணப்படுகின்றன. சங்க காலப் பாண்டிய, சேர மன்னர்களில் சிலரைப் பற்றிய குறிப்புகள் இவற்றால் கிடைக்கின்றன. ஆனால் தொன்மையான சங்ககாலச் செப்பேடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட பல நாணயங்களும், சங்க காலச் சோழர் வெளியிட்ட சில நாணயங்களும் கிடைத்துள்ளன. ஆனால் இதுவரை

சேரர் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதற்கான சான்றுகள் இல்லை என இந்நூலாசிரியர் சுட்டியுள்ளார்.

வரலாற்றை அறிந்துகொள்ள பெரிதும் உதவுகின்ற துறைகளில் நாணயவியல் என்பது ஒரு முக்கியமான துறையாக கருதப்படுகிறது. அவ்வகையில் நாணயங்களை வெளியிட்ட மன்னர்களின் பெயர்கள், பரம்பரை அவர்கள் பின்பற்றிய சமயம், அவர்கள் வணங்கிய தெய்வங்கள், அத்தெய்வங்களின் வடிவமைப்புகள், ஆட்சி மொழி, அம்மொழிகளின் வளர்ச்சி, எழுத்துவகை, அதன் வடிவமைப்பு, உள்நாட்டு வாணிக நிலை, வெளிநாட்டு வாணிக நிலை, பெருமளவில் நாணயங்கள் கிடைக்கும் இடங்களை வைத்து மன்னர்களின் ஆட்சிப் பரப்பு ஆகியவற்றை நாணயவியல் கொண்டு அறிந்து கொள்ள முடியும் என கூறும் ஆசிரியர் கருத்து சிறப்பிற்குரியது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த முக்கியமான பணியை எந்த பல்கலைக்கழகமும் சரியாக செய்யவில்லை என்றும், தமிழகத்தின் தொன்மை நாணயங்கள், உலகில் சிறப்புடைய பல்வேறு அருங்காட்சியகங்களிலும், நாணயச் சேகரிப்பாளர்களிடமும் சிதறிக்கிடக்கின்றன. கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழகத் தொன்மை நாணயங்கள் குறித்து நாட்டின் பல பகுதிகளிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கும் பல இதழ்களில் பல அறிஞர்கள், ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். அக்கட்டுரைகளைத் தேடிக் கண்டுபிடித்து அச்செய்திகளை அறிந்துணர ஓர் ஆய்வாளர் விரும்பினாலும் அஃது இயலாத செயலே என நூலாசிரியர் இந்நூலின் முன்னுரையில் மிகுந்த வருத்தத்துடன் கடிந்துரைத்துள்ளார்.

அகராதியில் காசு என்ற சொல்லிற்கு நாணயம், பொன், மாதரணிடம், புறத்தின் மேகலை, ஒரு பழைய பொன்னாணயம் என்ற பொருள் விளக்கத்தை காண முடிகிறது. மேலும், நாணயம் என்ற சொல்லிற்கு காசு நாணயம், முத்திரையிடப்பட்ட காசு என்ற பொருள் விளக்கத்தை அகராதியில் காணலாம். ஆங்கிலச் சொற்களான Currency, Money ஆகியவற்றிற்கு ஈடான சொற்கள் தமிழில் வழக்கில் இல்லை என்று ஆசிரியர் கூறுவது கவனிக்கத்தக்கது.

சங்ககாலப் பகுதிக்குள் வாழ்ந்திருந்த சோழ மன்னர்களைப் பற்றிய வரலாறு, சேர மன்னர்களைப் பற்றிக் கிடைத்திருப்பதைப்போல அவ்வளவு

தெளிவாகக் கிடைக்கவில்லை. ஆயினும் சேர மன்னர்களின் வரலாறு கூறப்பட்டதைப் போல சோழ மன்னர்களின் வரலாறு தொடர்பாகக் கூறப்படவில்லை. பற்பல புலவர்கள் பல மன்னர்களினைப் பற்றித் தனித் தனியாகவே குறிப்பிட்டுள்ளனர். ஒரே புலவர் பல மன்னர்களைப் பற்றியும் பாடியிருக்கின்றார். எனவே வரலாற்று நோக்கில், சோழர் தம் ஆட்சிப் பரம்பரையை அறிவதற்கு இயலவில்லை என்ற ஆசிரியரின் கருத்து நோக்கத்தக்கது.

**வேந்தர்கள்**

அரங்க. இராமலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற 'சங்க இலக்கியத்தில் வேந்தர்' என்னும் முனைவர்ப் பட்ட ஆய்வேடு 1982-இல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் நூலுருவாக்கம் பெற்று 1987-இல் ஐந்திணைப் பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றது.

இந்நூல் வேந்தர், வேந்தரும் புலவரும், புலவராக விளங்கிய வேந்தர், வேந்தரும் போரும், வேந்தரும் ஆட்சியும் என்னும் பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

சங்க இலக்கியங்கள் காட்டும் புறவாழ்வு மிகுதியும் வேந்தர், குறுநில மன்னர் பற்றியே காணப்படுகின்றது. பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப் படை தவிர ஏனைய ஒன்பது பாட்டுகளும், எட்டுத்தொகையுள் புற இலக்கியமான பதிற்றுப்பத்தும், புறநானூற்றின் பெரும்பகுதியும் அரசர்களைப் பற்றிய செய்திகளை எடுத்தியம்புவனாக அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் காணப்படும் வேந்தர் பற்றிய செய்திகளை முழுமையாக ஆராய்ந்து காண வேண்டும் என்னும் நோக்கோடு இந்நூலாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் வேந்தர் மட்டுமே ஆராயப் பெறுகின்றனர். குறுநிலமன்னர், குறுநிலத் தலைவர் ஆகியோரை இந்த ஆய்வு உள்ளடக்கவில்லை என்று இந்நூலாசிரியர் கூறுகிறார். சங்க இலக்கியத்தில் வேந்தர் என்னும் இந்நூல் வேந்தரைப் பற்றி சங்க இலக்கியங்கள் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து வகைப்படுத்திக் காணுகிறது அவ்வகையில், "பொதுவாக வேந்தரைக் குறிக்க மன்னர் மன்னன், மன்னவன் கோ, மா மன்னர்

என அடை கொடுத்துக் குறித்துள்ளனர். மன்னன், மன்னர் எனும் சொற்கள், சங்க இலக்கியத்தில் அரசன், இறைவன், காவலன் எனும் சொற்களைவிட, மிகுதியான ஆட்சியினை பெற்றுள்ளன. மன்னன், மன்னர் எனும் சொற்கள் மிகப் பெரும்பான்மை குறுநில மன்னரையே குறிக்கின்றன. புறநானூற்றில் ஏனைய சொற்களைவிட வேந்தன், வேந்தர் எனும் சொற்களின் ஆட்சி மிகுதி. வேந்தன், வேந்தர் எனும் சொற்கள் முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியரையே குறிக்கின்றன. மிகுதியான புறப்பாடல்கள் பாட்டுடைத் தலைவனை முன்னிலைப்படுத்தி அவன் முன்பு பாடப்பட்டவை. எனவே இப்பாடல்களில் பாட்டுக்குரிய வேந்தரின் சிறப்புத் தவிர, பிற வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக இடம் பெறவில்லை. சங்க இலக்கியங்களிலும், சிறப்பாகப் புறநானூற்றிலும் மூவேந்தர் பெயர், இடம் முதலியவை ஆராயப்பெற்றுள்ளன". (1987: 55 ,56)

என வேந்தர் பற்றிய செய்திகளை தொகுத்து முன்வைத்துள்ளார் ஆசிரியர். இவ்வாய்வு, வேந்தர் யார்? அவர்களின் தொன்மை, அவர்களிடையே அமைந்திருந்த குடிப்பிரிவுகள், சங்க இலக்கியத்தில் அவர்கள் பெற்றிருக்கும் இடம், வேந்தருக்கும் புலவருக்கும் உள்ள தொடர்பு, புலவராக விளங்கிய வேந்தரின் புலமைத்திறன், வேந்தரின் போர் முறை, ஆட்சி முறை, ஆகியனவற்றை ஆராய்ந்து தெளிவுபடுத்துகின்றது.

சங்ககால வேந்தர் பற்றி அறிஞர் பலர் ஆராய்ந்துள்ளனர் அவர்களுள் கே. என். சிவராசப்பிள்ளை, கே. ஜி. சேச அய்யர், கா. கோவிந்தன், அ. சிதம்பரனார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். சோழர், பாண்டியர் வரலாற்றை எழுதிய அறிஞர் சிலரும் சங்ககால வேந்தர் பற்றிக் கூறியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தி. வை. சதாசிவ பண்டாரத்தார், மா. இராசமாணிக்கனார், கே. வி. இராமன் ஆகியோறாவர்.

எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், மு.வரதராசனார், ந.சுப்பிரமணியன், ஞா. தேவநேயன், சாமிசிதம்பரனார், க.கைலாசபதி போன்றோர் வேந்தரைப் பற்றி முழுமையான அளவிலில்லாமல் அவர்களோடு தொடர்புடைய அரசியல்,

ஆட்சியியல், புரவலர் – புலவர் தொடர்பு என ஏதேனும் ஒரு நிலையில் ஆராய்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவராக கருதப்படுகின்றார்.

வேந்தரைத் தனித்தனியே ஆராய்ந்தவர்களுள் குறிக்கத்தக்கோர் மு. இராகவையங்கார், என்.கனகராஜையர், மயிலை சீனி வேங்கடசாமி போன்றோராவர். இலக்கியம் வரலாற்று மூலங்களுள் ஒன்றே தவிர, அதுவே வரலாறு ஆகாது. சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் அடிப்படைகளில் அமைந்துள்ளதால், ஒரு வேந்தனின் முழுமையான வரலாற்றை எழுதுவதற்கேற்ற வகையில் செய்திகள் இல்லை. கிடைக்கும் சில சான்றுகளும் வரலாற்றடிப்படையில் அமையாமல் சிறந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. அந்த வகையில்,

“வேந்தரின் பெற்றோர், உடன் பிறந்தார், பிறப்பு, வளர்ப்பு, ஆட்சிப் பொறுப்பேற்ற ஆண்டு, ஆட்சி புரிந்த கால அளவு, ஆட்சியின் நிலை, ஆட்சிக்குட்பட்ட நாடுகள் என்பனவற்றை ஆராய்ந்துரைப்பது அரிதாக உள்ளது. பலர் இத்துறையில் முயன்றுள்ளனர். இவ்வாறு வரலாறு எழுதியோருள் பெரும்பான்மையோர் பிற்காலக் கல்வெட்டுச் சான்றுகளையும், இலக்கியச் சான்றுகளையும் தமது ஊகங்களோடு கலந்து சங்ககால வேந்தருக்குச் சார்த்தியுள்ளனர். தெளிவான சான்றுகள் கிடைக்காமையால் வேந்தரின் இத்தகைய வரலாறு ஆராய்ந்துரைக்கப் பெறவில்லை” (மேலது:14) என்று இந்நூலின் முன்னுரையில் எடுத்தியம்பும் நூலாசிரியரின் கருத்து இங்கு ஏற்புடைத்தாக உள்ளது.

‘வேந்தரும், புலவரும்’ என்னும் தலைப்பில் வேந்தர் புலவரைப் போற்றிய நிலை, வேந்தர்பால் புலவர் கொண்டிருந்த உணர்ச்சியொத்த நட்பு, நல்லது கண்டபொழுது பாராட்டியும், தீயது கண்டபொழுது கடிந்துரைக்கும் அறநெறி புகட்டும் புலவரின் பண்புநலம் ஆகியவற்றை இந்நூலில் விவரித்துள்ளார்.

சங்க இலக்கிய பாடல்களான 2381 பாடல்களில் வேந்தர் பற்றியதாக எழுபத்தெண்மரைக் குறிக்கின்றது என்றும், அவற்றுள் சேரர் முப்பதின்மர், சோழர் இருபத்து நால்வர், பாண்டியர் இருபத்து நால்வர் எனப் பாகுபடுத்திக் காட்டியுள்ளார் ஆசிரியர். பத்துப்பாட்டுள் நான்கு பாடல்கள் வேந்தரைக்

குறித்துப் பாடப்பெற்றவை. பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் கரிகால்பெருவளத்தானைக் குறித்தும், மதுரைக் காஞ்சியும், நெடுநல்வாடையும் தலையாலங்காணத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறித்துப் பாடப்பெற்றுள்ளன என ஆசிரியர் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

"போருக்கு முன் நிகழ்ச்சிகளாக நிமித்தம் பார்த்தல், போருக்கு வீரரை அழைத்தல், போர் முரசின் அமைப்பு, அது போரில் இயங்கும் நிலை, போரில் முழங்கப் பெறும் கருவிகள் பற்றிய கருத்துக்களைச் சொல்லிப் போரின் தொடக்கத்தில் பகைவரின் காவல் மரத்தை அழிப்பது மரபு என்றும் குறிப்பிட்டுள்ளார். போரில் புறமுதுகு காட்டாது போரிடுவது, வீரமரணம் அடைவது, விழுப்புண் ஏற்று மடிந்தால் மேலுலகம் புகலாம் என்ற நம்பிக்கைகளைத் தம் பாடல்கள் மூலம் நிலைபெறச் செய்தனர் என்றும், போருக்குப்பின் நிகழ்ச்சிகளாக சினம் தணிநீதி வேந்தன் தன் நாளவையில் அமர்ந்து தனக்கு வெற்றியைத் தேடித் தந்த மறவருக்கும், வெற்றியைப் புகழ்ந்து பாடிய புலவருக்கும், பாடினிக்கும், விறலிக்கும், கூத்தருக்கும், இன்ன பிறருக்கும் களிறும் தேறும் வரையாது வாரிக் கொடுத்து மகிழ்ந்தான் போர்க்களத்தில் விழுப்புண் பட்டு வீரமரணம் எய்திய வீரர்க்கு நடுகற்கள் நடப்பெற்றன" (மேலது: 198, 200) என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்கள் வழி அறியப்படும் மூவேந்தரது அரசுச் சின்னங்கள், தலைநகர், அரண்மணை, வேந்தர், அரசுரிமை பெற்ற முறை, அரசனுடைய கடமைகள், அவனது ஆட்சி, ஆட்சியில் பங்கு பெற்றோர், அரசுகள், நிதிபெற்ற முறை, அந்த நிதி ஆட்சிக்காக செலவிடப்பட்ட முறை ஆகியனவும் அரச குடும்பத்தின் வாழ்க்கை முறையையும் இந்நூல் வழியாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

போரில் வெற்றிபெற்ற வேந்தன், தோற்ற வேந்தனிடம் இருந்து பெற்ற பொருள்களைப் புலவர்களுக்கும், வீரர்களுக்ககும் அளிப்பது மரபு. பகையரசர் திறையாக அளித்து பொருளையும், புலவர்களுக்குக் கொடையாகக் கொடுப்பார். இதனையே,

**பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்**
**நகைப்புல வாணர் நல்குர வகற்றி**

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் புலவர்களுக்கு கொடையளித்ததை ஆசிரியர் விளக்கியுள்ளார். வேந்தரிடம் அன்பு காட்டி வாழ்ந்திருந்தனர் புலவர். ஆயின் வேந்தர் தவறு செய்தவிடத்து, அவர் தவற்றினை அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர், இதனை விளக்க முற்படும் ஆசிரியர்

"வேந்தரிடம் பரிசில் பெற்ற புலவர்கள் பரிசிலுடன் வறிதே மீளாது, தக்க அறிவுரையினைக் கூறிச் செல்லுதல் மரபு. வேந்தனிடம் தவறு கண்டபொழுது தமக்கு பரிசில் நல்கினானே எனத் தாழ்ந்து விடாமல் கடுமையாக அறிவுறுத்தும் நெஞ்சுரத்தைக் காண முடிகிறது. இம்மரபினையே வள்ளுவர்,

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும் (குறள்:448)**

எனக் குறிப்பிடுகிறார்". (மேலது:65) இவ்வாறு வள்ளுவரின் பாடலை எடுத்துக்காட்டி விளக்கி தம் கருத்திற்கு வலுசேர்த்துள்ளார் ஆசிரியர்.

புறநானூற்றில் இருபத்தொன்பது இடங்களில் வேந்து எனும் சொல் பயின்று வருகிறது. இருபத்தெட்டு இடங்கள் ஆட்சித் தலைவனைக் குறிக்கின்றன. ஓரிடத்தில் மட்டும் அரசவையைக் குறிக்கிறது என்று நுட்பமாகத் துருவி ஆராய்ந்து முடிவுகளைத் தந்துள்ளார் ஆசிரியர்.

"புறநானூற்றின் தொண்ணூற்றைந்தாவது பாடலுக்கு அவன் தூது விடத் தொன்மை மானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது என்றும் குறிப்பு எழுதப்பெற்றுள்ளது. அதியமான் ஔவையைத் தூது அனுப்பிய செய்தி பாடலில் காணப்பெறவில்லை. இப்பாடலில் தொண்டைமானின் படைக்கலங்கள் உடைந்ததால் கொல்லர் உலைக்களத்தில் செப்பனிடப்படுகின்றன என்றும் கூறுகின்றார் ஔவையார். இதன் உட்பொருள் வேறு அதாவது தொண்டைமான் போர் புரியாததால் அவன் படைக்கலன்கள் புதியனவாய்த் தோன்றுகின்றன. எனவே அவன் ஒரு கோழை என்றும், அதியன் எக்காலத்தும் போருடற்றுவதால் அவனது ஆயுதங்கள் உடைந்து கிடக்கின்றன. எனவே அவன் உண்மையான வீரன் என்றும் இப்பாடலுக்கு உட்பொருள் கூறப்படுகின்றது. ஆயின் இப்பாடலிருந்து அதியமான் ஔவைக்குத் தொண்டைமானிடம் அதன் பொருட்டுத் தூதாக அனுப்பினான் என்னும் செய்தியை அறிய இயலவில்லை. எனவே

புறநானூற்றுப் பாடலின் கீழ் இடம்பெற்றுள்ள குறிப்பைக் கொண்டே ஔவையார் தூது சென்றார் எனக் கூறலாம்" (மேலது: 231) என்ற அரிய விளக்கத்தினை இந்நூலின் வழி விளக்கியுரைத்துள்ளார் ஆசிரியர்.

அரசுரிமை தந்தைக்குப் பிறகு தனயனுக்கு உரியதாயிற்று, என பரம்பரை பரம்பரையாக இருந்து வந்துள்ளது. மகளிர் ஆட்சியுரிமை பெறுதல் இல்லை. ஆண் வாரிசு இல்லாதபொழுது அரச குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவன் ஆட்சிக்குரியவனாவான். மருமக்கள் ஆட்சியுரிமை பெறுதல் இல்லை. அரசுரிமை போருக்கு ஒரு காரணமாக இருந்தது. ஆட்சி பொறுப்பேற்பதற்கு வயது வரம்பு இல்லை எனவும் இந்நூலாராய்ச்சியின் வாயிலாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

**சங்க கால வீரம்**

பொ. திருகூடசுந்தரம் அவர்களால் எழுதப்பெற்ற சங்க கால வீரம் என்னும் 1966-இல் நூலாக்கம் பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் சங்ககால வீரம். பண்டை நாளில் போர் பெற்ற பெருமை, போர் செய்த காரணங்கள், போர் செய்த முறை, செங்குட்டுவன் வீரம், பஞ்சசீலம், ஐக்கிய நாடுகள் சபை முதலிய பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

வீரம், நெறி இரண்டிணையும் நன்கு புரிந்து கொள்ளவும், அதோடு மட்டுமல்லாமல் வெறி வீரமாகாது என்பதை விளக்கியுரைத்தும், திருவள்ளுவரும் காந்தியடிகளும் அறிவுறுத்தும் அஹிம்சா தர்மத்தின்படி சங்ககால இலக்கியங்களை ஆராய்ந்து தெள்ளிதின் உரைத்துள்ளார் இந்நூலாசிரியராகிய திருகூடசுந்தரம் அவர்கள். பண்டைக் காலத்தில் போர்த்துறையானது வாழ்க்கைத்துறைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது என்பதற்கு சான்றுகள் காட்டி விளக்க முற்படும் ஆசிரியர் அவ்வகையில்,

"தொல்காப்பியர் வாழ்க்கையை அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்துக் காதலையும் கலியாணத்தையும் அகவொழுக்கத்தில் அடக்கினார். இதர துறைகள் அனைத்தையும் புறத்திணையியலில் கூறினார். அவ்வியலில் 3 சூத்திரங்கள் உள்ளன. அவற்றுள் 20 சூத்திரங்கள் போர் முறையையே விரித்துக்

கூறுகின்றன என்றும், ஏனைய சூத்திரங்கள் மற்றெல்லாத் துறைகளையும் விரித்துக் கூறாமல் குறிப்பிட மட்டுமே செய்கின்றன” (1966:3) என இந்நூலாசிரியர் போர் முறை குறித்து எடுத்துரைத்துள்ளதை இந்நூல் வழியாக அறிய முடிகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறத்திணையின, ஆயினும் புறநானூறு என்னும் தொகுதியிலுள்ள நானூறு பாடல்களில் பெரும்பாலான அரசர்களுடைய போர்த்திறமையை பற்றியே கூறுகின்றன. பத்துப்பாட்டிலும் போர்ச் செய்திகளே மிகுதியாக நிறைந்துள்ளன.

போர்வீரன் என்பவன் எவன்? எனக் கூற முற்படும் ஆசிரியர், போர்க்களத்தில் பகைவனைக் கண்டு அஞ்சிப் புறங்கொடுத்து ஓடாமல் உயிர்போகும் வரைப் போர் புரிபவனே போர்வீரன் என்றும், அவனுக்கு இந்த ஒரு குணமிருந்தால் போதும். மற்றப்படி அவன் தீயவனாயிருந்தாலும் போர்வீரன் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். பாவம் செய்பவன் நரகத்துக்கும் புண்ணியம் செய்பவன் சொர்க்கத்துக்கும் போவான் என்று புராணங்கள் கூறும். ஆனால் போர் வீரனோ எத்துணை பாவங்கள் செய்திருப்பினும் போர்க்களத்தில் இறப்பானேயாமாகில் அவன் சொர்க்கமே செல்வான் (புறம்.260) என்று ஆசிரியர் தெளிவுறுத்துகிறார்.

மூப்பினாலும், பிணியினாலும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தாரே துறக்கம் பெறுவர் என்ற நம்பிக்கை அக்காலத்தில் வழக்கில் இருந்தது. (அகம். 61) ஆயினும் போர்களத்தில் இறவாமல் நோயினாலோ மூப்பினாலோ இறக்கும் வீரனைத் தருப்பைப் புல்லில் கிடத்தி அவனுடைய உடம்பினை வாளாற் பிளந்து பின்னரே அடக்கம் செய்துள்ளனர் (புறம்: 93) என்றும், அக்காலத்தில் அரசன் தன்னுடைய படையையே தன்னுடைய உடலாக எண்ணிப் போற்றி வந்துள்ளமையயும், பண்டைக் காலத்தில் அரசன் போர்த் தொடுத்து மறுநாளே போர் வீரர்களுடைய செயலைப் புகழ்ந்து உற்சாகப்படுத்துவதற்காகத் தானே அவர்களுடன் உண்பவன் போல வந்து அவர்களுக்கு வேண்டிய உணவை அளிப்பான். சாதாரணமாக அரசன் அரச வம்சத்தாருடன் மட்டுமே உணவு உண்பான் என்றிவ்வாறு அரசன் வீரரைப் போற்றுவதை எடுத்துரைத்து சென்றமை சிறப்பிற்குரிய ஒன்றாக உள்ளது.

அரசர்கள் எந்தக் காரணங்களுக்காகப் போரிட்டனர் என்பதைக் குறித்தும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொல்காப்பியர் போர் செய்வதற்கு ஐந்தாறு காரணங்களைக் கூறியுள்ளார். அவ்வகையில் தோள்த் தினவு, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை போன்ற காரணங்களுக்காக

பண்டைய அரசர்கள் போர் செய்யும் காலத்தில் அறத்துறை பற்றிப் போர் செய்ததாகவே அறிஞர்கள் கூறுகிறார்கள். அவ்வாறு கூறுவதற்குச் சான்றாக எல்லா அறிஞர்களும் கூறுவது,

**ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர் மினென**
**அறத்தாறு நுவலும் பூட்கை" (புறம் : 9)**

என்னும் புறப்பாட்டாகும். இக்கருத்து தொல்காப்பியர் சூத்திரங்களில் காணப்படவில்லை. தொல்காப்பியர் போர்த்துறையை விரிவாக இருபது சூத்திரங்களில் கூறியவர் இக்கருத்தைக் கூறாதது விடுத்தது ஏன்? அவருடைய காலத்தில் இக்கருத்து வழக்கத்தில் இருந்திருக்குமாயின், அவர் சொல்லாமல் இருந்திருக்கமாட்டார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரகாதலில். இக்கருத்துடைய பாடல்கள் அவர் காலத்தில் அதிகமாக இல்லை என்று தெரிகிறது. சங்க காலத்தில் இருந்த 473 புலவர்களுடைய பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சங்க இலக்கியங்களான பத்துப்பாடாலிலும், எட்டுத் தொகையிலும் மொத்தம் 2380 செய்யுட்கள் உள்ளன. ஆயினும் நெட்டிமையார் என்ற புலவர் பாடிய இந்த ஒரு புறப்பாட்டில் தவிர வேறு எந்த பாட்டிலும் இக்கருத்து காணப்படவில்லை. புறநானூறு என்றும் பாடற் தொகுதியைத் திரட்டிய பெரியார் இந்த ஒரு பாட்டை அதில் சேர்க்காமல் விட்டிருப்பராயின் இந்தக் கருத்து ஒருவர்க்கேனும் இருந்ததாக அறிந்துகொள்ள இடமில்லாமல் போயிருக்கும் என ஆசிரியர் அணுகி ஆராய்ந்து, எடுத்துரைத்து விளக்கியுள்ள பாங்கு பாராட்டிற்குரியது.

‘தமிழ் மன்னர் மேற்கொண்ட போர்முறை அறத்தின்படி அமைந்ததே’ என்று பேராசிரியர் வெள்ளைவாரணரும், தமிழர் புறத்திறன் உடையரேனும், அறத்துறை தழுவிப் போர் செய்பவரல்லர் என்று அறிஞர் வேங்கடசாமி நாட்டாரும் கூறுகின்றார் என்று பண்டைத் தமிழரின் போர் முறையின் இன்றியமையாமையையும் ஆசிரியர் இங்கு சுட்டிக் காட்டி தெளிவுறுத்துகிறார்.

**வீரர் உலகம்**

‘வீரர் உலகம் என்னும் நூல் கி.வா.ஜ. அவர்களால் 1966-இல் எழுதப்பெற்று மணிவாசகப் பதிப்பகத்தால் பதுப்பிக்கப்பட்டது. பின்னர் 1967-லே இந்நூலுக்கு சாகித்திய அகடாமி விருதும் கிடைக்கப் பெற்றது. கலைமகள் இதழில் தொடர்ச்சியாக இந்நூல் தொடர்பாக 17 மாதங்கள் 17 இதழ்களாக வெளிவந்துள்ளது. இதைத் தொகுத்துதான் பின்னர் வீரர் உலகம் என்னும் நூலாக வெளியிடப்பட்டது.

இந்நூலில் எல்லையில் போர், நிரை மீட்கும் போர், நாடு கொள்ளும் போர், சிறந்த வீரம், போருக்கு எதிரே போர், போரிடைப் பல நிகழ்ச்சிகள், மதில் முற்றுகை, முற்றுகை வெற்றி, மதில் காவல் போர், போர்க்களத்தில், வெற்றி மாலை, ஞானமும் தவமும், பாசறையில், வாகையின் வகை, அரசன் புகழ், ஆற்றுப்படை, வீர வழிபாடு என்னும் தலைப்புகளைக் கொண்டு இந்நூல் ஆய்வுச் செய்யப்பட்டுள்ளது.

வெட்சி முதல் பாடாண் வரையிலான புறத்திணைகளை கோவைகளாக கதையாக சொல்லும் வகையில் இவர் இந்நூலைப் படைத்துள்ளார். தொல்காப்பியர் புறத்திணையியல், புறப்பொருள் வெண்பா மாலைச் சூத்திரங்கள், புறநானூறு, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள உதாரண செய்யுட்கள், பழைய உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள் பாடல்கள் ஆகியவற்றையெல்லாம் இணைத்து வெட்சித் திணை முதல் பாடாண் திணை வரை கோவைப்படுத்தி ஒரு கதைப்போல இந்நூலை வடிவமைத்துள்ளார்.

இந்நூலின் முன்னுரையில் “புறப்பொருளின் இலக்கணத்தை விளக்கமேண்டுமென்றோ, அவ்விலக்கணம் எவ்வாறு தோன்றி விரிந்து

வளர்ந்தது என்பதை ஆராய்ச்சி முறையில் உணர்த்த வேண்டுமென்றோ எண்ணி இதனை யான் எழுதவில்லை. அந்த இலக்கண இலக்கியங்களால் புலனாகும் வீரப் பண்பின் சிறப்பையும் அதனால் விளைந்த வீரர் செயல்களையும் ஒழுங்குபடுத்தி இணைத்துக் காட்ட வேண்டும் என் கருத்து". (1966: 7)

சீனர்கள் நம் பாரத நாட்டின் மேல் படையெடுத்த காலத்தில் நாடு முழுவதும் ஒரே எண்ணத்தோடு எழுந்து பகைவனுக்கு மாறாக ஒரே குரலை எழுப்பியது. அந்த சமயத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களில் வரும் வீரர் உலகத்தை ஒரு வாறு காணும்படி செய்யலாம் என்ற விருப்பத்தினால் இந்த கட்டுரைகளை எழுத தொடங்கினேன். கலைமகளில் 17 மாதங்கள் இக்கட்டுரை தொடர் வெளியாகியது. கட்டுரைகளை தொகுத்து வெளியிட எண்ணியபோது. இறுதியில் பின்னுரை என்ற ஒன்றை எழுதிச் சேர்த்தேன் என்று குறிப்பிடுகிறார். சீனாவுக்கு எதிராக இந்தியர்களுடைய போரில் நடக்கிறது. அந்தப் போரில் தமிழர்களுடைய வீரத்தை தட்டி எழுப்புவதற்காக இந்த புறநானூற்றுப் பாடல்களையெல்லாம் கி. வா. ஜ. அவர்கள் பயன்படுத்துகிறார். தேசிய உணர்ச்சி புழுங்குவதற்காக பயன்படுத்துகிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

போரிலும் அறத்தை கடைப்பிடிப்பவன் தமிழன். போர்புரிவதற்காக ஒரு நாட்டிற்குள் செல்லும்போது, அங்கு பெண்கள், பிணியுடையோர்கள், புதல்வர்களை பெறாதோர்கள், பசு, பசுவைப் போன்ற இயல்புடைய பார்ப்பனர்கள், ஆகிய அனைவரும் இங்கிருந்து செல்லுங்கள் நாங்கள் போர் செய்ய போகிறோம் என்று அறைகூவல் விடுத்து போரை தொடங்குவார்கள், என்று இப்பாடலின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். அன்றைக்கிருந்த காலக்கட்டத்தில் நிச்சயமாக ஒரு பிரச்சனைக்குரிய ஒரு விடயத்தைத்தான் தொட்டிருக்கிறார் என்பதை ஒருவாறு நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதே போன்று, பெண்கள், பிணியுடையவர்கள், புதல்வர்களைப் பெறாதவர்கள், இவர்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால் பசுக்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள முடியாது. அதனால் அந்த பசுக்களை பாதுகாப்பதற்காகத்தான் வெட்சி மறவர்கள் அந்த பசுக்களைக் கவர்ந்துக்

கொண்டு வருகிறார்கள் என்ற ஒரு புதுமையான விளக்கத்தை இவர் இங்கே குறிப்பிடுகிறார்.

கவர்ந்து கொண்டு வருதல் களவாடுதல் ஒரு அறமா? என்ற ஒரு கேள்வி வரும்போது அவர் விளக்குகிறார். குறிஞ்சித் திணையில் தலைவனும் தலைவியும் கொள்ளுகிற அந்த மறைமுக காதல் வாழ்க்கை களவு எனப்படுகிறது. அந்தக் களவு அறம் எனச் சொல்லப்படுகிறது. அதேப் போல இங்கு வெட்சி வீரர்கள் பசுக்களை கவர்ந்து கொண்டு போகிறது கூட அறம்தான் என்று அவர் வலியுறுத்தி குறிப்பிடுகிறார்.

இப்படி இவர்கள் பசுக்கூட்டங்களை கவர்ந்து கொண்டு, தன் நாட்டிற்கு செல்லும் போது, அங்கே அவர்களுடைய மனைவிமார்களுக்கு நல்ல நிமித்தம் தோன்றுகிறது. அரசிடம் கொண்டு போய் அந்த மாடுகளையெல்லாம் சேர்க்கிறான். அரசன் அச்செல்வங்களை அனைவருக்கும் பங்கிட்டு கொடுக்கிறான் அரசன். இதற்குப் பெயர்தான் பாதீடு என்னும் பொருள். வீரர்கள், ஒற்றர்கள், சகுனம் பார்ப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் தருகிறார்கள். இந்தப் பாதீடீன் மூலமாக தங்கள் பங்கை பெற்ற வீரர்கள் அதை கலைஞர்களுக்குக் கொடுத்து மகிழ்கிறார்கள்.

கொடை என்பது அக்காலத்தில் தமிழர்களுடைய தமிழக மக்கள் அனைவரிடமும் ஊரிய ஒரு பண்பாக உள்ளதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. உண்டாட்டைப் பற்றி பேசும்போது அவர் ஊண் உணவை பற்றி பேசுகிறாறே தவிர கள்ளைப் பற்றி வெளிப்படையாக அவர் பேசவில்லை. காரணம் அவர் சார்ந்திருந்த மது விளக்குக் கொள்கை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் கண்டறியாதன கண்டறிந்தேன் என்ற பயண நூலில் அவர் குறிப்பிடுவார். மூன்றாம் உலக தமிழ் மாநாட்டிற்காக பேரிஸ் (Parris) வந்திருந்தார் அப்போது, அங்கே ஒரு மதுக்கிடங்கை பார்க்கிறார். அங்கே நிறைய சிலந்தி வலை இருக்கின்றது. ஏன் என்று கேட்கும்போது இந்த மதுவை நுகர்ந்து வரக்கூடிய பூச்சிகளை சாப்பிடுவதற்காக இங்கு சிலந்திகள் வலையை விரித்து காத்திருக்கின்றன. மதுவை நுகரக்கூடிய பூச்சி இணங்களுக்கே இந்த நிலைமை என்றால், அதை விரும்பி குடிக்கக் கூடிய மனிதர்களுக்கு என்ன கதியோ என்று குறிப்பிடுகிறார். இவர் அந்த மதுவிளக்குக் கொள்கையில்

எப்போது எல்லாம் சாதகமான சூழல் வருகிறதோ அப்போதெல்லாம் வலியுறுத்தக் கூடியவர் கி. வா. ஜ. அவர்கள்

கரந்தையென்றால் ஆனிரை மீட்டல் என்று பொருள். இந்த கரந்தையில் இருக்க கூடிய திணை துறைகளின் பெயரைக் குறிப்பிடாமல் இவர் ஒரு கதைப்போல விளக்கிக் கொண்டு சென்றிருக்கிறார். அதில் பிள்ளையாட்டு என்ற ஒரு துறை. இதில் உணர்ச்சி பொங்க ஒரு விளக்கத்தை கொடுக்கிறார். அது என்னவென்றால் ஒருவன் வேளை சுழற்றிக் கொண்டு ஆடுகிறான். வந்த காரியம் நிறைவேறியது என்ற மகிழ்ச்சிக் கடலில் அவன் மிதக்கிறான். துடி கொட்டுகிறது தாளத்திற்கு ஏற்றபடி அவன் கையில் உள்ள வேல் சுழல்கிறது. அவன் கால்கள் ஜதியிட்டு நடனம் ஆடுகின்றன. அவன் தன் வேலில் மாலையை அணிந்திருக்கிறான். என்ன வெறி அவனுக்கு பகைவருடைய குடலை எடுத்து அதையே மாலையாக அதற்குக் கட்டி ஆடுகிறான் என்று கூறி புறப்பொருள் வெண்பா மாலையில் பிள்ளையாட்டு துறைக்கு சான்றாக உள்ள பாடலை கி. வா. ஜ. அவர்கள் தருகிறார்கள்.

அதுமட்டு மல்லாமல் கரந்தை வீரர்கள் தங்களுடைய வீரக்குடியில் பெருமையைப்பாடும் பாடும் குடி நிலைத்துறையின் எடுத்துக்காட்டுப் பாடலான அந்த புகழ் பெற்ற பாடல்,

**பொய் அகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்?**
**வையகம் போர்த்த வயங்கொலிநீர் – கையகலக்**
**கல்தோன்றி மன்தோன்றாக் காலத்தே வாளோடு**
**முன்தோன்றி மூத்த குடி**

என்னும் பாடலைக் குறிக்கிறார். பெரும் போருக்கான நிகழ்வுதான் இந்த வெட்சியும் கரந்தையுமே தவிர்த்து. இதையே போரல்ல என்று கூறுகிறார். இது போருக்கான ஒரு முன் நிகழ்வுதான். இதற்கு உதாரணமாக மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் சுட்டிக் காட்டுகிறார் கி.வா.ஜ.க்கு எப்போதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் பல இலக்கிய நூல்களை மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், சங்க இலக்கியங்கள், இப்படி பல விஷயங்களை எடுத்துக் காட்டுவார். அதிலும் குறிப்பாக மகாபாரதத்தையும், இராமயணத்தையும் அவர் பயன்படுத்துவதற்கான நோக்கமாக நான் என்ன உணர்கிறேன் என்றால் அன்றைக்கு இராமாயணத்தை

இயக்க வேண்டும் என்கிற ஒரு இயக்கம் நடைப்பெற்றது. அந்த சமயத்தில் கம்பன் கழகத்தை எல்லாம் தீவிரமாக இயக்கியவர் கி. வா. ஜ. இவர் அந்த கம்பராமாயணத்தின் மீது கொண்ட பற்றால் அவர் எங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் அந்த இராமயாணத்தையும், மகாபாரதத்தையும் கொண்டு வந்து பிணைப்பார். இங்கே வெட்சிப் போர், விந்தைப் போர், மகாபாரதத்தில் எவ்வாறு நடக்கிறது என்று ஒப்பீட்டு கூறுகிறார் கி.வா.ஜ அவர்கள்.

அறிஞர் க. கைலாசபதி அவர்கள் எழுதிய ‘Tamil Heroic poetry’ என்ற ‘தமிழ் வீரநிலைக் கவிதை’ என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேட்டை பர்மிங்காம் பல்கலைக்கழகத்திற்கு 1966-இல் அளித்துள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற இவ்வாய்வேடு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் கழித்து கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக்கம் பெற்றுள்ளது. மேலும் 1968-இல் ஆக்ஸ்போர்டு இந்நூல் நிறுவனத்தால் வெளியிடப்பெற்றுள்ளது.

இந்நூலில் புலவரும் புரவலரும், பாணரும் பாண் மரபும் வாய்மொழி கவிதையாக்க உத்தி, பாடுபொருளும், தொடர்ச்சிகளும், வீரர் உலகம் என்னும் ஆறு தலைப்புகளில் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

இந்நூலாய்வின் நோக்கத்தைக் குறித்து தன்னுடைய முன்னுரையில் எடுத்தியம்பும் ஆசிரியர், “இந்நூலின் நோக்கம் இருவகைப்பட்டது. முதலாவது தமிழ்ச் செய்யுளை ஒப்பியல் நோக்கு முறைக்கு உட்படுத்த வேண்டுமென்பது. இரண்டாவது, குறிப்பாகத் தமிழ்ச் செய்யுளை ஹோமரின் செய்யுலோடு ஒப்பிட்டு, இவை இரண்டும் வீரநிலைக்காலம் எனப்படும் காலத்தின் நிலைகளை வெளிக்காட்டுவன என்பதை கூறவேண்டுமென்பது.” (1996:1) என்னும் நோக்கோடு இவ்விரண்டு கருத்துக்களும் நூல் முழுமையும் இயன்றுள்ளது என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சங்ககாலம் வாய்மொழிப் பாடற்காலம் என்றும், சங்கப்பனுவல்கள் வாய்மொழிப்பாங்கின என்றும், சங்ககாலம் வீரநிலைக்காலம் என்றும் கைலாசபதி இந்நூலில் குறித்துள்ளார். டியூட்டானிய, கிரேக்க மொழிகளின்

வீரநிலைக்காலப் பாடல்கள் வாய்மொழி மரபின என்று சாட்விக்குகள் கூறும் நெறியிலும், ஹோமரின் காவியங்கள் மரபுவழி வந்த வாய்மொழியின என மில்மன்பாரி கூறும் நெறியிலும் கைலாசபதி சங்க இலக்கியங்களை இந்நூற்கண் நோக்கியுள்ளார்.

இவ்வாய்வுக்குரிய மூலங்களாகப் புறநூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, பிற எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் ஆகியவற்றை மூலங்களாகக் கொண்டு இவற்றை குறித்து விரிவான ஆய்வு இந்நூலின் முதல் இயலில் நிகழ்த்தப் பெற்றுள்ளது. சங்கப்பாட்டு என்பதிலும் பாண்பாட்டு (Bardic Poetry) அரசவைப்பாட்டு (Court Poetry) என்ற பெயரீடுகள் பொருந்துமென்பது நூலாசிரியரின் கருத்தாகும். அகப்பாட்டில் பெயர் கூறாப்படாமை தோடர் மொழியிலும் காணப்படும் தன்மை என்பதை எடுத்துக்காட்டிப் பாணர்தம் பாடற்கலையின் பண்பு இதுவென ஆசிரியர் எடுத்துரைக்கின்றனர்.

புறநானூற்றில் 248 முதல் 357 வரையிலான பாடல்கள் பெயரும் அடையாளமும் அறியப்படா வீரர்களைச் சுட்டுகின்றன. இவர்கள் பழைய வீரநிலைக்கால இயல்பைக் காட்டுகின்றனர். தழிழில் தோன்றிய தொன்மையான வீரநிலைக்காலப் பாடல்கள் இவை எனலாம் என்று ஆசிரியர் தெறிவிக்கின்றார்.

பாணர், பொருநர், விறலியர், கூத்தர், புலவர், அகவுநர், கோடியர், வயிரியர் எனும் கலைஞர்கள் பலரையும் குறித்து ஆசிரியர் ஆராய்ந்தால் யாழிசைத்தும் பாடுவோர் பாணர் எனப்பட்டனர். பாணர் என்போர் அரசனின் மதிப்புக்கு உரியவராக இருந்திருக்கின்றனர். பண்டைக் காலத்தின் பாணர்குடி உயர்ந்த குடியாகக் கருதப்பெற்றது. பொருநர் ஏர்க்களம் பாடுவோரும், போர்க்களம் பாடுவோரும் என இருவகையினர், கூத்தர் பாடி ஆடுவோராவர், விறலியர் ஆடிப்பாடும் பெண்பாலர். விறலியர் அக்காலத்தில் நன்கு மதிக்கப்பெற்றிருந்தனர். கோடியர் என்போர் கொம்பு ஊதுவோராவர். வயிர் எனப்பெறும் குழலிசைப்போர் வயிரியர் எனப்பட்டனர். அகவுநர் எனப்பட்டோர் கண்டி நுண்கோல் கொண்டு அகவிப் பாடுவோராவர் என ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

மன்னர்களின் மரபுகளையும், குடிச்செய்திகளையும் பாணர்தம் வாய்மொழிப்பாடல்களிலிருந்து புலவர் செய்திகளைக் கொண்டு பாடலியற்றியுள்ளனர். இச்செய்திகளின் வழியே வழிவழி வந்த வாய்மொழி மரபின் அடிப்படையிலேயே புலவர்தம் செய்யுட்கள் இயற்றப்பெற்றன என ஆசிரியர் குறிப்பிடுகிறார். புலவர் எனப் பெறுவோர் கல்வி, அறிவு வாய்ந்தவராவர். முருகனே நூலறிபுலவன் என உரைக்கப் பெறுவதையும், தாம் பெற்ற கல்வி காரணமாகப் புலவர் செருக்குடையவராயிருந்னர். "நான் உன்னிடம் பொருளை நோக்கிப் பாடவில்லை என்பது போன்ற கூற்றுக்கள்", அவர்களின் தன்னம்பிக்கையைக் காட்டுவதுடன் பொருளுக்காகப் பாடுவோரும் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. வாய்மொழி மரபினின்றும் புலவர் செய்திகளைத் திரட்டியும் சேர்த்தும் நீக்கியும் செய்யுள் யாத்தனர் என்பன போன்ற செய்திகளை இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

புலவர் செயல்களைக் குறித்துக் கூறும் ஆசிரியர், பழையகுடி மரபுகள் மறைந்த நிலையில் தோன்றிய அரசர்களைப் புலவர்கள் தெய்வமென உயர்த்திப் பாடினர் என்று கூறுகின்றார். அரசக்குடிப்பிறப்பு தெய்வத்திற்குச் சமமானதாக உரைக்கப்பட்டது. தொடக்கத்தில் மக்களோடு என்பதத்தினராக நெருங்கியிருந்த அரசர்கள், தெய்வப்பிறப்பு என்று ஏற்றப்பட்ட நிலையில் மக்களிடம் நெருக்கமற்ற உயர்நிலையில் இருந்தனர். இந்நிலையில் புலவர்களின் பாராட்டு அரசர்களுக்கு விளம்பரமாகவும், மக்களிடையே பெருமிதப்படக் கருதப்படுவதற்காகவும் பயன்பட்டது. இதுபோன்ற செய்தி பரப்பலைக் கோவுர்கிழார் போன்ற புலவார்கள் நன்கு செய்துள்ளனர். இத்தகு புகழ்பரப்பல் எதற்காக என விளக்குகின்ற நிலையில்,

"இவ்வாறு பாடல்களில் அரசர் புகழ் பரப்புதல், அரசர்களும் மன்னர்களும் ஆற்றிய கொள்ளைக் கொடுஞ் செயல்களையும் அஞ்சத்தக்கவற்றையும் ஓர் இலட்சிய நெறிப்படுத்தி உரைப்பதற்காகும் மொழி என்று ஆசிரியர் கூறுகின்றார். இக்கொடுஞ்செயல்களை வாழ்த்திப் பாடுவதன் வழியே புலவர்கள் அரசர்களுக்கு நெருங்கியவர்களாகியிருக்கின்றனர். இந்நிலையில் போர் வீரரையும் அரசரையும் போரில் ஆர்வங்கொள்ளப் புலவர் தூண்டியுள்ளார். வேந்தர்கள் நாணும் பழியும் அஞ்சுவதோடு அறநெறி வழி

ஒழுகுபவராயும் இருத்தலை வீரநிலைக்காலச் செய்யுள் அவாவியிருக்கிறது என்பதனையும் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

துறை என்ற சொல் இடம், இடச்சூழல், நெறி, பிரிவு, கடற்கரை, தங்குதுறை, அடுத்தடுதமைந்த இடம் போன்ற பொருள்களை உடையது. துறை என்பது பாடுபொருளின் ஒரு பகுதியென விளக்குகின்றார். அகம், புறம் என்ற பாகுபாடுடைய திணைகள் பதினான்கின் உட்கூறே எனப்படும். படைப்புக்கூறு என்பதனுள் இன்றியமையாதது துறை என ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். துறைக்குரிய சரியான விளக்கம் பாட்டின் அடிக்குறிப்பால் அளிக்கப் பெறுகின்றது என ஆசிரியர் கருதுகிறார். ஆற்றுப்படை என்னும் பாடுபொருள் புறப்பாடல்களில் குறிப்படத்தக்க இடம் பெறுகின்றது. இப்பாட்டில் நைந்து கிழிந்த உடை, விருந்தில் படைக்கப்பெறும் உணவு ஆகியன நீண்ட வருணணை பெறுவதையும், இதேபோல மகள் மறுத்தல் புலவர் பலரால் பாடுபொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது, பாடுபொருளின் மரபறிந்து அதனை முற்றும் புரிந்துக்கொண்டு பாட்டிசைப்பதில் புலவனின் பயிற்சியும் ஆற்றலும் வெளிப்படும் என தெளிவுறுத்தும் வகையில் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வேந்தர்களுக்குச் சினம் என்பது பாராட்டத்தக்க பண்பாக அக்காலத்தில் இருந்ததோடு, அச்சினம் பெருமையுறப் புலவரால் வருணிக்கப்பட்டிருக்கிறது வீரர் பெருங்குடிப் பிறப்பினராயும் வீரவழிவந்தோராயும் புலவர்களால் பாடப்பெற்றுள்ளனர். வீரர் பெருஞ்செல்வக் குடியினராகவும் வருணிக்கப்பட்டுள்ளனர். குடிகளில் ஏற்றத்தாழ்வும் அக்காலத்திலிருந்தன. இவையனைத்தும் வீரநிலைக்காலப் பண்புகளாதலின் சங்ககாலம் வீரநிலைக்காலம் என்பது ஆசிரியர் தீர்க்கமாக கூறுகிறார்.

சங்க காலத் தலைமக்கள் புகழ் அவாவிய வாழ்வினர் என்பதை தெளிவுப்படுத்தும் வகையில், போரில் மார்பில் புண்பெற்று மறப்புகழ் பெறுதல், நடுகல்லாகி வணங்கப் பெறுதல், புலவரால் பாடப்பெறுதலின் மூலம் அவர்களின் புகழ்விருப்பம் உருக்கொள்கிறது. ஹோமரின் வீரர்களும் இத்தகு புகழ்வாய்ந்த இறப்பையும், இறப்பிற்குப் பின் பாடப்பெறுதலையுமே அவாவியுள்ளதையும், வீரரை மாய்த்தலும், கொன்று குவித்து நூழிலாட்டலும், குருதி வெள்ளம் பரந்ததெனப் பாடுதலும், யானைகளைத் துமித்தலும்,

ஒழிவின்றித் தொகைப்பட மடிந்தனர் என்பதும் அக்காலத்தில் நிலவிய புகழ்ச்செயல்களாக ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

மன்னரைப் புகழ்தலே புலவரின் நோக்கமன்று. இடித்துரையும், செவியறிவும், வசைமொழியும் கூடப் புலவரால் வேந்தரை நோக்கி நிகழ்ந்திருக்கின்றன. உண்டாலம்ம இவ்வுலகம், யாதும் ஊரே யாவரும் கேளிர், தெண்கடல் வளாகம் எனத் தொடங்கும் புறப்பாடல்கள் வீரநிலைக் காலத்திலிருந்து மிகத் தொலைவுக்கு வந்துவிட்ட சங்ககாலத்தைக் காட்டுகின்றன என இந்நூலில் எடுத்துரைத்து தெளிவுறுத்துகிறார். போர் விரும்பும் கடுஞ்சினக் கொடுங்கொலையும் குருதி கண்டுவக்கும், கொற்றப்புகழும், அருளும் அன்புமற்ற மறமலி வாழ்வும் வீரநிலைக்காலப் பண்புகளாக எடுத்துக்காட்டி, சங்ககாலம் இவற்றினின்றும் முதிர்ந்து விலகிப் பக்குவமுற்று, அறநெறிக் கோட்பாடுகளில் உளஞ்செலுத்துமளவு படிமுறை வளர்ச்சி பெற்ற காலம் சங்க காலமென ஆசிரியர் விளக்கியுரைத்து தெளிவுப்படுத்தும் பாங்கு சிறப்புடைத்தாக உள்ளது.

கி.வா.ஜகந்நாதன் அவர்கள் கோவூர்கிழாரின் பாடல் அமைப்பினையும், அவர்தம் பாடல் கருத்தினையும் விளக்கும் வகையில் 1968-இல் 'கோவூர்கிழார்' (வரலாறு) என்ற நூலை எழுதியதோடு, இதனை சென்னை அமுத நிலையம் 92 பக்கங்களுடன் இந்நூலை பதிப்பித்துள்ளது.

சோழ மன்னர்களுக்கு பலகாலம் உசாத்துணைவராகவும், அவைக்களப் புலவராகவும் வாழ்ந்த கோவூர்கிழார் தமக்கும் தம் நாட்டுக்கும், தம்மைச் சார்ந்தாருக்கும் நன்மையே செய்துள்ளார் என்பதையும், பகைத்த மன்னரைப் பகை நீக்கி ஒன்று படச்செய்துள்ளார் என்பதையும், தவறு செய்பவன் வேந்தனாயினும் கண்டிக்கும் முறையறிந்து கண்டித்துச் சொல்லும் சொல்லுடையவராக வாழ்ந்தார் என்பதையும், அவரின் பா அமைப்பு முறையையும், கவிதை படித்தும், கேட்டும் இன்பம் பெறுவதற்காக மட்டும் அமைந்ததன்று வாழ்க்கையைச் சீர்திருத்தவும் அது உதவும் என்பதையும் அவர் பாட்டுக்கள் தெரிவிக்கின்ளன என்றவாறு செய்திகளை கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். ஒட்டு மொத்தத்தில் கோவூர்கிழார் பாடல்களில் உள்ளதை எடுத்து விளக்கும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

கி. பாண்டுரங்கன் அவர்களால் எழுதப்பெற்ற புலமைசால் புரவலர் என்னும் தலைப்பிலமைந்த கட்டுரைத் தொகுப்பு 1969-இல் நூலாக்கம் பெற்று வெளியிடப்பட்டது.

பழந்தமிழகத்திற்கென்று தனிச்சிறப்பு உண்டு. அவ்வகையில் நாட்டை ஆண்ட வேந்தர்கள், புலவர்களைக் காத்து உதவி செய்த புரவலர்களாக இருந்தநோடு மட்டுமல்லாமல், தாமும் புலமை நிரம்பியவர்களாக விளங்கியதே அச்சிறப்பாகும். மேலும் சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தருள்ளும் அவ்வாறு புலமை சான்றவர்களாக திகழ்ந்தவர் இருந்தனர். அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் நிலையான இடம் பெற்றுவிட்டனர். அவர்களுள் சிலரைப் பற்றிய சுவையான கட்டுரைகளை இந்நூலில் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

இந்நூல் சேரர் என்ற பொருண்மையின் கீழ் கணைக்கால் இரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை, பாலை பாடிய பெருங்கடுங்கோ என்றும், சோழர் என்ற பொருண்மையின் கீழ் கோப்பெருஞ்சோழன். சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நல்லுருத்திரன், சோழன் நலங்கிள்ளி, தொண்டைமான் இளந்திரையன் என்ற அமைப்பிலும் பாண்டியன் என்னும் பொருண்மையின் கீழ் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, பாண்டியன் அறிவுடையநம்பி, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி போன்ற தலைப்புக்களைக் உள்ளடக்கமாகக் கொண்டு இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சங்ககால தமிழகத்தில் அரசர் குடியில் தோன்றிய அறிவுசான்ற புலவர்களாக விளங்கி, தம் ஆட்சிப் பெருமையாலும் இலக்கியச் சிறப்பாலும் உலகுக்கெல்லாம் ஒளியூட்டி நிற்கும் ஒரு சில சான்றோரை இந்நூலில் எடுத்துக்காட்டி, அச்சான்றோரின் வரலாற்றினை ஓரளவு விளக்கி அவர்கள் படைத்த இலக்கியத்தின் சுவையையும் ஆங்காங்கே இந்நூலாசிரியர் தொட்டுக் காட்டியுள்ளார்.

தெளிவான அறிவோடு திட்டமிட்டு வாழ்ந்த தழிழர்களிடையே ஒரு பெருங்குறையும் இருந்தது. அதுதான் சேர, சோழ, பாண்டியர்களிடையே இருந்த ஒற்றுமையின்மை. இவ்வொற்றுமை குறித்து விளக்க முற்படும் ஆசிரியர் "மூவரும் தமிழர் என்ற அடிப்படையில் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்தார்கள் அல்லர். அதற்கு மாறாக ஒவ்வொரு குடியினரும் ஏனைய குடியினரை அடக்கி வெற்றி காண்பதையே பெருமையாகக் கருதி இருந்தனர். தன் இனத்தவர் தன்னைவிட உயரக் கூடாது என்ற எண்ணத்தால் தமிழர் என்ற பொதுமை உணர்ச்சியைவிட, சேரர், சோழர், பாண்டியர் என்ற பிரிவு உணர்ச்சியே பெரிதும் நிலவியது. இதன் பயனாக மூவேந்தருக்கும் இடையே இடைவிடாத போர்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன. இத்தகைய போர்களே தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் பெரும் பகுதியாக அமைந்துவிட்டன. காலப்போக்கில் தமிழகத்தில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டதற்கும், தமிழ் மூவேந்தரும் வலிகுன்றி மறைந்ததற்கும், அவர்தம் ஒற்றுமையின்மையே தலையாய காரணமாக இருந்தது" (1969:2, 3) என இந்நூலாசிரியர் விளக்கமாக எடுத்துரைத்து தெளிவுபடுத்தியுள்ளார்.

மூவேந்தர்களின் காலத்தில் கல்வி உயர்ந்த நிலையிலிருந்தது என்றும் சாதி சமயப் பாகுபாடும், ஆண்பால் பெண்பால் வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்று அறிஞராகத் திகழும் வாய்ப்பு மிக்கிருந்தது என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். புலமையையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர் சிலர் இருந்தமையும், வேறு பல தொழில் செய்து வாழ்ந்து வந்த பலரும் புலவராகத் திகழ்ந்தனர் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். அவ்வகையில் உறையூர் இளம்பொன் வணிகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கணியன் பூங்குன்றனார், தண்கால் பூண்கொல்லனார், மதுரை அறுவை வாணிகன் இலவேட்டனார், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், வெண்ணிக்குயத்தியர் ஆகிய பெயர்கள் வேறு பல தொழில் புரிந்து வாழ்ந்து வரும் புலவர்களின் பெயர்களை சான்றாக ஆசிரியர் இந்நூலில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு, வேறு தொழில் புரிந்து வாழ்ந்தவரும் புலவர்களாக திகழ்ந்தனர் என்ற உண்மையைச் சங்க இலக்கியங்களில் பரவலாக காணப்படுகிறதென்று, இத்தகைய முறையில் அரசராக இருந்த சில

ஆற்றல் சான்றாகும் புலவராகத் திகழ்ந்தனர் என்ற ஆசிரியரின் கருத்து இங்கு குறிக்கத்தக்கது.

புலவனுக்கு வேண்டிய கற்பனைத்திறம், உள்ள அமைதி, முதலியன அரசனுக்கு அமைவது கடினம் என்றும், அரசன் தன் அறிவையும், ஆற்றலையும் நாட்டு மக்களைப் பாதுகாத்ததற்கும், நாட்டின் வளத்தைப் பெருக்குதற்கும் முற்றிலும் செலவிட வேண்டியிருக்கும். அந்நிலையில் பாடல் இயற்றிப் பாவலன் என்ற சிறப்படைவதற்கு அவ்வரசனுக்கு வாய்ப்புகள் இருக்க முடியாது என ஆசிரியர் அழுத்தமாக தன் கருத்தை பதிவு செய்துள்ளார்.

அரசியலில் ஆற்றல் குன்றாத வலிய அரசனாகவும், அதே நேரத்தில் அறிவுமிக்க புலவனாகவும் ஒருவன் விளங்கினால் அது அவனுடைய ஒப்பற்ற உயர்வைக்காட்டும் என்றும், திறமையுள்ள அரசனாக இருந்து, தன்னை நாடி வரும் பாணரையும், கூத்தரையும் புலவரையும் புரக்கும் ஒருவன், புலமை சான்றவனாகவும் விளங்குகின்றான். எனவே அத்தகையோரின் வரலாற்றினை அறிந்து கொள்வது நமக்கும் மிகுந்த பயனுடையது என ஆசிரியர் சுட்டிக்காட்டி தெளிவுப்படுத்துகிறார். இத்தகைய ‘புலமை சான்ற புரவலர்’ பலர் நம் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்து மறைந்துள்ளமையையும், அவர்தம் வாழ்க்கையும், அவர்கள் அளித்த இலக்கியங்களும். அவர்களின் வழிவந்த பின்னோராகிய நமக்கு அழியாச் செல்வங்களாக அமைந்ததோடு, அச்செல்வங்களை உணர்ந்துபோற்றி, நமது உயர்ந்த வாழ்க்கைக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமையெனவும், இத்தகைய நோக்கத்தோடு பழந்தமிழகத்தில் வாழ்ந்த புலமைச்சால் புரவலர் குறித்ததான கருத்துக்களை ஆசிரியர் இந்நூலினுள்ளே பதிவு செய்துள்ளார்.

சங்ககால மன்னர்களின் பெருமைகளைச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. ஒரு நாட்டின் வரலாற்றை எழுத இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு. நாணயங்கள் ஆகியவை பெரிதும் உதவுகின்றன. அவ்வகையில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்துள்ளது.

வித்துவான் நா. பழநியப்பன் அவர்களால் எழுதப்பெற்ற சங்ககாலக் கொடை மன்னர் கதைகள் என்னும் நூல் 1992-இல் நூலாக்கம் பெற்று வெளியிடப்பெற்றது. இந்நூல் பேகன், நள்ளி, ஓரி, காரி, ஆய், அஞ்சி, பாரி

என்னும் ஏழு வள்ளல்களை பொருண்மையாகக் கொண்டு, கதையமைப்பை வடிவமாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

வி. எஸ். அழகப்பன் அவர்களால் 'The Social and Political life as Revealed in Purananuru' என்னும் முனைவர் பட்ட ஆய்வேட்டை 1972-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது.

இவ்வாய்வேடு Social life (சமூக வாழ்க்கை) என்ற முதல் பகுதியில் 1. Education and Fine Arts (கல்வி மற்றும் கலை அம்சங்கள்), 2. Role of women in Society (சமூகத்தில் பெண்களின் பங்கு), 3. The people and their occupation in crafts (மக்களின் தொழில்களும் தொழில் கல்வியும்), 4. Customs and habits in Peligious Practice and Faiths (பண்பாடும், பழக்க வழக்கங்களும்), 5. Poets in Purananuru (புறநானூற்றின் பாடல் ஆசிரியர்கள்) என்ற உள் தலைப்புகளையும், Political life (அரசியல் வாழ்க்கை) என்ற இரண்டாவது பகுதியில் 1. Kingship and Administration (அரசர்களும் அவர்களின் ஆட்சி முறைகளும்), 2. War and war fare (போர் முறைகள்), 3. The Crowned and Petty Kings (முடியரசர்களும் குடியரசர்களும்), 4. The duty and Virtus of Kings (அரசர்களின் கடமைகளும், நற்குணங்களும்) என்ற உள்தலைப்புகளையும் கொண்டதாக இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

புறநானூற்றுப் பாடல்களில் ஏராளமான வரலாற்றுக் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளது. ஆனால் செறிவுள்ள வரலாற்றுச் சான்றுகள் கிடைக்காததை விளக்கம் பொருட்டு இவ்வாய்வாளர்,

> புறநானூற்றில், கல்வெட்டுக்கள் மற்றும் சிற்பங்கள் போன்றவைகளைப் பற்றிக் கண்டறிய விரிவான சான்றுகள் இல்லை. பொற்கொல்லர்கள் மற்றும் நெசவாளர்கள் பற்றிய குறிப்புகளும் இல்லை. சிலப்பதிகாரம் மற்றும் குறளில் உள்ளது போன்ற கோட்டைகள், அகழிகள் மற்றும் போர்க்கருவிகள் பற்றிய சான்றுகளும் இல்லை. மேலும், அமைச்சர்கள் மற்றும் தேர்தல் முறைகள் குறித்து எவ்வித சிறப்புச் சான்றுகளும் இல்லை. புறநானூற்றில், மேற்கண்ட செய்திகள் அனைத்தும் இயல்பாகவே இருக்கும் என்பதுதான் நம்முடைய எதிர்ப்பார்ப்புகள்.

ஆனால் அதற்கு மாறாகச் செய்திகள் உள்ளன. தமிழ் நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகளைப் பற்றிக் கபிலர் சில கருத்துக்களை கூறியுள்ளார். தமிழ்ச் சமுதாயத்தில் ஆண்களுக்கு முன்னுரிமை தரப்பட்டுள்ளது. வரதட்சணை முறைகள் பற்றியக் குறிப்பும் இடம்பெற்றுள்ளது. சிவன், முருகன் மற்றும் திருமாலை அடிப்படைத் தெய்வங்களாகக் கொண்டுள்ளனர். சோழ மன்னர்கள் பற்றிய கதைகள் நகைப்பிற்கு உரியவைகளாகக் காட்சியளிக்கின்றன". (1972 : 175 , 178)

என்று ஆய்வாளர் அக்காலச் சமூகத்திற்கான செறிவான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்காத நிலையையும், ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ள சமுதாயமாக இருந்துள்ளமையையும், வரதட்சனைக்கு இடம் இருந்துள்ளதையும் இவ்வாய்வேடு முன்வைக்கிறது.

புறநானூற்றில் செறிவு மிக்க கருத்துக்களைக் கொண்ட பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தையும் 156 கவிஞர்கள் தொகுத்துள்ளனர். 'உவமை' என்பது பழங்காலக் கவிஞர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கியது. அவ்வகையில் உவமையை விவரிக்கும் பொருட்டு,

"உவமைகளை 4 வகைகளாக பிரிக்கலாம் 1. இயற்கை பற்றிய உவமைக் கருத்துக்கள், 2. வரலாற்று குறிப்புகள் பற்றிய உவமை கருத்துக்கள், 3. அறநீதிகள் குறித்த உவமைச் செய்திகள், 4. கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் குறித்த உவமைச் செய்திகள், இறுதியாகக் கூறப்பட்ட உவமைச் செய்திகளைப் பிற்காலத்தில் பயன்படுத்தவில்லை. 280 உவமைகள் உள்ளடக்கிய தொகுப்புகள் கபிலர், பரணர், ஔவையார், கோவூர்கிழார், முடமோசியார், மருதன் இளநாகனார் மற்றும் பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் எழுதியுள்ளனர். புறநானூற்றில் 25 புலவர்களின் பெயர்கள், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இடம்பெற்றுள்ளன. மேலும் 9 புலவர்களின் பெயர்கள் வேறு தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அதுமட்டுமின்றி அவர்களின் பெயர்கள் அனைத்தும் பண்புப் பொருள்களாகக் காட்சியளிக்கின்றன. மேலும் புறநானூற்றுப் பாடல்கள் காட்சிகளாகவும், அப்பொருள் பாடல்கள் திரட்டுகளாகவும் முன்னதாகவே வெளிவந்துள்ளன மீதமுள்ள 16 புலவர்கள்

மட்டும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளனர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு, இரும்பிடர்த்தலையார், பக்குடுக்கை நன்இனியர், தொடித்தலை விழுத்தண்டினார் மட்டுமே புறநானூற்றில் இடம்பெற்றுள்ளனர். மீதமுள்ள 13 புலவர்கள் மற்றும் இதர புலவர்கள் 16 பேர்களும் சேர்ந்து பாடல்களைத் தொகுத்தனர். பல புறநானூற்றுப் பாடல்கள் அழிந்திருக்கலாம் அல்லது நூலில் இருந்து நீக்கியிருக்கலாம் (1972: 178,179). என்றவாறு ஆய்வாளர் உவமைகளைக் கொண்டு அக்காலத்தில் நிலவிய சமூகத்தை விளக்கியுரைத்து தெளிவுப்படுத்துகிறது இவ்வாய்வேடு.

'பாரி மகளிர்' என்னும் வரலாற்று நாடக நூலை மு.சி. கேசவன் அவர்கள் 136 பக்கங்களைக் கொண்டு 1975-இல் சென்னை ஏஷியன் அச்சகத்தில் பதிப்பித்துள்ளார்.

அங்கவை, சங்கவை, முடியண்ணல், திருக்கண்ணன், பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, சோழ இராஜசூயம், வேட்ட பெரு நற்கிள்ளி, சேரமான் மாரி வெண்கோ, கபிலர், ஔவையார், பாரிவள்ளல், கடையழு வள்ளல்களில் ஒருவர், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, மலைநாட்டுச்சேரவேந்தன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் தந்தை, வஞ்சி, பாரி மகளிர் தோழி, கோசிகன், வேதியர், கபிலர் மைத்துனர், புனிதவதி, கோசிகன் மனைவியர், மீளி, பாரிபடைத் தலைவர், கோவூர்கிழார், ஆடல் ஆசிரியன் என்ற கட்டுரைகளை உடையதாக ஆசிரியர் இந்நூலை படைத்துள்ளார்.

புலவர் மு.சி. கேசவன் அவர்கள் ஔவையார், கபிலர், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோர் பாடிய சங்கப்பாடல் கருத்துக்களை நாடக மாலையாகத் தொகுத்துத் தந்துள்ளார். 'பாரி பாரியென்று பல ஏத்தி' என்னும் கபிலர் பாடல். பாரி மீது மூவேந்தர்க்கும் பொறாமை மூள்வதற்குக் காரணமாக இருந்தது என்பதைச் சுட்டும் வகையில் சுவையான நிகழ்ச்சியோடு தொடங்கும் இந்நாடகம், பாரி மன்னனின் மறைவுக்குப்பின் அவ்வள்ளலின் மகளிர் இருவரும் படும் இன்னல்கள், அவர்களுக்கு நல்வாழ்க்கையை ஏற்படுத்தி தருவதற்காக கபிலரும் ஔவை மூதாட்டியும் முழு முயற்சி செய்யும் நிகழ்ச்சிகளோடு இலக்கிய நயம்பட உருவாக்கப்பட்டுள்ளது இந்நாடகம்.

பெற்றோரின் நிலையிலிருந்து ஔவைப் பிராட்டியே பாரி மகளிர்க்குத் தக்க வரன்கள் தேடி மணமுடித்து வைத்தாரென்பது வழிவழி வந்த வரலாற்றுச் செய்திகளாயினும் ஆசிரியர், பண்டைக்கால மரபின்படி, பாரி மகளிரின் மணவாழ்க்கை காதல் மணமாகவும் அமைந்தது என்பது போலக் காட்சிகளை அமைத்துள்ளார்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**இவர் யார் என்குவை யாயின்**
**அளிதோ தானே பாரியது பறம்பே**
**ஏற்தேழில் மலைக்கண் இன்னகை மகளிர்**

ஆகிய புறநானூற்றுப் பாடல்களுக்கெல்லாம் விளக்கமளிக்கும் வகையில் காட்சிகளை உருவாக்கியுள்ளார் ஆசிரியர். கதிர் மகாதேவன் அவர்களால் எழுதப்பெற்ற பழந்தமிழர் வீரப்பண்பாடு (ஒப்பிலக்கியக்கணிப்பு) என்னும் நூல் 315 பக்கங்களைக் கொண்டு 1980-இல் இலட்சுமி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

இந்நூல் பழந்தமிழர் வீரப் பண்பாடு களமும் காலமும், வினைநவில் கவிதைகளின் வகைகள், பழந்தமிழர் பண்பாட்டின் வளர்ச்சி, வீரப்பண்பாட்டின் களமுறையும் பண்பாடும், களங்காட்டும் படைகளும் படைக்களன்களும், நாவல் கவிதைகளின் புனைதிறமும் பொருள் திறமும், அகவாழ்வில் புறவாழ்வின் தாக்கம், எயில் காட்டும் பகுதிகள் என்னும் தலைப்புகளை உள்ளடக்கமாக கொண்டமைந்த கட்டுரைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அக்காலத்திலிருந்த பண்பாட்டை, சங்க இலக்கியப் பின்புலத்தை அடிப்படையாக வைத்து, மதிப்பீடு செய்ய முயற்சிக்கிறது இவ்வாய்வு நூல். பழந்தமிழர் வீரப்பண்பாடு களமும் காலமும் என்னும் கட்டுரையில் புறநானூற்றுப் பாரதப்போர் பற்றியதான நிகழ்ச்சிக் குறிப்பு நிகழ்காலத்தில் பேசப்படுவது கொண்டு வடநாட்டின் இதிகாச வீரநிலைக் காலத்தோடு ஒப்பவைத்து எண்ணும் பழமை பழந்தமிழர் வீர நிலைக் காலத்திற்கு உண்டென்றும் அறியலாம் என வீரநிலைக் காலத்தினைப் பற்றிய கருத்தை முன்வைக்கப்பட்டுள்ளது.

வினைநவில் கவிதைகளின் வகைகள் என்னும் கட்டுரையில் பழந்தமிழ் கவிதைகளை குறித்து தெளிவுறுத்தும் வகையில், "வீர நிலைக்காலத்தில் சொந்த

எண்ணங்களைப் புலப்படுத்தும் கவிதைகள் (Personal Poetry) இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவைகள் கிடைக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொள்ளும் திருவாளர் சாட்விக்குகளுக்குப் பழந்தமிழ் கவிதைகளில் இவ்வகை இருப்பது தெரிந்திருக்குமானால், மிகச்சிறப்பாக இருந்திருக்கும் என்றுரைக்கின்றார் ஆசிரியராகிய கதிர் மகாதேவன் தன் முன்னுரையில்,"

"வீரநிலைக் காலப் பண்பாட்டின் வளர்ச்சி" என்ற கட்டுரை பழந்தமிழர் வீரநிலைக்கால பண்பாட்டு வளர்ச்சி திணைகளிலே இயற்கையாக மலர்ந்ததை வெளிப்படுத்துகிறது. பழந்தமிழர் தம் புறப்பாட்டின் எதிரொலியாகப் புறநானூற்றுப் பாடல்களும், பதிற்றுப்பத்துப் பாடல்களும் அகப்பாடல்களில் அமையும் புறப்பொருள் செய்திகளை உணர்த்தும் குறிப்புகளும் அமைகின்றன எனலாம். வீரத்திற்கு புலவர் தரும் பரிசு புகழாகும் என்ற உண்மையை அறிவரோடு, பகைவரை வெற்றிக்கொள்ளும் ஆற்றலுக்கு ஏற்றவாறு புலவர்கள் சிறப்பை, ஆடுகொள் வரிசைக்கு ஒப்பு, பாடுவல் மன்னனால், பகைவரைக் கடப்பே' (புறம். 53) என்று கூறுவதன் மூலம் அறியப்படுகிறது". (1980:4)

'களமுறைகளும் பண்பாடும்' என்ற தலைப்பில் வெட்சித் திணைப்போர் பழந்தமிழர் வீரநிலைக்காலத்து உண்டென்பதையும் பிற களமுறைகள் போல வெட்சித்திணைப்போரும் உடன் நடைபெற்றது என்பதையும் ஆசிரியர் இங்கு எடுத்துரைத்துள்ளார்.

பழந்தமிழ் நாட்டின் வீரநிலைக்காலப் பண்பாட்டை உருவாக்கப் பயன்பட்ட விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றாக, "புறநானூற்றில் மகட்பாற் காஞ்சித் துறையில் வரும் 20 பாடல்கள் மகன் மறுத்தல் அமருக்குக் காரணமானதைச் சான்று காட்டி நிற்கின்றன. கபிலர் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு பல மன்னரிடைச் சென்று திருமணம் முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்றதையும் அறிகிறோம். இதனால் பறம்புமலை மீது மூவேந்தரும் படையெடுத்தற்கு மகள்மறுத்தல் காரணமானதை உய்த்துணர வழியுண்டு. மேலும், குன்றூர்கிழார் மகனார் பாடிய பாடலில், மகளைப்பெற்ற மன்னன், 'கொற்ற வேந்தர் வரினும், தன்தலை வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்' என்றார். அக்காலக் குறுநில மன்னின் மகளை வேட்போர், வேந்தராயினும் வணங்கிக்

கேட்க வேண்டும் என எதிர்ப்பார்த்தனர் என்று எண்ண வேண்டியுள்ளது” (1980: 220) என்று உரைத்துள்ளார் ஆசிரியர்.

வீரநிலைக் கவிதைகளை வினைநாவல் கவிதை எனலாம் என நாவல் கவிதைகளின் பொருள் திறமும், புனை திறமும் என்னும் தலைப்பிலான கட்டுரையில் கூறுகிறார் ஆசிரியர். வீரநிலைக் கவிதைகள் நாவல் திறம் உடையவை என்பதையும் பண்பாட்டுச் சூழலில் வெளிப்படுத்தி தெளிவுறுத்துகிறார்.

தமிழ் வீரர்கள் வினைவயின் பிரிந்த நிலை அமர்க்களப் பிரிவைக் காட்டுகிறது என்பதையும், பெரிதும் பொருள் திரட்டல் பகைக்களத்தில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பதனையும் குறிப்பாகக் கொடுத்துள்ளார். இதனை அகவாழ்வில் புறவாய்வின் தாக்கம் என்னும் தலைப்பில் எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர்.

சு.பாலசாரநாதன் அவர்கள் டாக்டர் உ.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீட்டில் 1986-இல் 410 பக்கங்களைக் கொண்டு சங்க காலப்புலவர்கள் என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் அக்காரக்கனி நச்சுமனர் முதற்கொண்டு வேம்பற்றூர்க்குமரனார் முடிய 494 புலவர்கள் பற்றியதான வரலாற்றுச் செய்திகள் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன.

வ. குருநாதன் அவர்கள் எழுதிய ‘சங்ககால அரச வரலாறு’ என்னும் நூலினை 1990-இல் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் 380 பக்கங்களைக் கொண்டு பதிப்பித்துள்ளது. இந்நூல் சங்ககாலத் தழிழகமும் தமிழக அரசுகளும், சேரவேந்தர் வரலாறு, பாண்டிய வேந்தர் வரலாறு, சோழவேந்தர் வரலாறு, வேளிர் வரலாறு, குறுநில மன்னர் வரலாறு, சீறூர் மன்னர் வரலாறு என்னும் உள்தலைப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் வாழ்ந்த வேந்தர், குறுநில மன்னர், வேளிர், சீறூர்த் தலைவர் போன்றோர் குறித்ததான வரலாற்றுச் செய்திகள் இந்நூலில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. வேந்தரும் மன்னரும் வேறு வேறு குடியமைதி உடையவர் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். “சீறூர் மன்னர் நெருநை நாங்கர் வேந்துவிடு தொழிலோடு சென்றனன்” (புறம்.319) எனச் சீறூர்

மன்னனையும் வேந்தனையும் அவர்தம் தகுதி புலப்படத் தமிழ் இலக்கியம் காட்டுகின்றது என்று ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

“சேர வேந்தர் வரலாறு குறித்து கூறுகையில், சேர வேந்தருள் இன்று அறியப்படும் அளவில் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனே முன்னோனாவான் என எடுத்துக்காட்டி தெளிவுப்படுத்துகிறார். முடிகெழு வேந்தர் வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகிய நிலைகளில் விளங்கிய தமிழக அரசருள் வேந்தர் தம் மேலாட்சியின் கீழ் வேளிர் முதலியோர் அடங்கி ஆண்டனர் ஆயினும், சிலர் அடங்காது தனியாக செய்த தறுகண்மையையும் காண்கிறோம்” (மேலது:388) என ஆட்சி அமைப்பினையும் விவரித்து எடுத்துரைத்துள்ளது இந்நூல் தலைச்சங்க காலத்துப் பாண்டியன் எண்பத்தொண்பதின்மரென்றும், இடைச்சங்க காலத்துப் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரென்னும், கடைச்சங்கப் பாண்டியர் நாற்பத்தொன்பதின் மரென்றும் முச்சங்க வரலாறு மொழிந்தாலும் இப்போது கிடைத்துள்ள கடைச்சங்க இலக்கியங்களில் பெயரும் வரலாறும் அறிய வருவோர் பதினறுவரே என்று பாண்டியர் வரலாறு குறித்த செய்திகளை இந்நூல் எடுத்துக்காட்டியுள்ளார் வ. குருநாதன்,

> சங்ககாலச் சோழ வேந்தரராய் அறிய வருவோர் பதின்மூவர் அவருள் முன்னவனான தித்தனே, தித்தன் வெளியனென்றும், வீரைவேண்மான் வெளியன் தித்தனென்றும் குறிக்கப் பெறுதலால்,அவன் பிறப்பிலே வேளிர் குடியினனென்றும், பின் இறப்பினால் சோழர் குடியிலே மகட்கொடை கொண்டு மருவிச் சோழ வேந்ததனாயினனென்றும் அறிய வருகின்றான். அவன் மகனே போர்வைக் கோப்பெருநற்கிள்ளி (மேலது: 391)

> சேரநாட்டில் எழுவரும் பாண்டிய நாட்டில் நால்வரும், சோழ நாட்டில் ஒன்பதின்மரும் ஆக வேளிர் இருபதின்மரின் பெயரும் வரலாறும்சங்க இலக்கியங்களில் விளங்குகின்றன. (மேலது: 392)

> குறுகிய மன்னன் சேரநாட்டில் பதினறுவரும் பாண்டிய நாட்டில் அறுவரும் சோழநாட்டில் பதினறுவரும் ஆக முப்பத்தெண்மர் பெயர்களும் வரலாறுகளும் புலப்பட வருகின்றன. சீறூர் மன்னன்

பதினறுவர் செய்திகள் சிற்றளவிலேயே காணப்படுகின்றன. (மேலது: 393)

என்றெல்லாம் இந்நூலில் மன்னர் குறித்ததான பல செய்திகளை வகுத்து, தொகுத்து திரட்டி தந்துள்ளார் இந்நூலாசிரியர்.

‘சங்ககால அரசப்புலவர்கள்’ என்ற முனைவர் பட்ட ஆய்வேட்டை ச. ருக்குமணி அவர்கள் 1991-இல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார். இந்நூலில் அரசப் புலவர்களின் கல்வியினை ஆராய்தல், கவிதை படிப்பவர்க்கு இன்பம் தருவன, உள்ளுறை இறைச்சி என்ற மூன்று பொருண்மைகளாகப் பகுக்கப்பட்டு இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சேரர், சோழர் இருவகையான குடிகளும் 31 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாடிய பாடல்கள் 141. அரசப்புலவர்கள் சங்கம் அமைத்துள்ளனர். அரச உரிமை அல்லது அரசப்பதிவு, வழிவழியாக வந்த உரிமை உடையது. புலவர்கள் பாடலின் கருத்திற்கு ஏற்ற உணர்வு கலிப்பாவில் மிகுந்துள்ளதனால் அப்பாடல்கள் நல்ல சொல்லோவியங்களாகத் திகழ்கின்றன. எச்சம், அளபெடை எண்ணும்மை என்னும் முறைகளில் பாடல் அமைப்புகள் அமைந்துள்ளன.

முரண்தொடையில் அமைத்துள்ள பாடல்கள் அரசப் புலவர்கள் கவிதையைப் பொலிவுடையதாக்குகின்றன. பழமொழிகள், சொல்லாட்சி, உரையாடல் நிலைப்பெற்று உண்மைகளை உணர்த்துதல் போன்றன அவர்களின் இலக்கியத் திறனை விளக்குவதாக அமைகின்றன (1991:369) எனும் நிலையில் இவ்வாய்வின் போக்கு அமைந்துள்ளது.

‘பாரி மன்னன்’ என்னும் நூல் நல்லூர் நாகலிங்கம் அவர்களால் எழுதப்பெற்று 1993-இல் 64 பக்கங்களைக் கொண்டு சென்னை உமா பதிப்பகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் பாரி வள்ளல், கபிலரும் பாரியும், முல்லைக்குத்தேர், கபிலரின் புகழுரை, பாண்டியனின் அவா, தூதும் பகையும், தற்சார்பு, முற்றுகை, கபிலரும் மூவேந்தரும், நிலவொளியில், மூவேந்தர் சூழ்ச்சி, சதிச்செயல், துன்பக்கடல், விருப்பும் வெறுப்பும், வடக்கிருத்தல், மணக்கள் என்ற உள் தலைப்புக்களோடு இந்நூல்

உருவாக்கப்பட்டுள்ளது. சிறுவர் படிக்கும்படி சுவையான வரலாற்று நிகழ்ச்சிகளைக் கோவையாக இணைத்து ஆங்காங்கு பொருத்தமுள்ள கற்பனை உரையாடல்களைச் சேர்த்து பாரி மன்னனின் வரலாற்றை இயற்றியுள்ளார் இந்நூலாசிரியர்.

> தகுதி பார்க்காமலும், பயன் கருதாமலும், மிகுந்த பொருள்களை மழைபோலக் கொடுத்து வந்தான். இதனால் அவன் பாரி வள்ளல் என்று எல்லோராலும் புகழ்ப்பட்டான் (1993:8)

எனப் பாரியின் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடும் நூலாசிரியர் அவ்வள்ளலின் கொடைச் சிறப்பினைப் பின்வருமாறு சுட்டிச் செல்கிறார். "தமிழ்மொழி மீது நிறைந்த அன்பு உடையவர் தழிழ் என் வாழ்வு அதை வளர்க்கும் புலவர், பாணர் விறலியரைப் போற்றிக் காப்பதில் என்னுயிரும், நாடும், குன்றமும் போனாலும் கவலையடைவேன்? எனக் கூறி வாழ்பவன் அவன் புலவர்களுக்குப் பரிசாகத் தேர் கொடுப்பான் தேர்ப் பூட்டி ஓட்டக் குதிரை அளிப்பான் அத்துடன் ஊரையும், யானையையும் ஈவான்? யாழ் என்னும் இசைக்கருவியைக் கொண்டு பாடிப் பிழைக்கும் பாணர் தன்முன் வந்து புகழ்பாடுவதைக் கண்டு பொன்னால் செய்த பூவும், ஆடையும் கொடுப்பான். ஆடற்கலையை வளர்க்கும் விறலியர் மகிழப் பொன் நகைகளைச் சொரிவான் தன்முன் நின்று கூத்தாடுபவர்க்கு விரும்பியவற்றைக் கேளுங்கள் தருவேன் என்பான்" (1993:68) எனப் பாரி மன்னனின் தமிழ்ப் பற்றையும், கொடைத்தன்மையையும், இசையின் மீது பாரி கொண்டிருந்த அளவுகடந்த பற்றினையும் இந்நூலின் வழியாக அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

- மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், சீறூர்கிழார், வள்ளல்கள், புலவர்கள் குறித்தும் பல்வேறு ஆய்வேடுகள் வெளி வந்துள்ளன. அவ்வகையில் வரலாற்றியல் நோக்கிலான நூல்கள் அரசர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை வெளியிடுவனவாகவும், வள்ளல்களின் பெருமையை அறிவிப்பவனவாகவும் அமைந்துள்ளன.
- வரலாற்றியல் நோக்கியலான ஆய்வு நூல்களில் மன்னருக்கும் மக்களுக்கும் தேவையான வாழ்வியல் அறநெறிகளை

எடுத்துரைக்கும் கருத்துக்களை ஆராய்ந்தும், மன்னன் கடைப்பிடிக்க வேண்டிய போர் அறங்கனையும் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- சங்ககால மன்னர்கள், புலவர்கள், மக்கள் ஆகியோரின் வாழ்வியலை விளக்குவனவாக வரலாற்றியல் நோக்கிலான ஆய்வுகள் அமைந்துள்ளன. இந்நூல்களில் பெரும்பாண்மைச் செய்தியாகப் பேசப்பட்டிருப்பது புலவர்கள் பற்றிய செய்திகளே. இப்புலவர்களே மன்னர்களை நெறிப்படுத்துபவர்களாகவும் மக்களையும் மன்னர்களையும் ஒருங்கிணைப்பவர்களாகவும் அக்காலப்புலவர்கள் விளங்கினர்.

- இலக்கியம் வரலாற்று மூலங்களுள் ஒன்றே தவிர, அதுவே வரலாறு ஆகாது. சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் அடிப்படைகளில் அமைந்துள்ளதால், ஒரு வேந்தனின் முழுமையான வரலாற்றை எழுதுவதற்கேற்ற வகையில் செய்திகள் இல்லை. கிடைக்கும் சில சான்றுகளும் வரலாற்றடிப்படையில் அமையாமல் சிறந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றன என்று அரங்க. இராமலிங்கம் அவர்கள் ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளது இவ்வியலில் கவனப்படுத்தப்பட்டுள்ளது.

- வ. குருநாதன் தன்னுடைய சங்க காலச் சேரர் அரசியல் நெறிமுறைகள் என்னும் நூலில் சேர மன்னர்களின் அரசியல், நீதி, போர், வரி ஆகிய நான்கு நெறிமுறைகளிலும் மிசச் சிறப்புடன் விளங்கியதோடு அறவழி அரசாட்சியும் நடத்தியுள்ளனர் என்பதையும் ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் குறித்தும் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# முடிவுரை

- தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை என்ற இவற்றுள் புறத்திணைப் பாடல்களின் திணை, துறைகள் எவையென எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அதேசமயம் சங்க நூல்களின் புறத்திணைப் பாடல்களும் பின்வந்தோரால் திணை துறை வகுப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திணைத் துறை வகுப்புகளிடையே ஒன்றுக்கொன்று வேறுபாடுகள் மற்றும் சிக்கல்கள் இருப்பதை அறிய முடிகிறது. எனவே, இவ்வேறுபாடுகள் எவ்வாறமைந்துள்ளன என நோக்க வேண்டிய நிலையில் புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து பாடல்களும் பத்துப்பாட்டின் பாடல்களும் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- சங்கப் புறத்திணைகளான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் இவ்வேழு திணைகளில் ஒரு சில திணைகள் குறித்து மட்டுமே ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவ்வகையில் வாகைத்திணை மற்றும் பாடாண்திணை குறித்து சில ஆய்வறிஞர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடான்திணைக் குறித்து ஒரு ஆய்வும், வாகைத்திணைக் குறித்து மூன்று ஆய்வுகளும், புறத்திணைச் சார்ந்து பொதுவாக சில ஆய்வேடுகளும், புறத்திணைக் கொள்கைகளை முழுமையாக ஆய்ந்துள்ள வகையில் கு.வெ.பாலசுப்பிரமணியனின் ‘சங்க இலக்கியத்தில் புறப்பொருள்’ என்ற ஒரு நூலும், திணைத்துறைகள் குறித்ததான முனைவர்பட்ட ஆய்வேடு என்ற வகையில் கையறுநிலைத் துறையைக் குறித்து ஓர் ஆய்வேடும் வெளிவந்துள்ளது. மேலும் புறப்பொருள் வெண்பாமாலையில் குறிப்பிட்ட 12 திணைகள் குறித்தும், தனிதனியாகவும் அதிக அளவில் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. ஆனால் இப்பொருண்மை குறித்து மிகச் சிலவே வந்துள்ளன. இனிவருங்காலங்களிலாவது இவ் ஒவ்வொரு திணைகள் குறித்து ஆழ்ந்த நிலையில் ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும். 64 துறைகள் இருந்தாலும் இத்துறை சார்ந்த ஆய்வுகளுமே ஓரிரண்டே வெளிவந்துள்ளது.

- புறத்திணைக் கொள்கைகள் குறித்தான ஆய்வுகளில் ஒன்றான கு.வெ. பாசுப்பிரமணியன் 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' என்னும் நூலில் புறத்திணைகளின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும், போர் குறித்தும், அரசியல், சமயவியல், வாழ்வியல் மற்றும் புலவரியல் உள்ளிட்ட பலவற்றை சங்கப் பாடல்களின் துணையாகக் கொண்டு, மிக விரிவான முறையில் ஆராய்ந்து பல்வேறு செய்திகள் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- கு.வெ.பா. வின் 'வாகைத்திணை' என்னும் நூல் தொல்காப்பியர் பன்னிரு புறத்திணைகளை தொகுத்து ஏழாக்கியுள்ளார் என்னும் கருத்தை இந்நூல் மறுத்து பன்னிரு திணை என்பது பிற்கால விரிவே என்று விளக்கிச் செல்லும் பாங்கு இவ்வாய்வில் கவனப்படுத்தப் பட்டுள்ளது.

- சங்க காலத்தில் நிகழ்ந்த போர்க்குரிய காரணங்களை ஆராயும் வகையில், ஆண் மகன் என்றாலே வீரமும் போர் பண்பும் என்ற இயற்கைத் தகுதிகளாக இயல்பாகவே உடையவன் என்றும் அதோடு மண்ணாசையினும் புகழ், விருப்பமே பல போர்களுக்கு அடிப்படை என்றும் கு.வெ.பா. ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளார்.

- புறநானூற்றுப் பாடல்கள் பல்வேறு சூழலில் பல்வேறு காரணங்களுக்காகப் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. ஆகவே சில பாடல்களுக்கு பாடப்பட்ட சூழலை நோக்கியும், சில பாடல்களுக்குப் பாடப்பட்ட நோக்கத்தை ஒட்டியும், சில பாடல்களுக்கு பாடல்களில் உள்ள குறிப்பைக் கொண்டும் துறை வகுத்துள்ள முறைமையைக் குறித்தும், பதிற்றுப்பத்துக்கு துறை வகுத்துள்ளதை குறித்தும் ந. செயராமன் அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

- திணை துறைப் பகுப்பில் சங்கப் புறப்பாடல்கள் தொல்காப்பியத்தைத் தழுவிச் சென்ற போதிலும் பன்னிரு திணைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்றும் திணை, துறைகளில் சிக்கல் எழும்வண்ணம் புறப்பாடல் வரிகளைத் தொல்காப்பியப் பொருளாதாரத்திற்கு உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர் என்றும் திணையின் முழுமையைத் தெரிந்துகொள்ள முதல், கரு,

உரிப்பொருட்கள் இன்றியமையாதன என்றும் திணை பற்றிய ஆய்வேடுகள் சொல்லிச் செல்கின்றன. மேலும் பாடாண் திணை, வாகைத் திணை பற்றிய ஆய்வேடுகளே பெருமளவில் அளிக்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கியப் புறத்திணைகளைத் தனித்தனியே சிலர் ஆய்ந்துள்ளனர். வாகை, பாடாண் என்பன விரிவாக ஆராயப்பெற்றுள்ளன. சில துறைகளை ஆய்ந்த நிலையும் உண்டு. புறத்திணைக் கொள்கைகளை முழுவதும் ஆய்ந்து காட்டியதாக சங்க இலக்கியத்தில் புறப்பொருள் அமைந்தது அதன் வளர்ச்சியாகும்.

- பாடாணுக்கும் கைக்கிளைக்கும் ஒற்றுமை கூறுகளாகப் பத்துக் கூறப்படும். அவற்றையும் தொகுத்து இவ்வாய்வில் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

- சங்க காலத்தை வீரநிலைக் காலம் என்று கருதுவோரின் கூற்றை மறுத்து வீரநிலைக் காலத்திற்குப் பிற்பட்டது சங்க காலம் என இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார். அதாவது வீரர்கள் சிறப்புற்றிருந்த காலமே வீரநிலைக் காலம் என்று ஆசிரியர் நிறுவியுள்ளதையும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- ஒப்பியல் நோக்கில் பாடாண்திணை விளக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் ஈப்ரு, சூலுக்கு, நார்வே, வெல்சு, மெசப்படோமியா, எகிப்து, கிரேக்கம், லத்தீன், அராபிக், செர்மனி, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், அஸ்ஸாம், தெலுங்கு போன்றே இந்திய மொழிகளிலும் உள்ள பாடாண் பாடல் செய்திகள் இவ்வாய்வில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கிய நூல்களில் உள்ள பாடல்கள் மொத்தம் 2381, அவற்றுள் அகம் பற்றியது 1862, புறம் பற்றியது 519 பாடல்களைக் கொண்டது. பாட்டும் தொகையுமாகிய நூலில் புறம் நூல்களாகக் கருதப்படுபவை புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு

கடாம், மதுரைக்காஞ்சி எனும் எட்டு நூல்கள் மட்டுமே புறப் பொருளை மையமாகக் கொண்ட புற இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அறிமுக நூல்களாகவும், கருத்து விளக்க நூல்களாகவும், ஆய்வு நூல்களாகவும் மிகச் சிலவே வெளிவந்துள்ளன.

- தொடக்கத்தில் தனித்தனி நூல்களைப் பற்றிய சொற்பொழிவுகளும் பாடற்கருத்துகளுமே நூல்களாகி உள்ளன. அதன்பின்னரே திறனாய்வு அடிப்படையிலும், தொல்காப்பியக் கோட்பாடுகளோடு ஒப்பு நோக்கியும் ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது. அதனடிப்படையில் தனிநூல்கள் சார்ந்து வெளியான ஆய்வுகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு கவனப்படுத்துகிறது.

- சேர நாட்டின் செழிப்பையும் பாண்டிய நாட்டின் இயல்பையும் சோழ நாட்டின் இயற்கை வளத்தையும் அழகாக வருணித்தும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி எனும் கடையெழு வள்ளல்களின் சிறப்புகளை நயம்பட மு.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை இவ்வியலுள் கவனப் படுத்தப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் நடனம், கூத்து, இசை முதலிய கலைகள் வளர்ச்சி பெற்றமைக்கு பாணர், கூத்தர், பொருநர், விறலியர், பாடினி முதலிய இவர்களே முதன்மையானவர்கள் என இவ்வாய்வில் விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- போர்ச் சிறப்புகளையும், புகழுரைகளையும் கொண்டு புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பான்மையும் இயற்றப் பட்டுள்ளதோடு அப்பாடல்களில் புலவர்களின் அறிவுரைகள், அறத்தை வலியுறுத்தவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதையும் இவ்வாய்வில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னர்கள், புலவர்களின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றும், மன்னர்களின் கூற்றினைப் புலவர்கள் போற்றியும் வாழ்ந்துள்ளார்கள் என்பதையும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளில் நான்கு ஆற்றுப்படைகள் (பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர்) மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டவை என்றும், பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களைவிடவும் ஏனைய பெரும்பாணாற்றுப்படையும், கூத்தராற்றுப்படையும் பெருமளவில் தம்முள் ஒத்துள்ளன என்பதையும், ஆற்றுப்படை இலக்கியங்களில் பெரும்பாலானவை விறலி வருணனையிலும், இசைக் கருவிகள் வருணனையிலும் சிறப்புறுகின்றன என்பதையும் பற்றி இவ்வாய்வில் ஆராய்ந்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

- இசைக் கருவிகளான ஆகுளி, கஞ்ச தாளம், தூம்பு, குறுந்தூம்பு, குழல், அரிக்குரல், தட்டை (கரடிகை), வல்வாய், எல்லரி (சல்லி), கிணைப்பறை போன்ற 13 இசைக்கருவிகளைப் பற்றி இவ்வாய்வில் விரிவாக ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- பத்துப்பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இவ்விரண்டு பாணாற்றுப்படைகளையும் அவற்றின் பெயர்ப் பொருத்தத்தினையும், ஆராயும் சில உண்மைகளை இவ்வாய்வு எடுத்தியம்புகிறது.

- பாடினி, விறலி வருணணை குறித்தும், பொருநறுடன் செல்லக்கூடிய பாடினியின் கூந்தல், நுதல், புருவம் கண், வாய், பல், காது, கழுத்து, தோள், முன்கை, விரல், நகம், மார்பு, நகில், கொப்பூழ், இடை, தொடை, கணுக்கால் அடி இவ்கேசாதி பாத வருணனைக் குறித்த செய்திகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

- நம்பிக்கை, வழிபாடு, சமயம், சடங்கு, நடைமுறை வாழ்க்கை, மற்றும் மன்னரின் வீரம், கொடை, புகழ், அரசியல் முதலிய வாழ்வியல் பண்புகளை அடிப்டையாகக் கொண்டு பல்வேறான நூல்கள் வெளிவந்துள்ளன.

- செ. பழனிச்சாமியின் புறநானூற்றில் தமிழர் பண்பாடு எனும் நூலில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் குறித்தும்

பண்பாடு குறித்தும் மிக விரிவான முறையில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

- இசை, அதற்குரிய பலவகை பண்கள், ஆடற்கலை, அதன் வகைகள், இக்கலைகளின் கலைஞர்கள் பெற்றிருந்த பெரும் புலமை ஆகியன உணர்த்தும் பண்பாடும் பல கடவுளர்களையும் மக்கள் வேற்றுமை மனப்பான்மையின்றி வழிப்பட்ட பண்பாட்டுத் திறனும் அக்கால மக்களிடையே நிலவிய உயர்நெறிக் கொள்கைகளையும் குறித்து விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- முத்து, யானைத் தந்தம், மிளகு, தோகை, மஸ்லின் ஆடைகள், மணப்பொருட்கள், மரவகைகள், மூலிகைகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்களாய் இருந்தன. இவற்றிற்கு பதிலாக வெள்ளி, பொன் நாணயங்கள், மது வகைகள், பவழம், ஈயம், தகரம், எந்திரப் பொறிகள் என்பன இறக்குமதிப் பொருள்களாய் இருந்தன என்பனவும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.

- நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூடநம்பிக்கைகள் என்றாலும் அவ்வகையான நம்பிக்கைகள் மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அவ்வகையான நம்பிக்கைகளை எடுத்துரைக்கும் வகையில் இவ்வாய்வு ஆழ்ந்து கவனப்படுத்துகின்றன.

- பழந்தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலான நிமித்த வகைகள் நல்ல காரியங்களுக்கு நேரம் பார்த்தல், திருமணங்களை வளர்பிறையில் முடித்தல், சுப காரியங்களுக்குச் செல்லும் போதும், பயணங்களை மேற்கொள்ளும் போதும் நல்ல நேரம் பார்ப்பது போன்ற நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் காணப்படுவதை இவ்வாய்வில் மிக விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- பழந்தமிழ் மக்களின் தொழில்களான இரும்புத் தொழில், தச்சுத் தொழில், மட்கலம் வனைதல், அணிகளன்கள் செய்தல் முதலிய தொழில்களைக் குறித்தும் மகளிர் பூப்புற்றக் காலத்தில் கலந்தொடாமை, கைம்மைநோன்பு மற்றும் சகுனம் பார்த்தல் குறித்த செய்திகளும் பரத்தையர் ஒழுக்கம் குறித்தும் விரிவான முறையில் ஆராயப்பட்டிருப்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் பற்றியும் நாணயங்களின் பயன்பாடு குறித்தும் பழந்தமிழ் மக்களிடையே நிலவிய பண்டமாற்று முறையும், பாணர்களின் வாழ்க்கைமுறையும், விறலி மற்றும் பாடினியின் வருணனையும், பேரியாழ், சீறியாழ் முதலிய இசைக்கருவிகள் பாணர்களின் வாழ்க்கையோடு எவ்வகையில் ஒன்றியிருந்தது என்பதனை விவரிக்கும் ஆய்வுகளின் ஆய்வுப்போக்கு இவ்வாய்வில் கவனப்படுத்தப்பட்டுள்ளன.

- நாள் கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல் , விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், கனவு பலன் கேட்டல் போன்ற நம்பிக்கை சார்ந்த ஆய்வுகளும் அவ்வாய்வுகளின் ஆய்வுமுறையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

- மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், சீறூர்கிழார், வள்ளல்கள், புலவர்கள் குறித்தும் பல்வேறு ஆய்வேடுகள் வெளி வந்துள்ளன. அவ்வகையில் வரலாற்றியல் நோக்கிலான நூல்கள் அரசர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை வெளியிடுவனவாகவும், வள்ளல்களின் பெருமையை அறிவிப்பவனவாகவும் அமைந்துள்ளன.

- வரலாற்றியல் நோக்கியலான ஆய்வு நூல்களில் மன்னருக்கும் மக்களுக்கும் தேவையான வாழ்வியல் அறநெறிகளை எடுத்துரைக்கும் கருத்துக்களை ஆராய்ந்தும், மன்னன் கடைப்பிடிக்க வேண்டிய போர் அறங்களும் இதில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

- சங்க கால மன்னர்கள், புலவர்கள், மக்கள் ஆகியோரின் வாழ்வியலை விளக்குவனவாக வராலாற்றியல் நோக்கிலான ஆய்வுகள் அமைந்துள்ளன. இந்நூல்களில் பெரும்பாண்மைச் செய்தியாகப் பேசப்பட்டிருப்பது புலவர்கள் பற்றிய செய்திகளே. இப்புலவர்களே

மன்னர்களை நெறிப்படுத்துபவர்களாகவும் மக்களையும் மன்னர்களையும் ஒருங்கிணைப்பவர்களாகவும் அக்காலப் புலவர்கள் விளங்கினர் என்பதும் குறித்தும் இவ்வாய்வில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

- இலக்கியம் வரலாற்று மூலங்களுள் ஒன்றே தவிர, அதுவே வரலாறு ஆகாது. சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் அடிப்படைகளில் அமைந்துள்ளதால், ஒரு வேந்தனின் முழுமையான வரலாற்றை எழுதுவதற்கேற்ற வகையில் செய்திகள் இல்லை. கிடைக்கும் சில சான்றுகளும் வரலாற்றடிப்படையில் அமையாமல் சிறந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றன என்று அரங்க. இராமலிங்கம் அவர்கள் ஆராய்ந்து எடுத்துரைத்திருப்பது கவனப்படுத்தப்பட்டுள்ளது.
- வ. குருநாதன் தன்னுடைய சங்க காலச் சேரர் அரசியல் நெறிமுறைகள் என்னும் நூலில் சேர மன்னர்களின் அரசியல், நீதி, போர், வரி ஆகிய நான்கு நெறிமுறைகளிலும் மிசச் சிறப்புடன் விளங்கியதோடு அறவழி அரசாட்சியும் நடத்தியுள்ளனர் என்பது விவரிக்கப்பட்டுள்ளது.
- இவ்வாய்வு, சங்க புற இலக்கிய ஆய்வு வரலாற்றைக் கட்டமைக்க முற்படுகிறது.

**மேலாய்வுக் களங்கள்**

- 2000 முதல் 2020 வரையிலான சங்க புறஇலக்கிய ஆய்வுகளை இனங்கண்டு அவற்றின்வழி புறஇலக்கிய ஆய்வு வரலாற்றினை கட்டமைக்க முயலலாம்.
- இலக்கிய வகைகமைகள் பலவற்றைக் குறித்த பெரும்பான்மையான ஆய்வுகள் வெளிவந்திருப்பினும் ஒப்பியல் நிலையைச் சார்ந்து ஓரிரண்டு ஆய்வுகளே வெளிவந்துள்ளன. ஆகவே ஒப்பியல் நிலையிலும் சங்க புற இலக்கியங்களை அணுகி ஆராய முற்படலாம்.

# துணைநூற் பட்டியல்

அரிமதி தென்னகன்., புறநானூறு காட்டும் புதுமைகள், இலக்குமி நிலையம், சென்னை, மு.ப. 1986.

அரூர் தமிழடியான்., சங்ககாலப் பெண்பாற் புலவர்கள், புதிய பார்வை, தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், மு.ப. 1998.

இராஜவேலு, கு., புறநானூறு புதிய தளிர்கள், திருவரசு புத்தக நிலையம், மு.ப., 1999.

இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு., சங்க காலத் தமிழர் வாழ்வு, பாரி நிலையம், சென்னை, மு.ப. 1976.

இராசமாணிக்கனார். மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், மு.ப. 1970.

மேலது., சோழ வேந்தர் மூவர், முத்தையா நிலையம், சென்னை, மு.ப, 1971.

இராமலிங்கம், அரங்க., சங்க இலக்கியத்தில் வேந்தர், தேன்மழைப் பதிப்பகம், ஆலந்தூர், சென்னை, மு.ப. 1994.

இராமலிங்கம், என்., புறநானூ காட்டும் வாழ்வியல், திருவள்ளுவர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1994.

இலக்குவனார், சி., இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்ககாலம்), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, மு.ப. 1972.

உலகநாதன், சோ., புறநானூற்றில் புரட்சிக் குயில்கள், சங்கப் பலகை, சென்னை, மு.ப. 1993.

கதிர் மகாதேவன், பழந்தமிழர் வீரப் பண்பாடு, இலட்சுமி பதிப்பகம், மு.ப. 1980.

கலைமகள், சி., பத்துப்பாட்ல் மலைபடுகடாம் ஓர் ஆய்வு, பக்கிரியம்மாள் பதிப்பகம், சென்னை, மு.ப. 1992.

காந்தி, கா., தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1980.

கிருட்டிண மூர்த்தி, இரா., சங்ககாலச் சோழர் நாணயங்கள்,161,அண்ணாசாலை, சென்னை, மு.ப, 1986.

குருநாதன், இரா., புறநானூறு ஒரு பதிய பார்வை, வானதி பதிப்பகம், சென்னை, மு.ப. 1997.

குருநாதன், வ., சங்ககால அரச வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மு.ப. 1990.

கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 1991.

மேலது., வீரநிலைக் கவிதை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 1992.

கோவிந்தசாமி, மு., சோழர் வரலாறு, வாசுகி பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1997.

கோவிந்தன், கா., பண்டைத் தமிழர் போர் நெறி வள்ளுவர் பண்ணை, சென்னை, மு.ப. 1965.

கோவிந்தராசன், மு., புறநானூற்றுப் பெட்டகம், தேன்மொழிப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1980.

மேலது., புறநானூற்றுப் பைங்கனி, தேன்மொழி பதிப்பகம், சென்னை, மு.ப. 1982.

மேலது., புறநானூற்றுப் பூந்துணர், தேன்மொழிப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1980.

மேலது., புறநானூற்றுப் புதையல், தேன்மொழிப் பதிப்பகம், சென்னை.மு.ப. 1997.

சசிவல்லி, வி.சி., பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1989.

சண்முக சுந்தரம், க., சங்க கால பாண்டிய வேந்தர்கள், பெ.கந்தசாமி நாடர் அறக்கட்டளை, மு.ப. 1997.

மேலது., சங்க காலச் சேர வேந்தர்கள், பெ. கந்தசாமி நாடார் அறக்கட்டளை, மு.ப. 1997.

மேலது.,சங்க காலச் சோழ வேந்தர்கள், பெ. கந்தசாமி நாயக்கர் அளக்கட்டளை, சென்னை, மு.ப. 1997.

சண்முகம் பிள்ளை, மு., சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1997.

மேலது., சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1996.

சாமி சிதம்பரனார், தமிழர் வீரம், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மு.ப. 1964.

மேலது., பழந்தமிழர் அரசியல், இலக்கிய நிலையம், சென்னை, மு.ப. 1973.

சிவகுருநாதன், கோ., வாகைத் திணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1992.

சிவராசன், து., சங்க இலக்கிய வாழ்வியல், சிவம் பதிப்பகம், வேலூர், மு.ப. 1994.

சுசிலா கோபாலகிருஷ்ணன், சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள், பாலாஜி பதிப்பகம், ஷெனாய் நகர், மதுரை, மு.ப. 1987.

சுந்தர மாகாலிங்கம், பொ., புறத்திணை விருந்து, சேகர் பதிப்பகம், சென்னை, மு.ப, 1977.

சுப்பிரமணியன், ந., சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 1986.

சுப்பிரமணியன், அ.வெ.பேரெழில் வாழ்க்கை, சேகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1990.

செயராமன், நா, சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மு.ப. 1975.

சேலம் அன்பரசு, புறநானூற்றுக் வீரக்கதைகள், வசந்தா பிரசுரம், சென்னை, மு.ப. 1999.

திருகூட சுந்தரம், பொ., சங்ககால வீரம், ஸ்ரீ பாபுஜி பதிப்பகம், சென்னை, மு.ப. 1966.

தேவநேயன், ஞா., பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், நேசமணி பதிப்பகம், சென்னை, 1966.

நவநீத கிருட்டிணன், மா., தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை, குறிஞ்சி மலர் வெளியீடு, மதுரை, மு.ப. 1988.

பாண்டுரங்கன், கி., பண்டைத் தமிழர் போரியல் வாழ்க்கையும் தற்காலப் போர் நடவடிக்கையும், வெற்றிவேல் வெளியீடு, சென்னை, மு.ப. 1986.

மேலது., புலமைசால் புரவலர், பாரி நிலையம், சென்னை, மு.ப. 1969.

பாலசாரநாதன்,சு., சங்க காலப்புலவர்கள், டாக்டர் உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, மு.ப. 1986.

பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மீரா பதிப்பகம், புதுக்கோட்டை, மு.ப. 1986.

மேலது., சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை, மு.ப. 1994.

மேலது., சங்க இலக்கியத்தில் வாகைத்திணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1989.

பாலசுப்பிரமணியன், மு.பி., சிறுபாணாற்றுப்படைச் செல்வம், பாரிநிலையம், சென்னை, மு.ப. 1989.

பாலசுப்பிரமணியன், சி., வாழ்வியல் நெறிகள், நிறுமலர்ப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1990.

பாலசுப்பிரமணியன், சங்ககால மகளிர், பாரி நிலையம், சென்னை, மு.ப. 1983.

புலியூர் கேசிகன்., புறநானூறும் தமிழர் நீதியும், பசுவேஸ்வரா பிரசுரம், சேலம், மு.ப. 1965.

மணியன், இரா., புறநானூறு ஓர் அழகோவியம், மதி பதிப்பகம், இராசா அண்ணாமலைபுரம், சென்னை, மு.ப. 1994.

மறைமலையடிகள்., முற்கால பிற்காலப் புலவோர் வாழ்க்கை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1997.

மீனாட்சி சுந்தரம், தெ.பொ., பத்துப்பாட்டு ஆய்வு (புறம்), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, மு.ப. 1981.

முத்துகிருட்டிண நாட்டார், சி., சங்ககாலச் சோழர், யுனைடெட் பப்ளிஷர்ஸ், திருச்சிராப்பள்ளி, மு.ப. 1967.

முனுசாமி, வே., புறநானூற்றுப் பூவையர், வானதி பதிப்பகம், சென்னை, மு.ப. 1967.

லேனா தமிழ்வாணன்., சங்க இலக்கியத்தில் புறக்காட்சிகள், மணிமேகலை பிரசுரம், சென்னை, மு.ப. 1982.

வரதராசன், வெ.,தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும், 31A, சாரங்கபாணி தெரு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், மு.ப. 1973.

வேங்கடராமன், மகா., புற நூல்களில் பொருளியல் கோட்பாடு, அகத்தியர் அறிவாலயம், திருச்சிராப்பள்ளி, மு.ப. 1989.

ஜகநாதன், கி.வா., தமிழர் போர் நெறி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1967.

## முனைவர் பட்ட ஆய்வேடுகள்

அழகப்பன், வி.எஸ்., The Social Political life as Revealed in purananuru, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

இராசேந்திரன், இ.மொ., தமிழ் இலக்கியத்தில் கையறுநிலைப் பாடல்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

குருசாமி, சா., சங்ககாலச் சேரர் அரசியல் நெறிமுறைகள், சென்னைப் பல்கலைக் கழகம், 1989.

சுசிலா, ஆ., புறநானூற்றில் திணை துறை ஓர் ஆராய்ச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், 1993.

சோதிபாய் தேவதாஸ், சங்கப் புறப்பாடல்களின் திணைதுறை அமைப்பு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1984.

ருக்குமணி, ச., சங்ககால அரசப் புலவர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1991.

# சங்க புறஇலக்கிய ஆய்வு வரலாறு

## (1960-2000)

முனைவர் பட்டப்பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும்

ஆய்வேடு


ஆய்வாளர்

**நா. சத்தியா**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

நெறியாளர்

**முனைவர் நா. இரவீந்திரநாத் தாகூர்**

உதவிப் பேராசிரியர் (ஓய்வு)

தமிழ்த்துறை

**மாநிலக் கல்லூரி (தன்னாட்சி)**

சென்னை - 600 005



**பிப்ரவரி - 2021**

# முடிவுரை

- தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை என்ற இவற்றுள் புறத்திணைப் பாடல்களின் திணை, துறைகள் எவையென எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அதேசமயம் சங்க நூல்களின் புறத்திணைப் பாடல்களும் பின்வந்தோரால் திணை துறை வகுப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திணைத் துறை வகுப்புகளிடையே ஒன்றுக்கொன்று வேறுபாடுகள் மற்றும் சிக்கல்கள் இருப்பதை அறிய முடிகிறது. எனவே, இவ்வேறுபாடுகள் எவ்வாறமைந்துள்ளன என நோக்க வேண்டிய நிலையில் புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து பாடல்களும் பத்துப்பாட்டின் பாடல்களும் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- சங்கப் புறத்திணைகளான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் இவ்வேழு திணைகளில் ஒரு சில திணைகள் குறித்து மட்டுமே ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவ்வகையில் வாகைத்திணை மற்றும் பாடாண்திணை குறித்து சில ஆய்வறிஞர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடான்திணைக் குறித்து ஒரு ஆய்வும், வாகைத்திணைக் குறித்து மூன்று ஆய்வுகளும், புறத்திணைச் சார்ந்து பொதுவாக சில ஆய்வேடுகளும், புறத்திணைக் கொள்கைகளை முழுமையாக ஆய்ந்துள்ள வகையில் கு.வெ.பாலசுப்பிரமணியனின் ‘சங்க இலக்கியத்தில் புறப்பொருள்’ என்ற ஒரு நூலும், திணைத்துறைகள் குறித்ததான முனைவர்பட்ட ஆய்வேடு என்ற வகையில் கையறுநிலைத் துறையைக் குறித்து ஓர் ஆய்வேடும் வெளிவந்துள்ளது. மேலும் புறப்பொருள் வெண்பாமாலையில் குறிப்பிட்ட 12 திணைகள் குறித்தும், தனிதனியாகவும் அதிக அளவில் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. ஆனால் இப்பொருண்மை குறித்து மிகச் சிலவே வந்துள்ளன. இனிவருங்காலங்களிலாவது இவ் ஒவ்வொரு திணைகள் குறித்து ஆழ்ந்த நிலையில் ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும். 64 துறைகள் இருந்தாலும் இத்துறை சார்ந்த ஆய்வுகளுமே ஓரிரண்டே வெளிவந்துள்ளது.

- புறத்திணைக் கொள்கைகள் குறித்தான ஆய்வுகளில் ஒன்றான கு.வெ. பாசுப்பிரமணியன் ‘சங்க இலக்கியத்தில் புறப்பொருள்’ என்னும் நூலில் புறத்திணைகளின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும், போர் குறித்தும், அரசியல், சமயவியல், வாழ்வியல் மற்றும் புலவரியல் உள்ளிட்ட பலவற்றை சங்கப் பாடல்களின் துணையாகக் கொண்டு, மிக விரிவான முறையில் ஆராய்ந்து பல்வேறு செய்திகள் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- கு.வெ.பா. வின் ‘வாகைத்திணை’ என்னும் நூல் தொல்காப்பியர் பன்னிரு புறத்திணைகளை தொகுத்து ஏழாக்கியுள்ளார் என்னும் கருத்தை இந்நூல் மறுத்து பன்னிரு திணை என்பது பிற்கால விரிவே என்று விளக்கிச் செல்லும் பாங்கு இவ்வாய்வில் கவனப்படுத்தப் பட்டுள்ளது.

- சங்க காலத்தில் நிகழ்ந்த போர்க்குரிய காரணங்களை ஆராயும் வகையில், ஆண் மகன் என்றாலே வீரமும் போர் பண்பும் என்ற இயற்கைத் தகுதிகளாக இயல்பாகவே உடையவன் என்றும் அதோடு மண்ணாசையினும் புகழ், விருப்பமே பல போர்களுக்கு அடிப்படை என்றும் கு.வெ.பா. ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளார்.

- புறநானூற்றுப் பாடல்கள் பல்வேறு சூழலில் பல்வேறு காரணங்களுக்காகப் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. ஆகவே சில பாடல்களுக்கு பாடப்பட்ட சூழலை நோக்கியும், சில பாடல்களுக்குப் பாடப்பட்ட நோக்கத்தை ஒட்டியும், சில பாடல்களுக்கு பாடல்களில் உள்ள குறிப்பைக் கொண்டும் துறை வகுத்துள்ள முறைமையைக் குறித்தும், பதிற்றுப்பத்துக்கு துறை வகுத்துள்ளதை குறித்தும் ந. செயராமன் அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

- திணை துறைப் பகுப்பில் சங்கப் புறப்பாடல்கள் தொல்காப்பியத்தைத் தழுவிச் சென்ற போதிலும் பன்னிரு திணைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்றும் திணை, துறைகளில் சிக்கல் எழும்வண்ணம் புறப்பாடல் வரிகளைத் தொல்காப்பியப் பொருளாதாரத்திற்கு உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர் என்றும் திணையின் முழுமையைத் தெரிந்துகொள்ள முதல், கரு,

உரிப்பொருட்கள் இன்றியமையாதன என்றும் திணை பற்றிய ஆய்வேடுகள் சொல்லிச் செல்கின்றன. மேலும் பாடாண் திணை, வாகைத் திணை பற்றிய ஆய்வேடுகளே பெருமளவில் அளிக்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கியப் புறத்திணைகளைத் தனித்தனியே சிலர் ஆய்ந்துள்ளனர். வாகை, பாடாண் என்பன விரிவாக ஆராயப்பெற்றுள்ளன. சில துறைகளை ஆய்ந்த நிலையும் உண்டு. புறத்திணைக் கொள்கைகளை முழுவதும் ஆய்ந்து காட்டியதாக சங்க இலக்கியத்தில் புறப்பொருள் அமைந்தது அதன் வளர்ச்சியாகும்.

- பாடாணுக்கும் கைக்கிளைக்கும் ஒற்றுமை கூறுகளாகப் பத்துக் கூறப்படும். அவற்றையும் தொகுத்து இவ்வாய்வில் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

- சங்க காலத்தை வீரநிலைக் காலம் என்று கருதுவோரின் கூற்றை மறுத்து வீரநிலைக் காலத்திற்குப் பிற்பட்டது சங்க காலம் என இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார். அதாவது வீரர்கள் சிறப்புற்றிருந்த காலமே வீரநிலைக் காலம் என்று ஆசிரியர் நிறுவியுள்ளதையும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- ஒப்பியல் நோக்கில் பாடாண்திணை விளக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் ஈப்ரு, சூலுக்கு, நார்வே, வெல்சு, மெசப்படோமியா, எகிப்து, கிரேக்கம், லத்தீன், அராபிக், செர்மனி, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், அஸ்ஸாம், தெலுங்கு போன்றே இந்திய மொழிகளிலும் உள்ள பாடாண் பாடல் செய்திகள் இவ்வாய்வில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

- சங்க இலக்கிய நூல்களில் உள்ள பாடல்கள் மொத்தம் 2381, அவற்றுள் அகம் பற்றியது 1862, புறம் பற்றியது 519 பாடல்களைக் கொண்டது. பாட்டும் தொகையுமாகிய நூலில் புறம் நூல்களாகக் கருதப்படுபவை புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு

கடாம், மதுரைக்காஞ்சி எனும் எட்டு நூல்கள் மட்டுமே புறப் பொருளை மையமாகக் கொண்ட புற இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அறிமுக நூல்களாகவும், கருத்து விளக்க நூல்களாகவும், ஆய்வு நூல்களாகவும் மிகச் சிலவே வெளிவந்துள்ளன.

- தொடக்கத்தில் தனித்தனி நூல்களைப் பற்றிய சொற்பொழிவுகளும் பாடற்கருத்துகளுமே நூல்களாகி உள்ளன. அதன்பின்னரே திறனாய்வு அடிப்படையிலும், தொல்காப்பியக் கோட்பாடுகளோடு ஒப்பு நோக்கியும் ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது. அதனடிப்படையில் தனிநூல்கள் சார்ந்து வெளியான ஆய்வுகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு கவனப்படுத்துகிறது.

- சேர நாட்டின் செழிப்பையும் பாண்டிய நாட்டின் இயல்பையும் சோழ நாட்டின் இயற்கை வளத்தையும் அழகாக வருணித்தும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி எனும் கடையெழு வள்ளல்களின் சிறப்புகளை நயம்பட மு.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை இவ்வியலுள் கவனப் படுத்தப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் நடனம், கூத்து, இசை முதலிய கலைகள் வளர்ச்சி பெற்றமைக்கு பாணர், கூத்தர், பொருநர், விறலியர், பாடினி முதலிய இவர்களே முதன்மையானவர்கள் என இவ்வாய்வில் விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- போர்ச் சிறப்புகளையும், புகழுரைகளையும் கொண்டு புறநானூற்றுப் பாடல்கள் பெரும்பான்மையும் இயற்றப் பட்டுள்ளதோடு அப்பாடல்களில் புலவர்களின் அறிவுரைகள், அறத்தை வலியுறுத்தவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதையும் இவ்வாய்வில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னர்கள், புலவர்களின் கருத்துகள் அனைத்தையும் ஏற்றும், மன்னர்களின் கூற்றினைப் புலவர்கள் போற்றியும் வாழ்ந்துள்ளார்கள் என்பதையும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளில் நான்கு ஆற்றுப்படைகள் (பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர்) மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டவை என்றும், பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களைவிடவும் ஏனைய பெரும்பாணாற்றுப்படையும், கூத்தராற்றுப்படையும் பெருமளவில் தம்முள் ஒத்துள்ளன என்பதையும், ஆற்றுப்படை இலக்கியங்களில் பெரும்பாலானவை விறலி வருணனையிலும், இசைக் கருவிகள் வருணனையிலும் சிறப்புறுகின்றன என்பதையும் பற்றி இவ்வாய்வில் ஆராய்ந்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

- இசைக் கருவிகளான ஆகுளி, கஞ்ச தாளம், தூம்பு, குறுந்தூம்பு, குழல், அரிக்குரல், தட்டை (கரடிகை), வல்வாய், எல்லரி (சல்லி), கிணைப்பறை போன்ற 13 இசைக்கருவிகளைப் பற்றி இவ்வாய்வில் விரிவாக ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- பத்துப்பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இவ்விரண்டு பாணாற்றுப்படைகளையும் அவற்றின் பெயர்ப் பொருத்தத்தினையும், ஆராயும் சில உண்மைகளை இவ்வாய்வு எடுத்தியம்புகிறது.

- பாடினி, விறலி வருணனை குறித்தும், பொருநறுடன் செல்லக்கூடிய பாடினியின் கூந்தல், நுதல், புருவம் கண், வாய், பல், காது, கழுத்து, தோள், முன்கை, விரல், நகம், மார்பு, நகில், கொப்பூழ், இடை, தொடை, கணுக்கால் அடி இவ்கேசாதி பாத வருணனைக் குறித்த செய்திகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

- நம்பிக்கை, வழிபாடு, சமயம், சடங்கு, நடைமுறை வாழ்க்கை, மற்றும் மன்னரின் வீரம், கொடை, புகழ், அரசியல் முதலிய வாழ்வியல் பண்புகளை அடிப்டையாகக் கொண்டு பல்வேறான நூல்கள் வெளிவந்துள்ளன.

- செ. பழனிச்சாமியின் புறநானூற்றில் தமிழர் பண்பாடு எனும் நூலில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் குறித்தும்

பண்பாடு குறித்தும் மிக விரிவான முறையில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

- இசை, அதற்குரிய பலவகை பண்கள், ஆடற்கலை, அதன் வகைகள், இக்கலைகளின் கலைஞர்கள் பெற்றிருந்த பெரும் புலமை ஆகியன உணர்த்தும் பண்பாடும் பல கடவுளர்களையும் மக்கள் வேற்றுமை மனப்பான்மையின்றி வழிப்பட்ட பண்பாட்டுத் திறனும் அக்கால மக்களிடையே நிலவிய உயர்நெறிக் கொள்கைகளையும் குறித்து விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- முத்து, யானைத் தந்தம், மிளகு, தோகை, மஸ்லின் ஆடைகள், மணப்பொருட்கள், மரவகைகள், மூலிகைகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்களாய் இருந்தன. இவற்றிற்கு பதிலாக வெள்ளி, பொன் நாணயங்கள், மது வகைகள், பவழம், ஈயம், தகரம், எந்திரப் பொறிகள் என்பன இறக்குமதிப் பொருள்களாய் இருந்தன என்பனவும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.

- நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூடநம்பிக்கைகள் என்றாலும் அவ்வகையான நம்பிக்கைகள் மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அவ்வகையான நம்பிக்கைகளை எடுத்துரைக்கும் வகையில் இவ்வாய்வு ஆழ்ந்து கவனப்படுத்துகின்றன.

- பழந்தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலான நிமித்த வகைகள் நல்ல காரியங்களுக்கு நேரம் பார்த்தல், திருமணங்களை வளர்பிறையில் முடித்தல், சுப காரியங்களுக்குச் செல்லும் போதும், பயணங்களை மேற்கொள்ளும் போதும் நல்ல நேரம் பார்ப்பது போன்ற நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் காணப்படுவதை இவ்வாய்வில் மிக விரிவான முறையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- பழந்தமிழ் மக்களின் தொழில்களான இரும்புத் தொழில், தச்சுத் தொழில், மட்கலம் வனைதல், அணிகளன்கள் செய்தல் முதலிய தொழில்களைக் குறித்தும் மகளிர் பூப்புற்றக் காலத்தில் கலந்தொடாமை, கைம்மைநோன்பு மற்றும் சகுனம் பார்த்தல் குறித்த செய்திகளும் பரத்தையர் ஒழுக்கம் குறித்தும் விரிவான முறையில் ஆராயப்பட்டிருப்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் பற்றியும் நாணயங்களின் பயன்பாடு குறித்தும் பழந்தமிழ் மக்களிடையே நிலவிய பண்டமாற்று முறையும், பாணர்களின் வாழ்க்கைமுறையும், விறலி மற்றும் பாடினியின் வருணனையும், பேரியாழ், சீறியாழ் முதலிய இசைக்கருவிகள் பாணர்களின் வாழ்க்கையோடு எவ்வகையில் ஒன்றியிருந்தது என்பதனை விவரிக்கும் ஆய்வுகளின் ஆய்வுப்போக்கு இவ்வாய்வில் கவனப்படுத்தப்பட்டுள்ளன.

- நாள் கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல் , விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், கனவு பலன் கேட்டல் போன்ற நம்பிக்கை சார்ந்த ஆய்வுகளும் அவ்வாய்வுகளின் ஆய்வுமுறையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

- மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், சீறூர்கிழார், வள்ளல்கள், புலவர்கள் குறித்தும் பல்வேறு ஆய்வேடுகள் வெளி வந்துள்ளன. அவ்வகையில் வரலாற்றியல் நோக்கிலான நூல்கள் அரசர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை வெளியிடுவனவாகவும், வள்ளல்களின் பெருமையை அறிவிப்பவனவாகவும் அமைந்துள்ளன.

- வரலாற்றியல் நோக்கியலான ஆய்வு நூல்களில் மன்னருக்கும் மக்களுக்கும் தேவையான வாழ்வியல் அறநெறிகளை எடுத்துரைக்கும் கருத்துக்களை ஆராய்ந்தும், மன்னன் கடைப்பிடிக்க வேண்டிய போர் அறங்களும் இதில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

- சங்க கால மன்னர்கள், புலவர்கள், மக்கள் ஆகியோரின் வாழ்வியலை விளக்குவனவாக வராலாற்றியல் நோக்கிலான ஆய்வுகள் அமைந்துள்ளன. இந்நூல்களில் பெரும்பாண்மைச் செய்தியாகப் பேசப்பட்டிருப்பது புலவர்கள் பற்றிய செய்திகளே. இப்புலவர்களே

மன்னர்களை நெறிப்படுத்துபவர்களாகவும் மக்களையும் மன்னர்களையும் ஒருங்கிணைப்பவர்களாகவும் அக்காலப் புலவர்கள் விளங்கினர் என்பதும் குறித்தும் இவ்வாய்வில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

- இலக்கியம் வரலாற்று மூலங்களுள் ஒன்றே தவிர, அதுவே வரலாறு ஆகாது. சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் அடிப்படைகளில் அமைந்துள்ளதால், ஒரு வேந்தனின் முழுமையான வரலாற்றை எழுதுவதற்கேற்ற வகையில் செய்திகள் இல்லை. கிடைக்கும் சில சான்றுகளும் வரலாற்றடிப்படையில் அமையாமல் சிறந்த நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றன என்று அரங்க. இராமலிங்கம் அவர்கள் ஆராய்ந்து எடுத்துரைத்திருப்பது கவனப்படுத்தப்பட்டுள்ளது.
- வ. குருநாதன் தன்னுடைய சங்க காலச் சேரர் அரசியல் நெறிமுறைகள் என்னும் நூலில் சேர மன்னர்களின் அரசியல், நீதி, போர், வரி ஆகிய நான்கு நெறிமுறைகளிலும் மிசச் சிறப்புடன் விளங்கியதோடு அறவழி அரசாட்சியும் நடத்தியுள்ளனர் என்பது விவரிக்கப்பட்டுள்ளது.
- இவ்வாய்வு, சங்க புற இலக்கிய ஆய்வு வரலாற்றைக் கட்டமைக்க முற்படுகிறது.

**மேலாய்வுக் களங்கள்**

- 2000 முதல் 2020 வரையிலான சங்க புறஇலக்கிய ஆய்வுகளை இனங்கண்டு அவற்றின்வழி புறஇலக்கிய ஆய்வு வரலாற்றினை கட்டமைக்க முயலலாம்.
- இலக்கிய வகைகமைகள் பலவற்றைக் குறித்த பெரும்பான்மையான ஆய்வுகள் வெளிவந்திருப்பினும் ஒப்பியல் நிலையைச் சார்ந்து ஓரிரண்டு ஆய்வுகளே வெளிவந்துள்ளன. ஆகவே ஒப்பியல் நிலையிலும் சங்க புற இலக்கியங்களை அணுகி ஆராய முற்படலாம்.